
# தேவி திருமுகம்



தொகுப்பாசிரியர்:

சிவநெறிச் செல்வன் சைவநன்மணி ஞானவாரிதி

[illegible] ஜே. ரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

பெருந்தடல் வெங்கய முகனைக் குகனையாளித்
தவமலர் பொதுளுந் தூய
விருந்தடங்கண் மலியுமிக் கிரிமகளை
மிடற்றிடத் திருண்டவால
மருந்தடங்கவயின்ற பிரான்றிரு நடனங்கண்
டுவகையினான் மலர்ந்த நீலக
கருந்தடங்கண் உமையவளையடி தொழுது
வினைடமைக் கடிந்து வாழ்வாம்

*(திருத்தினை நகர்ப்புராணம்)*

# தேவி திருமுகம்

**தொகுத்து ஆக்கியோன்:**
**சிவநெறிச்செல்வன், சைவநன்மணி, ஞானவாரிதி**
**இரா. மயில்வாகனம் ஜே. பி.**

**ஈசுர வருஷம் ஆவணித் திங்கள்**
**ஞாயிறு வாரம்.** 1997

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற்பதிப்பு


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | தேவி திருமுகம். |
| Name of the Book | : | 'Devi Thirumugam' |
| நூலாசிரியர் | : | சைவ நன்மணி, சிவநெறிச் செல்வர், ஞானவாரிதி இரா. மயில்வாகனம். |
| Author | : | *'Saiva Nanmani Sivanerich Chelvar, Gnanavaarithy'* **R. Mylvaganam.** |
| வெளியீடு | : | திருமதி மங்கையர்க்கரசி மயில்வாகனம். |
| Publisher | : | **Mrs. Mangaiyarkarachi Mylvaganam.** |
| விலை | : | **150/-** |
| Price | : | **150/-** |
| நூல் உரிமை | : | திரு. மயில்வாகனம் - சுதாகரன். |
| Copy Rights | : | **Mr. Mylvaganam - Suthakaran.** |
| அச்செழுத்து | : | லக்ஷ்மன் - 11 புள்ளிகள். |
| Fonts Design | : | **Luxman - 11Points.** |
| வெளியீடு | : | 1997 ஆவணி திங்கள், ஞாயிறு வாரம். |
| Date of Publication | : | **August, 1997.** |
| நூல் அளவு | : | 1/8 |
| Size of the Book | : | 1/8 |
| பக்கங்கள் | : | 163 + xxix |
| Pages | : | 163 + xxix |
| பயன்படுத்திய தாள் | : | 70 வெள்ளை பாங்க் கடதாசி |
| Paper Used | : | 70 GSM W/B/P |
| அச்சுப் பதிவு | : | யுனி ஆர்ட்ஸ் (பிரைவட்) லிமிடெட், 48 B, புளூமெண்டால் வீதி, கொழும்பு - 13 |
| Printers | : | **Unie Arts (Pvt.) Ltd.** 48 B, Bolemendhal Road, Colombo - 13 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| சமர்ப்பணம் | | | |
| வாழ்த்துரை | - | சுவாமி ஆத்மகனாநந்தா | |
| அணிந்துரை | - | பொ. பூலோகசிங்கம் | V |
| அணிந்துரை பாமாலை | - | வ. சிவராஜசிங்கம் | VII |
| நூல் வாழ்த்து | - | செ. குணரத்தினம் | VIII |
| ஆய்வுரை | - | திருமதி சாந்தி நாவுக்கரசன் | X |
| ஆசியுரை | - | திருமதி மகேஸ்வரி பாலச்சந்திரன் | XIII |
| என்னுரை | - | | XVI |

1. தேவி திருமுகம் 01
2. நம பார்வதி பதி 05
3. புராண ஆரம்பம் 09
4. கர்வ மடக்கிய காளிகா தேவி 16
5. அருணாசலத்தில் நடந்த விளையாட்டும் வினையும் 37
6. வீணாகானத்தால் வேண்டியதைப் பெற்ற விச்சாவதி 55
7. தக்கன் தவமும் தன் தவமும் ஒக்க உணர்த்திய உமை 58
8. தன்னிகரில்லா தடாதகைப் பிராட்டி 62
9. பரமனை வாங்கிய பார்வதி 65
10. பாக்கியவதியான பார்வதி 70
11. மகளின் மாப்பிள்ளையை காணாது
மதிமயங்கி மேலே இருந்த மேனை 76
12. தேவியின் தவமும் மஹிஷனின் மதிமயக்கம் 81
13. பரமனை வாங்கிய பார்வதியும்,
பங்கம் விளைத்த காமனும் 100
14. இரதியின் வினையை நீக்கி பயனை அடைந்த பார்வதி 106
15. வாய்கொடுத்து வார்த்தையாடிய வேதியர்
தேவியோடு வீடு செல்லுதல் 109
16. தேவி திருமணம் 114
17. இலட்சுமி உபாக்கியானம் 128
18. அறிய வேண்டிய அரி அரன், பிரமேந்திராதிகள் 133
19. நாநிலம் கண்டறிந்த நாரதர் 144
20. மூர்த்தி விசேடம் 153
21. தலவிசேடம் 157
22. தீர்த்த விசேடம் 160


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சேர் பொன்னம்பலம் இராமநாதன்
*1851 – 1930*

| | | |
|---|---|---|
| தந்தைபெயர் | : | பொன்னம்பலம் |
| தாயார் பெயர் | : | செல்லாச்சி |
| சகோதரர்கள் | : | 1. சேர். பொன்னம்பலம் குமாரசுவாமி |
| | | 2. சேர். பொன்னம்பலம் அருணாசலம் |
| திருமணம் | : | 1874 நன்னித்தம்பி மகள், செல்லாச்சி அம்மையார் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

மானிப்பாய் மானா முதலியார் வாழையடி வாழையாய் வந்த திருக்கூட்டத்தின் மதிபெறு மன்னருள் மன்னவ ! சேர். பொன்னம்பலம் இராமநாதன் என்றும் திருநாமம் பெற்ற துரையே ! ஆண்டு பலப்பல ஆகையால் எல்லாம் கூறமுடியாதாயினும் சில கூறலாம் என எண்ணுகிறேன்.

துரை என்றால் சேர். பொன்னம்பலம் இராமநாதன்.
ஐயா ! என்றால் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள்.

பிரித்தானியர் காலத்தில் பிரபல சட்டத்தரணியாக விளங்கிய பிறிற்ரோ அவர்களை அரசியல் அரங்கில் இருந்து தோற்கடிக்கச் செய்த பெருமை உங்களையேசாரும். அன்று உங்களோடு தோளோடு தோளாக நின்றவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள். அன்றே நீங்கள் துரை என்றும் நாவலர் ஐயா ! என்று அழைக்கப்பட்டுள்ளீர்கள்.

இலங்கையில் சட்ட சபையில் தலைநிமிர்ந்த தமிழனாக நின்று நிலவிய முதல்தமிழன் நீங்களே. பாடசாலைகள், கல்விக் கூடங்கள், கல்லூரிகள் புகையிரப் பாதைகள் இவைகள் உங்கள் காலத்தனவே !

"பயன் தூக்கார் செய்த சேவை நயன் தூக்கின் நன்மை கடலிலும் பெரிதாக இருக்கிறதையா"

"நிலையிற் திரியாது நிலையாய் கடமை செய்த தன்மை மலையிலும் மாணப் பெரிதாய் இருக்கிறதையா."

பரமேஸ்வரா கல்லூரி காலத்தினாற் செய்த இராமநாதன் கல்லூரி அதாவது இக்கல்லூரியில் எனது மனைவி மங்கையர்க்கரசி ஆசிரிய பயிற்சி பெற்று பலர்போற்றும் பாடசாலை அதிபராக இருந்து ஓய்வு பெற்றார் இவ்வுதவி ஞாலத்தின் பெரிதே ஐயா ! இதை நினைந்து சமர்ப்பணத்திற்கு உரித்தாகுகிறேன்.

மரபுவழி வந்த D. M. சுவாமிநாதன் பிரபல சட்டத்தரணி அவர்கள் முகாமைத்துவம் செய்யும் கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி பெயர் பெற்று விளங்குவதும் உங்கள் பெருமையே ஐயா ! கொழும்பு கொச்சிக்கடை சிவன் கோயில் நடாத்துந் திறமையும் D. M. சுவாமிநாதன் அவர்களையே சார்ந்ததேயாம்.

மகன் தந்தைக்கு ஆற்றிய உதவியே பெரிதாக தந்தையாரால் தொடக்கப்பட்ட கொழும்பு கொச்சிக்கடைச் சிவன்கோயில் இன்று கோடான கோடி மக்கள் வணங்கி வரம் பெற்று போகிற நினைவுச் சின்னமாகியுள்ளதையா. இதுவும் உங்கள் ஆக்கமே 1907.

பாட்டுக்கொரு புலவன் பாரதி,
கவிதைக்கு கொரு புலவன் கண்ணதாசன்,
செயலுக்கு ஒரு செயல் வீரர் சேர் பொன்னம்பலம் இராமநாதன் இவைகள் சொல்லும் தரமே ?

சேர். பொன்னம்பலம் இராமநாதன் ஆகிய தங்களது பாதார விந்தங்களில் நெஞ்சம் தளிர்விட்டு நேத்திரம் நீர்விட்டு கை தாழிட்டு இந்நூலை சமர்ப்பிக்கிறேன்.

கோளத்தின் ஆழத்தில் குண்டு மணிபோன்றிருந்த ஈழத்தை தெரு நீளமாக்கிய தெய்வமே. உம்மை வணங்குகிறேன். வாழ்த்துகிறேன்.

இவ்வண்ணம்
இரா. மயில்வாகனம்
*சிவநெறிச்செல்வன், சைவநன்மணி, ஞானவாரிதி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

RAMAKRISHNA MISSION
(Ceylon Branch)
40, Ramakrishna Road,
Wellawatte,
COLOMBO - 6.

PHONE { ASHRAMA: 588253
CULTURAL CENTRE:

## வாழ்த்துரை

சிவநெறிச் செல்வர், சைவநன்மணி இரா. மயில்வாகனம் அவர்கள் எழுதியுள்ள 'தேவி திருமுகம்' என்னும் இந்நூலிற்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

இந்து சமயத்தில், ஆதிகாலந்தொட்டே இறைவனைப் பெண் வடிவத்தில், தாயாக, உலகநாயகியாக, இளங்குமரியாக, அழகுசுந்தரியாக, கோரரூபிணியாக, இப்படி பல்வேறு தோற்றங்களில், ஆக்கல், காத்தல், அழித்தலாகிய முப்பெருங்காரியங்களில் ஈடுபட்டவளாகக் கண்டு வழிபடும் முறை இருந்து வருகிறது.

வேதங்களில் அதிதி, உஷஸ், சரஸ்வதி, உமா, வாக், துர்க்கா, காத்யாயனி, கன்யகுமாரி, விரோசனி எனப் பல பெண் தெய்வங்களைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. நாமரூபங்கள் வேறுபட்டாலும் அவையனைத்தும் ஒரே பரம்பொருளின் பல்வேறு தோற்றங்களே என்னும் கருத்தையும் அங்கு காண்கிறோம். 'ஏகம் சத் விப்ரா பஹுதா வதந்தி' 'உண்மை ஒன்றே, ஞானிகள் அதைப் பலவாறாக அழைக்கிறார்கள்'.

புராணங்களிலும் இதே கருத்து வலியுறுத்தப்படுகிறது. மூலசக்தி ஒன்றே, மற்ற தேவியர்கள் அனைத்தும் அம்மூலசக்தியிலிருந்து தோன்றி, பின்னர் அதிலேயே லயமாகின்றனர். மார்க்கண்டேய புராணத்தைச் சேர்ந்த 'தேவி மாஹாத்மியம்', 'தேவியின் புகழ்' என்னும் பகுதியில் பின்வரும் சுலோகங்கள் இக்கருத்தை வெளிப்படுத்துகின்றன.

देव्युवाच ।

एकैवाहं जगत्यत्र द्वितीया का ममापरा ।
पश्यैता दुष्ट मय्येव विशन्त्यो मद्विभूतयः ॥
ततः समस्तास्ता देव्यो ब्रह्माणी प्रमुखा लयम् ॥

(10-4:5,6)

இதன் பொருளாவது :

தேவி கூறினாள் : இங்கு உலகில் உள்ளவள் நான் ஒருவளே. என்னைத் தவிர இரண்டாவதாக என்ன உளது? இவர்களெல்லாம் (ப்ரம்மாணி, மாஹேஸ்வரி, கௌமாரி, வைஷ்ணவி, வாராஹி, நாரஸிம்ஹி, ஐந்த்ரீ, காளீ போன்ற தேவியர்கள்) எனது பல்வேறு சக்திகளின் வெளித்தோற்றங்களே. மீண்டும் என்னிடமே லயமாகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவீ பாகவத புராணத்தில், மஹாசக்தி ப்ரபாவ வர்ணனை என்னும் அத்தியாயத்தில், ஒரு மூலசக்தியிலிருந்து பல்வேறு தேவியர்கள் தோன்றும் சிறப்பைக் காணலாம்.

ततो देवी शरीरात्तु निर्गतास्तीव्रशक्तयः ।
कालिका तारिणी बाला त्रिपुरा भैरवी रमा ।
बगला चैव मातंगी तथा त्रिपुरसुन्दरी ॥
कामाक्षी तुलजा देवी जम्भिनी मोहिनी तथा ।
छिन्नमस्ता गुह्यकाली दशसाहस्रबाहुका ॥
द्वात्रिंशच्छक्तयश्चान्याश्चतुष्षष्टिमिताः पराः ।
असंख्यातास्ततो देव्यः समुद्भूतास्तु सायुधाः ॥ (28-55,56,57)

பொருள்: அப்பொழுது தேவியின் சரீரத்திலிருந்து தீவிரமான சக்திகள் வெளிப் போந்தனர்: காளிகா, தாரிணீ, பாலா, த்ரிபுரா, பைரவீ, ரமா, பகளா, மாதங்கீ, த்ரிபுரசுந்தரீ, காமாக்ஷீ, துலஜாதேவி, ஜம்பினீ, மோஹினீ, சின்னமஸ்தா, பத்தாயிரம் கைகள் படைத்த குஹ்யகாளீ. இன்னும் முப்பத்திரண்டு சக்திகளும், வேறு அறுபத்தி நான்கு சக்திகளும், எண்ணிறந்த உருவங்கொண்ட தேவிமார்களும் ஆயுதங்களுடன் தோன்றினர்.

'தேவி திருமுகம்' என்னும் இந்நூலில், தேவியின் பல்வேறு அவதாரங்களின் வரலாற்றுக் கதைகளை, எளிய வசனநடையில் தந்துள்ளார் நூலாசிரியர் திரு இரா. மயில்வாகனம் அவர்கள். தேவியைக் குறித்த இத்தகைய தொகுப்பு நூல் வெளிவருவது இதுவே முதல் தடவையாகவும் இருக்கலாம். திரு மயில்வாகனம் அவர்கள் தமிழ் மக்களுக்கு நன்கு அறிமுகமானவர். இதற்கு முன்னரும் சிந்தனைக் கோவை I, சிந்தனைக் கோவை II, ஐம்பதாம் திருமுறை ஒரு நோக்கு, வைரவ மான்மியம் போன்ற நூல்களை எழுதி வெளியிட்ட பெருமையுடையவர். முதிர்ந்த வயதினராயினும் அவரது ஆர்வமும் உழைப்பும் வியப்பிற்குரியது. அவர் இன்னும் பல்லாண்டுகள் நீடூழி வாழ இறைவனை வேண்டுகிறோம்.

ஆஸ்திக அன்பர்கள் இந்நூலை வாங்கிப் படித்து பயன்பெறுவார்களாக!

சுவாமி ஆத்மகணாநந்தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

அதிபர் இரா. மயில்வாகனம் இறைசிந்தனையிலே ஊறித்திளைத்தார். எல்லோருக்கும் அந்தப் பாக்கியம் எளிதில் கைகூடுவதில்லை. மட்டக்களப்பு பிரசாரகர் அருணாசலதேசிகர், சுவாமி விபுலானந்தரோடும் வித்துவான் சரவணமுத்தனோடும் தோள்கொடுத்து நின்று, கிழக்கு இலங்கையிலே மிலேச்ச மதப்பரம்பலைத்தடுத்து நிறுத்தியவர். அவருடைய அருணோக்கத்திற்குப் பாத்திரமானவர். அதிபர் மயில்வாகனம் அன்னாரின் சிந்தனைக்கோவைகள் இரண்டும் இவ்வுண்மையை தெள்ளெனப் புலப்படுத்திநிற்பன. சமயவுண்மைகளை, கருத்துக்களை, தத்துவங்களை, அலட்டிக் கொள்ளாமல், சாதாரணமாகவே, தெளிவுடன் விருந்தாக விளக்கும் ஆற்றலை அங்கு காணலாம்.

அதிபர் மயில்வாகனம் தாம் "துயர்தரும் பிறவி நீங்க தொடங்கினேன் தேவி திருமுகம்" என்று நூன்முகத்திலே எழுதியிருப்பதை நோக்கும்போது விசனம் உண்டாகின்றது. ஏறக்குறைய மூன்று தசாப்தங்கள் கண்ட உறவு எல்லாம் வல்ல இறைவன் மேன்மேலும் அவரைப் பயன்படுத்திப் பயன்தரும் ஆக்கங்களைத் தோற்றுவிக்கவேண்டும்.

வைரவர் மான்மியம் தொகுத்தளித்த அதிபர் இப்பொழுது "தேவி திருமுகம்" காட்டுகின்றார். வைரவர் மான்மியத்திலே அவர் தொகுத்தளித்திருக்கும் தரவுகளை நோக்கும்போது வியப்புண்டாகாமற் போகாது. குருவி கூடு சமைத்தது போல, தரவுகளைத்தேடித்தேடி எடுத்துத் தொகுத்துள்ளார். மிகவும் பொறுமையுடன் அவ்வேலையை அதிபர் ஆற்றியிருக்கிறார். அதற்காகவே அவரை நாம் மெச்சுகிறோம்.

சைவசமய வரலாற்றிலே பெண்தெய்வ வழிபாடு பற்றிய ஆய்வுகள் குறைவாகவே காணப்படுகின்றன. தாய்த்தெய்வவழிபாடு மோகன்சதரோ-அரப்பா பண்பாட்டிலேயே காணப்படுகின்றது. வேதத்திலே சுமார் நாற்பது பெண்தெய்வங்கள் இடம்பெறினும் எவரும் பூரணத்துவம் பெற்ற வல்லமையுள்ள தெய்வமாகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றவில்லை. வேதகால முடிவிலே அந்நிலை மாற்றம் காணுகின்றது. அதற்கு அக்காலத்திலே நாட்டில் நிலவிய சக்தி-சிவசக்தி-வழிபாடு உதவி இருக்கலாம். சக்தி வழிபாட்டின் செல்வாக்கிற்குத் தாந்திரீக வழிபாடும் பெருந்துணை புரிந்திருக்கவேண்டும். கிராமிய தேவதைகளும் கற்புடை மகளிரும் கூட பெண்தெய்வ வழிபாட்டிலே பலமயக்கங்களைத் தோற்றுவித்திருக்கின்றனர்.

அதிபர் மயில்வாகனம் வரலாற்றுரீதியான-தர்க்கரீதியான-அறிவியல் அடிப்படையிலான "தேவி திருமுகத்தினை" நாம் தரிசிக்க வேண்டுமாயின் தேவியின் பாரம்பரியங்களை உணரவேண்டும் என்னும் ஆசையினால் சங்கதமும் தமிழுமான மொழிகளில் எழுந்துள்ள தேவி பற்றிய பௌராணிகச் செய்திகளை எல்லாம் அரும்பாடுபட்டு தொகுத்துத்தந்திருக்கிறார். தேவிபாகவதசாரம், அருணாசல மகாத்மியம், சிவமகா புராணம், திருவிளையாடற் புராணம், கந்தபுராணம், தேவிபாகவதசாரம், குமாரசம்பவம் முதலானவற்றிலிருந்து இறைவி பற்றிய பல்வேறு கதைகளையும் நிகழ்ச்சிகளையும் தொகுத்துத் தந்திருக்கிறார். இவை சமய ஆய்வுகளிலே ஈடுபடுவோருக்கு தேவையான தரவுகள்; தேவிபக்தர்களுக்கு நல்விருது.

அதிபர் மயில்வாகனம் "தேவி திருமுகம்" தவவலிமையினால் எங்கள் எண்ணங்கள் நிறைவேறும் என்பதற்கு பதில் கூறும் என்று துணிந்துரைத்திருக்கிறார்.

எல்லாம் வல்ல இறைவன் நண்பர் மயில்வாகனம் பல்லாண்டு வாழ்ந்து தம்மாலான ஆக்கங்களை அளித்துப் பெருவாழ்வு வாழ அருள்புரிவானாக.

**கலாகீர்த்தி. பேராசிரியர்**
**பொன். பூலோகசிங்கம்,**
**D. Phil. (Oxon).**

---

*தாந்திரீக - உபாயம், சங்கதம் - வடமொழி,*
*பௌராணிகம் - புராணம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை பாமாலை

பூவியல் வார்சடைப் பொன்வண்ண மேனிப் புனிதர்தம
தாவியும் அண்ட உயிர்த்தொகை யாவுக்கும் அன்னையுமாய்
காவியங்கண்ணி பிரபஞ்ச நாயகி காட்சி நலம்
தேவி திருமுகம் என்றொரு நூலில் திகழ்கின்றதே

அட்டில் சமைத்து விளையாடல் போலகி லம்படைக்கும்
மட்டில் கருணை இறைவியின் சீர்த்தி வழங்கியவன்
மட்டக் களப்னெும் மாநகர் வாழ்வரி யாவுடைய
மட்டுறு நீப மலரோன் பரிபேர் வகித்தவனே

ஆவி உடல் பொருள் அன்னை தமிழுக் காப்பணமும்
பாதி மதிநதி சூடியின் பாதப் பணிவும் சைவ
நீதி வழுவா முறையும் நிகழ்மயில் வாகனரின்
கோதில்சைவ நெறி நூலினையும் போற்றும் குவலயமே.

வ. சிவராஜசிங்கம் B.A. (London)

*பிள்ளைக்கவி, ஞானநாயகன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவநெறிச் செம்மல், சைவநன்மணி
## சிவஞானவாரிதி, சமாதான நீதவான்
## ஆர். மயில்வாகனம் அவர்கள் ஆர்த்த
## "தேவி திருமுகம்" எனும்

# நூல் வாழ்த்து

சந்தக் கருவண்டு தாமரையைச் சென்றடைய
மந்தி மரமேறி வாவிதனில் குதிக்கத்
தென்னை பழமுதிர்க்கத் தேனில் புனல் விளைக்கும்
பொன்னின் கதிர்மணிகள் பொங்கும் வளநாடன்
தென்றல் அடிவருடத் தீங்கரும்பு நின்றுறங்கக்
கன்னிக் கதிரவனின் கற்றைக் கதிரழகால்
மின்னல் என அலைகள் மெய்சிலிர்த்துத் தவழும்
கடல்படு திரவியங்கள் கலம் பெயர்ந்து கரைசேர
மன்றில் வயல்வரப்பில் மங்கையர்தாம் குதுகலத்தால்
தென்றலிடம் தூது செந்தமிழிற் பாட்டிசைக்க
கன்று தொடர் காரா நின்று நிறை பால்சொரியும்
பாலும் நறுந்தேனும் பாங்கரிலே பல்கிநின்று
வற்றா வளம்சொரியும் மட்டுநகர் பிறந்தோன்
நல்லரிய ஆசிரியர் நன்மணியாய் உயர்ந்து
முத்தமிழ் மாமுனிவ முறுவலது கண்டுமவன்
வித்தகத்தின் சாரல் விழுதாம்என வளர்ந்து
அத்தகையோன் கொற்றம் அணுகி அறிவார்ந்து
ஆசிரிய சேவை அளப்பரிய புரிந்தும்
இல்லத்தரசி இயல்பால் உலகு உயர்ந்து
நன்மக்கள் பயந்து நலங்கள் பலநேர்ந்து
முற்றிய மானுடத்தின் முழுநிலவாய் நிறைந்து
பிற்றைநாள் தமிழ்த்தொண்டு பேணியே மகிழ்ந்து
சங்கத் துணைத்தலைமை தாங்கி அதுவரை
அளப்பரிய சேவை ஆற்றும் பெருமகனாம்
ஆர்மயில் வாகனன் ஆசிரியப் பெருந்தகை தன்
நுண்மாண் நுழைபுலமும் நூல்கள் தருமறிவும்
கண்ணின் கருமணிபோல் கற்றிட்ட வித்தகத்தால்
"சிந்தனைக் கோவை" "ஒன்பதாம் திருமுறை ஒருநோக்கு"
"வயிரவ மான்மியம்"போல் வளங்காட்டும் நூல்யாத்து
தேர்ந்த மதிவளத்தால் திறனாயும் வித்தகத்தால்
"தேவிதிரு முகமாம்" தீங்கரும்பின் நூல்யாத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தெழுத்தை ஓதிநிதம் ஆண்டவனின் பூம்பாதச்
சிந்தனையில் முற்றும் திளைத்துக் களித்திடுவார்
உள்ளுருகி ஊனோடு உயிர்உருகு வார்தமக்குத்
தெள்ளு தமிழில் தேவியரின் திருமுகமாம்
மூன்றுவிழி யுடையவனை முறுவலினால் ஆள்பவனை
முத்திரைப்பொன் மேனியளை மோனத் தவத்தினை
தோன்றுமெழில் நுண்கலையைப் புவனங்கள் யாவையுமாய்
ஈன்றவளை எந்நாளும் மூலமந் திரத்தை ஓதும்
ஆன்றோரைக் காப்பவளை அபிராமி அன்னையினை
அருளொளுகு காமாட்சி மீனாட்சி விசாலாட்சி
கண்டவர்கள் அஞ்சும் காளியவள் தோற்றம்
என்று உலகெல்லாம் இயக்கிநிற்கும் அற்புதத்தை
தோன்றிய பல்லுருவில் உலகு புரக்கின்ற
சுந்தர உமையவளைத் தோத்திரத்தி னால் பரவி
சக்திஎன நிறைந்து சகம்முழுதும் ஆள்பவளை
வித்தைகளாகி வேறாய் மற்றொன்றாய் விளங்கிக்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடும்
வார்த்தைக் கடங்கா வடிவாகும் தெய்விகத்தை
பழையோன் என அழைத்துப் பார்புகழும் மோகனத்தின்
வடிவுகளைச் சித்திரித்து வளர்நூல்கள் பயின்று
கீர்த்திகளைத் தேன்பொதிபோல் எமக்கூட்டும் தன்திறலால்
கிளர் புலமையோடும் கிட்டாத அருளோடும்
நாட்டினுக்குத் தொண்டன் நற்புலமைக் கொருகாட்டு
இன்தமிழால் இனிமை இயைந்து வியந்து நிற்கத்
தேன் பிலிற்றும் செந்தமிழில் தித்திப்பு இதுவென்ன
தென்றலினைத் தொடுத்துச் சூட்டி மகிழ்கின்றான்
"சிவநெறிச் செம்மல்" "சிவஞான வாரிதி"
"சைவநன் மணியாம்" தன்னேரிலா அறிஞன்
அரசுஅறிந்து அணிசெயும் அமைதிப் பெயரினன்
நீதிவான் என்றொரு நிறைவை அணிந்தவன்
எந்தச் சபையும் ஏற்றிப் போற்றிடும்
தகைசால் பெருமகன் தரணி ஏற்றிட
இன்பொடு தேவிதிரு முகமியற்றி
மன்பதை மகிழ்வித்தான் வாரிதிமயில் வாகனனே.

செ. குணரத்தினம்
*தலைவர், கொழும்புத் தமிழ்ச்சங்கம்*
*முன்னைநாள் அரசு அமைச்சு*
*செயலாளர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவி திருமுகம் ஆய்வுரை

சைவநன்மணி இரா. மயில்வாகனம் அவர்கள் மட்டக்களப்பினைப் பிறப்பிடமாகக் கொண்டவர். ஆசிரிய சேவையில் சேர்ந்து அதிபராகப் பதவி உயர்வு பெற்றுப் பல இடங்களில் பணியாற்றியவர். இளந் தலைமுறையினரினதும், பெரியவர்களினதும் மனதில் சைவ சமய உண்மைகள் பதியும் வண்ணம் பல சமய நூல்களை எழுதி வருகின்றார். சிந்தனைக் கோவை ஒன்று, இரண்டு, ஒன்பதாம் திருமுறை ஒரு நோக்கு, வைரவ மான்மியம் எனப்பல அரிய நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். சமயப்பணி செய்வதன் மூலம் எமது திணைக்களத்தில் தொடர்பு ஏற்பட்டதனால் இவரை நன்கு அறியும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. இவரின் சமயப்பணியாக, எழுத்தும் பணிகளைப் பாராட்டி எமது திணைக்களம் கௌரவித்துள்ளது.

அடுத்த நூலாக "தேவிதிருமுகம்" என்ற நூலினை வெளியிடுகின்றார். இந்நூலினை எனது பார்வையில் பார்க்கும் பொழுது சமய இலக்கியம் என்றே கூறலாம். பராசக்தியை உலக மாதாவாகிய அன்னையைப் பற்றிய விரிவான விளக்கத்தினை புராணக்கதைகள் வாயிலாகவும், மற்றும் சமய இலக்கியங்கள் வாயிலாகவும் ஆதாரங்களுடன் தருகின்றார்.

நமது சமயமும் தமிழும் தொன்று தொட்டு இன்று வரை ஓர் ஆய்வுக்கு இடம் பெற்றுள்ளதாகவே இருக்கிறது. இதனை இலகுவாக்குவதற்கு சங்ககாலத்தை மையமாகக் கூறலாம். அக்காலத்திற்கு முன்னும் பின்னும் தேவி என்ற சொல்லை நாம் வாழ்க்கையில் உபயோகித்தோமா என்பது ஓர் ஆய்வு. தேவி என்று வரும் போது தேவனும் வரவேண்டும் சேர, சோழ, பாண்டியர்களே கி. மு. முதலாம் நான்காம் நூற்றாண்டு காலங்களில் சங்கத்தில் இருந்தார்கள், ஆய்ந்தார்கள் என்பன சரித்திர உண்மை.

போரே தொழிலாகக் கொண்ட மறப் பண்பு படைத்த தமிழரசர்கள். தங்கள் வெறியாட்டங்களில் விழா எடுக்கும் போது விஷ்ணு, இந்திரன், வருணன் இவர்களையே தெய்வமாகக் கொண்டனர். சிலப்பதிகாரத்தை எடுத்து ஆய்ந்தால் காணலாம். இவர்கள் ஆரியத் தெய்வங்கள் ஆனால் இயற்கைக்கு இயைந்த முருகன் கொற்றவை முதலியன திராவிடத் தெய்வங்களாயின, காலவரையில் இருவகைத் தெய்வங்களும் ஒன்றாயின. ஐம்பெருங்காப்பியங்களாகிய சிலப்பதிகாரம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிமேகலை, சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி என்பவற்றில் காப்புச் செய்யுள்களில் "திங்களைப் போற்றதும், திங்களைப் போற்றுதும், இன்னும் விரிந்தால்,

*"மாயோன் மேய காடுறை யுலகமுஞ்*
*சேயோன் மேய மைவரை யுலகமும்*
*வேந்தன் மேய பெருமண லுகமும்*
*முல்லை குறிஞ்சி மருத நெய்த லெனச்*
*சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே"*

தொல்காப்பியம் பொருளதிகாரம் இங்கே நிலங்களுக்கேற்ப தெய்வங்களை வகுத்து வணங்கினார்கள் என்பது வெள்ளிடை ஆனால், வெறியாட்டில் எப்போதும் வேலைக் கையில் கொண்டுள்ளார்கள். என்றும் வெற்றியீட்டிய பொழுது காளி, கூளி, இவர்களுக்கு படையல் செய்து வழிபட்டார் என்றும் அறிகிறோம்.

நாம் எடுத்துக் கொண்ட தே, என்னும் பதம் காளியையும் குறிக்கும், நிகண்டாசிரியர் கூற்று. இவ்வாசிரியர், உமை அம்மையே காளியாக மாறி தனக்கு உதவியாக வீரபத்திரனை சிவமூர்த்தியின் கட்பொறியில் இருந்து தோற்றுவித்து தாரகாசுரனை அழித்தார் என்றும் கூறுகிறார். ஆகவே தான் அம்மையாரின் திருவும் பொறிக்கப்பட்டுள்ளார். இது ஓர் சிறப்பாகும். பலவிதமான தலையங்கங்களைக் கொண்டு உதாரணமாக கர்வமடக்கிய காளி தேவி, "வீணாகானத்தால் விலைக்கு வாங்கிய விச்சாவதி", பரமனை வணங்கிய பார்வதி இவ்வாறு வாசக நேயர்களுக்கு புராணங்களில் இருந்து பொறுக்கி இதிகாசமாக இயம்பி இருப்பது மிகப் பொருத்தமானது.

'உமை, இமயம் சேர் சருக்கத்தில் தவம்புரிகிறவராய உமையைப் என்றும் பெயர் ஆகும்

"பற்றுடை யவனைப் பற்றால் பந்துக்கள் பர்வ தேனை
பெற்றுடை உரிமை பேணிப் "பார்வதி" எனப் பேரிட்டார்
முற்றுடை எழிலாள் பின்பு முயல்தவம் பயிலா வண்ணம்
பெற்றுடை யவந்த டுத்துச்சொல் "உமா" எனும் போர் பெற்றாள்

மலையரசன் தாயாகிய மேனை பர்வதராசனுக்கு உரிமையாக உள்ள புதல்வியை பார்வதி என அழைத்தார் பின்பு தக்ஷகாண்டத்தில் தவஞ் செய்தபோது தேவர் ஒழித்திருந்து பார்த்து "உமை" கொடியது என்று கூறினார், மேனை தடுத்தபோது உ ! மா ! இதன் தமிழாக்கம் ஆ ! வேண்டாம் என்பதாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"குமாரசம்பவம் தமிழாக்கம் பண்டிதர் ச. சுப்பிரமணியம்.

இவ்வாறே தேவி திருமுகம் பலவழிகளில் ஆராய்ந்து எழுதப்பட்ட ஓர் ஆக்க நூலாகும்.

தேவனும் தேவியும் ஒன்றே என்பதைப் பலவழிகளால் விளக்கியுள்ளார் சிவஞானசித்தியார்.

*"உலகமே உருவமாக யோனிகள் உறுப்பதாக*
*இலகுபே ரிச்சா ஞானக் கிரியையுட் கரணமாக*
*அலகிலா உயிர்ப்பு லன்கட்கதிவினை யாக்கி ஐந்து*
*நலமிகு தொழில்களோடு நடிப்பான் நாறன்"*

உமாபதி சிவாசாரியார் அவர்கள் மொழிந்ததை தனக்குதவியாக ஆக்கியது தொகுப்பின் தோற்றத்தைக் காட்டுகிறது.

புராணங்கள் கூறியவற்றை முனிவர்கள் மாணவர்களுக்கு சொல்ல அவ்வாறே உண்மை ஓயாது வந்து கொண்டிருந்தது. இவைகளை விட தென்பொதியமாமுனி இமக்கவருனென்னெனன்னின்ப விளையாடல்களை அம்மை அங்கிருந்து அறிந்த இளையர் ஆகிய சுப்பிரமணியக் கடவுள் அகத்திய மாமுனிவருக்கு திருவாய் மலர்ந்தருளினார். இவைகள் அகத்தியமாணாக்கரின் வாயிலாக வழிவந்தது. இவைகளை தன்னால் இயன்ற அளவு ஆசிரியர் தொகுத்துக் கூறியது வியக்கத்தக்கது,

இத்தகைய சிறப்பு வாய்ந்த இந்நூலினை ஆய்வு செய்து எழுதிய நூலாசிரியர் பாராட்டப்பட வேண்டியவர். இவரின் பணி மேலும் மேலும் தொடர அன்னை அருளை பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

*"ஆடக சிதம்பர வணங்குமை யணங்கிலா*
*நாடக னனாந்தசுக கன்குபுனை பங்கினா*
*னேடக மணம் பொருவ வெங்கனு மியைந்துளான்*
*பாடக மிலங்குசிறு பங்கய மிறைஞ்சுவாம்"*

**திருமதி. சாந்தி நாவுக்கரசன்,**
***பிரதிப் பணிப்பாளர்***
***இந்து சமய கலாசார அலுவல்கள்***
***திணைக்களம்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

அன்பான சைவநெஞ்சங்களே !

இறைவன் ஏகனாய் தனித்தும் அநேகனாயும் பல வடிவங்களில் உயிர்களுக்கு கருணை செய்கின்றார். அத்தகைய நிலையில் அன்னை பராசக்தியாய் சகல உயிர்களுக்கும் தாயாக விளங்குகின்றாள்.

'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்று ஔவைப்பாட்டி கூறிவைத்தார். இரண்டு முன்னறி தெய்வங்களிலும் முன்னதாக அன்னையைச் சொல்லி இருக்கிறார். இந்த பிறவிக்கு உரித்தான தாயையே தெய்வமாக வழிபடவேண்டுமென்றால் எந்த எந்த பிறவிக்கும் துணையாக இருக்கும் பரமாத்வையும் தாயாக வைத்து வணங்கத்தான் வேண்டும். அம்பிகையே எல்லா உயிர்களுக்கும் தாயாக இருக்கிறவள். அவள் ஒருத்தி தான் அம்மா. நாம் அனைவரும் அவளுக்கு பிறந்த குழந்தைகள். அதாவது எல்லோரும் எல்லார்க்கும் சகோதரர்கள் என்ற அநுபவம் வரும்.

தெய்வங்களும் அவதார புருஷர்களும், மகான்களும் கூட அம்பாளை உபாசித்து அருள் பெற்றிருக்கிறார்கள். திருஞானசம்பந்தரும் உமாதேவி அம்மையாரால் ஞானப்பால் ஊட்டப்பெற்று தெய்வப் புலமை பெற்றார்.

உலகம் இருக்கும்வரை காலம் முழுவதற்கும் அன்னை ஜகன் மாதா அருள் எங்களைப் பாதுகாக்கும். ஆதி பராசக்தியை வீரம் தரும் துர்க்கை என்றும்செல்வம் தரும் இலக்குமி என்றும் ஞானம் தரும் சரஸ்வதி என்றும் போற்றுவர் மும்மூன்று இரவுகள் போற்றுவதே நவராத்திரி விழாவாகும். பத்தாவது நாளாகிய விஜயதசமியில் புதிதாகக் கலைகள் பயிலத் தொடங்குவர். அன்று மகா நோன்பு நாளாகும். மகிடன் என்ற அசுரனாங்ல் வருந்திய மக்கள் பெரும் நோன்பிருந்து அம்பாளை நோக்கிப் பிரார்த்திதுக் கொண்டனர். அன்னை அவர்களிற்கு இரங்கி மகிடனைச் சங்கரித்து உலகுக்கு மகிழ்ச்சியையும் சமாதானத்தையும் அன்பையும் நல்கிய திருநாளாகும்.

ஸ்ரீலலிதா ஸகஸ்நாமம் 1008 உம் அம்பாளின் திவ்ய குணங்களை விளக்குகின்றன. அவற்றை மனனம் செய்து பேறு பெற்றோர் அநேகர். அபிராமி அந்தாதி 108 உம் திருக்கடவூரில் அபிராமிப்பட்டரால் அம்பாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீது பாடப்பெற்று மிகவும் சக்திவாய்ந்து மிளிர்கின்றன. காயத்திரி மந்திரமாக மக்களால் மிகவும் பாராயணம் செய்யப்படும் மின்வரும் சுலோகம் ஆன்மாவை மிகவும் ஈர்க்கும் சக்தி வாய்ந்தது.

*"ஓம் பூர் புவஸ்வஹ*
*தத் ஸவிதூர் வரேண்யம்*
*பர்கோ தேவஸ்ய தீமஹி*
*தியோ யோநஹ ப்ரசோதயாத"*

அறுவகைச் சமயங்களுள் சக்தி வழிபாடு மிகவும் உயச்சி நிலையில் ஒருகாலம் சிறந்து ஓங்கி நின்றது. இத்தகைய சக்தி வழிபாட்டின் மகிமையை திரு. இரா. மயில்வாகனம் அவர்கள் சைவ மக்களிற்கு நன்கு அறிய வைக்க எடுத்த முயற்சிக்கு எல்லாம் வல்ல இறைவன் ஆசீர்வதிப்பாராக!

இன்னும் சிவநெறிச்செல்வர், சைவ நன்மணி, ஞானவாரிதி என்ற பெயர்களைக் பெற்ற காலங்களில் நடந்த வைபவங்களைக் கண்டு களித்தவர்களுள் நானும் ஒருவர். இவர் பண்டிதரும் இல்லை. பாவலரும் இல்லை. பட்டம் பெற்றவரும் இல்லை. கொழும்பில் சீவிக்க வரும் பொழுது சர்வசாதாரண பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியராகவே வந்தார். வளருங் காலத்தில் தம் அறிவினைப் பெருக்கிக் கொள்ள பிள்ளைக்கவி சிவராச சிங்கம். பி.எ.லண்டன் பட்டதாரியை துணை ஆசிரியராகக் கொண்டு பல சமயச் சொற்பொழிவுகளை நடத்துவார். நடக்கும் இடங்கட்கும் சென்று கொள்வார். கொழும்பு தமிழ்ச் சங்க வாசிகசாலையே இவரது உடன் பிறந்த சகோதரர் ஒருவராக ஆகின்றது. இவ்வறிவினைக் கொண்டே "கல்வி எழுபிறப்பும் ஏழ்மை தரும்" என்ற வாக்கை நிலை நிறுத்தினார்.

இக்கால எல்லையில் திருவாளர் பிள்ளைக்கவி வ. சிவாராஜசிங்கம் யாழ்ப்பாணம் போதனா ஆசிரியராக இருக்கிறார். எனினும் தொடங்கும் எக்காரியத்தின் முன்னும் விநாயகனை முன்னும் சிவராஜசிங்கத்தை பின்னும் சொல்வதை வழக்கமாக்கிக் கொண்டார். இந்நிலை "ஏகலைவனின், நிலையை ஒக்கும் என்பது என தெண்ணம், குரு சீடன், மரபாகும்.

இன்றும் கொழும்பில் எத்தனையோ சமயப் புலவர்கள், வித்துவான்கள் இருந்தும் இவ்வாறான வைரவமான்மியம், தேவி திருமுகம் என்னும் சமய ஆராய்ச்சி நூல்கள் போல எழுதப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவி திருமுகம்

அம்பிகை எவ்வாறாக அருள் செய்தார் என்பது விளக்கும் ஆன்மாக்களுக்கு "கர்வம் அடக்கும் காளிதேவி, என்னும் கட்டுரை, காளியை குலதெய்வமாக வணங்குபவர்கள் தினமும் ஞாபகத்தில் அம்பாளை வைக்க வேண்டும் என்பதைக் கூறுக. வடமொழியிலே "காலி" என்ற சொல்லுவார்கள். தமிழில் காளி என்று கூறுகிறோம்.

சைவநன்மணி திரு இரா. மயில்வாகனம் அவர்கள் சிறப்பிற்கு அவரது மனைவி மங்கையர்கரசியார் மிகவும் உறுதுணை புரிந்தவர். அவர்கள் விபுலானந்த அடிகளாரின் ஆசீர்வாதம் பெற்றவர். எங்கிருந்தாலும், மற்றவர் நலனுக்கு எவ்விதமாயினும் தொண்டு செய்தவர். இவர்கள் இறைவன் பாதம் அடைவர். மேலும் மேலும் நற்பணிகள் புரிய நல்லவர்களாய்த் திகழ எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

திருமதி மகேஸ்வரி பாலச்சந்திரன்
*இளஞ் சைவப் புலவர்*
*இளைப்பாறிய பயிற்றப்பட்ட ஆசிரியை*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவி திரு முகம்

*திருச்சிற்றம்பலம்*

## என்னுரை

உலகமனைத்தையும் ஆக்கி காத்து அழித்து வருவதாகிய ஓர் அபூர்வ சத்தி ஒன்று உண்டு. இதை நாம் எல்லோரும் ஒப்புக் கொள்ளுகிறோம். அப்படியான சக்தி தான் என்ன? என்பதைத் தெரிந்து கொள்வதற்காவே இவ்விடயத்தைத் தொடக்கமாகக் கொண்டுள்ளேன். இதற்கு மையமாக.

1. உலகத்திற்கு கர்த்தாயாவர்? சிவபெருமான்.
2. சிவபெருமான் எப்படிப்பட்டவர்? என்றும் உள்ளவர் எங்கும் நிறைந்தவர், எல்லாம் அறிபவர், எல்லாம் வல்லவர்.
3. சிவபெருமான் ஆன்மாக்களுக்காகச் செய்யுந் தொழில்கள் எவை?
   படைத்தல், காத்தல், அழித்தல், என்னும் மூன்றுமாம்.
4. சிவபெருமான் இந்த மூன்று தொழில்களையும் எதனைக் கொண்டு செய்வார்?
   தமது சத்தியைக் கொண்டு செய்வார்.
5. சத்தி என்னும் சொல்லுக்குப் பொருள் யாது?
   வல்லமை.
6. சிவபெருமானுக்கு சத்தியாவர்?
   உமா தேவியார்

இவ்விருவிடயங்களை நம்முன்னே பரப்பி வைத்தவர் ஸ்ரீல ஸ்ரீ ஆறுமுகநாவலர் ஐயா! அவர்கள். சைவசமயிகளான நாம் இதை உணராமல் இல்லை, ஆனால் உமை சத்தியாக உள்ளார் என்பதையே இன்று நாங்கள் கவனிக்க வேண்டும்.

யார் அறிவார் எங்கள் அம்மை பெருமையை; ஆரறிவார் இந்த அகலமும் நீளமும். பேரறியாத பெருஞ்சுடரே அறியும். இப்பெருஞ்சுடரை நாம் சிவபெருமான் என நம்புகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபெருமான் உயிர்களின் துன்பங்களை நீக்கி தன் திருவடி இன்பத்தினை அவற்றிற்கு நல்கி அருளை நாடினான். நாடி மாயாகாரிய உடலுடன் கூட்டி அவற்றைப் படைப்பித்தருளினான். இதுவே உயிர்களைப் படைத்தல் என்பது உடம்போடு கூட்டுவிக்கப்பட்ட அவ்வுயிர்கள் தொழில் புரிதற் பொருட்டு தொன்மை வினையாகிய ஊக்கத்தினை அவற்றுள் இணைத்தருளினான். அதனாலேதான் படைப்புத் தொழில் என்று பெயர்பெற்றது.

"தானலா துலகமில்லை சகமலா தடிமையில்லை
கானலா தடலில்லை கருதுவார் தங்களுக்கு
வானலா தருளுமில்லை வார்குழல் மங்கை யோடும்
ஆனலா தூர்வதில்லை ஐயனை யாறனார்க்கே"

இன்னும்

உலகமே உருவமாக யோனிகள் உறுப்பதாக
இலகுவே ரிச்சா ஞானக் கிரியையுட் கரண மாக
அலகிலா உயிர்ப்பு லன்கட் கதிவினை யாக்கி ஐந்து
நலமிகு தொழில்க ளோடு நாடக நடிப்பான் நாதன்
(என்று சிவஞான சித்தியார் விளக்கியுள்ளார்)

இவ்வாறாய சிவனின் சத்தி எவ்வாறாகும் என்பது வினா?

ஆரறிவார் எங்கள் அம்மை அப்பன் பெருமையை ஆரறிவார் இந்த அகலமும் நீளமும் பேரறியாத பெருஞ்சுடர் ஒன்றின் வேரறியாமல் நான் விளம்புகிறேன் எதற்காக?

"வெங்கரி வேழமுகமதா னைங்கரன் அருளினால் சிந்திய
சிந்தனைக் கோவை இரண்டும் ஒருநோக்கு ஒன்பதாந்
திருமுறையும் வடுகனாம் வைரவமான்மியமும் வகுத்தபின்
துயருறும் பிறவிநீக்கத் தொடங்கினேன் தேவிதிருமுகமே"

"சத்தியாய் விந்து சத்தி யாய் மனோன் மணி நானாகி
ஒத்துறு மகேசையாகி யுமைதிரு வாணி யாகி
வைத்துறுஞ் சிவாதிக் கிங்ஙன் வருஞ்சத்தி யொருத்தியாகும்
எத்திற நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பள்"

ஆகவே சிவனும் சத்தியும் ஒன்றாந் தன்மை உணர்ந்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவனைப் பற்றி நாம் பல பகுதிகளில் இருந்து கேட்டும் வாசித்தும் அறிந்து கொண்டோம். இவை எவ்வாறாக அறிந்து கொண்டோமானால் புராணங்கள் ஊடாக என்பது விடையாகும். சிவனையும் சத்தியையும் புராண பொக்கிஷத்தில் எடுத்துக் கொள்ளலாம். ஆராய்ச்சியாளர்கள் ''சத்தி''யின் தொடக்க இறுதி என்பனவற்றிற்கு திதி, நட்சத்திரம், நாள், மணி என்பன கூறிக் கொள்ளமாட்டார்கள் கூறவும் முயலலாகாது. அப்படியானால் எப்படி அறிவது அறிந்தாலும் உறுதிப்படுத்தக் கூடியதாக இருக்காது. அப்படி இருப்பதற்கு ஓர் நியாயம் உண்டு, எங்கும் நிறைந்தது, எல்லாம் அறிவது, என்றும் உள்ளது இவைகளால் நம் போன்றவர்க்கு திட்டம் தீட்ட முடியாது.

சிவனே தொடக்கமானவர் என்பதை எல்லோரும் நன்றாய் ஒப்புக்கொள்கின்றோம். சிவனது சத்தி உமையானால் அவ்வெண்ணம் எப்படி வந்தது. எவ்வாறானது என்பனவற்றை சிறிது தெரியாத ஒன்றைத் தெரிவிப்பதும் சரியோ பிழையோ என்று தடுமாறுபவர்களுக்கு தடுமாற்றத்தை நீக்குவதும் சரியோ பிழையோ என்று சிந்திப்பவர்க்கு சிந்தனையை நீக்குவதும் அறிவு என்ற சொல்லினால் உள்ள அரும் பெருஞ் சத்தியே.

பிணியுடை யாக்கை தன்னின் பிறப்பறுத்துய்ய வேண்டி பணியுடைத் தொழில்கள் பூண்டு பக்தர்கள் பற்றினால் விளிப்புடன் தவம் மேற்கொண்டு ஒழுக வேண்டும். தவத்துடன் யாகமும் செய்ய வேண்டும். எங்கள் எண்ணங்கள் தவவலிமையினால் நிறைவேறும் என்பதற்கு தேவி திருமுகம் பதில் கூறும்.

சிவன், தன்வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கை உணர்வினனாதல், இயல்பாகவே பாசங்களில் நீங்குதல், முற்றுமுடைமை, பேரருள் உடமை, வரம்பிலின்பமுடைமை, முடிவிலாற்றலுடைமை, என்னும் எண்குணங்களையுமுடையவன் என்பது யாவரும் ஒத்த முடிபாகும். ஆன்மாக்களை உய்விக்கும் பொருட்டு வேண்டிய வேண்டிய இடத்தில் நின்று அருள் செய்பவர். ஆகவே அன்னாரின் சத்தி எவ்வாறு தன்னுடைய திருமுகத்தினாலே கடைக்கண்ணோக்கியருள ''அவனருளாலே அவன்தாள் வணங்கி' என்றார் மணிமொழி மாணிக்கவாசக சுவாமிகள்.

ஆன்மாவைப்பற்றிய அறிவு நாம் நினைப்பது போலல்ல ஆன்மாவானது இலகுவாக அறியக் கூடியதல்ல. அது அனாதியானது, அழிவற்றது, இது பற்றியுள்ளஉடலே அழிவுள்ளதும் உருவுமானதும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உருவமும் உயிருமாகி, ஓதிய உலகுக்கெல்லாம்
பெருவினை பிறப்பு வீடாய் நிறை வெறும் பெருமான் மிக்க
அருவிபொன் சொரியும் அண்ணாமலையுளாய அண்டர்
மருவி நின் பாத மல்லான் மற்றொரு பாடிலோனே"

எண்ணம் வேறாயது மன்றி, மாறி மாறி வருவது, அண்ணாமலையானைப் பற்றியபோது, அருவமும் உருவுமல்லான் என்பது எண்ணமாயிற்று. அப்பனும் இவ்வாறாயின் அம்மையும் இவ்வாறாகும் என்பது மேற்கூறிய உண்மை. தேவியின் திருமுகத்தை விளங்க வேண்டி, பயனடைய வழியாக உள்ளது தக்கன் தவமே.

தக்கன் பிரமதேவனின் மகன் பிரசாபதி, பிரசைகளுக்கு அதிபதி. மூன்று உலகத்து உயிர்களோடும் தக்கன் தொடர்புடையவன். தக்கனுக்கு 'சிறுவிதி', என்று மற்றொரு பெயர் - விதி, விதித்தற் தொழிலைச் செய்யும் பிரமதேவர். தக்கன் பிரமதேவருக்கு அடுத்த படியில் உள்ள ஒரு பிரமதேவன், பிரமதேவனுடைய பதின்மர் புதல்வர்களை உபப் பிரமர்கள் என்று சொல்லுவார்கள். அவர்களுக்குள்ளே தகுதியானவன் தக்கனே.

புத்திமானும் பிரசாபதியுமான தக்கன் தந்தையிடம் வேதாந்ததங்களைக் கற்றுந் தேர்ந்தும் இருந்தான் "சங்காரக் கடவுளுக்கு படைத்தல், காத்தல் இவைகளைச் செய்வதற்கு உரிமை கொடுத்தவர் யார்? சங்காரத் தொழில் கீழான தாமத் தொழிலன்றோ? இவ்வாறு சிவனை நிந்திக்கக் கூடிய பல வினாக்களை வினாவினான். இவ்வாறான பலவினாக்களுக்கும் விடையை தேவி திருமுகம் காட்டும்.

சங்காரமானது படைக்கப்பட்ட தநு, கரண, புவனபோகங்களாகிய உலகங்களை ஒடுக்குவதாகும். அச் செயல்களின் விளைவு ஆன்ம சுகம், செயல், தாமத குணத்தோடு கூடிய மற்றச் செயலே போன்று தோன்றினும் அஃது அருள் எனப்படும் அனுக்கிரகமேயாகும். நடுவனாகிய இயமதர்மராசனது செயல் கொடுஞ் செயல் போன்று தோன்றுகிறது. அச்செயல் அரிதாகிய நீதியின் செயல் கிரமமாகும். இதை நன்கு உணர "பரமனை வேண்டிய பார்வதியும் பங்கம் விளைத்த காமனும்" என்னும் தலையங்கம் கூற்று கூறும்.

"தவத்தால் தனையனை அடைந்த தக்ஷயணி, கந்தபுராணத்தில் ஒரு பகுதியைப் பார்ப்பது போல் இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வதி தேவி எவ்வெவ் வழிகளால் திருமுகத்தின் பயனாக பரமனை அடைந்தாரோ அவ்வழிகளை விளக்கமாகத் தேவி திருமுகம் கூறும்.

திரு என்ற சொற்கருத்து அழகு தேவியின் அழகால் அனலுருவான அரனை அடைய வில்லையே, அரியதவத்தினைச் செய்து உமை எனப் பெயர் பெற்றார். தேவர்கள் ஒழித்திருந்து தேவியின் தவத்தைப் பார்த்த பொழுது "உமை, கொடுமையான தவம்" எனப் பொருள்பட்டு அழைத்தார்கள் என்பது தக்ஷகாண்டம் தேவனும் தேவியும் வினாவிடைகளால் உணர்த்திய உரிமை கோறல் மிகமிக அழகானது. இத் திருமுகத்தில் உண்டு.

*"இசையிறு பண்பார் இமயமன் மகள்நீ இயற்று நின் தவத்தினால் எனையும்*
*இசையுற விலையாய் இனிது கொண்டிலையோ? இனி எனை உடையை நீ உனையும்*
*வசையற உடையம் யாம் என அரனும், மறைந்தன தவறாந்தங்கள்*
*நசையுறு பயன்தான் நண்ணினாற்கு உழப்பின் நலிவெலாம் அகன்றிடும் இயல்பே"*

இதை விலைக்கு வாங்கிய விச்சாவதி என்னும் தலையனாங்க விடயம் அழகாக விளக்கும்.

இன்னும் சத்தியின் திருமுகம் எவ்வாறான திருவிளையாடல்களைக் கண்காணித்தது என்பதைப் பின்வருமாறு விளக்கலாம்.

என்னுரையில் வருவனவற்றை உள்ளடக்கியதே பின்னுரையாக வந்து தேவி திருமுகத்தை அலங்கரிக்கிறது. வாசகநேயர்கள் திருமுகமோ முழு நிலவோ என்று ஐயப்படமாட்டார்கள் என்பது எனது எண்ணம். இன்னும் உருவமும் பெயரும் இல்லாமல் அனைத்தையும் கடந்து நிற்கும் பரம்பொருளை நிர்க்குணப் பிரமம் என்று கூறுவோம். பாமர நிலையில் இருக்கும் பக்தர்களால் நிர்க்குணப் பிரமம் என்ற கடவுளை அறிந்து புரிந்து வணங்க முடிவதில்லை. எவரும் எளிதில் அறிந்து வழிபடும் பொருட்டு பல்வேறு வடிவங்களால் பெயர்களில் விளங்கி அருள் பாலிக்கும் கடவுளை சகுணப்பிரம்மம் என்று எம்மதம் குறிப்பிடுகிறது. உதாரணமாக. தரையில் ஓடுபாதையில் ஓடியே விமானம் மேலே எழும்புகிறது. தரையில்ஓட அதற்கு சில்லுகள் தேவை. மேலே எழும்பிப் பறக்க ஆரம்பித்தபோது சில்லுகள் தேவை இல்லை. அதுபோலவே ஆரம்ப நிலையில் பலருக்கும் உருவ வழிபாடு என்பது முற்றிலும் தேவைப்படுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த உருவங்களின் மூல மூர்த்திகள் உலக வழக்கத்தின் படி திருமணஞ் செய்து கொண்டு வாழ்வதாகக் கருதி அவை தொடர்பான பல விழாக்களையும் கொண்டாடுகிறோம். சகஸ்கரநாம மந்திரங்கள் கடவுள்களை பிரம்மசாரி என்றுதான் குறிப்பிடுகின்றன. ஆனால் அவர்கள் இல்லற வாழ்க்கை வாழ்வதாகப் புராண வரலாறுகள் கூறுகின்றன. பின்வரும் தலையங்களைக் கொண்ட கதைகள் வெளிப்படுத்தும்.

*"அருணாசலத்தில் நடந்த விளையாட்டும் வினையும்"*
*"தன்னகரில்லாதடாதகைப்பிராட்டி"*
*"பாக்கியவதியான பார்வதி"*

என்பன.

ஏன் இந்த முரண்பாடு

தெய்வங்கள் தேவியர்களுடன் விளங்குவதன் உட்கருத்தை நாம் உணர்ந்தால், இது முரண்பாடு இல்லை என்பது தெளிவாகும்.

பசித்த குழந்தை பால் குடிக்க விரும்புகிறது. குழந்தையின் இந்த இயற்கையான விருப்பமே இச்சா சக்தி என்ற ஆற்றலாகும். "அழுதால் தாய் பால் கொடுப்பாள்" என்ற அறிவு குழந்தைக்கு இயற்கையிலேயே இருக்கிறது. இந்த அறிவாற்றல் ஞானா சக்தி என்று சொல்லப்படும் தன் பசியைத் தாய்க்கு அறிவிக்கக் குழந்தை அழத் தொடங்குகிறது. இந்தச் செயல் ஆற்றலே கிரியா சக்தி எனப்படும்.

இச்சை, கிரியை, ஞானம் என்ற இந்த மூன்று ஆற்றல்களே - சக்திகள் கடவுளரின் தேவியர்களாக, வெவ்வேறு விதங்களில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. சில இடங்களில் ஆற்றங்கரையிலும் அரசமரத்தடியிலும் ஆலமரத்தடியிலும் அமர்ந்திருக்கும் விநாயகரே வேறு இடங்களில் சக்தி சமேதராக இல்லறவாசியாக விளங்குகிறார். அவ்வாறே கார்த்திகேயன் என்றழைக்கப்படும் முருகன் வள்ளி தெய்வானையுடன் விளங்குகிறான்.

வல்லபை, சித்தி-புத்தி என்ற மூன்று தேவியர்களையும் விநாயகர் மணந்து கொண்டதாகப் புராணங்கள் கூறும். நாம் எடுத்துக் கொண்ட கதைகளும் புராணங்களில் பெரியோர்களால் போற்றி எழுதப்பட்டவைகளே. இவைகள் தொடங்கும்போது முன்னொரு காலத்திலே என்று தான் தொடங்கும். ஏனெனில் ஆண்டு திகதி அறிய வொண்ணாதவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாக் கோயில்களிலும் வல்லபை கணபதிக்கு ஒர் இடம் கொடுக்கப்பட்டிருப்பதைக் கண்கூடாகக் காணலாம். செல்வ விநாயகர் ஆனைப்பந்தி விநாயகர் வரதவிநாயகர் என்று இடங்களக்குத் தக்கதாக பெயர்கள் வருவதை அறிவோம். முருகன் ஞானாசக்தியைக் கூர்வேலாக்கி தன்கையில் பிடித்திருக்கிறார். இச்சா சக்தியாகிய வள்ளியும், கிரியா சக்தியாகிய தெய்வானையும் முருகனின் இரண்டு தேவியர்களாக விளங்குகிறார்கள். யோக நூல் காட்டும் சீவன்-சிவன் இரண்டினதும் ஐக்கியமே வள்ளிக் கல்யாண வைபவம் உணர்த்தும் தத்துவம்.

நாங்கள் பல இடங்களில் படித்திருக்கிறோம் திருமால் மூன்று தேவியர்களுடன் காணப்படுவதை அவைகள் ஆன்மாக்களை அணைத்து அருள் செய்வதற்குரிய காரண காரியங்களே. கிருஷ்ண அவதாரத்தில் திருமால் பத்தாயிரம் கோபிகைகளுடன் லீலை புரிந்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. இதை நன்குணர்ந்து ஞானார்த்தமாகப் பார்த்தால் ஸ்ரீராமனின் திருமேனி அடியில் ஈடுபாடு கொண்டு தண்ட காரணியத்துத் தவமுனிவர்கள் கோபியர்களாகப் பிறந்து நாராயணனை நண்ணினார்கள் என்பது புலனாகும். கண்ணனோ பத்தாயிரம் கண்கள் உடையவராகி கோபியர்களுடன் விளையாடி அவர்களுக்கு மோட்சத்தைக் கொடுத்தான். அவரே **நைஷ்டிக பிரமச்சாரி** ஆகவே தான் இவரை வியாசர் யோகேஸ்வரன் என்று வர்ணிக்கிறார்.

உமைக்குப் பாதியுடல் தந்த பரமேஸ்வரனோ காமனைக் காய்ந்தவர். முக்கண் பரமனின் துணைவியான அம்பிகையே மூன்று சக்தியாக வடிவெடுத்தார். பார்வதியும் அவளே, பத்மாவதியும் அவளே தக்ஷாயணியும் அவளே பெண்ணில் நல்லாளொடும் இருந்த பெருந்தகை என்று தேவாரங்கள் விளக்குகின்றன. சிவஞானசித்தியார் பவன் பிரம்மச்சாரி என்றும் பார்வதியை பாகுமொழிக் கன்னி என்றும் குறிப்பிடுகிறார்.

திருமண வாழ்க்கைக்கு முன்பும் பின்பும் தம்பதிகள் எப்படி இருக்கக் கூடாது என்பதை உணர்த்தும் பொருட்டு சிவபெருமான் தக்ஷாயணி திருமண வரலாற்றை நடத்திக்காட்டியிருக்கிறார் என்பதை தேவி திருமுகம் கூறும். மேலும் அவர் திருமணமும் இல்லறமும் இப்படித்தான் இருக்கவேண்டும் என்பதைத் தேவி திருமணம் என்னும் தலையங்கம் கூறும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணவாளனை எவ்வாறு மதிக்கலாம் என்பதை "மேனகையின் மதிமயக்கம்" கூறும்.

"மகளின் மாப்பிள்ளையைக் காணாது
மயங்கிமேலே இருந்தமேனை"
"வீணாகானத்தால் வேண்டியதைப்பெற்ற விச்சாவதி"
"தேவியின் தவமும் மஹிஷனின் மதிமயக்கமும்"

என்பன விளக்கும்.

இவ்வாறே தேவி திருமுகம் வாழ்க்கையில் வழுவில்லாமல் வாழ்வதையும் பகையசுரர்களாக நம்மைக் குடிகொண்ட அகங்காரம் எவ்வாறு அழியும் என்பதை மஹிஷாசுரனுடைய தலையங்கம் கூறும். உமை அம்மையாரின் தவநெறி எடுத்துக் கொண்ட கருமம் இனிது நிறைவேறும் என்பதை வெளிப்படையாக்குகிறது.

நம் கண்முன்னே வாழ்ந்து காட்டிய பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் அன்னை ஸ்ரீ சாரதா தேவியார் ஆகியோர் இருவரும் பவன் பிரம்மசாரி, பாகுமொழிக்கன்னி, என்ற சொற்றொடர்களுக்குப் பொருந்தும் வகையில் தூய பிரம்மசரிய வாழ்க்கையை வாழ்ந்து காட்டினார்கள்.

தேவ தேவியர்கள் மனிதர்களைப் போன்று ஊனுடம்பு பெற்றவர்களல்லர் அவர்கள் காமம் முதலான குற்றங்கள் இல்லாதவர்கள். எனவே அவர்களின் திருமணங்களும் இல்லறமும் உயர்ந்த தத்துவங்களுக்கு விளக்கமாக அமைந்துள்ளன. 'கர்வமடக்கிய காளிகா' இவருடைய கதை ஆணவத்தை எவ்வாறு அடிமைப்படுத்தினார் என்பதை விள்க்கமாகக் கூறுகிறது.

இவ்வாறனவற்றால் நமது மனக்கண்ணால் கண்டு தேவையான தியாகங்களைத் தீர்மானித்து அவற்றிற்கு ஏற்க நடக்கவேண்டும். இவற்றிற்கு மாறாக மானுடர்களின் அளவு கோல்களைக் கொண்டு தேவி திருமுகத்தை அளக்க முயற்சிப்பது மதியுடைமையாகாது.

**அருணாச்சலத்தில் நடந்த விளையாட்டும் வினையும்**

திருஞானசம்பந்தர் திருவறை நல்லூரில் பரமசிவனைப் பரவியிருக்குங்கால், தெரிந்த கின்னரர்களால் இதுதான் அருணாசலம் என்று காட்டப்பட்டார். குருபரர் அங்கிருந்தே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"உண்ணாமுலை யுமையாளொடு முட னாகியவொருவன்*
*பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ*
*மண்ணார்ந்தன வருவித்திரள் மழலைமுழவதிரும்*
*அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ணமறுமே"*

என்னும் பதிகம் பாடி அருணகிரிக்கு போகும் வழியை அறிய விரும்பினராய் அங்கு புஸ்பங்கள் பறிக்கின்றவரும் விநோதமான அங்கங்களையுடையவருமான ஒரு வயது முதிரிந்த பிராமணரைக் கண்டார் கண்டதும் தன்னை மறந்தவராய் மிகவும் வணக்கத்துடன் அவரைப்பார்த்து அருணாசலத்தைப்பற்றி கூறும்படி கேட்டார்.

கிழவர் சொன்னகதை :-

சமுத்திரங்களால் சூழப்பட்ட பூமிக்கே ஆதாரமானது சந்திர சேகர சொரூபமானது அருணசலந்தான். பூர்வத்தில் பிரம்மவிஷ்னுக்களுக்கு இடையே உண்டான விவாதத்தை தீர்ப்பதன் பொருட்டு அக்கினித்தம்பமாய் தோன்றியவர் எவரோ அந்த சம்புவின் ரூபம் இது.

நான் நாநாவேன் என்று சங்கற்பித்த சதாசிவனிடமிருந்து சதுர்முகனும் சதுர்புஜயனும் ஆதியில் உண்டானார்கள். இவர்களின் கர்வமடக்கவே இவ்வருணாசலம் தோன்றியது. இன்னும் கேள். இவர்களின் கேள்விப்படி சங்கரரே நீர் எப்பொழுதும் இப்படித் தோன்றியிருக்க வேண்டும் என்று கேட்டுப் பெற்றார்கள். அருணாசலம் என்றும் பெயரோடு தாபரலிங்கமாகும் படி அருள் செய்யும் என்றும் கேட்டார்கள்.

இதன் பின்னர் அட்டைச்சித்திரத்தையும் ஓர் அளவு சொல்லவேண்டும். சிவபெருமான் ஆன்மாக்களின் பொருட்டுச் செய்யும் கிருத்தியங்கள் சிருஷ்டி, திதி, சங்காரநம், திரோபவம், அனுக்கிரகம் என்ற பஞ்ச கிருத்தியங்கள் ஆகும். இந்தப் பஞ்ச கிருத்தியங்களை தமது சிவசத்திகளைப் பிரகாசிக்கச் செய்தே செய்வர். பிரபஞ்சதோத்திரத்திற்கு நிமித்த காரணன் சிவன் துணைக்காரணம் சிவசக்தி முதற்காரணம் சுத்தமாயை விந்து - அசுத்த மாயை - மோகினி, பிரகிருதியை - மான் ஆகவும் அமைபவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவசக்தியானது அக்கினியோடு சூடு போலச் சிவத்தோடு பிரிப்பின்றி உளதாகிய வல்லமை, இது ஒரு பொருளின் இரு தன்மைத் தாதான்மியம் ஆன்மா முத்தி நிலையில் இறைவனோடு பொருந்தும் அத்துவிதநிலை. தாதன்மியம் இரு பொருளின் ஒரு தன்மைச் சம்பந்தம், அக்கினியின் தன்மை சூடு சிவத்தின் தன்மை. வல்லமையான சிவசக்தி. அக்கினியின் சூடு ஒன்றை கொதிக்க வைத்தல், வேக வைத்தல், பொரித்தல், உருக்குதல் என்பவற்றில் தொழிற்படும் போது அதன் தன்மையாகிய சூடு வித்தியாசப்படுதல்போல, சிவத்தின் வல்லமையாகிய சிவசக்தி, சிவம் பஞ்ச கிருத்தியம் நிகழ்த்தும் இடத்து வெவ்வேறு சக்திகளின் பெயரைப் பெறும்.

சிவம் தமது சிவசக்தியைப் பிரகாசிப்பித்தே பஞ்ச கிருத்தியஞ் செய்யும். இவ்விதம் அவர் செய்யும் தாண்டவமும் பஞ்ச கிருத்திய தாண்டவம்என்று அழைக்கப்படும். அவ்வமயம் தாண்டவங்களின் சக்திப் பிரவாகமும் வெவ்வேறாகவே நிகழும். அவற்றில் ஒன்றுதான் காளிகா தேவியாகும்.

சிருஷ்டி - காளிகா தாண்டவம், திதி - கௌரிதாண்டவம், சங்காரம் - சங்காரதாண்டவம், திரோபவம் - திரிபுரதாண்டவம், அனுக்கிரகம் - ஊர்த்துவ தாண்டவம் ஆகும். பஞ்ச கிருத்தியங்கள் ஒன்று சேர அமையுந் தாண்டவம் ஆனந்த தாண்டவம் ஆகும்.

*"தோற்றம் துடியதனில் தோயும் திதி அமைப்பில்*
*சாற்றிடும் அங்கியிலே சங்காரம் - ஊற்றமா*
*ஊன்று மலர்ப்பதத்தில் உற்ற திரோதம் முத்தி*
*நான்ற மலர்ப் பதத்தோடு"*

(உண்மை விளக்கம்)

உடுக்கை ஏந்திய கை, கிருஷ்டி, திதி - அபயகரம், சங்காரம் - அக்கினி ஏந்தியகை, திரோதம் - ஊன்றியதிருவடி, அனுக்கிரகம் - தூக்கிய திருவடி.

சிருஷ்டி, சங்கார தாண்டவங்களை காளி சக்தியைப் பிரகாசிக்கச் செய்தே தாண்டவம் புரிகிறார் என்பது அறியக் கிடக்கிறது. சிருஷ்டி

---

*தாதான்மியம் - ஒருமைப்பாட்டிருக்கை.*
*பிரித்தற்கியலாது. ஒன்றாயும் வேறாயும் இருப்பர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாண்டவத்திலே ஆன்மாக்களைத் தோற்றுவிப்பதோடு அவற்றின் அனுபவத்திற்குரிய மந்திரம், பதம், வன்னம், புவனம் எனப்படும் சொற் பிரபஞ்சங்களையும் அவற்றின் முதற்காரணங்களாகிய விந்து - சுத்தமாயை - மோகினி - அசுத்தமாயை, மான் - பிரகிருதி மாயை, இவற்றிலிருந்து சத்தி மூலம் தோற்றுவிக்கின்றார்.

அவ்வாறே சங்கார தாண்டவ மூர்த்தியாய் தோற்றுவித்த சிருஷ்டி முறையான பிரபஞ்சங்களை சங்காரமுறைப்படி அவற்றின் காரணங்களில் ஒடுக்கி, காரணங்களையும் ஆன்மாக்களையும் மாயையில் ஒடுக்கி மாயைச் சிவசக்தியில் ஒடுக்கி இந்தச் சக்தியை தம்மிடத்திலே கரந்து சிவம் ஒன்றேயாய் ஏகனாய் நிற்பர்.

மகா சங்காரத்தைச் செய்யுங் கடவுளே முதற் கடவுள் என்பர் அறிஞர்கள். சக்தியும் அத்துடன் பிரிபடாத ஒன்றே. இதையே உட்பொருளாகக் கொண்டு தேவார அருள் முறைத்திரட்டு என்றும் நூலில் உமாபதி சிவாசாரியார் பின்வருஞ் செய்யுட்களால் விளக்குகிறார்.

*"ஒன்றதா யிச்சா ஞானக் கிரியையென் றொருமூன்றாகி*
*நின்றிடுஞ் சத்தி யிச்சை யுயிர்களுள் நேசமாகும்*
*நன்றெலா ஞான சத்தி யானயந் தறிவ னாதன்*
*அன்றருட் கிரியை தன்னா லாக்குவ னகில மெல்லாம்"*

*"சீவனு மிச்சா ஞானம் கிரியையாற் சிவனை யொப்பன்*
*ஆவனென் றிடின னாதி பலமிவற்றினை மறைக்கும்*
*காவல னிவன் செய் கன்மத் தளவினிற் கொடுப்பக் காண்பன்*
*பாவியாம் புத்தி முத்தில் பயன்கொளும் பண்பிற்றாகும்"*

இப்படியான சைவசித்தாந்த உட்கருத்துக்ளை ஒரு குரு மூலமாகப் பெறவேண்டும். இதை எண்ணமாகக் கொண்டும், உயர்திரு உமாபதி சிவம் அவர்களும் எழுத்தாண்டுள்ள பா பிரதிபலிப்பதினால் வந்த எண்ணமும் உந்த

*"குருவே சிவமெனக் கூறினன் நந்தி*
*குருவே சிவமென்பது குறித் தோரார்*
*குருவே சிவனுமாய்க் கேதுமாய் நிற்கும்*
*குருவே யுரையுணர் வற்ற தோர் கோவே"*

---

பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயத்தின் உப அதிபரான திருவாளர் விஸ்வநாதன் சங்கரப்பிள்ளை என்றும் பெரியாரைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார்ந்ததேன் இவர் சிவநெறிக்கழகத்தின் உயர்ச்சியே உயிராகக் கொண்ட வரும் மாணவரை உருப்படுத்தி ஊக்கங்கொண்டு அவர்களை வெளிப்படுத்தும் எண்ணங் கொண்டவருமான சைவசித்தாந்தி.. தன்னை வெளிக்கொணரவும் எண்ணம் இல்லாதவர். தேவி திருமுகம் என்னும் நூல் சிறப்புற வேண்டுமென்னு மெண்ணங்கொண்டு அப்பெரியார் செய்த அறிவுதவி மிகமிக மேலானது.

என் சித்தத்தில் தெளிவுவேண்டின் சிவ, சிவ என்று செல்வேன் என்பதின் இலக்கான ஊழிதோறும் புதிது உறும் கீர்த்தியான் பிள்ளைக்கவி, வ. சிவராஜசிங்கம் ஐயா அவர்களும் தன் மகளுக்குமுதற்குழந்தை கிடைத்த மகிழ்ச்சியில் மகிழவந்தவர் அடியேனாகிய என்னையும் கடைக்கண்ணோக்கினார். எனது இலம்பாட்டையும் இயம்பினேன். அணிந்துரை என்னும் தலைப்பில் ஆக மூன்றே மூன்று விருத்தம் எழுதித்தந்தார்கள். இது தேவி திருமுகத்தின் முழுத்தோற்றத்தையும் காட்டுவதாகவுள்ளது. இதற்கும் எனது மனமார்ந்த நன்றியும் கடப்பாடும் உரித்தாகுக.

ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்தலைவர் கொழும்புக் கிளை, சுவாமி ஆத்மகனாநந்த மகராஜ் அவர்களின் பண்பு அப் பெரியாரின் உறுதுணையுமான வாழ்த்து செய்தியாகும். நான் கேட்டபொழுது எவ்வளவான வேலைப்பழு தாக்கி உடம்பையும் உயிரையும் உறுத்தியபோதும் நன்கு ஆராய்ந்து எழுதித்தந்ததில் பெருமகிழ்ச்சியும் பெருமையும் பணிவும் பெறுகிறேன். அன்றியும் தேவி திருமுகம் என்றும் நூலில் முதலில் எடுத்தாள்வதற்கு உருத்துடையதாக எடுத்து கொண்ட "காளிகா தேவி"யின் கிரந்தங்களைத் தந்தது மன்றி அவற்றின் உட்பொருட்களை பாமரராகிய நமக்கு விளங்கிக் கொள்ள தமிழாக்கத்தையும் தந்துள்ளார். இவரது உதவி எவ்வாறானது என இயம்புதற்கு தமிழில் சொற்கள் இல்லை என்றே சொல்லலாம் வேறு மொழிகளில் சொல்வதற்கு எனது படிப்பின் பாக்கியம் இவ்வளவானது என வரையறுக்கப்பட்டுள்ளது. சக்தியின் பலவின திரு வடிவங்களிலும் திருஉருவானது காளிகா தேவியாகும். ஆகவே நானும் அட்டைப் படத்தில் இதனைச் சேர்ந்துள்ளேன். முதற்கண்ணாக "கர்வமடக்கிய காளிகா தேவி"யைக் கொண்டுள்ளேன்.

திரு. பொ. பூலோகசிங்க போராசிரியர் கலாகீர்த்தி D. Phil. (Oxon). அவர்களையிட்டு எவ்வாறு விபரிப்பது என்று தெரியாது. முழுமையாக உள்ள நூல் பிரதிகளை ஒன்றிணைந்து ஊகித்து வாசித்து உருட்டி திரட்டி தவ வலிமையைப் பற்றி கூறியிருப்பது எனது நூலின் பெருமையாகும் என்றார். இன்னூல் சமய இலக்கியத்தில் அங்கம் வகிக்கும் என்பது எனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணம். அடுத்ததாக குணமென்றும் குன்றாய திரு. செ. குணரெத்தினம் இலக்கியச் செம்மல் அவர்கள் என்னையும் நான்பிறந்த நாட்டையும் வர்ணித்திருப்பது கம்பநாட்டாள்வார் மருத நிலத்தையிட்டுக் கூறுவதிலும் பார்க்க மேலாக இருக்கிறது. ஆய்வுரையாக பிரதிப்பணிப்பாளர் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், திருமதி. சாந்தி நாவுக்கரசன் அவர்கள் ஆய்ந்துள்ளது சொல்லுதற்கரியது அன்றியும் சமய இலக்கியத்தின் ஒரு இடத்தைப் பிடித்து விட்டது என்று கூறுவது பிற்காலத்தை நிர்ணயிப்பதற்கு உதவியாக இருக்கிறது. அடுத்ததாக ஸ்ரீமதி மகேஸ்வரி பாலச்சந்திரன் அவர்கள் இளஞ்சைவப் புலவராவார். தமிழும் சைவமும் இவரது உயிர்நாடி. இவர் ஸ்ரீமதி மங்கையர்க்கரசி மயில்வாகனத்துடன் ஆசிரியராகப் பணியாற்றி வரும்போது என்னைப் பற்றி அறிந்துள்ளார். பயிற்றப்பட்ட அதிபராக ஓய்வு பெற்றுவந்த பின்னரே இவ்வாறான அறிவைப்பெற்றார் என்பது போற்றத்தக்கது.

நிறை செல்வங்களாய பிள்ளைகளின் ஒருமைப் பாடாக நிற்கிறது. இந்நூல். அறிவு, ஆற்றல் இவைகள் இருப்பினும் பொருள் வேண்டுமென்பது நேயர்கள் உணர்ந்தவை. இவற்றை உதவியவர்கள் இவர்களே. மருமகன், மருமக்கள், இவர்களும் தோன்றாத் துணையாய் உள்ளார்கள். மக்களின் வள்ளன்மை வான் சிறப்பைச் சேர்ந்தது. இவைகள் யாவற்றிற்கும் மேலாக நான் சிந்தை இன்றி வேலை செய்கிற பொழுதும் உறு துணையாக நின்று வேண்டிய இடத்து பிழைகளைத் திருத்தி புதியன புகுத்தி களைப்பு, இளைப்பு இவற்றைமாற்றி உதவிய மங்கை மணவாட்டடியின் நினைவு மறவாதிருக்கிறது. அவரே ஸ்ரீமதி மங்கையர்க்கரசி மயில்வாகனம் ஆவர்.

இன்றும் வாசிகசாலையே அறிவு இருக்கும் ஆதுலர் சாலை இவற்றின் உபயோகம் என்போன்றவர்க்கே தெரியும். ஆயிரத்தொழாயிரத்து தொண்ணூறாம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை நான்கு நூல்கள் வெளியிட்டு இதை ஐந்தாவதாக வெளியிட வைத்தது வாசிகசாலையே. அவற்றின் காரியகர்த்தாக்களை முன்னைய புத்தங்களில் பொறித்துள்ளேன். இந்நூலுக்கு செல்வி. ஜெய ஸ்ரீ இராஜபரமசிவம் அவர்கள் செய்த உதவி மிகமிகப் பெரிதாகும். எத்தனையோ புத்தகங்கள் வெளியில் எடுக்கப்படாமலும் உள்ளன. அவற்றை தேடுவது கடினமானது. நாளாந்த திரட்டுப் பதிவில் இடம் பெற்றால் எடுப்பது இலகு ஆனால் அவற்றைத் தேடித்தந்தமை பெரியதான காரியம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவமும் தமிழும் தமக்கென எண்ணி தயங்காது பொதுவேலைகளை பொருளாகக் கெண்டவரும் கணனியைக் கண்ணாகக் கொண்டு வாழ்கிறபொன். விமலேந்திரன் அவர்களை நினைவு கூராமல் இருக்க முடியாது. பொற்கிளி பறந்தோடும் பொன்னாடை புள்ளி விழும். பொன் எழுத்து நின்று நிலவும்.

"நாவுண்டு நெஞ்சுண்டு நற்றமிழுண்டு நயந்தசில பாவினங்கள் பலவுண்டே பங்கிற் கொண்டிருந்தோர் தேவுண்டு வக்கும் பாவிப் பசுந் தேனின் பைந்தாட் பூவுண்டு நாரொன்றிலை என்று இராது யானே தொடுக்கிறேன் நாராக."

*"பொன்போல மேனிப் பொன்னையா புதல்வன் விமலேந்திரன் பெருமை*
*சொன்னாலும் வாய் நோகும் தூயசேற்றில் நட்டாலும் நற்பெரும் பயிராகும்*
*கண்மூன்றுடை கடவுள்தான் மறந்தாலும் தேவி திருமுகமச்சாக்கினாரை*
*மண்ணும் கடல்வாணம் மங்கி மடிந்தாலும் மறக்க முடியாதே.*

திருவருளும்குருவருளும் கூடும் காலமே ஒரு காரியம் கைகூடும். "கண்ணார் அமுதுண்டார் காலம்பட அழுதார்." திருக்கடைக்காப்புக் கூற்று. அதுபோல பேயினுடன் நின்றாலும் பிரித்தறியவொண்ணாத நான் ஆசைமிகுதியால் பூசை பாற்கடலை நக்க புக்கது போல "தேவி திரு முகத்தை , தொடங்கி பிராய முதிர்வால் வந்த உடல்தளர்வு ஊன் குறைவு இவற்றை நோக்காது சரி என்ற சொல்லை மிகப் படுத்த பிழை என்ற சொல்வரவேண்டும். அதற்கு இலக்காகாமல் வாரம் பட்டுளி தீயவும் நல்லவாம். தீரக் காய்ந்துளி நல்லவும் தீயவாம். ஆகையால், மழைபோல் பிழை பொறுப்பீர்கள் என்று கூறி வாசகநேயர்களுக்கு வணக்கம் செலுத்துகிறேன்.

*"வெறுக்குந் தகைமைகள் செய்யினுந் தம்மடியாரை மிக்கோர்*
*பொறுக்குந் தகைமை புதியததன் றேபுது நஞ்சையுண்டு*
*கறுக்குங் திருமிடற்றாள் திருமிடற்றானிடம் பாகங்கலந்த பொன்கல*
*மறுக்குள் தகைமைகள் செய்யினுந்றுன்னை வாழ்த்துவனே"*

*"மன்றின் மணிவிளக் கெனலா மருவுமுகநகை போற்றி*
*யொன்றிய மங்கல நாணி னொளி போற்றியுலகும்பர்*
*சென்று தொழவருள் சுரக்குஞ் சிவகாமசுந்தி தன்*
*னின்ற திருநிலை போற்றி நிலவு திருவடி போற்றி"*

(கோயிற்புராணம்)

*திருச்சிற்றம்பலம்*
*ஹர ஹர மஹாதேவா.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவி திருமுகம்

*திருச்சிற்றம்பலம்*

*கடவுள் வணக்கம்*

சித்திவிநாயகர் துதி

உள்ளமெனுங் கூடத்தி லூக்கமெனுந் தறிநிறுவி யுறுதியாகத்
தள்ளரியவன் பென்னும் தொடர்பூட்டியிடை படுத்தித்தறுகட் பாசக்
கள்ளவினைப்பசு போதக் கவளமிடக்களித்துண்டு கருணையென்னும்
வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை நினைந்து வருவினைகடீர்ப்பாம்

காப்பு : செறிதரு முயிர் தொறும் திகழ்ந்து மன்னிய
மறுவது மானிட மரபில் மேவிய
அறுவகை நெறிகளும் பிறவு மாகிய
இறைவிதன் மலரடி இறைஞ்சி ஏத்துவாம்.

*(கந்தபுராணம்)*

*சிவசக்தி*

சுரும்புமுதற் கடிமலர்ப் பூங்குழல் போற்றி
யுத்தரியத் தொடிந்தோள் போற்றி
கரும்புருவச் சிலை போற்றி கவுணியர்க்குப்
பால் சுரந்த கலசம் போற்றி
யிரும்புமனங் குழைந்தென்னை யெடுத்தாண்ட
வங்கயற்க ணெம் பிராட்டி
யரும்புமிள நகை போற்றி யாரண நூ
புரஞ்சிலம்பு மடிகள் போற்றி

*(திருவிளையாடற்புராணம்)*

*சிவபெருமான்*

வென்றுளே புலன்களைந்தார் மெய்யுண ருள்ளந் தோறுஞ்
சென்றுளே யமுதமுந்துள் திருவருள் போற்றி யேற்றுக்
குன்றுளே யிருந்துகாட்சி கொடுத்தருள் கோலம் போற்றி
மன்றுளே மறியா மறைச் சிலம் படிகள் போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பரமசிவன்*

பூவண்ணம் பூவின்மணம் போல மெய்ப்போதலின்ப
மாவண்ண மெய்கொண்ட வன்றன் வலியரனை தாங்கி
மூவண்ண சந்நிதி முத்தொழில் செய்பவாளா
மேவண்ண லான்றன் விளையாட்டின் வினையை வெல்வாம்

*மீனாட்சியம்மை*

பங்கயற்க ணரியபரம் பரனுருவே தனக்குரிய வடிவமாகி
யிங்கயற்க ணகனுலகத் தெண்ணிறந்த சராசரங்க ளீன்றுந்தாழாக்
கொங்கயக்கண் மலர்க் கூந்தற் குமரி பாண்டியன மகள் போற்கோலங் கொண்ட
வங்கயற்க ணம்மையிரு பாதப்போ தெப்போது மகத்துள் வைப்பாம்

பிரமதேவனும் காணுதற்கரிய பரமசிவனுடைய திருமேனியே தனக்குரிய திருமேனியாகக் கொண்டு இடமகன்றதாகிய உலகங்களையும் அளவற்ற விண்ணுலகங்களையும் ஆன்மகோடிகளையும் தனக்குப் புறம்பாகத் தோற்றும்படி ஈன்றும் தாழ்வுபடாத போதாந்தமாகிய தனங்களையும், இருள்போலக் கருமைநிறம் பெற்று மலர்கள் சூடிய அளகபாரத்தையுமுடைய குமரியாகிய மலையத்துவச பாண்டியராஜன் புத்திரியாகத் திருமேனி கொண்டுவந்த மீனாட்சியம்மையின் செந்தாமரை மலர்போன்ற இரண்டு திருவடிகளையும் எக்காலத்து மனதிற் கருதுவதாக.

*சபாபதி*

உண்மைய றிவானந்த வுருவா யெவ்வு யிர்க்கு முயிராய் நீரின்
றண்மையனல் வெம்மை யெனத் தனையகலா திருந்து சராசங்களீன்ற
பெண்மையுருவாகிய தன் னானந்தக் கொடிமகிழ்ச்சி பெருகவார்ற்று
மண்மைய தாயம்பலத்த ளாடியருள் பேரொளியை யகத்துள்வைப்பாம்

சச்சிதானந்தமே திருமேனியாகக் கொண்டு எல்லாவுயிர்களுக்கும் உயிராகி நீரிடத்திருக்கும் குளிர்ச்சியைப் போலவும் தீயிடத்திருக்கும் வெம்மையைப் போலவும் தம்மைவிட்டு நீங்காமலிருந்து சராசரமாகிய உயிர்களையெல்லாம் பெற்ற பெண்வடிவாகிய தம்முடைய ஆனந்தக் கொடியென்றும் சிவகாமியம்மைக்கு மகிழ்ச்சி பெருகத் தக்கதாக யாவருக்கும் எளிதாய்ப் பொன்னம்பலத்தில் நடனஞ் செய்தருளிய சோதிரூபமுள்ள நடேசமூர்த்தியை எமது சித்தத்தில் வைத்துச் சிந்திப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சோமசுந்தரக்கடவுள்*

சடைமறைத்துக் கதிர் மகுடந்தரித்து நறுங்கொன்றை யந்தார் தளர்ந்துவேப்பந்
தொடை முடித்துவிட நாகக்கலனகற்றி மாணிக்கச்சுடர்ப்பூணேந்து
விடைநிறுத்திக்கயலெடுத்து வழுதிமருமகனாகி மீனநோக்கின்
மடவரலை மணந்துலக முழு தாண்டசுந்தரனை வணக்கஞ் செய்வாம்.

சடைமுடியை மறைத்து, ஒளி நிறைந்த ரத்தின மகுடந்தரித்து, வாசனை தங்கிய கொன்றைப்பூமாலையை நீக்கி வேப்பம் பூமாலையை அணிந்து, விஷத்தையுடைய சர்பாபரணங்களை விட்டு மீனக்கொடியையேந்தி மீனாட்சியாகிய தடாதகைப் பிராட்டியாரை திருக்கலியாணஞ் செய்தருளி மலையத்துவச பாண்டியராசன் மருகராகிச் சௌந்தரபாண்டியன் என்றும் பெயரும் பெற்று உலகங்களையெல்லாம் ஆண்டசோம சுந்தரக் கடவுளை வணங்குவாம்.

*தடாதகைப்பிராட்டியார்*

செழியர் பிரான் திருமகளாய்க் கலைபயின்று முடிபுனைந்து செங்கோலோச்சி
முழு துலகுஞ் சயங்கொண்டு திறை கொண்டு நந்திகணமுகனைப் போர்ச் சாய்த்துள்
தொழுகண வற்கணிமணமாலிகை சூட்டித் தன்மகுடஞ் சூட்டிச் செல்வன்
தனழவுறு தன்னரசளித்த பெண்ணரசியடிக்கமலர்தலை மேல் வைப்பாம்.

பாண்டியர் குலத்தலைவனாகிய மலையத்துவச பாண்டியன் புத்திரியாய்த் திருவவதாரஞ்செய்து வேதாகம முதலாகிய கலைகளையெல்லாம் ஒதியுணர்ந்து மகுடாபிசேகஞ் செய்யப்பெற்று செங்கோல் செலுத்தி உலகங்களையெல்லாம் வென்று நிறைவாய் திருக்கயிலைக்குச் சென்று நந்திகணங்களைப் போரில் ஓடச் செய்து ஜெயம் பெற்றும் பிரமவிஷ்ணுக்கும் முதலாகிய தேவர்களெல்லாம் தொழுகின்ற தன்கணவனாகிய கயிலாசபதிக்கு திருக்கல்யாண மாலை தரித்து தன் மகுடத்தையுஞ் சூட்டி செல்வமிகுந்த தன் அரசாட்சியையும் கொடுத்த பெண்ணரசியாகிய தடாதகைப் பிராட்டியின் திருவடித்தாமரைகளை எம்முடைய சிரசின் மேற் தரித்துக் கொள்வாம்.

*சரஸ்வதி*

பழுதகன்ற நால்வகைச் சொன் மலரெடுத்துப் பத்திபடப்பரப்பித்திக்கும்
முழுதகன்று மணந்து சுவை யொழுகி யவை பெறமுக்கண் மூர்த்திதாளி
றெழு தகன்ற வன்பெறுநார் தொடுத்த தலங்களால் சூட்ட வாரிச் சுரும்பும் தேனுங்
வெண்டோட்டு முண்டகத்தாளடிமுடிமேற்கொண்டு வாழ்வாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றம் நீங்கிய பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என்னும் நால்வகைச் சொற்களாகிய மலர்களையெடுத்து புத்தியுறப்பரப்பி எட்டுத்திசைகளிலுஞ் சென்று மணம் வீசி மதுரமொழுகி அலங்காராம் பொருந்த அகன்ற அன்பாகிய நாரினால் மாலையாகத் தொடுத்து திரு நேத்திரங்களையுடைய சோமசுந்தரக் கடவுள் பாதங்களில் பணிந்து தரிப்பதற்கு வரிபொருந்திய சுருமமெனும் வண்டுகளும் தேனென்கின்ற வண்டுகளும் குடைதலாய் மலர்ந்த இதழ்களையுடைய வெள்ளைத் தாமரை மலரின்மேல் வீற்றிருக்கும் சரஸ்வதியின் திருவடிகளை எமது முடிமேல் சூட்டிக்கொள்வாம்.

*(கந்தபுராணத்தின் பயன்)*

**நூலோன்:**

**திருமுகம் காணும் தேவியின் திருவருள் நாயினேன் நவில்வான்**
**ஒருமுகம் காட்டி ஆவியின் உள்ளொளி பரப்பிய தேதெனில்**
**அண்டங் கடந்த பொருளா னந்தவெள் ளப்பொருள் ஆகியே**
**பண்டும் இன்றும் போற்றும் அம்மை பார்வதிப் பொருளதாமே.**

*திருச்சிற்றம்பலம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம பார்வதி பதியே

பார்வதியையும் அவர் பதியாகிய சிவனையும் வணங்குகிறேன்.

கிருஷ்ணமூர்த்தி ஷட்குண ஜஸ்வரியரான உபமன்யு முனிவரை நோக்கி, "சுவாமி! உலகம் யாவும் இஷ்டமூர்த்திகளால் வியப்தமாகவுள்ளது என்று தேவரீர் சொல்லக்கேட்டு உணர்ந்தேன். பார்வதி பரமேஸ்வரருடைய விபூதியை உண்மையாக உணரவிரும்புகிறேன். அந்தப் பார்வதி பரமேஸ்வரர்கள் எப்படிப் பிரபஞ்சத்தை அதிஷ்டித்திருக்கிறார்கள்?" என்று கேட்க, உபமன்யு முனிவர், சிவபெருமானைத் தியானித்து சொல்லத் தொடங்கினார்.

*(விபூதி – அணிமாமுதலிய அட்டசித்தி)*

"கிருஷ்ணா! நீ கேட்ட பார்வதி பரமேஸ்வரருடைய விபூதியையும் உண்மை நிலையையும் சுருக்கமாகச் சொல்லுகிறேன். விவரமாகச் சொல்ல சக்தியுடையவனல்லேன். சக்தி சக்திமான்களுடைய விபூதியிலேசமமே இந்தப் பிரபஞ்சம் முழுதுமாகும். சடரூபமான பொருளும் சித்ரூபமான பொருளும் ஆகிய இரண்டும் சுத்தம் என்றும் அசுத்தம் என்றும் பெயர்களைப் பெறும். அன்றியும் பரம் என்றும் அபரம் என்றும் பெயர்களைப் பெறும். சித்ரூபமானது சடத்தைப் பொருந்திய பிரகிருதியை உண்டு செய்யும். அந்த ஞான ரூபமே சுத்தம் என்றும் பரம் என்றும் சொல்லப்படும். சித்து அசித்து முதலியவற்றுக்கெல்லாம் சிவனுஞ்சக்தியுமே தலைவர்கள். ஆகையால், பிரபஞ்ச முழுவதும் சிவசக்திகளின் ஸ்வாதீனத்தில் இருக்கும். அவ்வாறில்லாமல் இவர்கள் பிரபஞ்சத்தின் வசத்தில் இருப்பவர்களல்ல. இவர்கள் இருவரும் பிரபஞ்சத்துக்கு பாலகர்களாகையால் விஸ்வேஸ்வரர் என்று சொல்வார்கள். சந்திரிகையில்லாமல் சந்திரனும் பிரபை இல்லாமல் சூரியனும் பிரகாசியாததுபோல, சிவபெருமான் சக்தியோடல்லாமல் பிரகாசியான். ஆகையால் சிவனைப் போலவே சக்தியும் சக்தியைப் போலவே சிவனும் ஆகும். இவர்களுக்குத் தாரதம்மியம் கிடையாது. சக்தியில்லாமல் சிவனில்லை சிவனில்லாமல் சக்தியில்லை. சிவன் சக்தியுடன் கூடியிருந்தே தேவிகளுக்குப் பக்தி முக்திகளைக் கொடுக்க வல்லவனாவான். ஏகமாகிய பராசக்தி அபர சக்திகளைச் சிருஷ்டித்து செய்யும். அந்தச் சக்தியே மூலப்பிரகிருதி, மாயைமுக்குணங்கள் என்று சொல்லும் படிப்பிரியும் பராசக்தியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவதத்துவம் முதலாகப் பிருதிவி ஈறாக சகம் முழுவதையும் விரிக்கும். எம்பெருமானைப் பிரியாமல் எள்ளில் எண்ணெயைப்போல விளங்கும் பராசக்தி, படைப்புக்காலத்தில் செனித்தும், அதனிடமாகக் கிரியாசக்தி தோன்றும். அந்தக்கிரியாசக்தியே மூலப்பிரகிருதியை அதிஷ்டித்து, நாத தத்துவத்தை உண்டு செய்யும் நாததத்துவத்திலிருந்து விந்து ஜனிக்கும். விந்துவிலிருந்து சதாசிவன் உதிப்பான். சதாசிவத்திலிருந்து மஹேஸ்வரன் உதிப்பான். மஹேஸ்வரனிடத்தில் சுத்தவித்தை தோன்றும், அந்தச் சுத்தவித்தையை வாகீஸ்வரருக்குச் சக்தியாகிய பொருள் வாகீஸ்வரி என்று கூறப்படும். இவ்விதமாகச் சுத்த தத்துவங்கள் ஐந்தும் தோன்றிய பிறகு, அனந்தன் என்னும் வித்தியேஸ்வரனால் மாயையானது காலம், நியதி, கலைவித்தைகளைத் தோன்றச் செய்யும். கலையிலிருந்து அராகதத்துவமும் புருஷ தத்துவமும் தோன்றும். ஸ்ரீ கண்ட உருத்திரனால் மாயையிலிருந்து திரிகுணப்பகுதி ஜனிக்கும். அவற்றிலிருந்து எண்ணற்ற அண்டங்களும் தேகங்களும் ஜனிக்கும். ஆகையால் உலகம் முழுவதும் சக்தி மயமேயாகும். இச்சாசக்தி ஞானாசக்தி, கிரியாசக்திகளால் சிவன் இவ்வுலகக் காரியத்தை நடத்துகிறான். அவற்றில் இச்சாசக்தி கருணை செய்யும், ஞானாசக்தி, அதற்கு இதுகாரணம் என்று உணர்ந்தும். கிரியாசக்தி, விரும்பியதொழிலைச்செய்யும், பராசக்தியின் ஏவலால் அபரசக்தி உலகை உண்டாக்கும். சிவனும் சக்தியும் இல்லாவிட்டால் ஜகத் இல்லை. சிவனும் சக்தியுமாகப் படைத்த உலகைச் சாந்தம் என்பார்கள். சிவனே தந்தை. சக்தியே தாய். சிவனே பரமான்மா. சக்தியே மனோன்மணி. சிவனே மஹேஸ்வரன்; சடசக்தியே மாயை; சிவனே புருஷன், சட சக்தியே பிரகிருதி, சிவனும் சக்தியுமே உருத்திரனும் உருத்திராணியும், திருமாலும் கமலையும், பிரமனும் பிரமிணியும், சூரியனும் பிரபையும், இந்திரன் இந்திராணியும், அக்கினியும் ஸ்வாஹாதேவியும், யமனும் யாமியும், நிருதியும் நைருதியும், குபேரனும் புத்தியும், சந்திரனும் ரோகிணியும், ஈசானனும் ஈசானியும், அனந்தனும் அனந்தையும், காலாக்கினி ருத்திரனும் காளியும், சுவாயம்பு மனுவும் சதருபையும், தக்கனும் பிரசூதியும் ரூசியும், ஆஹுதியும் பிருகுவும் கியாதியும், மரீசியும் சம்பூதியும், அங்கிரசும் ஸ்மிருதியும், அத்திரியும் அநுசூயையும், காசிபனும் அதிதியும், வசிஷ்டனும் அருந்ததியுமாக ஆணுருவங்கள் எல்லாம் சிவனும் பெண்ணுருவங்கள் எல்லாம் சக்தியுமாம். விஷயங்கள் எல்லாம் சக்தி. அவைகளை நுகர்வோன் சிவன், கேட்பவன் சிவன்; கேட்டிடப்படுவது சக்தி தொடுவோன்–சிவன் தொடப்படுவது சக்தி காண்பவன் சிவன். மணங்கள் சக்தியும் அவற்றை அநுபவிப்பவன் சிவனுமாகும். அறிபவன் சிவன் அறிபவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தி. உயிரே சிவன் உடலே சக்தி பகல் சிவன், இரவு சக்தி ஆகாயம் சிவன், பூமி சக்தி சமுத்திரஞ் சிவன் அதன் கரை சக்தி மரங்கள் சிவன் அவற்றில் படரும் கொடிகள் சக்தி சொல் சக்தி அதன் பொருள் சிவன் இவ்வகையாகச் சிவனும் சக்தியும் எப்பொருளிலும் ஒருவரையொருவர் பிரியாது உறைவார்கள். சிவ சக்திகளின் விபூதிகளில் சிலவற்றையே நான் கூறினேன். அநேக ஆயிரம் ஆண்டுகள் சொன்னாலும் அது சொல்லி முடியாதது பிரகிருதி முதலிய விபூதியானது. இப்பொழுது நான் சொன்ன விபூதியாகும். பிரகிருதிக்கு மேற்பட்ட விபூதியை எனக்குத் தெரிந்தவரையில் சிறந்த சிவபக்தனாய உனக்குச் சொன்னேன். இந்தச் சிவசக்திகளின் விபூதியைப் பக்தியில்லாதவர்களுக்கும் பாவிகளுக்கும் மாணவரல்லாதவருக்கும் சிவனடியாரல்லாதவருக்கும் சொல்லக்கூடாது. இதுவே, நான்கு வேதங்களிலும் சொல்லப்பட்டுள்ள பரம இரகசியப் பொருள். இந்தக் கதையைச் சொன்னவர்களும் கேட்டவர்களும் தமது உறவினரோடு நெடுங்காலம் வாழ்ந்து உத்தம மைந்தர்களைப் பெற்று, சிவபக்தியில் சிறந்தவராகி தமது பாவங்களையெல்லாம் ஒழித்து சுகவாழ்வு வாழ்வார்கள்!" என்று உபமன்யு முனிவர் சொல்லிவிட்டு மேலும் தொடர்ந்தார்.

"கிருஷ்ணா! தாவரச் சங்கமங்களாகிய பிரபஞ்சம் முழுவதும் சிவசொரூபமேயாகும். இந்த உலகம் முற்றும் சிவரூபம் என்பதைப் பசுக்கள் அறியமாட்டா. அந்தச் சிவபெருமானை உள்ளபடியே உணர்ந்த பெரியோர்கள் அபரபிரமம் என்றும், பரப்பிரமம் என்றும், மஹாதேவன் என்றும், சிவன் என்றும், சர்வசாக்ஷி என்றும் பலவகையாகச் சொல்லுவர். பூதம் முதல் பிருகிருதி ஈறாகவுள்ளவை அபர பிரமமாகும். ஞானரூபமே பரப்பிரமம். யாவற்றையும் படைக்குந் தன்மையாலும் பரம், அபரம் என்பவற்றையும் அறியும் மேம்பாடுடையவர்கள் பிரமம், என்பார்கள், வித்தை அவித்தைகளின் வடிவமென்றும் சத்து அசத்துக்களுக்கும் முதற்பொருள் என்றும் சொல்வார்கள். க்ஷரம் என்றும், அக்ஷரம் என்றும் அந்த க்ஷரா க்ஷரங்களுக்குப் பரம் என்றும் சமஷ்டி என்றும், வியஷ்டியென்றும், இரண்டிற்கும் காரணம் என்றும், பிரதானம் என்றும், புருஷன் என்றும், மகாவியக்தம் என்றும், காலம் என்றும், விராட் என்றும், ஹிருண்ய கர்ப்பன் அந்தர்யாமியென்றும், பரம் என்றும் சொல்வார்கள். கருத்தாவுடன் கிரியை கூடுவதே காரியம் என்பதாகும். குற்றமற்ற தவமுடையவர்கள் கரணம், காரண்யம், சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம் துரியாதீதம், விருணன், குணன், சுதந்திரன் சுதந்திரமில்லாதவன், குரூரன்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரூரமில்லாதவன், ஆசையுடையவன், நிராசையுடையவன். கிரியாவான், கிரியையில்லாதவன், இந்திரியமுள்ளவன், இந்திரியமில்லாதவன், அக்ஷரன், அழிவுடையவன் என்று பலவாறாகக் கூறுவார்கள். உருவம், அருவம் காணப்படுவது, காணப்படாதது, சொல்லப்படுவது, சொல்லப்படாதது, சிந்தாஸ்வரூபம் சிந்தாதீதம், ஞானம் அஞ்ஞானம், உணர்வு உணர்வற்றது என்று இவ்வகையாக அந்தப் பொருளைப் பலர், பலவகையாகச் சொல்வார்கள். எந்த வகையாகச் சொன்னாலும், இறுதியில் அந்தச் சிவபகவானையே அடைந்து அவன் திருவடி நிழலிலேயே வசிப்பார்கள். சிவபெருமானை உணரமாட்டாத, பசுக்கள், சக்கரம் போலச் சுழன்றுவரும் பிறவிகளில், சிவபெருமானை நன்றாக உணர்வார்களானால், பசுதத்துவமும் பாசமும் ஒழிந்து, சிவபெருமானையடைந்து சிவபெருமானுடைய திருவடிகளில் கலப்பார்கள்.

*அரகர மகாதேவா*

*ஸ்ரீ மஹா புராணம்*

*அம்மையப்ப ரேஉலகுக் கம்மையப்ப ரென்றறிக*
*அம்மையப்பர் அப்பரிசே வந்தளிப்பர் – அம்மையப்பர்*
*எல்லா உலகுக்கும் அப்புறத்தார் இப்புறத்தும்*
*அல்லார் போல் நிற்பார் அவர்*

*(திருக்களிற்றுப் பாடியார் – திருக்கடவூர் உய்யவந்ததேவர்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புராண ஆரம்பம்

புராணம் என்பது வேதத்திற்குப் பூதக்கண்ணாடி, சின்னஞ் சிறிதாய் இருப்பதை பூதக்கண்ணாடி நன்றாகப் பெரிது பண்ணிக் கொண்டு காட்டிற்று. இம்மாதிரி வேதத்தில் சுருக்கமாக சின்னஞ் சிறிதாகச் சொல்லப்பட்டிருக்கிற தர்மவிதிகளை கதைகள் மூலம் பெரிதாகக் காட்டுவதுதான் புராணம் ஒன்றைச் சுருக்கமாகச் சொன்னால் அது மனதில் ஆழமாகப் பதியாமல் போய்விடலாம். அதையே நன்றாக விரித்து பல கிளைக் கதைகளாச் சொன்னால் ஆழமாய்ப் பதிந்து விடும். இது சாதாரணம்.

நம் புராணங்கள் எல்லாம் நாரதர் ரிஷிகளுக்குக் கூறக் கேட்டதும், அகத்தியர் முனிவர்களுக்கு கூறக் கேட்டதும், சூதக முனிவர் தன்னுடைய சீடர்களுக்குக் கூறக் கேட்டதுமேயாகும். அக்கால நிகழ்வுகளில் மனமே மட்டற்ற அச்சுயந்திரமாக இருந்தது. அவைகளை மற்றைய சீடர்களுக்குக் கூறுவதற்கும் தொடரை உண்டாக்கக் கூடிய ஓர் வழியாயிற்று. இவ்வாறே அகத்தியரின் மாணவர்கள் தம் தம் மாணவர்களுக்குச் சொல்லி இக்கால மகா உபாத்தியாயர் போன்றவர்களுக்கும் சொல்லி, கடைசிவரையும் அவ்வாறே நடந்து வருகின்றன. உண்மையைப் பேசு என்ற மந்திரம் தாரமந்திரமாக இருந்தது, உண்மை பேசு என்பதை அரிச்சந்திர புராணம் விபரிக்கிறது. அறத்தைப் பின்பற்று என்று இரண்டு சொற்களில் வேதம் விளித்ததை மஹாபாரதம் தர்ம புத்திரர்களின் கதையால் வெளிக் கொணர்ந்திருக்கிறது. "அன்னை தந்தையரை தெய்வமாகக் கொள் என்ற கொள்கையை இராமாயணம் விளக்குகிறது, இவ்வாறே பூதக் கண்ணாடி பல உலக கருத்துக்களை விபரித்து விபரித்துக் காட்டுகிறது. இன்றும் அடக்கம், பொறுமை, தயை, கற்பு என்பன போன்ற தர்ம சாதனங்களை புராணங்களாகிய பூதக் கண்ணாடியால் காணலாம்.

ஒவ்வோர் கற்பகாலங்களிலும் மாறி மாறி சம்பவங்கள் நடந்தன. இதன் பேறாக சுருக்கிக் கூறுவன இதிகாசங்கள் அதாவது சரித்திரங்களாகும். இப்படி மாறி மாறி வேதங்களை விரிவாகக் கூறினாலும் இவற்றில் உள்ள சிலவற்றையாவது நாம் சிந்திக்கிறோமா ? இல்லவே இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புராணங்கள் நமக்கு எடுத்துக் காட்டியவற்றில் ஒருவகை உயிர்களைக் காப்பாற்றி வருவதற்காகவே சத்தியைப் பற்றிக் கூறுகின்றது. அந்தச் சத்தியே உலகை ஆழுகிற சத்தியை சிவனுக்குக் கொடுக்கிறாள் என்பது கொள்கை. பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் ஐயா அவர்கள் தனது முதலாம் சைவவினாவிடையில் உமாதேவியார் என்று சிறிய சொல்லால் மாணவர்களுக்குப் புகட்டினார். இவர் உலகத்துக்கு கர்த்தாயாவர் ? என்னும் வினாவை வினவி, சிவபெருமான் என்னும் விடை கண்டு, சிவபெருமானுக்கு சக்தியாவர் உமாதேவியார் என விடை கண்டார். அந்த உமையே எமது தேவி.

எப்பொழுதும் அளவு சொல்லப்படாத பெருமையை உடைய அந்த வெள்ளிமலைமேல் நீலகண்டனாகிய தேவரைக் காத்த அந்தப் பரமசிவன் கோவிலுக்கு முன்னே சிவதீர்த்தங்களில் சிறந்ததாயிருக்கும் தீர்த்தக்கரையில் சந்திர காந்தக் கல்லில் நவரத்தினங்களைப்பதித்து தேவதச்சனால் செய்த ஆயிரங் கால் மண்டபம் ஒன்றுண்டு. அந்த மண்டபம் நட்சத்திரங்களுடனே பூரணச் சந்திரன் வந்து தரிசனம் செய்வதற்கு சமயம் பார்த்துக் கொண்டிருப்பது போல விளங்கும். அதில் வேங்கையாசனத்தின் மேல் புராணங்களை அருளிச் செய்த சூத புராணகாரர் எழுந்தருளி இருந்தார். அப்போது அந்த சிவதீர்த்தத்தில் வந்து ஸ்னானம் செய்து சந்தியா வந்தனம் முதலிய அனுஷ்டானங்களை முடித்து சந்திர சேகரரைத் தியானித்துத் துதித்துக் கொண்டு சம்புபந்தன் சதாநந்தன் உத்தமன் மகோதரன் உக்கிரவீரியன் பிரசண்டன் சூதரை வணங்கி துதித்து நடந்த காரியங்களை நினைவாக்கினார். அவரது திருவாய் மலர்ந்த மலர்களையே நாம் புராணங்கள் என அழைக்கிறோம்.

வேதம், ஆகமம், புராணம் மிருதி முதலாகச் சொல்லுகின்ற சாஸ்திரங்களின் நிச்சயதார்த்தம் உலகங்களையெல்லாம் பெற்ற பார்வதி நாயகனே பரமென்று ஆராய்ந்தறிந்த பெருமையை உடைய மெஞ்ஞான மஹரிஷியே உங்களுக்கு நாங்கள் சொல்லிக் கொள்வதொன்றுண்டு. அஃதென்னவென்றால் மேருமந்தரம், கைலாயம், ஸ்ரீசைல முதலான இடப்பாகத்தில் மீதேறுகின்ற சிவலோகத்தையுடையவன் வாசம் பண்ணுகின்ற தலங்கள் அனேகம். எல்லோரும் அழிவில்லாத போகத்தையும் மோஷத்தையும்மடையச் செய்வனவென்று அத் தலங்களின் காரணமும் மகிமையும் எங்கள் மனத்துக்கு இசைய அருளிச் செய்வீர். அப்படி ஐயம், திரிபு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியாமை ஆகிய குற்றங்கள் போக உங்கள் அருளினால் ''நாங்கள் சிற்றறிவுடையவர்கள், ஆகையால் தெளிந்துகொள்வோம். இன்னமும் நாங்கள் மயக்கத்தையுடையோராக இருக்கிறதினாலே அந்த மயக்கங்கள் தீர அருள் செய்யவேண்டும். அதாவது சிவதலங்களுக்குள்ளே சிறந்த ஸ்தலமும் சிறந்த தீர்த்தமும் வேண்டினோருக்கு போக மோக்ஷங்களை அருளுகின்ற மூர்த்தியும் ஆகம வேதாந்தங்களின் அறிவுங் கெடாதிருக்கிற பரஞ் சோதியுமுடைய ஒரு தலத்தைச் சொல்லவேண்டுமென்றார்கள். அப்படியவர்கள் சொன்னபோது அவர்களுக்கு முன்னே முகமலர்ந்து சூதபுராணியர்களும் சிவஸ்தலங்களுக்குள் விசேடமானதுமானதை ஆராய்ந்து பரமசிவனுடைய தலங்களில் கேட்டவுடன் மோக்ஷத்தைத் தருவதாகிய தலம் இங்குண்டு. அதாவது பதினெண்புராணத்திலொன்றாகிய காந்தம் அது சங்கிதையுடையது அவை சனற்குமாரரும் சூதகரும். மற்றவை சங்காரும் – விஷ்ணுவும் – பிரமனும் – சூரியனும் தங்கள் தங்கள் பெயரினால் சூட்டப்பட்டன. அவற்றில் சங்கர சங்கிதையைப் பரமசிவன் பார்வதிக்குச் சொல்லும்போது அவள் மடியிலிருந்து குமரக்கடவுள் நன்றாகத் தெரிந்தார்.

அவர் தம்மை வழிபடுகின்ற அகத்திய முனிவருக்கு உபதேசித்த நாள் முதல் அகத்தியசங்கிதையென்று பெயராயிற்று. அந்த அகத்திய சங்கிதை பரமசிவனுடைய திருவடி நிழலாகிய பேரின்ப வீட்டைத் தருவதாகிய ஒரு தலத்தை விசேடித்துச் சொல்லுகின்றது. அப்படி விசேடித்து சொல்லுகின்ற தலம் எதுவென்றால் திருவாலவாயென்று அவர் சொல்லக் கேட்டவுடனே மோக்ஷத்தைத் தருவது என்றருளிச் செய்த சூதபுராணிகரை மோக்ஷசிந்தனையுடைய முனிவர்களெல்லோரும் அந்தத் தலத்தை இன்னதென்றருளிச் செய்ய வேண்டுமென வியாசர் மாணாக்கராகிய சூதமுனிவர் முறையாகச் சொல்லத்தொடங்கினார்.

பிரமதேவன் சாஸ்திரோத்தப்படி அசுவமேதயாகஞ் செய்யவேண்டிருக்க முக்தியைத் தரும் காசியினிடத்தில் தனது புத்திரருடனே முன்னொரு காலத்தில் அகத்தியர் – வியாசர் – நாரதர் – சனகன்– சனந்தனன் – சனற்குமாரன் – சனாதனர் கௌதமன் – பராசரன் – விமதேவன் – வான்மீகி – வசிட்டன் முதலான முனிவர்களுடனே சென்று பத்து அசுவமேதயாகம் முடித்து சத்திய லோகத்திற்கும் போன பின்பு அந்த முனிவர்களெல்லாரும் காசிவிசுவநாத சுவாமியைத் தரிசித்து வணங்கி அங்குள்ள முத்தி மண்டபத்தில் தர்மார்த்த காமமோக்ஷங்களைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனகாதியர்களுக்கு அருளிச் செய்த தக்ஷிணாமூர்த்தி சந்நிதியிலிருந்தனர். நாரத மகா முனிவரை தலம் – தீர்த்தம் – மூர்த்தி என்கின்ற மூன்றுஞ் சிறந்தனவாகவே ஒரு சிவஸ்தலத்தைச் சொல்லியருள வேண்டுமென, அந்த நாரதபகவான் கலைஞானங்களெல்லாம் தெரிந்த சனற்குமாரரிடத்தில் தெரிந்து கொண்டவர். வேதவியாசராதலால் அவரிடத்தில் வந்தனை வழிபாடுகளுடனே கேளுங்களென்ன அந்த வேதவியாசர் சுப்பிரமணியரிடத்தில் வேதாகமங்களெல்லாம் தெரிந்து கொண்டவர் அகஸ்தியராதலால் அவரைக் கேளுங்களென்ன, அம்முனிவர்கள் அகஸ்தியரை வணங்கி வாதாபி, வில்லவனைக் கொன்ற தருமஸ்ரூபியாய் விந்தயகிரியை யடக்கின தவமலையே! அலைகடலைக் குடித்த சிருயைக் கடலே, அருமையான முத்தமிழைப் பொழிந்த மேகமே என ஆயிரவேதங்களாற் துதிசெய்து மூவகைச் சிறப்புள்ள ஒரு சிவஸ்தலத்தை அருளிச் செய்ய வேண்டுமென அவர் முகமலர்ந்து மகானந்தன் என்னும் மறையவனும் அவன் மனைவியும் மக்களிருவரும் மூன்றாம் யுகத்தில் பாவத்தாற் கோழிகளாய்ப் பிறந்து முத்தி மண்டபத்தில் வந்து முத்தியடைவரென்ற சேவல்களையும் கணபதியையும், முருகக் கடவுளையும் தக்ஷிணாமூர்த்தியையும் வணங்கி அங்கயற் கண்ணியையும் சோமசுந்தரக் கடவுளையும் தியானித்துச் சமாதி கூடி ஆனந்த பரவசமாகினஉமாதேவி தனக்குச் சொன்னதை சுப்பிரமணியக் கடவுள் உபதேசித்தார். அந்தச் சங்கர சங்கிதையில் செய்யக் கூடாத தவங்களெல்லாஞ் செய்து மனந் தெளிந்து மிகவும் அருமையாகப் பெறுகின்ற மோட்சத்தை எளிதாக கேட்டவுடனே செய்யும் ஒரு தலமுண்டு, அது மூன்று சிறப்புமுள்ளது. எல்லாச் சிவஸ்தலங்களிலுஞ் சிறந்தது. வேதாந்தமாகி விளங்குகிற பரமசிவன் அருளுருக் கொண்டு அறுபத்து நான்கு திருவிளையாடல் செய்தருளின திருவாலவாயென்னும் தலம் மண்ணுலகில் சிவலோகம் என்று சொல்லப்படும்.

இவற்றை விட முன் ஒரு காலத்தில் நைமிசாரண்ணியம் எனும் வனத்தில் வசிப்பவர்களான தவ முனிவர்கள் அனைவரும் அதிவிநய பக்தியோடு வியாச மகரிஷின் சிஷ்யரும் நற்குணங்களையுடையவருமான சூதமா முனிவரைப் பார்த்துப் பின்வருமாறு கேட்டார்கள்.

'மகாபாக்கியசாலியான சூதக முனிவரே! நீங்கள் நீண்ட நெடுங்காலம் சிரஞ்சீவியாகச் சுகத்தோடு வாழ்வீர்களாக! நாங்கள் தங்களிடம் சிலவற்றைக் கேட்க விரும்புகிறோம், நீங்கள் வியாச பகவானது திருவருளால் ஃ கிருத கிருத்தியர் என்ற தன்மையை அடைந்தவர், கடந்தகாலத்தில் நடந்தவைகளையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்காலத்தில் நடக்கிறவைகளையும் எதிர்காலத்தில் நடப்பவைகளையும் இனி வரும்காலத்தில் நடக்கப் போகும் விருத்தாந்தங்களையும் அறிந்து சொல்லக்கூடிய ஆற்றல் படைத்த திரிகால ஞானியாதலால் தங்களுக்குத் தெரியாத விஷயம் துளியுமிராது. குருவான வியாச பகவானின் கருணையால் அனைத்தும் சுலபமாகச் செய்யப்பட்டன. நீங்கள் தயவு செய்து சர்வோத்தமருமான சிவபெருமானின் தத்துவத்தையும் அவருக்குரிய சிறந்த பூசை முறையையும் எங்களுக்குக் கூறியருள வேண்டும். நிர்க்குணனான மகேஸ்வரன் எப்படி குணனாகிறார். நாங்கள் சிவதத்துவத்தை நன்றாக விசாரித்து அறிந்தவர்களல்ல. மகாதேவரும் உலகத்திற்குச் சுகம் நல்குபவருமான சங்கரன் என்னும் திருப்பெயரையுடைய பகவான் இந்த உலகப் படைப்புக்கு முன்பும் படைப்பின் மத்தியகாலத்திலும் முடிவான பிரளய காலத்திலும் எவ்விதமாக இருக்கிறார்? அவர் எப்படித் தோற்றமளிக்கிறார்? எப்படிப் பிரசன்னமாகி இவ்வுலங்களை முன்னிட்டு அவர் எத்தகைய பயன்களைக் கொடுக்கிறார், எந்த உபாயத்தினால் சர்வேஸ்வரன் விரைவாகப் பிரசன்னமாவார் இவற்றையும் இன்னும் நாங்கள் கேட்காத விஷயங்களையும், உத்தம விரத சீலரான தாங்கள் சொல்ல வேண்டும் என்று சனகர் முதலான முனிவர்கள் விருப்போடு கேட்கவே சூதமாமுனிவர் மிகவும் உற்சாகத்தோடு கூறலானார். (இது மஹா சிவபுராணக் கூற்று.)

திரிமூர்த்திகள், எழுவகைத் தோற்றம், பிரமாண்டம் இவற்றின் நிலைகளை அறிவுறுத்திக் கெடாமல் இருப்பதால் தான் புராணமே பிரமம் எனப்படும். இப்புராணங்கள் சொல்லியவற்றைத் தவறி நடப்பதே பந்தம். இவை நீக்கிப் புராணம் சொன்ன வழியில் நடப்பது மோக்ஷம்.

இவை சர்க்கம், பிரதிசர்க்கம், மனுவந்தரம், வம்சம், வம்சானுசரிதம், ஸ்திரி, ரக்ஷணம், சமுஸ்தை, ரது, ஆசிரயம், இப்பத்து லக்ஷணங்களையுடையன. இது கிருதயுகத்தில் நூறு கோடி கிரந்தங்களாக பிரமனால், திரோதாயுகத்தில் கோடி கிரந்தங்களாக பதினெண்புராணங்களாகவும் வகுக்கப்பட்டது. துவாபரயுகத்தில் வியாசரால் பதினெண் புராணங்களாகவும் வகுக்கப்பட்டது. பின் கூறிய ஐந்தையும் நீக்கி ஐந்தெனக் கூறுவர். பாகவதம், பிரமம், பதுமம், ஆக்னேயம், பிரமகைவர்த்தம்.

ஸ்ரீ சிவமூர்த்தியினிடம் இவைகளைக் கேட்ட நந்திமாதேவர் சனற்குமார முனிவருக்கு உபதேசிக்க, அவர் வியாசருக்கு உபதேசிக்க, வியாச பகவான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூதகருக்கு உபதேசித்தனர்.

*"அன்ன மண்டபந் தன்னு ளருந்தவம்*
*என்ன வேங்கை யதண்மே விருந்தனன்*
*பன்று கேள்விப் பதினெண் புராணமுஞ்*
*சொன்ன மாதவச் சூத முனிவனே"*

*(கந்தபுராணம்)*

இப்புராணங்கள் பதினெண் வகைப்படும்

உபபுராணம் பதினெட்டுள, அவை உசனம், கபிலம், காளி, சநற்குமாரம், சாம்பவம், விசதர்மம், சௌரம், தூர்வாசம், நந்தி, பாராசரியம், நரசிங்கம், நாரதீபம், பார்க்கவம, ஆங்கிரம், மாரீசம மாவனம், வாசிட்டம், இலிங்கம் வாருணம், முதலியன.

மச்சம், கூர்மம், பிரமாண்டம், கருடம், சாரதீயம், விஷ்ணு இவை ஆறு.

சைவ, பவிஷ்யம், மார்க்கண்டம், இலிங்கம், சாந்தம், வராகம், வாமனம் இவை ஏழு.

தியானம் = தியானத்தில் ஆண்டஐவ்வியானம், ஐஸ்வரியத்தார் உத்ததமானு சுகமும் உண்டாகும்.

*அண்ணல் பாற்றெளிந்த நந்தியடிகள் பாற் சனந்குமார*
*வண்ணிறையன்பினாய்ந்து வியாதனாக்குணர்த்தவந்த*
*புண்ணிய முனிவர் சூழ்ந் கோதியபுராணமூவா*
*றெண்ணிய விவற்றுட்காந்தத் தீசசங்கிதையின் மாதோ (தி)*

*பங்கயற்க ணரியபரம் பரனுருவே தனக்குரிய படிவமாகி*
*யிங்கயற்க ணகனுலகத் தெண்ணிறந்த சராசரங்க ளின்நுந்தாபுரக்*
*கொங்கயற்கண் மலர்க் கூந்தற் குமரி பாண்டியன் மகள் போற் கோலங்கொண்ட*
*வங்கயற்க ணம்மையிரு பாதப்போ தெப்போது மகத்தில்வைப்பாம்*

புராணவகைகளும். தொகைகளும்

சிவபுராணம் – சைவம், பௌஷிகம் மார்க்கண்டம், லிங்கம் காந்தம், வராகம், வாமநம், மச்சம், கூர்மம், பிரமாண்டம். இவை சிவபுராணங்களாம். 268000 கிரந்தங்கள்

விஷ்ணு புராணம் – காருடம், நாரதீபம், விண்டு, பாகவதம், விஷ்ணுபுராணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரமபுராணம், பதுமபுராணம், பிரமபுராணங்கள் 55000 கிரந்தங்கள்.

பிரமபுராணம் – ஆக்னேயம், அக்கினிபூரம் 8000 கிரந்தங்கள்

அக்னிபுராணம் – பிரமணகவந்தம் எனப்படும் சூரிய புராணம் 12000 கிரந்தங்கள்.

சூரியபுராணம் – சைவபுராணங்கள் முதலிய பத்தும் இலட்சத்து ஐம்பத் தெண்ணாயிரம் கிரந்தங்கள் காருடமுதலிய விஷ்ணுபுராணங்கள் நான்கும் ஐம்பத்தையாயிரம் கிரந்தங்கள். பிரம முதலிய இரண்டு அறுபத்தையாயிரம் கிரந்தங்களையுடையன. ஆக்னேயம் எண்ணாயிரம் கிரந்தங்கள். பிரமனகவர்த்தம் பன்னீராயிரம் கிரந்தங்கள்.

இப்புராணங்கள் கிருதயுகத்துப் பிரம்மதேவரால் பிரமமெனவொன்றாகி நூறு கோடி கிரந்தங்களாகவும், திரோதாயுகத்து இருடிகளால் கோடிகிரந்தங்களடங்கிய நூற்றிப் பதினெட்டுச் சங்கிதைகளடங்கிய பதினெட்டுவகையினவாகவும் துவாபரயுகத்து வியாசபகவானால் நான்கு லக்ஷசத்து எண்ணாயிரம் கிரந்தங்கள் அடங்கிய பதினெண்புராணங்களாயும் ஆகின. இப்புராணங்கள் வியாசர் வழியாக ரோமகர்ஷணருக்கும் ரோமகர்ஷர் சுமதி, அக்கினி வர்ச்சஸ் முதலியோருக்கும் கூற வெளிவந்தன.

இவை அபிதான சிந்தாமணியைப் பற்றியன.

*"முற்ற வோதிய புராணமூ வாறினுட் காந்தம்*
*பெற்ற தாறு சங்கிதை யவை யாறுந்தம் பெயராற்*
*சொந்த பேர் சனற் குமரமா முனிவரன் சூதன்*
*கற்ற வார் சடைச் சங்கரன் மாலயன் கதிரோர்"*

*"குன்றெ றிந்தவோர் வழிபடு குறுமுனிக் குரைந்தான்*
*அன்று தொட்டஃ தகத்திய சங்கிதை யாகி*
*நின்ற தன்னது கேட்பவர்க் கரனடி நீழல்*
*ஒன்று மின்பவீடளிப்பதா வொருதல முரைக்கும்"*

*கந்தபுராணம்*

*திருச்சிற்றம்பலம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்வமடக்கிய காளிகா தேவி

தாருகாசுரனால் துன்பமடைந்த தேவர் சிவமூர்த்தியை அடைந்து தமது குறை கூறினார். பெண்ணாலன்றி எவராலும் இறவாத தாருகனை வெல்லச் சிவமூர்த்தி சத்திக்குக் கட்டளையிட்டார். அக்காலையில் தேவியின் ஒருகலை சிவமூர்த்தியின் விஷக்கறை படிந்து களற் கண்ணிற் பிறந்து வெளிப்பட்டது. அவ்வுருகான மாதிய விஷக்கறைபடிந்து வந்ததால் காளி எனப் பெயரடைந்தது. இவ்வகை பிறந்த காளி தனது கோபாக்கினியால் தாருகனை நீறாக்கினாள். இவளிடம் பிறந்த கோபத் தீ குழந்தையுருக் கொண்டிருந்தது. இதனை நோக்கிய காளி குழந்தைக்குப் பாலூட்டினாள். சிவமூர்த்தி குழந்தையையும் பாலையும் தம்மிலொடுக்கினார். ஒடுங்கிய சிவமூர்த்தியிடத்திருந்து எட்டுருக் கொண்டு வைரவமூர்த்தி தோன்றினார்.

மகிடாசுரன் செய்த துன்பத்தை தேவர் சிவமூர்த்தியிடம் கூறினர். அக்காலத்து சிவமூர்த்திக்குக் கோபமுண்டாயிற்று. அக்கோபம் பெண்ணுருவாய்த் திரண்டது. அதுவே காளியுரு என்பர். இவள் பீசன் என்னும் அசுரனை ஒரு துளி இரத்தம் கீழ் விழாது ஆகாயம் மேல் வாயாகவும், பூமி அடிவாயாகவும் அங்காந்து உண்டு மாய்த்தாள். சிவமூர்த்தியிடம் நிருத்தஞ்செய்து தோல்வியடைந்தவள். தஷயாக அகத்தின் பொருட்டு இறைவியின் கோபத் தீயிற்பிறந்தவளென்றும் கூறுவர். காளனென்னும் வீரபத்திரனை மணந்தவள் இவளுடன் பகை கொண்ட, அசுரர் பாம்பு, தேள் முதலிய விஷ ஜென்துக்களை விட்டுக் கடிக்க ஏவ, இவள் அவை துன்பஞ் செய்யாமல் மரக்கால் கொண்டு ஆடினாள். ஆதலால் இவள் கூத்து மரக்கால் எனப்படும். இவளுக்கு ஊர்தி சிங்கம், கொடி அலகை, படை சூலம்.

சத்தமாதாக்களில் ஒருத்தி, வாயுரூபமான சத்தி, இவட்கீசர் காலம் அல்லது ஈசானர். வேதவியாசன் தாய் சத்தியவதி ஓர் பெயர். காளிதாசன் காளி தேவியின் உபாசனா பலத்தால் கவியானவன். வட மொழியில் காளிதாசன் போஜன் இராசாவின் சமஸ்தான வித்துவான்.

காளி என்பது யமுனை நதியில் உள்ள ஒரு மடு. இதில் உமை வலம்புரிச் சங்குருவாய்த் தவம் புரிந்தவள். இதைக் காளிந்தி நதியில் நீராடிய தக்கனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதவல்வியும் எடுத்து வளர்த்தனர். தக்கன் செய்தவத்தின் பயனின் பயனாகும் கச்சியப்பரின் கந்தபுராணத்தினுள்ளவை. சக்திபீடங்கள் ஆலயங்களில் அமைக்கும் போது காளிபீடமும் இடம்பெறும்.

ததீசி முனிவர் முன்னிலையில் தக்ஷன் சிவனை இகழ்ந்தான். பலவித புத்திகள் கூறியும் தக்ஷன் தன்னிலையில் இருந்து மாறவில்லை. "இது விரைவில் அழிந்து போகக் கடவது என்று சபித்து அவ்விடம் விட்டு நீங்கினார். ஆனால் யாக அவிசை உன்னிக் கருதியதாலும் தேவர்கள் அவ்விடத்தை விட்டு நீங்கவில்லை. உமாதேவி தன் கணவனாகிய சங்கர பகவானைப் பணிந்து தம்மை இகழ்ந்து செய்யும் தக்ஷனுடைய யாகத்தை அழிக்கவேண்டும் என்று கூற சிவபெருமானும் தேவியினுடைய வேண்டுகோளுக்கு இரங்கி, மகா பராக்கிரம சாலியும் கணங்களுக்கெல்லாம் தலைவனும் ஆகிய வீரபத்திரனைப் படைத்தார். அந்த வீரபத்திரர் சிவபெருமானைப் பணிந்து அவர் சந்நிதியில் இருந்தார். அப்போ உடனே தேவியும் தன் கோபத்தால் ஆயிரஞ் சிரகங்களும் கரங்களும் கரிய மேனியுமுடைய காளியைச் சிருஷ்டித்தாள். சிவபெருமானும் பார்வதிதேவியும் வீரபத்திரரை நோக்கி உனக்கு மங்களம் உண்டாக என வாழ்த்தினர். அப்போது வீரபத்திரர் எனக்கு என்ன கட்டளை என்று கேட்க, வீரா ! பிரதேச புத்திரனான தக்ஷன் கங்கா துவாரத்தில் யாகஞ் செய்கிறான். நீ இந்தக் காளியுடன் சென்று அந்த யாகத்தை அழிப்பாயாக. நான் பார்வதி தேவியுடன் ரைப்பிய முனிவரின் ஆச்சிரமத்தில் இருந்து பார்த்திருக்கிறேன் என்று கட்டளை இட்டார். பார்வதிதேவி வீரபத்திரனையும் காளியையும் அணைத்து மூர்த்தா க்ரஹனஞ் செய்து புன்னகையுடன் 'குழந்தாய் ! வீரபத்திரா எனக்கு பிரிய முண்டாக்க நீ பிறந்தாய்.

*பார்வதி தேவியின் சரீரகோசத்திலிருந்து தோன்றிய அம்பிகை*
*கௌசிகீ என உலகெங்கும் போற்றப் படுகிறாள்*
*பார்வதியின் சரீரத்திலிருந்து வேறாகப் பிரிந்து கறுப்பு வர்ணத்துடன்*
*தோன்றியதால் காளிகா என்று கூறப்படுகிறாள்.*

சண்ட முண்டர்களுடன் சண்டை செய்ததால்
சண்டிகை எனப் பெயர் வந்தது.

சண்டிகை= துர்க்கை, காளி சண்டிகை – ஒரு மாயாதேவி அம்சம். பார்வதிதேவியின் கணத்தவருள் ஒருத்தி தாருணனைக் கொன்றவள். சண்டிகை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் பெயரோடு காளியைக் கொண்டு சும்பன், நிசும்பன் என்ற அசுரர்களின் தலைவர்களைக் கொன்றவள்.

சண்டன் விட்ட பாணங்களை தேவியானவள் கூரிய சரங்களால் அழித்தாள். பெரியபாணக் கூட்டத்தைக் கண்டு தேவி கடுங்கோபம் கொண்டு அவளுடையமுகம் மேகம் போல் கறுத்தது. அவளுடைய நெற்றியில் இருந்து காளி வெளிப்போந்தாள். அவள் புலித்தோலை அணிந்து யானைத் தோலைப் போர்த்திருந்தாள்.

வியாஸர் கூறியது –

அரசே ! எல்லாப் பிராணிகளுக்கும் இன்பத்தை அளிப்பதும் அவர்களுடைய பாவங்களையெல்லாம் போக்குவதுமான தேவியின் உத்தம சரித்திரத்தைக் கூறுகிறேன் கேளும். பலம் மிகுந்தவர்களும் மகாவீரர்களுமான இரு சகோதரர்கள், சும்பன், நிசும்பன் எனப் பெயர்பெற்றவர்கள் எப்படிப்பட்ட ஆடவர் எவராலும் கொல்ல முடியாதவர்களாக ஆனார்கள் என்பதையும், அவர்கள் பரிஜனங்கள் அனைவருடனும் கடும்போரில் தேவர்களுக்கு நன்மைபுரிய விரும்பிய அம்பிகையால் எவ்வாறு கொல்லப்பட்டனர் என்பதையும் கூறுகிறேன்.

பாவமனைத்தையும் போக்குவதும், எல்லா நற்பயன்களையுமளிப்பதும், மங்களகரமானதும் தேவியின் லீலைகளை வர்ணிப்பதுமான தெய்வீகக் கதையைக் கேளும். ஆதிகாலத்தில் சும்பன், நிசும்பன் என்ற இரு அசுர சகோதரர்கள், கம்பீரமான தோற்றமுடையவர்கள், பாதாளத்திலிருந்து பூமண்டலத்திற்கு வந்து சேர்ந்தனர். அவர்கள் யௌவன பருவத்தையடைந்ததும் உலகைப் புனிதமாக்கும் புஷ்பநகரம் சென்று அன்னபானாதிகளைத் துறந்து மேலான தவஞ் செய்தனர். உலக பிதாமகராகிய பகவான் பிரம்மா அவர்களுடைய தவத்தால் மகிழ்ந்து ஹம்ஸ வாகனத்தில் ஏறிக் கொண்டு அங்கு எழுந்தருளினார். உலகின் சிருஷ்டிகர்த்தாவாகிய அவர் அவ்விருவரும் தியானத்திலாழ்ந்து நிற்பதைக் கண்டு, 'மகா பாக்கியசாலிகளே ! உங்களுடைய தவத்தால் நான் மகிழ்ச்சியடைந்துள்ளேன். எழுந்திருங்கள்' எனக் கூறினார்.

'உங்களுக்குப் பிரியமான வரத்தையளிக்கிறேன், கூறுங்கள். உங்களுடைய தவத்தின் வலிமையைக் கண்டு விரும்பியதையளிக்க நான் வந்துள்ளேன்.' இவ்வார்த்தையைக் கேட்ட அவ்விருவரும் எழுந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணக்கத்துடன் பிரதக்ஷிணம் செய்து நமஸ்கரித்தார்கள். தவத்தால் மெலிந்த அவர்கள் தடிபோல் கீழே விழுந்து நமஸ்கரித்து தழுதழுத்த இனிய குரலில் பணிவுடன் பின்வருமாறு கூறினார்கள். "தேவதேவா ! கருணைக்கடலே ! பக்தர்களுக்கு அபயமளிக்கும் பிரம்மதேவரே ! பிரபுவே ! தவத்தால் திருப்தியடைந்திருந்தால் எங்களுக்குச் சாகா வரம் அளியுங்கள்' என்று கேட்க பிரமா 'பிறந்தவனுக்கு மரணம் நிச்சயம். இறந்தவனுக்கு பிறவியும் நிச்சயம். இது உலகத்தை உண்டாக்கிய பரம்பொருளால் ஆதியில் உலகில் ஏற்படுத்திய வரம்பு. 'எல்லாப் பிராணிகளும் எப்படியோ இறந்தே தீரும். இதில் சந்தேகமில்லை. உங்களுக்கு விருப்பமான வேறு வரத்தைக் கேளுங்கள், அளிக்கிறேன்' என்றார்.

அவ்வசுரர்கள் அவ்வார்த்தையைக் கேட்டு நன்கு ஆலோசித்துத் தம் முன் நின்ற பிரம்மாவை நமஸ்கரித்துவிட்டுக் கூறியதாவது. 'கருணைக்கடலே ! தேவர்களோ மனிதர்களோ மிருகங்களோ பறவைகளோ எவர்களாயிருந்தாலும் ஆண்பாலால் எங்களுக்குச் சாவு ஏற்படாமலிருக்கும் வரத்தை விரும்புகிறோம். அதை அளியும்.' 'எங்களை யழிக்கக் கூடிய பலம்படைத்த பெண்பால் எங்கே இருக்கும்? மூவுலகிலும் சராசரத்தில் உள்ள எந்தப் பெண்பாலிடமிருந்தும் எங்களுக்கு அச்சமில்லை.' என்றிங்ஙனம் அவர்கள் கூறியதைக் கேட்டு பிரம்மா திருப்தியான மனதுடன் அவர்களுக்கு விருப்பமான அவ்வரத்தைக் கொடுத்துவிட்டுத் தமதுலகிற்கேகினார்.

பிரம்மா தமதிருப்பிடம் சென்றபின் அசுரர்களும் தங்கள் வீட்டுக்குச் சென்று பிருகு முனிவரைப் புரோகிதராய்க் கொண்டு அவரைப் பூஜித்தனர். அம்முனிவர் நல்ல நக்ஷத்திரம் கூடிய சுப தினத்தில் அவர்களுக்கு வெள்ளியாலான அழகிய திவ்ய சிம்மாஸனத்தை அரசாட்சிக்காக உண்டாக்கி வைத்தார். மூத்தவனான சும்பனுக்கு சுபமான ஆட்சிப் பீடத்தை அளித்தார். அப்பொழுது அவனுக்குச் சேவை புரிவதற்காக அசுரசிரேஷ்டர்கள் வந்து கூடினார்கள். மகாவீரர்களான இரு சகோதரர்கள் சண்டன், முண்டன் எனப்பெயர் பெற்றவர்கள் பலக் கொழுப்புடனும், தேர், குதிரை, யானை முதலியவற்றுடன் கூடிய சேனையுடனும் வந்து சேர்ந்தனர். தூம்ரலோசனன் எனப் பெயர் பெற்றவனும் பெயருக்கொத்த வடிவும், கொடுமையான பராக்கிரமமும், உடையவனும் சும்பன் ஆட்சிபுரிபவன் எனக்கேட்டுத் தன்சேனாபலத்துடன் வந்தான். வரத்தால் அதிகமான பலம் பெற்ற சூரனாகிய ரக்தபீஜன் என்பவனும் இரண்டு அக்கிறோணி சேனைகளுடன் அங்கு வந்து கூடிக் கொண்டான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசே! அவனுக்கு ரக்தபீஜன் என்ற பெயருக்கு ஒரு காரணம் இதுவாகும். போர்க்களத்தில் அவன் யுத்தம் புரிகையில் ஆயுதத்தால் அடிபட்டு அவனுடைய உடலிலிருந்து இரத்தம் பூமியில் விழுந்தால் அதிலிருந்து அவனைப்போலவே ஆயுதபாணிகளாயும், கொடியவர்களாயும் பலபேர் தோன்றுவார்கள். அவனைப் போல ஆகிருதியும் உருவமும் பராக்கிரமமும் படைத்தவர்களாய் இரத்தத்திலிருந்து எழுந்த அப்புருஷர்கள் மேலும் யுத்தம் செய்வார்கள். ஆகையால் அக்கொடிய அசுரனாகிய ரக்தபீஜன் எந்த ஜீவனாலும் கொல்லமுடியாதவனாய் மகா வீரனாய்ப் போரில் ஜயிக்க முடியாதவனாய் இருந்தான். இன்னும் பல சூரர்கள் சதுரங்க பலத்துடன் சும்பன் அரசன் என்பதைக் கருதி அவனைச் சேவிப்பவர்களானார்கள். சும்பன், நிசும்பன் ஆகிய இருவருடைய சேனை கணக்கற்றதாயிற்று. அப்படிப்பட்ட பலத்துடன் அவர்களால் உலகிலுள்ள எல்லா அரசர்களும் பிடிக்கப்பட்டனர். எதிரிகளின் வீரியத்தை யழிக்கவல்ல நிசும்பன் சேனைகளைத் திரட்டிக் கொண்டு இந்திரனை ஜயிப்பதற்காக விரைவில் சுவர்க்கம் சென்றான். வஜ்ராயுதத்தால் அடிக்கப்பட்டு இளையவானகிய அவ்வசுரன் பூமியில் விழுந்தான். மகாபலசாலியாகிய அந்த நிசும்பனுடைய சேனாபலமும் சிதறடிக்கப்பட்டது. சகோதரன் மூர்ச்சித்து விழுந்தான் என்று கேள்விப்பட்ட பராக்கிரமசாலியான சும்பன் அங்கு சென்று பாணங்காளல் தேவர்களையெல்லாம் தாக்கினான். எளிதில் செயலாற்றும் சும்பனால் பெரிய யுத்தம் செய்யப்பட்டது. இந்திரனுடனும் திக்குப்பாலகர்களுடனும் தேவர்களெல்லாம் ஜயிக்கப்பட்டனர். ஆட்சி கவரப்பட்ட அவர்களெல்லோரும் ஜனசஞ்சாரமில்லாத வனத்தில் ஆதாரமற்றவர்களாய்ப் பிடிக்கப்பட்டவர்களாய், ஆயுத மற்றவர்களாய் ஒளியிழந்தவர்களாய் அடங்கினார்கள். நூறு யாகங்களைச் செய்து உத்தமமான இந்திரப் பதவியையடைந்தும் மறுபடியும் மிகுந்த துக்கமடையப்பட்டது. காலத்தின் போக்கு இப்படியாயிற்று. அரசிழந்தவர்களும் கடக்க முடியாத கவலையிலாழ்ந்தவர்களும் துக்கத்தால் பீடிக்கப்பட்டவர்களுமான தேவர்கள் தங்கள் குருவை நாடி ஆதரவுடன் பின்வருமாறு வினவினர். 'குருவே ! தாங்கள் மகாமுனிவரும் எல்லாமறிந்தவரும் ஆவீர்கள். மகிமைமிக்கவரே ! துக்கத்திலிருந்து விடுபடுவதற்கு வழி என்ன? இப்பொழுது என்ன செய்யவேண்டும் ?' அவர்களைப் பார்த்து பிருஹஸ்பதி பின்வருமாற கூறுகிறார்.

முன்பு பகவதி உங்களுக்கிரங்கி மகிஷாசுரனை வதைத்தாள். உங்களால் துதிக்கப்பெற்று தேவியானவள் வரமும் அளித்திருக்கிறாள். அவ்வரமாவது 'இந்திரனே ! எப்பெப்பொழுது தேவர்களுக்கு ஆபத்து ஏற்படுறதோ அப்பொழுது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை நினைத்தால் எல்லாக் காலத்திலும் நான் ஆபத்தைப் போக்குகிறேன்' என்பதாம். ஆகையால் மனதிற்கினிய இமயமலை சென்று பக்தியுடன் சண்டிகையின் பூஜையைச் செய்யுங்கள் என்பதைக் கேட்டு தேவர்கள் தேவியை தியானித்துக் கொண்டு இமயமலை சென்றனர். எல்லோருமே ('ஹ்ரீம்' எனும்) மாயா பீஜமந்திரத்தை உள்ளத்தில் எப்பொழுதும் ஜபித்துக் கொண்டு பக்தர்களுக்கு பயத்தைப் போக்கும் மகாமாயையை நமஸ்கரித்து மிகுந்த உள்ளன்புடன் ஸ்தோத்ர மந்திரங்களால் உலக நாயகி ! உயிரிக்குயிராகியவளே ! எப்பொழுதும் ஆனந்தவடிவானவளே! தேவர்களுக்கு ஆனந்தத்தையளிப்பவளே! அசுரர்களையழிப்பவளே ! மனிதர்களுக்குப் பலவகைப் பொருள்களையளிப்பவளே! பக்தியால் அடையக்கூடிய ஸ்வரூபமுடையவளே ! உனக்கு நமஸ்காரம். உன்னுடைய நாமங்கள் எண்ணற்றவை. உன் உருவம் இப்படிப்பட்டதென்று கூற இயலாது. ஆதி தெய்வ வடிவினளே ! உன்னையறிந்தவர் யார்? பிரஜைகளின் சிருஷ்டி ஸம்ஹார காலங்களில் எப்பொழுதும் நீயே எல்லாரிடமு சக்திஸ்வரூபமாகியிருக்கின்றாய். பாணம் போடாமலும் முஷ்டியால் தாக்காமலும் சூலம் வாள் சக்தி தண்டம் முதலிய ஆயுதங்களில்லாமலும் பகைவர்களை விளையாட்டாக அழிப்பதற்கு நீ சக்தியுள்ளவள். உலகிற்கு உபகாரம் செய்வது உனது லீலை என்று ஜெபித்தனர். கருணையுடன் கூடிய அம்பிகை தேவர்களனைவராலும் இவ்வாறு துதிக்கப்பட்டு அவர்கள் முன் யௌவன ரூப வடிவத்தில் சீக்கிரமே தோன்றினாள். உலகை மயக்கும் திவ்யமான அழகுடன் கூடிய தேவியானவள் கங்கையில் நீராடும் விருப்பத்துடன் மலைக் குகையினின்றும் வெளிப்போந்தாள்.

ஓ ! தேவசிரேஷ்டர்களே ! உங்களால் இங்கு வெகுவாய்த் துதிக்கப்படுபவள் யான் ? எதற்காக? கவலை ஆகவேண்டிய காரியம் என்ன? மேலும் எதனால் நீங்கள் கவலை மிக்கவர்களாயிருக்கிறீர்கள்? கூறுங்கள் என்றாள். அந்த வார்த்தையைக் கேட்டு அந்த தேவியினுடைய அழகுச் செல்வத்தால் கவரப்பட்டும் உள்ளத்தில் உற்சாகத்துடனும் பக்தியுடனும் தேவசிரேஷ்டர்கள் பின்வருமாறு பதில் கூறினார்கள்.

இப்பொழுது சும்பன் நிசும்பன் என்ற இரண்டு கொடிய அசுரர்கள் இடையூறு விளைவிப்பவர்களாய்த் தோன்றியிருக்கிறார்கள். எந்த ஆண் மக்களாலும் அவர்கள் கொல்ல முடியாதவர்கள். ரக்தபீஜன் என்ற ஒரு பலசாலி; சண்ட, முண்டர்கள் என்ற அசுரர்கள்; இவர்களாலும் மகாபலவான்களான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறராலும் தேவர்களுடைய ஆட்சி கவரப்பட்டுள்ளது. மகாவல்லமை வாய்ந்த நீயே எங்களுக்குப் புகலிடம்; வேறு கதியில்லை; இடையழகு வாய்ந்த தேவியே ! துன்பத்திலாழ்ந்த தேவர்களின் காரியத்தை நீ செய்தருள வேண்டும். தேவியே ! உலகெல்லாம் யுகத்தின் ஆதியில் உன்னால் உற்பத்தி செய்யப்பட்டதென்பதை நினைத்து இப்பொழுது அதின் இரக்ஷணை உன்னால் செய்யப்பட வேண்டும். தாயே! கொழுப்பேறிய அசுரர்களை தங்களுடைய பலத்தின் கர்வத்தால் உலகிற்குப் பீடையை விளைவிக்கின்றனர். பகைவர்களால் துன்புறுத்தப்பட்ட தேவர்களால் இவ்வாறு துதிக்கப்பெற்ற தேவியானவள் தன்னுடைய சரீரத்திலிருந்து இன்னொரு ரூபம் தோன்றும் படியாகச் செய்தாள். பார்வதி தேவியின் சரீர கோசத்திலிருந்து தோன்றிய அம்பிகை கௌசிகீ என உலகெங்கும் போற்றப்படுகிறாள். பார்வதியின் சரீரத்திலிருந்து வேறாகப் பிரிந்து கறுப்பு வர்ணத்துடன் தோன்றியதால் காளிகா என்று கூறப்படுகிறாள்.

மை வர்ணமாயும் மிகவும் பயங்கரமாயும் அசுரர்களுக்குப் பயத்தை வளர்ப்பவளாயும் தோன்றிய அவள் காலராத்ரீ எனவும் கூறப்படுவாள். அவள் (பக்தர்களுக்கு) எல்லா ஆசைகளின் பூர்த்தியையும் அளிப்பவள். அம்பிகையின் மற்ற வடிவம் மனதைக் கவர்வதாய் எல்லா ஆபரணங்களுடனும் கூடியதாய் அழகு நிறைந்ததாய் விளங்கிற்று. பின்னர் அம்பிகை புன்முறுவலுடன் தேவர்களை நோக்கிப் பின்வருமாறு கூறினாள்: 'நீங்கள் பயமற்றிருக்கலாம். நான் இங்கு பகைவர்களை யழிக்கிறேன்'. தேவியானவள் இவ்வாறு கூறிவிட்டு மிகுந்த கர்வத்துடன் சிங்க வாகனத்திலேறிக்கொண்டு காளிகையைப் பக்கத்திலிருந்திக்கொண்டு பகைவரின் நகரம் சென்றாள். அச்சமயம் சும்பர்களின் சேவகர்களும் கொடியவர்களுமான சண்டன் முண்டன் என்பவர்கள் விளையாட்டாக அங்கு வரவே எதிர்பாராத வண்ணம் பாடிக்கொண்டு எதிரே நின்ற திவ்யரூபிணியான அம்பிகையையும் காளிகையையும் கண்டனர். அரசசிரேஷ்டர்களே ! திவ்யரூபிணியான அம்பிகையைப் பார்த்து ஆச்சரியம் மிகுந்தவர்களாய் விரைவில் சும்பனை நாடிச் சென்றனர். தன் மாளிகையில் உயர்ந்த ஆசனத்தில் வீற்றிருந்த அசுர ராஜனிடம் அவர்கள் சென்று அவனைத் தலையால் வணங்கி இனியமொழி பேசலாயினர்.

'அரசே ! எதிர்பாராதவண்ணம் இமயமலையிலிருந்து சிங்க வாகனத்திலேறிக்கொண்டு எல்லா லக்ஷணங்களும் பொருந்தியவளாய்க் காமத்தைப் பெருக்கி மயக்குபவளாய் மனதைக்கவரும் ஒரு ஸ்திரி வந்துள்ளாள்'.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இவளைப்போன்ற ஒரு உத்தம ஸ்திரி தேவலோகத்திலும் இல்லை, கந்தர்வ நகரத்திலுமில்லை, பூமியில் எங்கும் கண்டதுமில்லை கேட்டதுமில்லை. 'அரச சிரேஷ்டரே! அவள் யாருடைய புத்திரி என்றும் எதற்காக இங்கு வந்துள்ளாள் என்றும் உங்களால் அறியப்படவேண்டும். பின்பு கிரகிக்கப்படவேண்டும். அவள் உங்களுக்குத் தகுதியான பெண்ணரசி. 'அரசசிரேஷ்டரே ! தேவர்களுடைய சிறந்த பொருள்களெல்லாம் உம்மால் கவரப்பட்டுள்ளன. சிறந்த இந்த ஸ்திரியை நீங்கள் ஏன் கிரகிக்கக்கூடாது ? 'அரசே உங்களுடைய மாளிகையிலுள்ள இரத்தினமாகப் போகின்றாள் என்றனர்'. இனியதும் இனிய சொற்களால் கூறப்பட்டதுமான அவர்களுடைய இவ்வார்த்தையைக் கேட்ட அவன் தன் முன் நின்ற சுக்ரீவனைப் பார்த்து முகமலர்ச்சியுடன் பின்வருமாறு கூறினான். 'திறமை வாய்ந்த தூதனாகிய சுக்ரீவா ! நீ போய்க் காரியத்தைச் சாதித்துக் கொண்டு வா, மெல்லிடையாள் எப்படி இங்கு வந்து சேருவாளோ அப்படி நீ அங்கு சென்று அவளிடம் பேச வேண்டும்'.

பிரியமாகவும் சுருக்கமாகவும் சும்பன் கூறிய அவ்வார்த்தையைக் கேட்டு சுக்ரீவன் ஜகதாம்பிகை இருந்த அவ்விடத்திற்கு விரைந்து சென்றான். ஒளி வீசும் மலர்ந்த முகத்துடன் சிங்க வாகனத்தின் மேல் வீற்றிருந்த ஜகதாம்பிகையைக் கண்டு வணங்கி இனிமையான மொழியை அவன் பேசலானான். 'அழகிற் சிறந்தவளே ! சும்பன் என்ற அரசன் தேவர்களை வென்றவன், எல்லா அங்கங்களிலும் அழகு படைத்தவன், மூவ்வுலக நாயகன், சூரன், எல்லோரையும் ஜயித்தவனாய் விளங்குபவன். 'அந்த மகாத்மாவால் விரும்பி உன்னிடம் அனுப்பப்பட்டவன் நான். அவன் உன்னுடைய வடிவழகைப்பற்றிக் கேள்வியுற்று உன்னிடம் வைத்த ஆசையால் மிகவும் பீடிக்கப்பட்டுள்ளவன். 'மெல்லிடையாளே! அன்பின் மிகுதியால் அவன் சொல்லியனுப்பிய மொழியைக் கேள்.

அசுரர் வேந்தனாகிய அவன் உன்னை வணங்கிக் கூறுகிறான். "காமினி! தேவர்களெல்லாம் என்னால் ஜயிக்கப்பட்டார்கள். நான் முவ்வுலகிற்கும் நாயகன். இங்கிருந்து கொண்டு யக்ஞ பாகங்களை எப்பொழுதும் நான் கிரகிக்கிறேன். 'என் காதிற்கெட்டி இருதயத்தினுட் புகுந்த உனது குணங்களால் நான் உன் வசமாகி உன் அடிமையாகி விட்டேன். என்ன செய்வேன்? 'பிரியே ! நான் சாகும்வரை உன் கட்டளைப்படி நடப்பவனாயிருப்பேன். அழகிற் சிறந்தவளே ! அசுரர்களாலோ மனிதர்களாலோ எப்பொழுதும் நான் கொல்லுவதற்கியலாதவன். 'சிறந்த முகம் படைத்தவளே ! நீ எப்பொழுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சௌபாக்கியமுடையவளாயிருப்பாய். சுந்தரி ! உனக்கு எவ்விடத்தில் சித்தம் மகிழ்கிறதோ அவ்விடத்தில் நீ இஷ்டப்படி இன்புற்றிருக்கலாம்." அந்த தூதனுடைய அவ்வார்த்தையைக் கேட்டு தேவகாரியத்தைச் சாதிக்க வந்த தேவியானவள் இனிய புன்னகை பூத்து இனிமையான மொழியில் பின்வருமாறு பதிலளித்தாள்.

நான் நிசும்பனையும் மிகுந்த பலவானான சும்பனையும் அறிவேன். அந்த சும்பன் தேவர்களையெல்லாம் ஜயித்தவன், பகைவர்களைக் கொன்றவன், எல்லாக் குணங்களும் நிறைந்தவன், எல்லாச் செல்வங்களையும் அனுபவிப்பவன், கொடையாளி, மகாசூரன், மன்மதனைப்போல் வடிவழகு படைத்தவன் என்பதெல்லாம் எனக்குத் தெரியும். தூதனே ! மகாபாக்கியசாலியே ! மகாபலசாலியான சும்பனிடம் போய்ப் பின்வருமாறு (நான் சொன்னதாய்) சொல்: 'ராக்ஷஸ சிரேஷ்டனே ! விவாக விஷயத்தில் எனக்கு ஒரு சிறிய காரணம் உளது. அரசே ! முன்பு சிறு வயதில் சமவயதுள்ள தோழிகளுடன் தனிமையில் இஷ்டப்படி விளையாடுகையில் என்னுடைய உடல் வலிமையின் கர்வத்தால் தோழிகளின் முன்னிலையில் இரகசியமாக ஒரு சிறிய விரதத்தைக் கைக்கொண்டேன். எனக்குச் சமானமாக பலமுடைய சூரன் எவன் என்னைப் போரில் ஜயிக்கிறானோ அவனுடைய பலாபலத்தை அறிந்து அவனை விரும்பி நான் மணப்பேன் என்பது அவ்விரதம். என்னுடைய தோழிகள் அவ்வார்த்தையைக் கேட்டு வியப்படைந்த மனமுடையவர்களாய்ப் பரிகசித்தார்கள். ஆகையால், அரச சிரேஷ்டரே, அழகியவரே ! இப்படிப்பட்ட என் பலத்தையறிந்து என்னைப்போரில் இங்கு ஜெயித்து விவாகம் செய்து கொள்ளலாம்.' அசுரவேந்தனிடம் சென்று நன்றாக மேன்மேலும் ஆலோசித்துவிட்டு அந்தத் தூதன் அவனுடைய பாதங்களில் வணங்கி அடக்கத்துடன் பின்வருமாறு கூறினான்.

அப்பெண்ணரசி உண்மையில் எங்கிருந்து வந்தாள், யாருடையவள், அவளுடைய பலம் எப்படிப்பட்டது என்ற எதுவும் சிறிதுகூட அறிவுக்கெட்டாமலிக்கிறது. அவளுடைய செயலைப்பற்றி நான் என்ன சொல்லுவேன்? அவள் கடுஞ் சொல்லுடையவளாயும், கர்வங்கொண்டவளாயும் போர்புரிய விரும்புபவளாயும் என்னால் காணப்பட்டாள். மதியிற் சிறந்தவரே ! அவளால் கூறப்பட்டதைத் தெளிவாய்க் கூறுகிறேன். கேளுங்கள்.

'என்னுடைய விவாகத்தைப் பற்றி என் தோழிகள் முன்னிலையில்விளையாட்டாக என் இளமைப்பருவத்தில் நான் முன்பு செய்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிக்ஞை இதுவாகும். 'எவர் என்னைப் போரில் வெல்லுகிறாரோ, என்னுடைய கர்வத்தையும் அடக்குகிறாரோ அவரையே உண்மையில் எனக்கு சமமான பலம் படைத்தவரெனக் கருதி எனது பதியாக வரிப்பேன். 'அரச சிரேஷ்டரே ! என்னுடைய பிரதிக்ஞை பொய்யாகிவிடக்கூடாது. தர்மந்தெரிந்தவரே ! ஆகையால் நீங்கள் என்னை யுத்தம் செய்து ஜயித்து உங்களுடைய வசமாக்கிக் கொள்ளுங்கள்.' அவளால் சொல்லப்பட்ட இவ்வாக்கியத்தைக் கேட்டு நான் திரும்பி வந்துள்ளேன். மகாராஜரே ! இனி உங்கள் விருப்பம் எதுவோ அதை இஷ்டப்படி செய்யலாம். இதைக் காதில் கொண்ட சும்பன், தூம்ரலோசனா ! பெரிய சைனியத்தால் சூழப்பெற்று சீக்கிரம் செல். தன்னுடைய வீரியக் கொழுப்பால் மயங்கியிருக்கும் அந்தப் பெண்ணைப் பிடித்துக் கொண்டு வா. போர்க்களத்தில் ஆயுத பாணிகளாய் எவர்கள் அவளுக்குதவியாயுள்ளவர்களோ அவர்கள் கொல்லப்படவேண்டும். அவள் மட்டும் எப்படியாவது கொல்லப்படாமல் கவனத்துடன் இரக்ஷிக்கப்பட வேண்டும்.

இவ்வாறு கட்டளையிட்டான். தூம்ரலோசனன் சும்பனை வணங்கிவிட்டு போய் தேவியைப் பார்த்து தகுந்த காரணங்காட்டிச் சுவையுடன் அலங்காரமாய்ப் பேசினான். 'மகாபாக்கியசாலியான தேவி ! கேட்பாயாக. சும்பன் உன்னிடம் காமத்தால் துன்புற்று உன்னிடம் நீதியில் நிபுணனாக ஒரு தூதனை அனுப்பி வைத்தான். அழகியமுகம் படைத்தவளே ! அவன் திரும்பி வந்து விபரீதமான வார்த்தையைக் கூறினான். 'பாக்கியசாலியான நீ சாமர்த்தியம் படைத்தவள். என்னுடைய இன்சொல்லைக்கேட்டு தேவர்களின் கர்வத்தையொடுக்கியவனும் மூவுலகையுமாள்பவனுமான சும்பனை அடைந்துவிடு'.

காளிதேவியானவள் சிரித்துவிட்டு அழகான வார்த்தையால் பதிலளித்தாள். 'நீ மூடன். கூத்தில் வரும் விகடக் கூத்தாடிபோல் பேசுகிறாய். மந்த புத்தியுள்ள இந்தச் சும்பன் எங்கே ! உலகனைத்தையும் மயக்குபவள் எங்கே ! இவ்விருவருக்கும் விவாக ஏற்பாடு என்பது இவ்வுலகில் சற்றும் பொருந்தாது. ஒரு பெண் சிங்கமானது காமத்தால் பீடிக்கப்பட்ட ஒரு குள்ளநரியை தனக்குக் கணவனாய் ஏற்குமா? ஒரு பெண் யானை ஒரு கழுதையைக் கணவனாய்க் கொள்ளுமா? காமதேனு கவயம் எனும் மிருகத்தைக் கணவனாய்க் கொள்ளுமா? நீ அந்தச் சும்ப நிசும்பர்களிடம் போய் என்னுடைய இந்த உண்மையான வார்த்தையைத் தெரிவி: 'யுத்தம் செய்; இல்லையேல் இப்பொழுது விரைந்து பாதாளம் போய்விடு.'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வார்த்தையைக் கேட்டதும் அவ்வசுரன் (தூம்ரலோசனன்) தனது திடமான வில்லை எடுத்துக் காளிகாதேவியின் மேல் கூரான பாணங்களைப் பொழிந்தான். அப்பொழுது அவர்களிடையே மிகக் கொடிய போர், பாணம், வாள், கதை, சக்தி, முஸலம் முதலியவற்றால் ஏற்பட்டது. யமனைப் போன்ற அந்த முரடன் காளியை வார்த்தைகளால் பயமுறுத்தி 'குரூபி! பூனைக்கண்ணி! இப்பொழுதே நான் உன்னைக் கொல்லுகிறேன்' என்று கூறிக்கொண்டு விரைந்து வந்து பரிசாயுதத்தை வீசியபொழுது அம்பிகை உடனே அகங்காரத்தால் அவனைச் சாம்பலாக்கினாள். அவ்வசுரன் சாம்பலாக்கப்பட்டதைக் கண்ட சேனைகள் பயத்தால் நடுங்கி 'ஐயோ! அப்பா!' என்று வழியில் கதறிக்கொண்டு உடனே ஓட்டம் பிடித்தனர். போய் நடந்தவற்றை அரசனிடம் கூறினர்.

(அவர்கள் வந்து நிகழ்ந்ததைக் கூறவே) அவர்களுடைய வார்த்தையைக் கேட்ட அரசன் சும்பன், பகைவர் பலத்தையொடுக்குபவன், எதிரில் நின்ற சண்டமுண்டர்களை நோக்கிப் பின்வருமாறு கூறினான். 'சண்டமுண்டர்களே! நீங்கள் இருவரும் உங்கள் சைனியங்களால் சூழப்பட்டவர்களாய்க் கொழுப்புப் பிடித்து கர்வித்திருப்பவளும் வெட்கங்கெட்டவளும் ஆகிய அவ்வற்பப் பெண்ணைக் கொல்லுவதற்குச் சீக்கிரம் செல்லுங்கள்.' மகாபலசாலிகளும் வீரர்களுமாகிய சண்டமுண்டவர்கள் இவ்வாறு கட்டளையிடப்பட்டதும் பெரிய சைனியர்களுடன் விரைவில் புறப்பட்டனர். தேவர்களுக்கு நன்மை புரியும் பொருட்டு எழுந்தருளியிருந்த தேவியைக் கண்ணுற்று அம்மகா வீரர்கள் சமாதானமாய்ப் பேசத் தொடங்கினர்.

"விசாலாட்சி! துன்பத்தைப் போக்குவதும் சுகத்தையும் தருவதும் உனக்கு நன்மை பயப்பதுமான பிரிய வார்த்தையைச் சொல்லுகிறோம். பெண்ணே! அப்படி நட. நீ கர்வப்படுவது வீண். 'தேவர்களை ஜயித்து ஆள்பவனும் உலக நாயகனும் சாமர்த்தியசாலியும் அழகுமிக்கவனும் சூரனும் காமசாஸ்திரத்தில் நிபுணனும் ஆகிய சும்பனை அடைந்துவிடு. 'சும்பனுடைய கட்டளையால் எல்லா உலகங்களின் ஐசுவரியத்தையும் அடைவாய். திடமான நிச்சயத்தைச் செய்து கொண்டு மங்களம் நிறைந்த அவனை உன் கணவனாக ஏற்றுக்கொள்."

குருட்டுப் புத்தியுடைய வீண் வார்த்தையைக் கேட்டு ஜகதம்பிகை மேகத்தின் இடிபோல் கர்ஜித்து மறுமொழி கூறினாள். 'எனக்கு எவரும் நாயகராக வேண்டியதில்லை; நாயகரால் ஆகவேண்டிய காரியமும் எனக்கில்லை; நானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா உயிர்க்கும் நாயகி என்று தெரிந்து கொள்.' 'நான் பல சும்பர்களையும் ஆயிரக்கணக்கான நிசும்பர்களையும் பார்த்தாயிற்று. நூற்றுக்கணக்கான தைத்திரியர்களும் தானவர்களும் என்னால் கொல்லப்பட்டிருக்கின்றனர். 'என் முன்னிலையில் யுகந்தோறும் பல தேவ சமூகங்களும் நாசமடைந்திருக்கின்றன. இப்பொழுது மீண்டும் அசுரர்களின் கூட்டங்கள் அழிவடையப்போகின்றன. 'அசுரர்களைக் கொன்று தீர்க்கும் யமனாகவே இங்கு நான் வந்திருக்கின்றேன். உன் சந்ததியைக் காக்க நீ செய்யும் முயற்சி வீண். 'மதிமிக்கோனே ! வீரர்களுடைய தருமத்தைக் காப்பதற்காக நீ போர் புரியலாம். ஆனால் வரப்போகிற மரணம் தடுக்க முடியாதது. மகான்கள் புகழைக் காப்பாற்றிக் கொள்வார்கள்.

'நிசும்பனாலோ, துராத்மாவான சும்பனாலோ உனக்கு இனி ஆகவேண்டியது என்ன இருக்கிறது. ? வீர தருமத்தைக் கைக்கொண்டு தேவர்களிருப்பிடமான சுவர்க்கத்திற்குச் செல்லலாம். 'சும்பனும் நிசும்பனும் உன்னுடைய உறவினர்களான ஏனையோரும் இந்தப் போரிலேயே உன்னைப் பின் தொடர்ந்து வந்து சேருவார்கள்.' தேவியால் இவ்வாறு ஏவப்பட்ட சண்ட முண்டர்களாகிய அசுரர்கள் கோபம் மூண்டவர்களாய் பலத்தின் கொழுப்பால் விரைவாகக் கொடிய நாணொலியைக் கிளப்பினர். சண்டிகைக்கும் சண்டமுண்டர்களுக்கும் இடையில் பாணம், வாள், கதை முதலிய ஆயுதங்களின் தீவிரமான பிரயோகத்துடன் பேடிகளுக்குப் பயத்தைத்தரும் யுத்தம் ஆரம்பமாயிற்று. சண்டன் விட்ட பாணங்களை தேவியானவள் கூரிய சரங்களால் அழித்தாள். முண்டனும் சேனையுடன் போரில் இறங்கிக் கொடிய கோபத்துடன் பாணங்களை மழை போல் பொழிந்தான். அந்தப் பெரிய பாணக் கூட்டத்தைக்கண்டு தேவி கடுங்கோபங் கொண்டாள். அவளுடைய முகம் மேகம் போல் கறுத்தது. அவளுடைய நெற்றியிலிருந்து காளி வெளிப்போந்தாள். அவள் புலித்தோலையணிந்து யானைத்தோலைப் போர்த்தியிருந்தாள். முண்டமாலையணிந்து கோரமாகவும், உலர்ந்த குளம் போன்ற வயிறுடையவளாகவும், நாக்கை அடிக்கடி துளாபுபவளாகவும் விளங்கினாள்.

கோபத்துடன் அவள் விரைந்து மகாவீரர்களாகிய அசுரர்களைக் கையில் எடுத்து வாயில் போட்டுக் கொண்டு பற்களால் மென்று தின்றாள். சைனியம் அங்ஙனம் கொல்லப்படுவதைக் கண்டு மகா அசுரர்களாகிய சண்டமுண்டர்கள் இடை விடாது பாணங்களைப் பொழிந்து அந்தத் தேவியைத் தாக்கினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பொழுது சண்டிகாதேவி கூரிய சரங்களால் சண்டனைத் தாக்கினாள். தேவியின் பாணங்களால் மிகவும் தாக்குற்ற அவன் மூர்ச்சித்து பூமியில் விழுந்தான். சகோதரன் விழுந்ததைக்கண்டு துக்கத்தால் பீடிக்கப்பட்ட முண்டன் கோபத்துடன் காளியின் மேல் அம்புகளைப் பொழிந்தான். சண்டிகை முண்டன் விட்ட கொடிய பாணங்களை ஈஷிகாஸ்திரங்களால் ஒரு நொடியில் எள்ளைப்போல் பொடியாக்கினாள்.

பின்னர் அர்த்தசந்திர பாணத்தால் அவனை மறுபடி அடிக்கவே மகாவீரியம் படைத்த அவனும் கொழுப்படங்கி பூமியில் விழுந்தான். அப்பொழுது மூர்ச்சை தெளிந்தெழுந்த சண்டன் பெரியதொரு கதாயுதத்தைத் தூக்கி வேகமாகக் காளிகாதேவியை வலது புஜத்தில் அடித்தான். காளிகாதேவி அந்த அடி தன்மேல் படாமல் ஏமாற்றி அக்கொடிய அசுரனை மந்திரத்தால் விடுத்த பாச பாணத்தால் கட்டினாள். அப்பொழுது எழுந்த முண்டன் தனது தம்பி வலியடக்கிக் கட்டப்பட்டிருப்பதைக் கண்டு கையில் திடமான சக்தி ஆயுதத்தை எடுத்துக்கொண்டு எதிர்த்து வந்தான். அங்ஙனம் வந்த அவ்வசுரனை காளிதேவி பார்த்து சகோதரர்களில் இரண்டாமவனாகிய அவனையும் விரைவில் வலியக்கட்டினாள். மகாவீரியம் படைத்த சண்டமுண்டர்கள் இருவரையும் முயல்களைப் போல் கட்டியிழுத்துக் கொண்டு அட்டஹாஸத்துடன் அம்பிகையின் முன் வந்தாள். வந்து அம்பிகையிடம் கூறியதாவது; 'பிரியே ! போரில் வெல்லுவதற்கரிய அசுரர்களான இவ்விருவர்களையும் யுத்த யக்ஞத்தில் பலியிடும் பிராணிகளாகக் கொண்டு வந்துள்ளேன். ஏற்றுக்கொள்.' அவ்வாறு கொண்டு வரப்பட்டவர்களும் செந்நாய் போன்றவர்களுமான அவர்களைப் பார்த்து அம்பிகையான சண்டிகாதேவி காளியிடம் இனிமையாகப் பின்வரும் வார்த்தையைக் கூறினாள். 'யுத்தத்தில் பிரியமுள்ளவளே! நீ சாமர்த்தியசாலியல்லவா? இவர்களைக் கொல்லவும் வேண்டாம், விடவும் வேண்டாம். உன்னால் தேவர்களுடைய காரியம் சீக்கிரத்தில் பூர்த்தி செய்விக்கப்படட்டும்.

அம்பிகையின் இவ்வார்த்தையைக் கேட்டு காளிகை மீண்டும் கூறுவாள்: 'பிரபலமான இந்த யுத்த யக்ஞத்தில் வாளையே யூபஸ்தம்பமாய்க் கருதி ஆலம்பம் செய்கின்றேன். அப்பொழுது வதை கொலையாய்க் கருதப்படமாட்டாது' இப்படிக் கூறிவிட்டுக் காளிதேவி வாளால் அவர்களுடைய தலையை விரைவில் வெட்டினாள். பின்பு மகிழ்ச்சியுடன் இரத்தத்தைப் பருகினாள். இவ்வாறு அசுரர்கள் கொல்லப்பட்டதைப் பார்த்து சந்தோஷத்துடன் அம்பிகை பின்வருமாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறினாள். 'உன்னால் தேவ காரியம் பூர்த்தி செய்யப்பட்டது. இப்பொழுது உனக்கு ஒரு நல்ல வரம் தருகிறேன். காளிகையே ! சண்டமுண்டர்களைக் கொன்ற காரணத்தால் பூமியில் உன் பெயர் சாமுண்டா என்று பிரசித்தமாய் விளங்கப் போகிறது.' அவ்வசுரர்கள் கொல்லப்பட்டு மடிந்தது போக எஞ்சியிருந்த சேனையானது தங்கள் அரசனை நோக்கி ஓட்டமெடுத்தது. அசுர ராஜனிடம் சென்ற அவர்களனைவரும் அடிக்கடி கூக்குரலிட்டுக் கதறி 'பிரபுவே ! எந்த விதியின் வசத்தில் உலகுளதோ அதனுடைய வேடிக்கையைப் பாருங்கள். இந்த ஒரே ஒரு ஸதிரீயால் எல்லா ராக்ஷஸர்களும் கொன்று வீழ்த்தப்பட்டனர்' என்று முறையிட்டார்கள். நான் இப்பொழுது யுத்தம் செய்கிறேன். எது வரவேண்டுமோ அது இங்கு வரட்டும். வெற்றியோ மரணமோ எது வந்தாலும் அப்படியே ஏற்றுக் கொள்வேன். பெருந்தோள் படைத்த ரக்தபீஜா ! போர்க் களத்திற்கு நீ செல். மகா பாக்கியசாலியே ! உன்னுடைய பலத்திற்குத் தக்கபடி யுத்தம் செய். மகாராஜனே ! நீங்கள் கொஞ்சங்கூடக் கவலைப்படவேண்டாம். நான் இவளைக் கொல்லுகிறேன். அல்லது உங்கள் வசமாக்குகிறேன். குருசிரேஷ்டனே ! மகா அசுரனாகிய ரக்தபீஜன் இவ்வாறு கூறிவிட்டுத் தேரில் ஏறிக்கொண்டு தன் சைனியம் புடைசூழ்ந்துவரப் போர்க்களம் சென்றான். அவன் சிங்கத்தின் மேல் கொடிய பாணங்களை விரைவில் விட்டான். ஆகாயத்தில் பாம்புகளைப்போல் வரும் அந்தப் பாணங்களைக் கண்டு அம்பிகை தனது இலகுவான கையால் கூரிய பாணங்களைக் கொண்டு அவற்றை ஒரு நொடியில் வெட்டினாள். மகா அசுரனாகிய ரக்தபீஜனை அம்பிகை தனது வில்லில் கூரிய பாணங்களைக் காது வரை இழுத்துவிட்டுத் தாக்கினாள். தேவிவிட்ட பாணங்களால் அடிபட்ட அந்தப் பாவி தேரின் மேல் மூர்ச்சையடைந்தான். ரக்தபீஜன் விழுந்ததும் 'ஹா, ஹா' என்ற பெரிய சப்தம் எழுந்தது. மிகவும் பயங்கரமான அப்பெரிய சப்தத்தைக் கேட்டு சும்பன் எல்லாச் சேனைகளும் தயாராகும்படி கட்டளையிட்டான். இவ்வாறு சும்பனால் கட்டளையிடப்பட்ட நான்குவகை சேனாபலம் முழுவதும் போர் வெறியுடன் தேவியின் யுத்த மண்டலத்திற்குக் கிளம்பிச் சென்றன. நீண்டதும் மயிர்க்கூச்செறியும்படி பயங்கரமாகியதுமான அந்த யுத்தத்தில் பிரம்மா முதலிய தேவர்களின் சக்திகள் அம்பிகையை வந்தடைந்தார்கள். எந்தத் தேவனுக்கு என்ன ரூபமோ, பூஷணமும் வாகனமும் எப்படியோ அப்படி ரூபத்துடன் போர்க்களத்திற்கு அந்தந்தத் தேவிகள் வந்தார்கள்.

பிரம்மாணீ எனப் பெயர் பெற்ற பிரம்மசக்தி பெண் அன்னத்தின் மேலேறிக் கொண்டு அக்ஷமாலையும் கமண்டலுவும் தாங்கியவளாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுந்தருளினாள். வைஷ்ணவீ கருடன் மேலேறிக்கொண்டு சங்கு, சக்கரம், கதை, தாமரைப்பூ ஆகியவற்றைத் தரித்தவளாய் பீதாம்பரத்தால் அலங்கரிக்கப் பெற்றவளாய் எழுந்தருளினாள். சிவசக்தியானதேவி சாங்கரீ விருஷப வாகனத்தின்மேல் திரிசூலத்துடன் வரமுத்திரை உடையவளாய் பாதிச்சந்திரனைச் சிரசிலணிந்து பாம்பைக் கங்கணமாய்ப் பூண்டு எழுந்தருளினாள். கார்த்திகேய ஸ்வரூபிணியான கௌமாரீ மயில்வாகனத்தின் மேல் வேலாயுதத்தைக் கைக்கொண்டு சிறந்த முகத்துடன் போரை விரும்புபவளாய் எழுந்தருளினாள். இந்திராணீ தெளிவான முகத்துடன் நல்ல வெள்ளையானை மீதேறிக் கொண்டு வஜ்ராயுதத்தைக் கையிலேந்தி மிகக் கோபத்துடன் போர் முகத்திற்கெழுந்தருளினாள்.

பன்றியுருக்கொண்ட வாராஹீ திறமைமிக்க பூதவாகனத்தின் மேலும், நாரசிம்மீ நரசிங்கத்திற்கொப்பான உருக்கொண்டவளாகவும் எழுந்தருளினார்கள். யமசக்தியானவள் யமரூபத்தில் சிரித்த முகத்துடனும் எருமை வாகனமேறி கையில் தண்டாயுதத்துடன் பயத்தையளிப்பவளாய்ப் போருக்கு வந்து சேர்ந்தாள். அவ்வாறே வாருணீ சக்தியும், மிகுந்த பலம் வாய்ந்த குபேர சக்தியும் அவ்வாறே அந்தந்த வடிவங்களில் தங்கள் தங்கள் சேனாபலத்தால் சூழப்பட்டு எழுந்தருளினார்கள். எழுந்தருளிய அவர்களைப் பார்த்து தேவியானவள் மகிழ்ச்சியடைந்தாள்; தேவர்கள் கவலை நீங்கி ஸந்தோஷித்தார்கள்; அசுர்கள் திகிலடைந்தார்கள். உலகிற்கு மங்களத்தைச் செய்யும் சங்கரர் அச்சக்திகளால் சூழப்பட்டுப் போர்க்களத்திற்கு வந்தவர் சண்டிகையிடம் பின்வருமாறு கூறினார். 'தேவர்களின் காரியசித்திக்காக அசுரர்கள் சீக்கிரம் கொல்லப்படட்டும். சக்திகள் மீண்டும் அவரவர்கள் ஸ்தானங்களுக்குச் செல்லட்டும். ஆபத்துக்கள் விலகட்டும்; உபாதிபாதைகளும் ஒழியட்டும்; மேகங்கள் உரிய காலத்தில் மழை பொழியட்டும் ; பயிர்த்தொழில் மிகுந்த பயனளிக்கட்டும்.' உலகிற்கு மங்களத்தையளிப்பவளும் தேவேசுவரருமாகிய சங்கரர் இங்ஙனம் கூறியதும் சண்டிகையின் சரீரத்திலிருந்து அற்புதமான ஒரு சக்தி வெளிப்பட்டாள். பயங்கரமாயும் மிகக் கடுமையாயும் கோர வடிவினளாயும் நூறு நரிகளைப்போல் ஒலி செய்பவளாயும் இருந்த அந்த சக்தி சிரித்த முகத்துடன் சங்கரரிடம் பின்வருமாறு கூறினாள். 'தேவ தேவரே ! காமனை வென்றவரே ! காமத்தால் புத்திகெட்ட அசுர வேந்தனாகிய சும்பனிடமும் மதம்பிடித்த நிசும்பனிடமும் நீர் தூதுவராக விரைந்து சென்று நான் கூறும் வார்த்தைகளைச் சொல்ல வேண்டும். அதாவது "தேவலோகத்தைவிட்டு நீங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரைவில் பாதாளம் செல்லுங்கள். அல்லது உங்கள் பலத்தை நம்பிப் போர் புரிந்து சாக விரும்பினால் அப்படியே வாருங்கள். உங்களுடைய மாமிசத்தால் என்னுடைய சக்திகள் திருப்தியடையட்டும்." நன்மை செய்யும் சூலபாணியாகிய சங்கரர் தேவியின் அமுதம் போன்ற இவ்வார்த்தையை அசுர சிரேஷ்டர்கள் காதில் போட்டுவிட்டுத் திரும்பிப் போய் விட்டார். எந்தத் தேவியால் சம்புவானவர் அசுரர்களிடம் தூதராக அனுப்பப்பட்டாரோ அந்தத் தேவி மூவுலகனைத்திலும் சிவதூதீ எனப்பெயர் பெற்றவளானாள்.

சங்கரர் கூறிய தேவியின் வார்த்தையைக் கேட்ட அசுரர்கள் அப்படிச் செய்ய முடியாதென்று கவசம் பூண்டு ஆயுதபாணிகளாய்ப் போருக்குக் கிளம்பினார்கள். அவ்வசுரர்கள் போர்க்களத்திற்கு விரைந்து தேவியை எதிர்த்துக் கூரான அம்புகளைக் காதுவரை இழுத்து அவளைத் தாக்கினார்கள். காளிகாதேவி சூலம், சக்தி, கதை முதலிய ஆயுதங்களால் அசுரர்களைக் கொன்று வீழ்த்திக் கொண்டும் எடுத்து விழுங்கிக் கொண்டும் போர்க்களத்தில் நடமாடினாள். அவ்வாறே மாத்ரு கணங்களாலும் போரில் வீரியமும் பராக்கிரமமும் மிகுந்த அசுர சைனியம் தாக்கித் துரத்தப்பட்டது. அப்பொழுது தேவர்கள் கர்ஜித்ததைப் பார்த்த மகா தேஜஸ்வியமும் பலசாலியுமான ரக்தபீஜாசுரன் போர்க்களத்திற்கு வந்தான். அந்த அசுரசிரேஷ்டன் கருடவாகனத்தின் மேலிருந்த வைஷ்ணவீ சக்தியைப் பார்த்துத் தாமரைக் கண்ணியான அவளை வேலாயுதங் கொண்டு தாக்கினான். சக்திவாய்ந்த அவள் அந்த வேலாயுதத்தை கதாயுதத்தால் தடுத்து மகா அசுரனாகிய ரக்தபீஜனைச் சக்ராயுதத்தால் அடித்தாள். வஜ்ராயுதத்தால் அடிபட்ட மலைச்சிகரத்திலிருந்து காவிப்பொடிகள் உதிர்வதுபோல் சக்ராயுதத்தால் அடிபட்ட அவனுடைய உடலிலிருந்து இரத்தம் நிறையப் பெருகிற்று. இரத்தத்துளிகள் எப்பெப்பொழுது எங்கெங்கு சிந்தினவோ அங்கெல்லாம் அவனைப் போன்ற உருப்படைத்த புருஷர்கள் ஆயிரக்கணக்கில் கிளம்பினார்கள். கோபத்துடன் இந்திராணி வஜ்ராயுதத்தால் ரக்தபீஜனை அடிக்கவே அவனுடைய இரத்தம் பெருகிற்று. அதனால் அவனைப்போல் வீரியமும் உருவமும் படைத்தவர்களாய் ஆயுதங்களுடன் கொழுப்புமிக்கவர்களாய் அநேகம் ரக்தபீஜர்கள் தோன்றினார்கள். ரக்தபீஜனும் கோபங்கொண்டு கூர்மையான பாணங்களால் சக்திகளைத் தாக்கினான். மாத்ரு கணங்களும் கோபம் மிகுந்தவர்களாய்த் தனித்தனியாக அவனைக் கதையாலும் பாணங்களாலும் தாக்கினார்கள். அதனால் ஏற்பட்ட இரத்த வெள்ளத்தால் உலகம் முழுவதும் ரக்தபீஜர்களால் வியாபிக்கப்பட்டதாயிற்று. அவர்கள் கூச்சலிட்டுக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயுதந்தாங்கி அற்புதமாக யுத்தம் செய்யலாயினர். அநேகம் ரக்தபீஜர்கள் தாக்குவதைக்கண்டு தேவர்கள் பயமும் துன்பமும் கவலையும் மேலிட்டவர்களாய் நடுங்கினர். இவ்வாறு எப்பொழுது தேவர்கள் பயத்தால் கலங்கி மிகவும் கவலையடைந்தார்களோ அப்பொழுது அம்பிகை தாமரைக்கண்ணியான காளியைப் பார்த்துப் பின்வருமாறு கூறினாள்.

'சாமுண்டீ ! மிகவிரைவில் உன் வாயை விரிவாகத் திறந்து கொள். என்னுடைய ஆயுதங்களின் தாக்குதலால் விழும் இரத்தத்தைச் சீக்கிரம் குடித்துவிடு.' இவ்வாறு அம்பிகையால் கூறப்பட்டவளும் மகாபராக்கிரமம் படைத்தவளுமான சாமுண்டாதேவி ரக்தபீஜ சரீரத்தில் ஏற்பட்ட காயங்களிலிருந்து பெருகிய இரத்தமனைத்தையும் பருகிவிட்டாள். மற்றும் இரத்தத்திலிருந்து தோன்றியவர்களும் மகா பலசாலிகளுமான ரக்தபீஜர்கள் எவர்கள் உண்டோ அவர்களும் வீழ்த்தப்பட்டு இரத்தத்தையிழந்தவர்களாகி பக்ஷிக்கப்பட்டனர். செயற்கை ரக்தபீஜர்களெல்லாம் பக்ஷிக்கப்பட்டபின் இயற்கை ரக்தபீஜாசுரனும் வாளால் வெட்டிக் கொன்று வீழ்த்தப்பட்டான். கொடிய ரக்தபீஜன் கொல்லப்பட்டதும் போர்க்களத்திலிருந்து ஏனைய அசுரர்கள் பயத்தால் நடுங்கி ஒட்டம்பிடித்து மறைந்தனர். ஆயுதங்களையிழந்து, மனமுடைந்து, இரத்தம் படிந்த மேனியுடன் பயத்தால் நடுங்கிக்கொண்டு அவர்கள் 'ஹா ! ஹா' என்ற கூச்சலுடன் சும்பனையணுகி அவனிடம் பின்வருமாறு கூறினர்.

'அரசே ! அம்பிகையால் ரக்தபீஜன் கொன்று வீழ்த்தப்பட்டான். அவனுடைய உடலிலிருந்து பெருகிய இரத்தமனைத்தையும் சாமுண்டா பருகி விட்டாள்.' இவ்வாறு அவர்கள் உள்ளபடி கூறியதைக் கேட்டு காலத்தால் மதியிழந்தவனும் மரணத்தை நாடுபவனும் ஆகிய சும்பன் கீழுதடு துடிக்கப் பின்வருமாறு பதில் கூறினான். காலத்தால் கற்பிக்கப்பட்ட மரணம் பிராணிகளால் விலக்க முடியாதது. அந்தப் பயம் பிறவியுடன் வந்தது. அதற்காக அடைதற்கரிய நற்கீர்த்தியை எவன் துறப்பான்? நிசும்பா ! நான் தேரில் ஏறிப் போர்க்களம் செல்லுகிறேன். அவளைக் கொன்றுவிட்டு வருகிறேன். வேறு விதமாய் வரமாட்டேன்.

இதைக் கேட்ட நிசும்பன் துஷ்டையான அந்தக் காளிகையை நான் போய்க் கொல்லுகிறேன். நான் சீக்கிரம் போய் அந்த அம்பிகையைப் பிடித்துக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு வருகிறேன். அரசே ! நான் இருக்கும்பொழுது நீங்கள் போருக்குப் போவது பொருத்தமாகாது. நான் போய் உங்களுக்கு வெற்றிச் செல்வத்தைக் கொண்டு வருகிறேன் என்றான்.

வெற்றி அல்லது மரணம் என்று நிச்சயித்துக் கொண்டு சூரனாகிய நிசும்பன் அதற்கான முயற்சியுடனும் சைனியத்துடனும் போர்க்களத்திற்குத் தேவியை நாடிச் சென்றான். யுத்த ரஸத்தில் பண்டிதனான அரசன் சும்பனும் தன் சைனியத்தால் சூழப்பட்டுப் போர்க்களம் சென்று யுத்தத்தைப் பார்ப்பவனானான். நிசும்பன் போரைத் தொடங்கிக் கொம்பு போன்ற வில்லை எடுத்து அம்பிகையைப் பயமுறுத்த எண்ணி அம்புகளைப் பொழிந்தான். காளிகையைப் பார்த்து தேவி 'இவர்களுடைய முட்டாள் தனத்தைப் பார். காளீ! இவர்கள் அசுரர்களின் அழிவையும் ரக்தபீஜனுடைய முடிவையும் கண்டும் வெற்றியில் ஆசைகொண்டு இவர்கள் என் மாயையால் மோகமடைந்து இப்பொழுது மரணமடைய இங்கு என் பக்கம் வந்திருக்கின்றனர். 'இந்த ஆசை மிகுந்த பலமுடையது; தோல்வியடைந்தாலும், பலமிழந்தாலும், நஷ்டமடைந்தாலும், பக்கபலம் போனாலும், உணர்விழந்தாலும்கூட அது மனிதனை விடுவதில்லை. 'ஆசையென்னும் கயிற்றால் பிணிக்கப்பட்ட இவ்விருவரும் யுத்தத்திற்கு வந்திருக்கிறார்கள். காளி! சும்பநிசும்பர்களிருவரும் போரில் என்னால் கொல்லப்பட வேண்டியவர்கள்.' சண்டிகாதேவியானவள் காளியிடம் இவ்வாறு கூறிவிட்டுக் காதுவரை இழுக்கப்பட்டுவிட்ட பாணப்பொழிவால் தன் முன் நின்ற நிசும்பனை வேகமாக மறைத்தாள். அவ்வசுரனும் தேவியின் பாணங்களைத் தனது கூரிய பாணங்களால் வெட்டினான். மிகவும் பயங்கரமாக அவர்களிடையே யுத்தம் நிகழ்ந்தது. சும்பன் கோபத்துடன் காளிகையைத் தாக்கி விட்டு ஜகதம்பிகையைப் பிடிக்கும் எண்ணத்துடன் தனது படையுடன் அங்கிருந்து விரைந்து வந்தான். வேகமாய் ஓடிவந்து மதவெறிகொண்ட சிங்கத்தின் தலைமேல் அதிகபலத்துடன் வாளைவீசி ஜகதம்பிகையை பிரமிக்கச் செய்தான்.

அப்பொழுது தேவி வாளின் வீச்சைத் தனது கதாயுதத்தால் தடுத்து அவன் தோள்பட்டையில் அடிக்கப்பட்ட போதிலும் கொழுப்பு மிகுந்த தோள்பட்டையில் கோடரியால் அடித்தாள். வாளால் தோள்பட்டையில் அடிக்கப்பட்ட போதிலும் கொழுப்பு மிகுந்த அவன் வேதனையைப் பொறுத்துக்கொண்டு மறுபடியும் சண்டிகையைத் தாக்கினான். இவ்வாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர்க்கொருவர் போர் நிகழ்கையில் தங்கள் தங்கள் வெற்றியை விரும்பும் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் அது மிகுந்த பயத்தைத் தருவதாக ஆயிற்று.

அசுரர்களின் வீழ்ச்சியைக்கண்டு கோபம் மிகுந்த நிசும்பன் கொடிய கதாயுதத்தைத் தூக்கிக்கொண்டு சண்டிகையை நோக்கி விரைந்தான். மதத்தால் கர்வம் பிடித்த அவன் கதையினால் சிங்கத்தைத் தலையில் அடித்துவிட்டுச் சிரித்துக் கொண்டு மீண்டும் தேவியை அடித்தான். அப்பொழுது தேவியும் தன் முன்னின்று தாக்கும் நிசும்பனைப் பார்த்து மிகவும் கோபம் மூண்டவளாய்ப் பின்வருமாறு கூறினாள். "புத்தி மழுங்கியவனே ! இந்த என்னுடைய வாளை உன்னுடைய கழுத்தை நோக்கி ஏவுகிறேன்; அதனால் நீ யமஉலகம் செல்வாய்; அதுவரை நில்." சண்டிகாதேவி இவ்வாறு கூறிவிட்டுக் குறுவாளை வைத்துக் கத்தியால் நிசம்பனுடைய தலையை வெட்டினாள். பயங்கரமான பராக்கிரமம் படைத்த நிசும்பாசுரன் விழுந்ததும் பயத்தினால் நடுக்கமுற்ற அவனுடைய சேனைகளிடையே 'ஹா! ஹா' என்ற பெருங் கூக்குரல் எழுந்தது. சைனியங்களில் இருந்தவர்களெல்லாம் ஆயுதங்களைப் போட்டுவிட்டு இரத்தம் பெருகும் உடல்களுடன் கூக்குரலிட்டுக்கொண்டு அரசமாளிகைக்குச் சென்றனர். அரசே! தங்களுடைய சகோதரர் கொல்லப்பட்டு போர்க்களத்தில் விழுந்து கிடக்கிறார். தங்கள் தம்பியைப் பின்பற்றிய சூரர்கள் எவர்களோ அவர்களும் அந்தத் தேவியால் வீழ்த்தப்பட்டனர். அசுரர்களின் வேந்தனாகிய சும்பன் அவர்களுடைய இவ்வார்த்தையைக் கேட்டுக் கோபத்தால் கலங்கிய சித்தத்துடன் சைனியர்களிடம் வேகமாய்ப் பின்வருமாறு கூறினான். 'என்னுடைய தேர்விரைவில் சித்தமாகட்டும். நான் போர்க்களம் செல்கிறேன். விதிவசத்தால் இப்பொழுதே வெற்றியோ அல்லது மரணமோ ஏற்படட்டும்.' இங்ஙனம் சைனிகர்களிடம் கூறிவிட்டுச் சும்பன் விரைவாகத் தேரிலேறி இமயமலையில் அம்பிகை இருந்த இடத்திற்குச் சென்றான். அம்பிகையைப் பார்த்துக் காமத்தால் மயங்கிய சும்பன் மன்மத பாணங்களால் தாக்குண்டு மதியிழந்து மனதில் இவ்வாறு சிந்திக்கலானான்.

'ஐயோ ! இது என்ன அழகு !' அற்புதமான சாதுர்யம்தான் எப்படிப்பட்டது! இளமையின் மென்மையும் தைரியமும் ஒன்றுக்கொன்று ஒவ்வாதவை.' இவ்வாறு மனதால் எண்ணிவிட்டுச் சும்பன் மீண்டும் மனோபலத்தைக் கைக்கொண்டு போர்புரிய நிச்சயித்துத் தன்முன் நின்ற தேவியிடம் பின்வருமாறு கூறினான். 'தேவி! மனதிற்கினியவளே ! நீ இப்பொழுது போர் புரியலாம். ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னுடைய இந்த முயற்சி வீண். நீ புத்தியில்லாதவள். ஸ்திரீகளுக்கு ஆயுதமெடுப்பது ஒரு பொழுதும் தர்மமாகாது. 'வீணையின் நாதத்தைவிட்டுப் போர் மணியின் நாதத்தைச் செய்கிறாய். அழகிற் சிறந்தவளே ! ரூபத்திற்கும் யௌவனத்திற்கும் இது அனைத்தும் விரோதம். 'அழகுமிக்கவளே! உனக்குப் போரில் விருப்பமிருந்தால் தொங்கும் உதடும் அவலக்ஷணமான நகங்களும் கொடிய இயல்பும் காக்கை வர்ணமும் விகாரமான பார்வையும் உடையவளாய்க் குரூபியாகிக் கடுமையாய்ப் பேசு. அப்பொழுது நான் உன்னுடன் யுத்தம் செய்கிறேன். மான் விழியாளே ! ரதியைப் போன்றவளே ! இப்படிப்பட்ட அழகிய பற்களையுடைய உன்னைக் கண்டு யுத்தத்தில் உன்னைக் கொல்ல என் கை சம்மதிக்கவில்லை' என்று இங்ஙனம் காமத்தால் பீடிக்கப்பட்டுப் பேசும் அவனைப்பார்த்து ஜகதாம்பிகை புன்முறுவலுடன் பின்வரும் வாக்கியத்தைக் கூறினாள். "புத்திமழுங்கியவனே ! காமபாணத்தால் மயங்கி ஏன் கலங்குகிறாய்? மூடா ! நீ காளிகையுடன் போர்புரி. நான் பார்த்துக் கொண்டு நிற்கிறேன். அல்லது சாமுண்டாவுடனாவது போர்புரி. இவர்கள் யுத்தகளத்தில் உன்னுடன் போர்புரியத் தகுதியானவர்கள். உன்னிஷ்டப்படி அவர்களை அடிக்கலாம். நான் உன்னுடன் போர்புரிய விரும்பவில்லை." இப்படிக் கூறிவிட்டு தேவியானவள் இனிய மொழியில் காளிகையிடம் 'காளிகே ! நீ குரூபமுடையவளாயிருப்பதால் யுத்தத்தில் பிரியமுள்ள இவனுடன் போர் புரி' என்றுரைத்தாள்.

இங்ஙனம் கூறப்பட்டவளும் காலனால் ஏவப்பட்டுக் கால ரூபந்தரித்தவளும் ஆகிய காளிகை விரைவில் கதையைத் தூக்கிக்கொண்டு போர் செய்ய ஆயத்தமாய்ப் போர்க்களத்தில் நின்றாள். அவர்களிடையே பயங்கரமான யுத்தம் நிகழ்ந்தது. காளிகை அசுரவேந்தனைக் கதாயுதத்தால் மேன்மேலும் அடித்தாள். சண்டிகாகாளி பொன்போலொளிரும் அவனுடைய தேரை முறித்துவிட்டுக் கடுமையாய் சப்தம் செய்து கொண்டு அதில் பூட்டியிருந்த கழுதைகளை அடித்துச் சாரதியையும் அடித்தாள். அப்பொழுது அவன் கோபம் பொங்கப் பெரிய கதையை எடுத்துக் கொண்டு காலால் நடந்து வந்து காளிகையை மார்பின் மத்தியை நோக்கிக்கோபச் சிரிப்புடன் அடித்தான். அந்தக் கதையின் தாக்குதலை ஏமாற்றிவிட்டு விரைவில் கத்தியை எடுத்துச் சந்தனம் பூசியதும் ஆயுதம் தாங்கியதுமான அவனுடைய இடது கையை வெட்டினாள். தேரிழந்து கையும் வெட்டப்பட்டு இரத்தம் பெருகுபவனாயினும் மற்றொருகையில் கதையுடன் நெருங்கி வந்து காளிகையை அடித்தான். கதையும் தோள்வளையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாங்கிய அவனுடைய வலது கையைக் காளிகையானவள் சிரித்துக் கொண்டே தனது கைவாளால் வெட்டினாள்.

காளிகையை பயமுறுத்துபவன் போல் அவன் விரைந்து பாயவே தாமரைபோல் சிவந்திருக்கும் அவனைக் கண்ணுற்று அவனுடைய தலையைக் கழுத்திலிருந்து வெட்டித் தள்ளினாள். இரத்த வெள்ளம் பாய்ந்தது. வெட்டுண்ட தலை பூமியில் ஒரு மலைபோல் விழுந்தது.

பிராணன் போய் பூமியில் அசுரன் விழுந்ததைக் கண்டு இந்திரனுடன் கூடிய தேவர்கள் அப்பொழுது சாமுண்டா காளிகாதேவியைத் துதித்தார்கள். அரசே ! கொல்லப்படாமல் எஞ்சிய அசுரர்கள் ஆயுதங்களை எறிந்து விட்டு ஜகதம்பிகையை வணங்கி விட்டு எல்லோரும் பாதாளம் சென்றனர். இவ்வாறு சும்பன் முதலியோரின் வதமும் தேவர்களின் இரக்ஷணமும் தேவியின் உத்தம சரித்திரமும் ஆகிய இதுவெல்லாம் ஓரளவுமுடிவாயின.

*தேவி பாஹவதஸாரம்.*

*முற்றும்.*

*"பார்புரந்த திருவடியுமடியவர்களீடேறும் படிக்கு பைம்பொற்*
*றார்புரந்த வடிவழகு மழகெழுமங்கலநாணுந்தயங்குஞ்சோதிக்*
*கார்புரந்த கருங்குழலும் வெண்ணகையுஞ் செவ்விதழுங் கருணைக் கண்ணுஞ்*
*சீர்புரந்த பிடியன்ன மென்னடையம்பிகை பாதஞ்சிந்தை செய்வாம்.*

*(தக்ஷிண கைலாசபுராணம்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருணாசலத்தில் நடந்த விளையாட்டும் வினையும்

நைமிசாணியத்திலுள்ள முனிவர், சூதரை "நாங்கள் உங்களிடமிருந்து அருணாசல மஹிமையைக் கேட்க ஆவலோடிருக்கிறோம்; அந்த மாஹாத்மியத்தைச் சொல்லுங்கள்" என்று கேட்க, சூதர் அவர்களுக்கு அருணாசல மஹிமையைச் சொன்னார். முற்காலத்தில் ஸநகர் இதே விஷயத்தைப் பற்றி பிரம்மாவைக் கேட்டார். நீங்கள் சாவதானமாய்க் கவனியுங்கள். அது இப்பொழுது உங்களுக்குப் பாபம் நசிக்கும். முன்னே சத்தியலோகத்தில் கமலாசனத்தில் வீற்றிருந்த பிரம்மாவை நமஸ்கரித்து அவரை நோக்கி, கைகூப்பிக் கேட்டார் சனகர் :

"லோகாதாரரே! தேவர்கள் தேவே ! வேதங்களாலறியப்பட்டவரே ! நான்முகரே ! தங்கள் கிருபையால் எனக்கு யாவும் தெரியக்கூடிய விஞ்ஞான முண்டாயிருக்கிறது. தங்களிடத்திலுள்ள பக்தியின் பெருமையால் என் சித்தம் என்ற கண்ணாடி சுத்தமாகி, ஒரு முறை கேட்டமாத்திரத்தில் எல்லா ஞானமும் அதில் பிரதிபலிக்கிறது. ஜகத்குருவான உங்கள் கடாக்ஷத்தில், வேதங்களிலிருந்து மட்டும் அறியக்கூடிய அவற்றின் ஸாரமான சிவஞானம் எனக்குச் சிறிதும் சந்தேகமின்றித் தெளிவாய்த் தெரியலாயிற்று. கிருபாநிதியே ! தேவநாதரே ! பூலோகத்திலே சிவலிங்கங்கள் தெய்வீகமாயும், மனிதர்களாலும் சித்தர்களாலும் கற்பிக்கப்பட்டனவாயும் பௌதிய லிங்கங்களாயும் உள. அவற்றில் எது களங்கமற்றதும் மேன்மையானதும், சத்துரு (காம, குரோத, லோப, மோஹ, மத, மாத்ஸர்யம் என்ற அரிஷட்வர்க்க) நாசவைபவத்தோடு கூடினதும், சுயம்பியாயும், தேஜோமயமாயும் இந்த ஜம்பூத்வீபத்தி லுள்ளதோ, அதை எனக்குச் சொல்ல வேண்டும். தயாநிதியே ! பெயரை நினைத்தமாத்திரத்தில் எனது ஸகல பாபங்களையும் போக்கி, நிம்மதியான சிவ சாரூப்பியத்தைக் கொடுக்க வல்லதோ அதை எனக்குச் சொல்ல வேண்டும். எது ஜகத்திற்கு அனாதி காரணமானதும், அழிவற்ற சிவதேஜஸூமாகி, பார்த்தமாத்திரத்தில் கிருதார்த்தனாக்குமோ அதை எனக்கு உபதேசிக்கவேண்டும்."

பத்திமானுடைய குதூகலத்தோடு கூடின இந்த வார்த்தைகளைக் கேட்டு, தபோநிதியான பிரம்மா பிரசன்னமாகி பத்மாசனத்திலிருந்த சம்புவைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்க்கமாய்த் தியானித்து தன்னுள்ளே ஆனந்தக்கடலிலாழ்ந்தார். ஸகலாதாரமாய் தேஜஸ்தம்பமாய்க் கிளம்பின சிவனை முன் காலத்தில் பார்த்தபடியே தற்சமயம் தியானத்தில் பார்த்தபடியால் வேறொன்றையும் சதுர்முகன் கவனிக்கவில்லை. சிவனிடமிருந்து மீண்டும் ஆஜ்ஞாபிக்கப்பட்டு, அந்த ஆஜ்ஞையைக் கொண்டு செலுத்தும் பொருட்டு, பிரபு வானவர் ஹ்ருதயத்தினின்றும் யோகமுறையால் வெளிவந்து தன்னை வணங்கி நிற்கும் குமாரனை மீண்டுங்கண்டார். சிவ தரிசனத்தாலுண்டான மயிர்க்கூச்சத்துடனும், ஆனந்தக் கண்ணீருடனும், கத்கத ஸ்வரத்தோடும் பேசினார்.

பிரம்மா — ஏ புத்திரா ! உன்னால் எனக்கு புராதன சிவயோக ஞாபக முண்டாயிற்று. உன்பொருட்டு அதைத் தியானித்து ஞாபகமடைந்தேன். பெருந் தவத்தால் உனக்கு சிவனிடத்திலே பரமசக்தி யுண்டாயிருக்கிறது. அதனாலேயே என் ஹ்ருதயம் க்ஷணத்திலே திருப்பப்பட்டது போலாயிற்று. யாருக்கு சதாசிவனிடத்தில் ஓயாத பக்தியுண்டோ அந்தப் புண்ணியர்கள் தங்கள் சரிதைகளால் உலக முழுவதையும் சுத்தமாக்குகிறார்கள். அவர்களுடன் சம்பாஷணை, கைலாசம், விளையாட்டு, சேர்க்கை, அவர்களைப் பார்ப்பது, சிவ பக்தர்களின் ஸ்மரணம் ஆகிய இவை பாபங்களைப் போக்கவல்லன. கள்ளமில்லாக் கருணை நிறைந்த அருணாத்ரி என்ற தேஜஸாகிய சிவன் முன் காலத்தில் எப்படி உற்பவித்தாரோ அதைக் கேட்பாயாக, "நான் பலவாய் விரிவேனாக" என்ற சங்கற்பத்தால் விஸ்தரித்த சதாசிவனான பரஞ்ஜோதியிலிருந்து நானும் நாராயணனும் உண்டானோம். ஸ்வபாவமா யுண்டான நாங்களிருவரும் ஒரு சமயத்தில் அஹங்கரித்து, பரஸ்பர விவாதத்தில் சாந்தமடையாமல் யுத்தம் பண்ணினோம். பரஸ்பர யுத்தத்தில் இருவருக்கும் முண்டான அதி பயங்கரமான ரோஷத்தைப் பார்த்துக் கருணாமூர்த்தியான ஈசுவரன் ஆலோசித்தார்:

"நான் சிருஷ்டிகர்த்தா, நான் பாலகன்" என்ற விவாதத்தில் ஆழ்ந்தவர்களாய இருவருக்கும் லோக நாசகரமான யுத்தம் ஏன் உண்டாகவேண்டும்? இரு மூடர்களுக்கும் சமயத்தில் சொரூபத்தை உடனே காட்டி யுத்தத்தை நான் நிறுத்தாவிட்டால், லோகம் க்ஷயமாய்விடும். யுத்தத்தை நான் நிறுத்தாவிட்டால், கோபத்தால் புத்தியிழந்த இவ்விரு மூடரும், என் மஹிமையாவற்றையும் கடந்தது என்று வேதங்களிலுள்ளதை அறியவில்லை. எந்த ஜந்துவும் தன்னைத்தானே பிறவெல்லாவற்றைக் காட்டிலும் மேலாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைத்துவிடுகிறது. பிறனைத் தனக்குச் சமமாகவோ அதிகமாகவோ அறியாத மூடன் (அடிபட்டுக்) கீழே விழவேண்டியதுதான். நான் உலகத்திலெங்கேனும் பரிமாணத்தோடு ரூபங்காட்டினால் அச்சமயத்தில் அதை நினைத்தமாத்திரத்தில் ஒரு அற்பனுங்கூட என்னை அடையலாம்."

சதாசிவன் மனத்தில் இப்படி நிச்சயித்து யுத்தத்தில் அமர்ந்த எங்களிருவரின் மத்தியில் அக்னி ஸ்தம்பமாகத் தானே உற்பவித்தார். அது லோகங்களை முழுவதுங் கடந்து, எங்கும் அக்னிபோல் ஆதியந்தமற்று ஜொலித்தது. எங்கள் திருஷ்டி பாதிக்கப்பட்டு இருவரும் அப்படியே நின்றோம். ஜ்வலிக்கும் தேஜஸ்தம்பத்தை நோக்கி, எங்கள் மனது கலங்கித் தளர்ந்தது. அப்பொழுது எங்கள் முன், "சிறுவர்களே ! மூடத்தன்மையால் யுத்தமேன் செய்கின்றீர்கள்? உங்கள் பலாபலம் சிவனுக்கு மட்டுமே தெரியும். தேஜஸ்தம்பமயமான சம்புவின் ரூபம் இதோ கிளம்பியிருக்கிறது. உங்களில் யார் இதன் ஆதியையோ, அந்தத்தையோ கண்டு பிடிக்கின்றானோ, அவனே பலசாலி, " என்று அசரீரி வாக்கு உண்டாயிற்று. இந்த வாக்கைக் கேட்டு நாங்கள் யுத்தத்தை நிறுத்தினோம்.

நானும் விஷ்ணுவும் அதன் கோடிகளைக் காணத்தீர்மானித்தோம். அங்கிஸ்தம்பமயமான அந்த ஆதியந்தமற்ற சம்புவின் ரூபத்தைக் காண ஒருவன் ஆதியையும் மற்றவன் அந்தத்தையும் கண்டுபிடிக்கத் தீர்மானித்தோம். ஆகாயத்திலுள்ள சந்திரனைப் பிடிக்கக் கருதி ஜலத்தில் பிரதிபிம்பித்த சந்திரனைப் பிடிக்கப்போன குழந்தையைப்போல, நாங்களிருவரும் பரஞ்ஜோதியை அளந்தறிய ஆரம்பித்தோம். அதன்பொருட்டு விஷ்ணு மிக ஆத்திரத்தோடு மிகப் பெரிய வராஹமாய் அதன் மூலத்தைத் தேட பூமியைத் தோண்டினார். நானோ ஹம்ஸபக்ஷியாகி மிகவேகமாய்ப் பறந்தேன். அதன் சிரோபாகத்தைப் பார்க்க மேலே ஆகாயத்திற் சென்றேன். மாதவன், பூமியைத் தோண்டிக் கீழேயும், அதற்குக் கீழேயுமாக பூமி முழுவதுந் தோண்டியுங்கூட அக்கினிஸ்தம்பம் அதற்குக் கீழேயிருந் துண்டானதுபோலக் கண்டார்.

அனேக கோடி வருஷங்கள் தேடியுங்கூட, அனாதியான தேஜஸ்தம்பத்தின் மூலத்தைக் காணமுடியவில்லை. ஆகையால் ஹரி மிகவும் கலங்கித் துக்கித்துத் தனது தந்தப் பிரதேசங்களிற் பலமிழந்து சரீரக்கட்டுத் தளர்ந்து, களைப்பாற் பீடிக்கப்பட்டு, தாகத்தாற் சோர்ந்து, திரும்பிவரக்கூட சக்தியற்றுத் துக்கித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவற்ற புத்திமானான ஸ்ரீபதியும் களைப்போடு பலமற்றும் செயலற்றும் சரண்யனான சிவனைச் சரணமடைந்து சிந்திக்கலானார். "ஐயா! என் அகங்காரத்தினா லுண்டான இந்த மஹா மூர்க்கத்தன்மையால் என் பிரபுவான பரமாத்மாவை மறந்தேன் ; அவரோ ஸர்வ தேவர்களுக்கும், வேதங்களுக்கும், உலகங்களுக்கும் மூலமான ஸாக்ஷாத் பரமசிவன். அவருக்கு ஆதியாது ? ஆதியந்தமற்ற அவரிடமிருந்து நானுதித்தேன். அத்தகைய சிவனை நான் மிருக ரூபத்தோடு சோதிக்கத் தொடங்கினேனே ! அவ்வாறுகருணை புரியும் பந்துவும், பிதாவுமான சம்புவின் கிருபையாலே, எனக்கு ஆத்மபோத வடிவான நற்புத்தி மறுபடியும் உண்டாயிற்று. மஹா தேவனான சம்பு, யாரை ரக்ஷிக்க சுயமாகக் கருதுகிறாரோ அவனுக்கு அந்த க்ஷணமே தனக்குத்தானே அஹங்காரமழித்து ஞானமுண்டாகும். ஜகத்குருவுக்கு பூஜை செய்ய இனிமேல் எனக்கு சக்தியில்லை. ஆகையால் என்னையே அவருக்கு நிவேதனம் பண்ணி சங்கரரைச் சரணமடைகிறேன்." இவ்விதம் விஷ்ணு சிவனைத் துதிதுத் தன்னை அவருக்குத் சமர்ப்பித்து, அவரைத் தியானிக்கவே, பூதபதியின் நற்கிருபையால் ஹரி பூமியின்மேல் திரும்பிவந்தார்.

நானோ அனேக வருஷகாலம் ஆகாயத்திற் பறந்து, கண்கள் கிறுகிறுத்து, இறகுகள் சோர்ந்து, மிகவும் களைத்துப் பறக்கப் பறக்க மேன்மேலும் அளாவி நிற்கும் தேஜஸை என் கண்ணெதிரில் கண்டேன். அதுவோ, தேவர்களால் பூஜிக்கப்பெற்ற ஸ்தூல லங்க வடிவான தேஜோராசியான ஸாக்ஷாத் சிவதேஜஸே! தேஜோம்ச பூதர்களான சில ஸித்தர்கள், பரமசிவனுடைய அளவுக்கெட்டாத கோடியைக் கண்டுபிடிக்க முயன்ற என்னைப் பார்த்து, "ஆஹா ! இது அறிவின்மையே யன்றிவேறில்லை. இன்னு மிவன் முயலுகின்றான். தேகம் நழுவும்போதுகூட, அஹங்காரம் நழுவவில்லையே ! இறக்கைகள் முறிந்து சோர்ந்து, கண்கள் கிறுகிறுகிறுத்தபோதிலும் எல்லையற்ற தேஜஸின் எல்லையைக் காணவேண்டி இவன் வீணாக மோஹமடைகிறான். இவ்வாறே சித்தவியாகூல மடைந்த விஷ்ணு அவ்வாஜ கருணாநிதியான சிவனாலேயே திருப்பப்பட்டார். இவ்வாறு பிரம்மாதி தேவமுக்கியர்களுடைய தலைவரும் திருப்பப்பட்டார். இவ்வாறு விரம்மாதி தேவமுக்கியர்களுடைய மூலமான தேஜஸை மிக அற்பர்களிலொருவன் அறிய விரும்பினால், அவன் தனக்குள்வாழ்ந்து தியானிக்க ஸ்ரீ சிவ பரமாத்மா அவனுக்குப் புத்தியருளினால், அவனுடைய அஹங்காரம் நசியும்," என்று கூறிய கருணைமொழிகளைக் கேட்டு, கர்வந் தளர்த்து என்னுள்ளே நினைக்கலானேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவானுக்ரஹமின்றி சிவஞானம் வேதங்களாலோ, தபசினாலோ, தீர்த்தங்களாலோ உண்டாகாது. இரு சிறகுகளும் சோர்ந்தபோதிலும், அங்கங்கள் நகரமாட்டாது தளர்ந்தபோதிலும், என் சித்தம் அஹங்காரத்தை விருத்திபண்ணவே நாடுகிறது. அந்தோ ! எப்பொழுதும் கிரியையுடையவனும் அனாத்மபலபரமனுமான நான் மிகவும் நிந்திக்கத்தக்கவன். சிவனிடம் மனதைச் செலுத்தியுள்ள ஸித்தர்களுக்கு என்றும் வந்தனம். அவர்களின் சேர்க்கையால் நான் தவம் புரிந்து சித்தத்தைச் சோதித்து, எனக்கு எதிரில் தோன்றினாலும் எனக்கு ஆதாரமான இந்த சிவதேஜஸை அறிவேன். அவருடைய பிரகாசத்தாலேயே தேவர்களெல்லோரும் சத்ருஜயமடைந்து பெருமையோடிருக்கிறார்கள். வேதங்களும் அவருடைய பரமார்த்தத்தை மஹா மந்திரங்களால் கூட அறியவில்லை. ஆகையால் விசுவவிலக்ஷணமான சம்புவை மட்டுமே சரணமடைவேன். கமலக்கண்ணனான விஷ்ணுவை நோக்கித் தகாத பேச்சுப் பேசினேன். சந்திரசேகரனான சிவனையே பக்தி செய்து உண்டானேன். ஆஹா ! இதென்ன ஆச்சரியம் ! சம்புவினிட முதித்த அஹங்காரத்தைக் கொண்டு, சூரர்களான எங்கள் இருவருக்கும் உண்டான அதிசயமான யுத்தத்தைக் கேட்டு அந்த சங்கரரே தன் மாஹாத்மியத்தை வெளிப்படுத்தி, அப்பெருமான் எங்களிருவர்களின் கர்வத்தையடக்கினார்.

தேவர்களால் பூஜிக்கப்பட்ட இந்த ஈசுவரரும் அக்னிஸ்தம்பமுமான சதாசிவனைப் பூஜிக்கத் தொடங்குபவன், சம்சார சாகரத்தைக் கடக்க ஒரு படகுபோலாகிறான்.

அதன்மேல் என் எல்லா முகங்களோடும் வேதங்களைக் கோஷித்து, சிவனை ஸ்துதித்து, பக்தியோடு மனத்தினால் ஆராதித்தேன்: "எவரால் இது யாவும் பிரகாசிக்கப்பட்டுத் தரிசிக்கப்படுகிறதோ அந்த மஹானான, சர்வலோகத்திற்கும் ஒரே மூலமான சிவனை எப்பொழுதும் வணங்குகிறேன். பிறவிக் குருடர் சூரியனைக் காணாதது போல, உன் தயையற்றவர்களால், ஜகம் அனைத்தையும் எப்பொழுதும் பிரகாசிக்கிற இந்தத் தேஜஸை அறியமுடியாது. இது களங்கமற்ற பூலிங்கம்; அத்யாத்மதிருஷ்டியால் மட்டும் காணக்கூடும். இது உன் பக்தர்களால் மட்டும், உள்ளேயோ வெளியேயோ அனுபவிக்கப்படும். இதன் உருவம் எல்லையற்றது. கண்ணாடியில் பிரதிபிம்பம் போல இது யோகிகளின் ஹ்ருதயத்தில் ஜ்வாலிக்கின்றது. இதுவேதான் உன் உருவம். ஓ தேவேசா ! அல்லது இது சங்கரருடைய சத்தியமான சக்தி. இது சூக்ஷ்மத்திற்கும் அதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூக்ஷமம். என்னை விட்டு வேறன்று. அப்படியே வேறாயொன்றிருந்தாலும் அதுவும் என்னுள்ளேயே லயமாகிவிடுகிறது.

"அற்பனான ஒருவன் உன் கருணைக் கண்களால் சந்தேகமின்றி அவன் மகரனாகிறான். உனக்கு அன்னியமாக வஸ்துமில்லை. உனக்கு அதிகமேது? உன்னை உற்பவித்த என்னை விட வேறொன்றுமில்லை. உன்னிடம் ஒப்புவிக்கப் பட்ட மனது, உன்னை விட்டுவிட ஒரு போதும் சம்மதிக்காது, அப்படியிருக்க, உன்னை ஸ்துதித்த வாக்கு எப்படி பிரவிருத்திக்கக் கூடும்? ஏ ஈசா ! மஹாதேவா! நீ சுயமாகவே தயை கூரவேண்டும். புவனங்களுக்கப்பால் வியாபித்தவரே ! பக்தனான என்னை உமதிஷ்டப்படி ஆட்கொள்ளவேண்டும்.

இப்படித் துதித்து வணக்கத்துடன் திரும்பத் திரும்ப நமஸ்கரித்து, கைகூப்பிக் கொண்டு பகவான் ஸந்நிதியில் நின்றேன். அப்பொழுது, சமுத்திரகோஷம் போல விஷ்ணுவின் கம்பீரமான வாக்கால் தொனி கேட்டது. அவர் மறுபடியும் ஸ்பஷ்டமான வாக்கால் சங்கரரைக் கீர்த்தனம் பண்ணினார். "ஜய திரிபுவனாதீசா ! ஜய கங்கா தரா ! பிரபோ ! ஜய நாதா ! விரூபக்ஷா ! ஜய சந்திரசேகரா ஏ சம்போ ! காரணமில்லாமலே உன் கருணை அபரிமிதமாகி அவர்களுக்கு ஞானமுண்டாகிறது. ஸர்வவித்தியாரக்ஷகனும், ஸர்வ சம்பத்துக்களைக் கூட்டிவைக்கின்றவனும், புராணனும், புத்திரர்களையுடைளய பிதாவைப் போலப் பெருகினவனும், அனேக உருவங்களோடு கூடியவனுமாகிய, அவைகளில் ஒரு மூர்த்தியைக் கூடப் புதிய கீர்த்தனங்களால் துதிக்க வல்லமையில்லோம். அப்படியிருக்க, ஈசனே ! முழுவதும் துதிக்க எப்படி முடியும்? உன்னை அறிய உனக்குத்தான் முடியும். ஏனெனில், குளவி புழுவைப் பிடித்து அதைத் தன்னைப்போலாக்கவில்லையா? அப்படியே, தேவர்களும் உன் ஐசுவரிய கேசத்தால் பிரபுக்களாகவில்லையா? அக்னிஜ்வாலை சம்பந்தத்தால் தாக முண்டாகவில்லையா? தேச கால கிரியைகளின் பேதங்களால் அக்னி வேறுபடுவது போல, நீ ஒருவனானாலும் விஷய பேதங்களால் வேறுபட்டாற் போலவிருக்கிறாய். அனுக்ரயமே தன்மையான தேவனே ! சங்கரா ! உன் ரூபத்தைக் காட்டு. ஸர்வாதாரனே ! எங்களிருவரின் கண்களும் ஆனந்தமடையட்டும்."

இவ்விதம் சிரத்தை பக்தியுடன் பணிந்து நமஸ்கரித்துத் துதித்து நின்ற எங்களிருவருக்கும் சம்பு கிருபை கூர்ந்தார். எப்படியெனில், மறுபடியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேஜஸ்தம்பத்தினின்று காலகண்டன் கபிலவர்ணமாகவும், அர்த்த சந்திரனைத் தரித்த புருஷனாகவும் உற்பவித்தார். கரங்களில் கோடரியும், மான் குட்டியும் கொண்டு வராபயம் காட்டி, அந்தப் பிரபு எங்களை நோக்கி, "ஏ ! புத்திரர்களே ! உங்கள் இருவர்களின் பக்தியையும், உங்கள் மனது என்பரமானந்தத்தையும் பற்றியெனக்கு மிகவும் சந்தோஷம். நீங்கள், முறையே உலகங்களுக்கு சிருஷ்டிகர்த்தாவும் பாலகனும் ஆகக்கடவீர்கள் ! உங்களிஷ்டத்தின் பொருட்டு நான் வெளிப்பட்டு வரமளிக்க வந்திருக்கின்றேன்; வேண்டிய வரங்களைக் கேளுங்கள்."

இப்படிச் சொன்னதை நாங்கள் கேட்டு மிகவும் சந்தோஷித்துக் கைகூப்பி, தனித்தனியாயெங்களுக்கு இஷ்டமானதைப் பிரார்த்தித்தோம். திரிலோகவிதாயாகனான நான் அபராஜிதஸ்வ ரூபனான ஈசுவரனை வேதமந்திரங்கொண்டு சிசுவைப் போலத் துதித்தேன்; 'எப்பொழுதும் (கருணையுடன்) வரமளிக்கின்ற ஈசுவரனும், தேஜோமயனும், மஹாதேவனும், யோகிகளால் தியானிக்கப்பட்டவனும், களங்கமற்றவனுமான உன் வடிவத்திற்கு வந்தனம். உனது தேஜஸால் ஆகாயமும், அந்தரங்களும் பூரிக்கப்பட்டன. தேவா! க்ஷணத்தில் தேவலோகம் (எதுவென்று) விசாரிக்கப்படுவது போலாயிற்று. (ஏனெனில்) ஸித்த, சாரண, கந்தர்வ, தேவ, பிரம்ம ரிஷிகள் யாவரும் உன்னொளியால் சுவர்க்கத்தைவிட்டு வெளியே திரியத் தொடங்கினார்கள். இன்னும் பூமி முழுவதும் உன் தேஜஸால் பாதிக்கப்பட்டுச் சராசரங்களை விளைவிக்க முடியாமற்போகும். (ஆகையால்) தேஜஸை உள்ளடக்கி அருணாசலம் என்ற ஸ்தாவர லிங்கமாக உலகானுக்ரயத்தின் பொருட்டு அமரவேண்டும். ஜோதிமயமான இந்த அருணாசல வுருவத்தை எந்த மனுஷ்யர்கள் பக்தியோடு ஆராதிக்கிறார்களோ அவர்கள் அமரர்களைக் காட்டிலும் மேலானவர்கள். ஸித்தகணங்கள், பிரம்மரிஷிகள் முதலிய ஸகலலோகர்களும் பூமியில் மானிடத்தன்மையடைந்து இதைச்சேவிக்கட்டும். தேவராசிகளான கல்பாதி விருக்ஷங்கள் இதை என்றும் சேவிக்கும் பொருட்டு பலவகைப் பழங்களைக் கொடுக்கும் சிறந்த விருக்ஷங்களாக இங்கே முளைத்து வளரட்டும். சிங்கம் முதலிய மிருகங்கள் யாவும் பாபமென்ற தடையைப் போக்கி, மிகச் சாந்தமாய் இங்கே ஸஞ்சரிக்கட்டும். அயனத்வயங்களால் பேதகதியுள்ள சூரியன் லிங்க ரூபமான உன்னுச்சியை எப்பொழுதுந் தாண்டமுடியாது. அதிசயமான துந்துபி சங்க நாதங்களோடும், யதேஷ்டமான புஷ்பதாரைகளோடும், தேவனே ! நீ பூஜிக்கப்படவேண்டும். எந்தக் காலத்திலும் உன் ஸந்நிதியை யடைந்த மனிதர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரத்தன்மை, ஸித்தன்மை, சூவாசித்து, மோக்ஷம் முதலிய நலன்களை யடையட்டும். ஏ! அருணாசலா! உன்னை நாடின எல்லா மனிதர்களும் ஈசித்துவம், வசித்வம், ஸௌபாக்கியம், கால வஞ்சனங்களைப் பெறட்டும். பின்னாவயவங்களைப் பூரணமாக்கியும். ஸர்வ வியாதிகளைப் போக்கியும், எல்லாக் கோரிக்கைகளை நிறைவேற்றியும் நீ உன் விருப்பத்தைத் தெரிவிக்கவேண்டும்."

"அப்படியே" என்று சொல்லவே, லக்ஷ்மீபதியான விஷ்ணு, அருணாத்ரிபதியும், வரதனுமான சிவனை வணங்கிப் பின்வருமாறு பிரார்த்தித்தார்.

"கருணை நிறைந்தவனே! அருள் புரிதல் வேண்டும். சோணகிரி பிரபோ! மஹேசா! ஸர்வலோக நன்மையின் பொருட்டு வெளிப்பட்டவனே! உன்னைத் தொழுது நானெப்படி ஜகத் ரக்ஷக சாமர்த்தியமும் ஸ்ரீ பதித்துவமும் அடைந்தேனோ, அப்படியே உன் பக்தர்கள் யாவரும் ஆகட்டும்! உனது மஹா அற்புதமான இந்த ரூபத்தை அற்பப் புண்ணியர்கள்! தலைவ! உனது கோடிகள் பிரம்மாவினாலும் என்னாலுங்கூடக் காணப்படவில்லை! எந்த மனிதர் உன்னைப் பிரதக்ஷிண, நமஸ்கார, நிருத்ய, கீதங்களால் பூஜித்து ஆராதிக்கிறார்களோ, அவர்கள் பாபங்களைக் களைந்து கிருதார்த்தர்களாகட்டும். எவர்கள் உன்னை உபவாசம், விரதம், ஸத்ரம், உபசாரம், பூஜை முதலியவற்றால் உபாசிக்கிறார்களோ, அவர்கள் ஸார்வபௌமர்கள் ஆகட்டும். அருணகிரியாக மறுபடியுமான ஈசா! உன் ஸந்நிதியில் சோலை, மண்டபம், கிணறு, குளம் முதலிவற்றைக் கற்பித்தாலும், சாஸ்திர ஆராய்ச்சி, அல்லது அங்கப்பிரதக்ஷிணஞ் செய்தாலும் அவன் பாபம் யாவும் உடனே நீங்கி, சுத்தனாகி, அஷ்டைசுவரியங்களும் அடையட்டும். உன் ஸந்நிதிக்கு வரும் பக்தர்கள், எங்களிருவரையும் நீங்காமல், உன் பாதகமலத்தைத் தியானிக்கட்டும்."

"அப்படியே யாகுக" என்று விஷ்ணுவுக்கு வரங்கொடுத்து, சந்திரசேகரர் அருணாசலரூபமான ஸ்தாவரலிங்கவடிவ மானார்.

இதுவே தான் தேஜோலிங்கமென்பது; ஸர்வ லோகங்களுக்கும் ஆதிமூலம். பூமியில் "அருணாத்ரி" என்னும் பெயருடன் விளங்குவது. பிரளயத்தில் நான்கு சமுத்திரங்களும் ஒருங்கப்பொங்கி உலகங்கள் யாவும் மூழ்க,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வெல்லைமட்டும் தொடப்படாமல், மூவுலகங்களையும் யானைத்துதிக்கை போல விருஷ தாரைகளால் பிரவஹிக்கச் செய்தபின், புஷ்கரம் முதலிய மஹாமேகங்கள் சம்ஹரிக்கப்பட்டு, பிரகிருதியும் அடங்கினபோது, ஸர்வ பீஜங்களும் தடையின்றி இங்கே அடங்கியிருக்கும். பிரளயம் முடிந்தவுடன் என்னால் (பிரம்மாவினால்) அழைக்கப்பட்ட இதன் பாதஸேவிதர்களான பிராம்மணர்களுக்கு வேதாத்தியயனம் ஸித்திக்கும். ஸர்வ வித்தைகளும், கலைகளும், சாஸ்திர சம்பத்துக்களும், வேதாகமங்களும் இங்கேயே உண்மையில் நிலைத்திருக்கும். இதன் குகைகளில் முனிகள், விரதமனுஷ்டிப்பவர்கள், ஜடாதாரிகள் யாவரும் கோடி சூரிய அக்னி தேஜஸுகளோடும் ஜ்வாலிக்கிறார்கள். யாரொருவர் "சதாசிவன்" எனப்படுகிறாரோ, அவரேதான் ப்ரஹ்மமயமான ஐந்து மஹாமூர்த்தங்களே ஐந்தக்ஷரங்களாகி பஞ்சாக்ஷரவடிவோடும் "அ" என்ற பீடத்தின் மீதிருந்து நாதரூபமாய்ப் பரிணமிக்கிறார். அவர்தான் அஷ்டலிங்கங்களாய் அஷ்டதிக்குப் பாலகர்களால் ஆராதிக்கப்படுகிறார். அவர்தான் அஷ்டமூர்த்தியாயிருந்து, அஷ்டஸித்திகளைத் தருகிறார்: அவர் பொருட்டுத்தான் தேவமுக்கியர்கள் யாவரும் தங்கள் தங்கள் லோகங்களையும் விட்டு மோக்ஷத்தையும் இச்சியாமல் கனகாசலத்திலே வசிக்கிறார்கள்.

இவ்வாறு பூலோகம் தன் ஸகல புண்ணியங்களும் பக்குவமாகி, "அருணாத்ரி" யினால் பிரசித்தமாகி பக்தகோடிகளுக்கு 'பக்தி' என்ற வரத்தைக் கொடுக்கின்றது. கைலாஸம், மேருகிரிகளிலிருந்தும் தேவகணங்கள் இங்கே வந்து, ஸகலாபீஷ்டங்களையும் பூர்த்தி செய்யும் சம்புவான சோணாத்ரிநாதரை ஆராதிக்கிறார்கள்.

ஸநகர் பிரம்மாவை நோக்கி "ஹே ! பகவானே ! ஜகத்குருவான தங்கள் கிருபையால் சிவானுக்ரஹமடைந்து, அருணாத்ரிமாஹாத்மியத்தைக் கேட்க நேர்ந்தது. இது மிக ஆச்சரியமானது. சர்வ பாபங்களையும் போக்குவது. வரப்பிரதனான சோணாத்ரியை மற்றும் யாரெல்லாம் ஆராதித்தார்கள்? உங்கள் தவத்தின் பயனை அளிக்கும்பொருட்டு ஆதியந்தமற்ற சிவனே சோணகிரியுருவாய் நிற்கிறார். "சோணாத்ரி" என்று ஒரு தரம் சொன்னமாத்திரத்தால் முக்தியுண்டு. அந்த ஸந்நிதியில் ஸகலாபீஷ்டங்களும் ஸித்திக்கும். ஸகல பாபங்களும் நசியும். அந்தப் பெயரே "சிவ" என்ற சப்தத்தினின்று பெருகும் அமிர்தபானம். அதுவே சிவபூஜை, சிவபுராணம் முதலியன" என்று சொன்னதைக் கேட்டு, தேவ தேவனான பிதாமகன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருணையே உருவங்கொண்ட அருசணாசலேசுவரனை வணங்கிச் சொல்லத் தொடங்கினார்.

"குழந்தாய் ! முன்னொரு காலத்தில் பார்வதி தேவி அருணாத்ரீசனை ஆசிரயித்து,சாந்தியடைந்த புராதன சரித்திரத்தைக் கேட்பாயாக: முன்னொரு காலத்தில், ரத்ன தோரணங்களும், ரத்னங்களையே புஷ்பங்களாகவும் பழங்களாகவுமுடைய கற்பகவிருக்ஷஸ்தம்பங்களும், அளவற்ற ரத்னங்களா லிழைக்கப்பட்ட தரையும், முத்துக்களாற் பின்னப்பட்ட விதானமுமுடைய ஒரு ரத்ன மண்டபத்தில் மேன்மையான ரத்ன சிம்மாஸனத்தில் பார்வபதியான மஹாதேவர் வீற்றிருந்தார். அங்கே நேர்த்தியான புஷ்பம் தூபமிவைகளின் வாசனை நிறைந்திருந்தது. தொங்கிக்கொண்டிருந்த புஷ்பப் படலங்களில் வண்டுகள் நிறைந்து ரீங்காரம் செய்தன. ஸ்கந்த வாஹனங்கள் – அதாவது மயில்கள் – தோகைகளை விரித்து ஆடி உரக்கக் கூவின. பார்வதி தேவியின் வாஹனத்தால், அதாவது சிங்கத்தால் – யானைகள் பயந்தன. அங்கே அப்ஸர கணங்கள் ஆடிப்பாட, எதிரில் திக்குப் பாலகர்கள் ஸேவித்து நிற்க, ரிக் ஹஜுஸ் ஸாம மந்திரங்களால் துதிக்கும் முனிவர்களும், பிரம்மரிஷி தேவ ஸித்த ராஜரிஷிகளும், விபூதி தரித்த நாநாவித கணங்களும், ருத்திராக்ஷந்தரித்த புண்ணியர்களான சிவபக்தர்களும் சூழ, வீணை வேணு மிருதங்கம் முதலிய மங்களவாத்தியங்கள் கோஷிக்க, மணிகளடிக்க, திவ்யமான வேதத்தொனிகளும் இவைகளுடன் சேர, மனோஹரமான திவ்யாஸனத்தில் பார்வதி தேவியுடன் ஸ்ரீபகவான் பக்தர்களுக்கு அனுக்கிரகம் செய்யும் பொருட்டு, களங்கமற்ற ஸர்வதேஜோமயமான மங்களரூபத்தோடும் திருக்கோலங்கொண்டார். தயாநிதியான சிவபெருமான் அம்பிகையுடன் ஆனந்தித்தார். ஸங்கீதம், நாநாவிதக் கதைகள், விளையாட்டு, கணங்களின் விகடங்கள், நடனங்களாகிய இவைகளாற் பார்வதிதேவியை சந்தோஷிப்பித்தார்.

தேவர்கள், ரிஷிகள் இன்னும் மற்ற பக்தக் கூட்டங்கள் யாவற்றிக்கும் வேண்டிய வரங்களைக் கொடுத்து, அவர்களெல்லோரையும் அனுப்பிவிட்டு, தான் உமாதேவியுடன் ரத்ன மண்டபங்களிலும், பிரகாரங்களிலும், மனோஹரமான குளங்களிலும், ரத்னப்படிகளிலும், மலையுச்சிகளிலும், வாழைத் தோட்டங்களிலும் ரமிக்க, கங்கையினலைகளிலிருந்துண்டாகுங் காற்று, மலர்ந்த தாமரைகளின் வாசனையுடன் குளிர்ந்து மந்தமாய் வீசிக் களைப்பைப் போக்கிற்று. ரதி தேவியைப் போல அழகும், மங்களமும், ஸகல சௌபாக்கியங்களும் நிறைந்த உமாதேவியை மஹாதேவர் தானே மிகவும் பிரியத்துடன் சந்தோஷிப்பித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பொழுது, ஒரு சமயத்தில் மிகவும் சந்தோஷித்த தேவி தன் நாயகனைத் தன் வசப்பட்டவரென்றெண்ணி, அவரறியாமல் அவருக்குப் பின்னேவந்து, மிகப் பிரியத்தோடு தாமரையிதழ் போன்ற தன்னிரு கரங்களால் ஜகத்பதியான சம்புவின் திரிநேத்திரங்களையும் விளையாட்டாய் மூடி, "இதென்ன?" வென்று அன்புடன் கேட்டாள். சந்திர, சூரிய, அக்னி வடிவான மூன்று கண்களும் மூடப்படவே, லோகங்களில் வெகுகாலம் கோரமான மஹாந்தகாரம் சூழ்ந்தது. ஏனெனில், தேவனுடைய அரை வினாடிகாலம், நமக்குக் கோடி வருஷங்களுக்குச் சமானமல்லவா?

தேவியின் லீலையாலுண்டான இருள் உலக நாசத்திற்குக் காரணமாயிற்று. சுற்றும் இருண்ட தமஸால் நிறைந்த பிரபஞ்சத்தில், வெளிச்சமற்றதால் ஸஞ்சாரமற்று நாசமுண்டாயிற்று. தேவர்கள் செயலற்றார்கள். வேதங்கள் கோஷிக்கவில்லை. ஜீவர்கள் கேவலம் அவ்யக்தமாகி ஜனனமற்றன. எல்லா உலகங்களுக்கும் அகாலத்திலுண்டான நாசத்தைப் பார்த்த தபோதனர்கள் ஆலோசிக்கலானார்கள். "லோபக்ஷயஹேதுவான அந்தகா வியாப்திக்கு என்ன காரணம்? ஸர்வத்மான ஸ்ரீ பகவானோ இப்போது காலத்தையும் கோபிக்கவில்லையே ! தேவிதான் விளையாட்டாய் திரிபுர ஸம்ஹாரின் கண்களை மூடிவிட்டாள். அதனாலேயே திரிலோகங்களும் இப்படியிருண்டன. திரிலோகங்களிலும் அகாலத்தில் இத்தகைய இருள் சூழ்ந்ததால், தபாஸால், ராஜ்யம் தேவஜன்மம் இவைகளையடைந்த வர்களுடைய கதியென்ன? யஜ்ஞங்கள் நடக்கக்காணோம்; தேவ பூஜை நடக்கவில்லை!"

இவ்விதமாய்த் தீர்மானித்து, மனதி லாலோசித்து, ஞானதிருஷ்டியாலறிந்த நித்திய தேஜஸ்விகள் பக்தியுடன் சம்புவை வணங்கித் துதித்தார்கள். "மாயையென்ற சக்தியால் பல்வேறு பான்மையும் ஜகத்காரணனும், பரமாத்மாவுமான சிவனுக்கு வந்தனம் ! சிவனைவிட்டு அன்னியமில்லாத சக்தி, சிவரூபியும், மூலமும் சமானமுமற்றதாய், ஜகத் சிருஷ்டி, ஸ்திதி, நாசனங்களை லீலையாய்ச் செய்கிறது. அவள் உன்னில் பாதி; சிவனுஞ் சக்தியுங்கூடி ஒரே உருவந்தான். மஹா தேவன் ஒருவனே. உன்னைவிட்டு மற்றொன்றில்லை. உன் லீலையால் இந்தச் சமயம் லோகத்திற்கு அகாலப்பிரளயம் நேர்ந்தது. உன் கருணையோ நிர்வியாஷம். அது லோகவிருத்திக்காக இப்பொழுது பெருகட்டும்! அரை நொடி நேரம் உமது காந்தியுள் அடங்கின மாத்திரத்தால் எங்களுக்கு அனேக கோடி வருஷகாலமாய் ஜகன்னாசமாகிவிட்டது. ஆகையால், ஓ !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸதாசிவா ! காலா ! கருணாமூர்த்தி ! கிருபை கூர்வாயாக. லோக க்ஷய ஹேதுவான விளையாட்டை நிறுத்துவாயாக."

பக்தர்களும், சித்தர்களும், செய்து கொண்ட இந்தப் பிரார்த்தனையின் பேரில், கருணாமூர்த்தியான சிவன் "கௌரீ ! கண்களை விடு" என்றார். உடனே தேவியும் ஹரநேத்திரங்களின் வடிவான ஸோம, சூரிய, அக்னிகளின் மறைவை விலக்கினாள். லோகங்களில் வெளிச்சம் வியாபித்தது.

வணங்கி நின்ற ஸித்தர்களைப் பார்த்து, "எவ்வளவு காலம் கழிந்தது ?" என்று கேட்க, அவர்கள் உங்களுக்கு அரைவினாடி காலமும், எங்களுக்குக் கோடி வருஷங்களுங் கழிந்தன" என்றார்கள். அதன்பேரில், புன்சிரிப்புடன், கிருபைக் கடலான தேவன் தன் பிரியையை நோக்கி, மிக்க ஆதரவோடு, தர்மார்த்தம் அடங்கிய சில வார்த்தைகள் பேசினார்.

"பேதாய் ! நீ யோசியாமல் இப்படிச் செய்து விட்டாயே ! லோகமாதாவான உனக்கு லோக க்ஷய காரியம் தகாது. அதற்கேற்பட்ட காலத்தில் நானல்லவோ லோக சம்ஹாரஞ் செய்வது? உன் பேதைமையால் அகாலத்தில் பிரளயமுண்டாக்கினாய்; ஸாதுக்கள் தூஷிக்கக்கூடிய காரியத்தை உன்னைப்போன்றவள் செய்யலாமா? கிருபாமூர்த்தி விளையாட்டாகக் கூட பரஹிம்ஸா காரியம் செய்வதில்லை." என்று சம்பு சொல்லக்கேட்டு, அவரை அவருடைய பிரியை, "இதன் சாந்தியின் பொருட்டு நானென்ன செய்யலாமா?" என்று தர்மக் குறைவாலுண்டான பயத்துடன் வினவினாள். அதற்குத் தயாநிதியான தேவர் பிரசன்னமாகி, தேவியினனுதாபத்தாலும், பக்தியாலும் ஸந்தோஷித்து பின்வருமாறு சொன்னார்:– "உனக்கு என்னைவிட்டு மறு பிராயச்சித்தமென்ன சொல்லுவது ? தவிர, நீ தர்மமார்க்கத்திலேயேயிருக்கிறாய். சுருதி, ஸ்மிருதி, கர்ம, கல்ப, வித்தைகள் தேவாதிகள் முதலிய யாவும் உன் ரூபந்தான். லோகோற் பத்தியை விரும்பும் என் சக்திரூபமான நீ என்னினும் வேறல்ல." "ஆகையால், லோகானுரூபமாக உனக்குப் பிராயச் சித்தம் விதிக்கிறேன். சுருதி, ஸ்மிருதிகளைத் தீர விசாரித்துப் பார்க்கையில், தர்மம் ஆறுவிதமாய்க் கூறப்படுகிறது. எவள் தன்னைச் சார்ந்தவர்களால் தள்ளப்படுகிறாளோ, அவள் தன் புருஷனால் காப்பாற்றப்படக்கூடாது. உன்னை விட்டு நான் ஒரு க்ஷணங்கூட இருக்கமுடியாது. நானே ஆத்மாவாயிருந்து கொண்டு தபஸ் முழுவதும் செய்கிறேன். உன் தபோ மஹிமையால் பூமி முழுவதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூய்மையாகட்டும். உன் பாபத்ம ஸ்பர்சம், தபஸ்வினியான உன் தரிசனம், உன் ஸமீபவாஸம் ஆகியவற்றால் ஜனங்கள் ஸகல பீடைகளிலிருந்தும் விலக்கப்படுவார்கள். கர்மபூமியின் விருத்தியின் பொருட்டு நீ புண்ணியங்களை ஆசரிப்பாயாக. உன் தபஸ் சரியையைப் பார்த்து எல்லோரும் மெக்காலத்திலும் தர்மத்தில் திடமான நம்பிக்கை கொள்வார்கள். அதற்கு ஸந்தேகமில்லை. உன் தயை தர்மபரிபாலன ரூபமாக பூமியைக் கிருதார்த்தமாக்கும். தேவீ ! அனாதி வேதங்கள் 'நீயே சர்வமும்' என்று சொல்லுகின்றன."

"சகல ஐஸ்வரியங்களோடு கூடின காஞ்சீபுரி யென்ற பட்டணமொன்றிருக்கிறது. தேவர்கள் நிறைந்த சுவர்க்க லோகத்தை அது பூமியில் பிரத்தியக்ஷமாய்க் காட்டுகிறது. அங்கே செய்யப்பட்ட சுவல்ப தபஸ்கூட அளவற்ற பயனைக் கொடுக்கும். தேவர், முனிவர் யாவரும் அங்கே எப்பொழுதுமிருக்க விரும்புகிறார்கள். மஹா பாபங்களைக்கூடப் போக்கக்கூடிய "கம்பா" என்னும் பிரஸித்தமான தீர்த்தம் அங்கேயுண்டு. அங்குள்ள ஜனங்களுடைய பாபராசிகள் அதனால் நடுங்குகின்றன. அந்த ஸ்தலத்தில் எப்பொழுதும் இலைகள் நிறைந்து, நிழல் வியாபித்து, காய்கள் பழங்களோடுங் கூடிய ஒரு திவ்யமான மாமரமுண்டு. அதன் நிழலில் செய்த ஹோமம், ஜபம் யாவும் அளவற்ற பயனைத் தரும்.

"அநேக ரூபங்களோடுங் கூடிய கணங்களும், யோகினிகளான பாகினிகளும், விஷ்ணுவைத் தலைமையாகக் கொண்ட மற்றவர்களும் உன்னைச் சுற்றித் தங்கியிருந்து சேவிக்கட்டும். நானும் நிஷ்களனாகி உன் மனதென்னும் பத்மத்தில் ஸதா இருப்பேன். ஆகையால் என்னைவிட்டுப் பிரிந்த துக்கம் வேண்டாம்" என்று மஹாதேவன் இப்படிச் சொல்லக் கேட்டு, தேவி தவம் புரிவதற்காக, சகிகளுடன் கம்பாதீரத்திற்கு உடனே சென்றாள். அவ்விடத்தில் முனிகணங்களால் சேவிக்கப்பட்ட பரிசுத்தமான கம்பா தீர்த்தத்தையும், கண்களைக் கவரும்படி பரந்து செழித்த ஒரு மாமரத்தையும் பார்த்து, அதில் பழங்கள் புஷ்பங்கள் நிறைந்து, குயில்கள் கூவி விளையாடக் கண்டு, ஆச்சரிய வசமாகி, மஹேசுவரனைத் தியானித்து, மறுபடியும் அவரை வேண்டினாள். விரகாக்னியால் பீடிக்கப்பட்ட அவள் சரீரம் அப்பொழுதே தபஸினால் இளைத்தது போலாய்விட்டது. தன் பக்கத்தில் நின்ற விஜயையை நோக்கி, புராரியைவிட்டுப் பிரிந்த தாபத்துடனும், பரவசமான சோகத்துடனும் கௌரீதேவி சொன்னாள்:


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பாபச் சேதகரமான இந்த மாமரத்தைத் தேடி, நேரில் சிவனைப் பூஜிக்க விரும்பி, தபசிகள் எக்காலத்திலும் வசிக்கிறார்கள். விநோதமாய்ச் செழித்துப்பழுத்த இந்த ஏகாம்பரவிருக்ஷம் எனது விரதத்தை மிகவும் விருத்தி செய்கிறது. இவ்வாறு மிகவும் பீடிக்கப்பட்டு எரிகிற என்னால் சிவனது பிரிவை எவ்வாறு சகிக்கமுடியும்? அதற்குக்கூடப் பிறை சூடியின் பாதஸ்மரணமேதான் கைகண்ட மருந்து.

அதன்பேரில் விஜயை அம்பிகையை பக்தியுடன் பணிந்து வணங்கி, அனேக விதமான சிவபர ஸ்துதிகளால் தேவியின் சாந்தியின் பொருட்டுப் பேசினாள்: "தேவி! நீ சம்புவினால் எக்காலத்திலும் விடமுடியாதவள். ஏனெனில், அவருக்குப் பிராணேசுவரியும் பரமாத்மசக்தியும் நீ. உன் குணமான மாயையை வெளிவிட நீ விரும்பினால் ஈசுவரன் அன்னியமாகக் காணப்படுகிறாரேயொழிய, அவர் தானாகவே அப்படியில்லை. பார்வதீ ! அவர் உத்தரவின் பேரில் நீ இங்கே வந்திருக்கிறாய். சம்புசேவை என்கிற அவர் ஆஞ்ஞையை உன்னால் ஒரு போதுங் கடக்க முடியாது. சம்புவின் வசமான நீ ஸர்வ காமங்களையும் நீக்கி சிவனா லுண்டாக்கப்பட்ட இந்த க்ஷேத்திரத்தில் தவ முறையை அனுஷ்டிப்பாய். அன்றியும், நீயே ஜகன்மயமானதால் ஜகத்பரிபாலனம் உன் ஆதீனந்தான். திரும்பவும் சிவனைக்கூடி, நீ தர்மத்தைப் பரிபாலிப்பாய். அப்படியிருக்க, பார்வதீ ! நீ வியோகதுக்கமடையாலாமா? தர்மப்பிரியையே உன் பக்த சிகாமணிகளுக்கு உனது ஆசாரானுஷ்டானங்களே உபதேசவடிவாய் உலகிற் பிரஸித்தியுறுவனவாகுக.

அவளிப்படிச் சொல்லக்கேட்டு கௌரி திடமனதுடன் கம்பாதீரத்தில் தவம் புரியத் தொடங்கினாள். நாநா பூஷணங்களைக் களைந்துவிட்டு, ருத்திராக்ஷங்களையணிந்தாள். நேர்த்தியான வஸ்திரங்களைக் களைந்துவிட்டு இரண்டு சுபமான தூய மரவுரிகளை உடுத்தாள். தன் கூந்தல்களை அப்பொழுதே ஜடைகளாக மாற்றிக்கொண்டாள். குங்குமத்தைவிட்டு விபூதியை உடம்பு முழுவதும் பூசினாள். ஜந்துக்களின் சங்கத்தில் சந்தோஷித்தவளாய்க் கதிர்களைப் பொறுக்கி ஆகாரமுண்டு, நியமத்துடன் சிவ பஞ்சாக்ஷரத்தையே ஜெபித்தாள். மூன்று வேளையும் கம்பா தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, மனதால் ஆதரவுடன் லிங்கம் செய்து, பத்ர புஷ்பங்களாலர்ச்சித்து, தானம் முதலிய அதிதிசத்காரங்களால் அதனைப் பூஜித்தாள். பிராணிகளின் களைப்பைப் போக்கக் கூடிய தர்மத்தை தேவி அனுஷ்டித்தாள். வேனிற் காலத்தில் பஞ்சாக்னி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தியிலும், மழைக்காலத்தில் வெறுந் தரையிற் படுத்தும், பனி ஜல மத்தியிலும் நின்று தவம் புரிந்தாள். அவளைப் பார்க்கவந்த புண்யசாலிகளான மஹரிஷிகளை ஆதரவுடன் வரவேற்றாள். அவர்களும் அவளைக் கண்டு வியப்படைந்தார்கள். ஒரு சமயத்தில் தானே காட்டினின்றும் பத்ர புஷ்பங்களை நிறையக் கொண்டுவந்து அவற்றை நன்றாய்ச் சோதித்து, கம்பாதீரத்தில் மணலால் லிங்கம் செய்து நிசாச ஆவாஹனாதிகளோடு பூஜைசெய்யத் தொடங்கினாள். விதிக் கிரமமாய்ச் சந்தனத்தினாலும், சிவந்த புஷ்பங்களாலும் சூரியனை முதலில் ஆராதித்து, பிறகு பஞ்சாவரணத்தோடுங் கூட சிவனை அர்ச்சித்தாள். பக்தியுடன் தூப தீபநைவேத்தியங்களை சமர்ப்பித்துத் தன்னெதிரில் சிவனை அபரோக்ஷமாய்க் கண்டாள்.

அப்பொழுது சிவன் அம்பிகையை நேரில் பரீக்ஷிக்க வேண்டி கம்பாதீர்த்தத்தைத் திடீரென்று பிரவஹிக்கச் செய்தார். மிகப் பெரிய வெள்ளம் தபஸி லாழ்ந்திருந்த அம்பிகையை நெருங்கக்கண்டு, சசிகள், "தேவி ! எழுந்திரு! பெரிய பிரவாஹம் கிளம்புகிறது. இப்பொழுதே எல்லாப் பக்கங்களையும் வியாபித்துவிடும்" என்று அவளுக்குத் தெரிவித்தார்கள். கண்மூடி தியானத்திலாழ்ந்திருந்த தேவி இதைக்கேட்டு, கண்களைத் திறந்து, நதி மிகவும் பிரவஹிப்பதைக் கண்டாள். பூஜைக்கேற்பட்ட தடையைக் கண்டு தேவி துக்கித்து ஆலோசித்தாள்: "நான் என்ன செய்வேன் ! ஆரம்பித்த பூஜையை நிறுத்த முடியாது. ஆஹா ! லோகத்தில் புண்ணியசாலிகளுக்குத்தான் தடையின்றி நல்ல காரியங்கள் ஸித்திக்கும் மனோபீஷ்டங்களைக் கொடுக்க வல்ல தர்மமும் அவர்களக்குத்தான் நன்கு கைகூடும். இதுவோ மணலாலான சிவலிங்கம். இவ்வளவு வெள்ளத்திலே இது கரைந்து போகும். லிங்கம் நாசமானால் நிஜபக்தர்கள் தங்கள் பிராணனையே விட்டுவிடவேண்டும். சிவமாயையால் இந்தப் பெரிய வெள்ளம் கிளம்பி, என் பக்தியின் ஸாரத்தைப் பரீக்ஷிக்க மேலிடுகிறது. நான் சிறிதும் பயமின்றி இந்த லிங்கத்தைக் கட்டிக் கொண்டு இங்கேயே இருக்கிறேன். சகிகளே ! நீங்கள் சீக்கிரமாய் விலகிச் செல்லுங்கள்" என்று சொல்லி, அம்பிகை அந்த லிங்கத்தை இழுத்துத் தழுவிக்கொண்டு வெள்ளத்தால் வேகமாய்ச் சூழப்பட்ட போதிலும் லிங்கத்தை விடாமலிருந்தாள். தன் ஆலிங்கனத்தால், தன் மார்பின் அடையாளங்கள் அழுந்தின மஹாலிங்கத்தை ஆதரவுடன் வணங்கி, கண்ணைத்திறந்து ஏகாக்கிரத் தியானநிஷ்டையுடன் ஸதாசிவனை நினைத்து உடம்பு முழுவதும் மயிர்க்கூச்செடுத்து, கொஞ்சம் நடுக்கம், வேர்வை, புருஷனைக் காப்பாற்றுகிற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கம் முதலியவற்றுடன், லிங்கத்தை ஒரு நொடிப்பொழுதுங்கூட விடக்கூடாமல் அசைவற்று உறுதியுடன் நின்றாள்.

அப்படியிருக்கையில் தைவிகமான அசரீரி வாக்கு: "பெண்ணே ! இந்தப் பெருவெள்ளம் அடங்கிவிட்டது. இனி லிங்கத்தைவிடு. உத்தமியே ! நீ பூஜித்த இந்த லிங்கம் தேவ பூஜிதமென்றும், வரதமென்றும் அழியாத கீர்த்தியடையும். உன் தவம் நிறைவேறி, தர்மபாலனங்களின் பொருட்டு செய்யப்பட்ட இந்த லிங்கத்தைத் தரிசித்து வணங்கும் மானிடர்களும் கிருதார்த்தர்களாகட்டும். நானே தேஜோரூபங்கொண்டு ஸித்தியின் பொருட்டு இப்பூமியில் அருணாசலமென்று விளங்குகிறேன். கோரமான பாபராசிகளை லோகம் யாவற்றினின்றும் களைவதாலும், கண்ட மாத்திரத்தில் தோஷலேசமும் மிஞ்ச விடாதபடியாலும், அதை அருணாசல மென்பர். ரிஷிகள், ஸித்தர்கள், கந்தர்வர்கள், யோகிகள் முதலானோர் கைலாஸ சிகரத்தையும் மேருவையும் விட்டு வந்து இதைத் தொழுகிறார்கள்.

என்னிடமிருந் துண்டான பிரம்மாவிஷ்ணுக்களுக்கு முன்காலத்தில் யுத்தம் நேர்ந்தபோது, அவர்களின் மோஹத்தைப் போக்க நான் தேஜோரூபமாயமர்ந்தேன். ஹம்ஸமான பிரம்மாவும், வராஹமான விஷ்ணுவும் என் அடிமுடிகளைக் காண முடியாமல், பக்தியுடன் என்னை வணங்கவே நான் பிரசன்னனமாகி, அவர்களுக்குப் பிரத்தியக்ஷமாகி, திரிலோகங்களையும் சம்ரக்ஷிக்க வல்ல அவர்களுக்கு இஷ்டமான வரத்தைத் தந்தேன். திரும்பவும் அவர்கள் வேண்டுகோளால் தேஜோரூபமான நான் "அருணாசல" மென்று பெயர் பெற்ற ஸ்தாவரலிங்கம் ஆனேன். நீ அங்கே போய் மஹானான கௌதம முனியிடம் என் பக்தி, அருணாசல மஹிமைகளையுங் கேட்டு, அவ்விடத்தில் தவம் புரிவாயாக; ஸர்வ பாபங்கள் நசிக்கவும், ஸர்வ லோகங்களின் க்ஷேமத்திற்கும் நான் உனக்கு அங்கே என் தேஜோரூபக் காட்சியைக் கொடுப்பேன்" என்று நிஷ்களாகரூபமான சிவனிடத்தினின்றும் உண்டான மொழிகளை நன்றாய்க் கேட்டு தேவி, "அப்படியே" என்று சொல்லி உடனே புறப்படச் சித்தமானாள்.

அப்பொழுது தன்னை ஸேவிக்கும் பொருட்டுப் பின் தொடர்ந்த சகல ரிஷிகளையுங் கருணையுடன் நோக்கி, தேவி, "தேவர்களே ! திடவிரதங்களான ரிஷிகளே ! அப்படியே நில்லுங்கள் ! பவித்திரமான கம்பாதீரத்தில் உங்கள் தவத்தை அனுஷ்டியுங்கள். ஸகல பாபங்களையும் போக்கி, ஸகல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பத்துக்களையுங் கூட்டுவிக்கும் இந்த மணல் லிங்கம் என் மார்பு, கை வளையல்களி னடையாளங்களோடு கூடியது. இதை ஆராதியுங்கள்.

''நான் நிஷ்களரும் வரதருமான சோணேசுவரரை அல்லும் பகலும் மந்திரபூர்வமாய் ஆராதிக்கப்போகிறேன். லோகத்தில் என்னைக்குறித்துத் தவம் புரிவதாலும், என் தர்மத்தைப் பரிபாலிப்பதாலும், என்னால் ஸ்தாபிக்கப்பட்ட லிங்கத்தை ஸேவிப்பதாலும் ஸகல மனோபீஷ்ட சம்பத்துக்களும் ஸித்திக்கும். கோரிக்கைகள் அனைத்தையும் நிறைவேற்றியருள்கிறபடியால் என்னைக் காமாக்ஷீ என்று அறிந்து ஆதரவுடன் என் பக்தர்கள் ஆராதித்துத் தாங்களும் வேண்டிய வரங்களை அடையட்டும்.''

''நானோ தேவேசனான சம்புவின் அவ்யாஹத பிரஜை; அருணாசலம் சென்று, அவராஜ்ஞையைக் கொண்டு செலுத்துவேன். அங்கே சென்று, கடுந்தவம் புரிந்து, சம்புவுக்குப் பிரீதியுண்டாக்கி, வரம்பெற்ற பிறகு என்னை நீங்கள் காண்பீர்களாக !'' என்று சொல்லி, தன் பாத சேவையிலீடுபட்ட தன் பக்தர்கள் யாவரையும் உடனேவிட்டு, பாலையான கௌரீ, ஈசுவராஜ்ஞையால், தவம்புரிய அருணகிரிக்குச் சென்றாள்.

திவ்விய துந்துபிகள் முழங்க, அப்ஸரஸுகள் ஆடிப்பாட, புஷ்ப மாலைகளால் பூஜிக்கப்பெற்று, உள்ளே தேஜோமயமாகவும், வெளியில் சாந்திமயமாயுமுள்ள அருணாத்ரிசனை, தான் மிக உத்ஸாஹத்துடன் சகிகளோடுங் கூடத் தினந்தோறும் ஸேவித்தும், ஸ்தாவரலிங்கத்தை ஆராதித்தும் வந்ததால் மிகவும் இளைத்தாள். அங்கே ஸித்தயோகிரிஷிகளையுங் கண்டாள். ''அத்ரி, ப்ருகு, பரத்வாஜ, காசியப, அங்கிரஸ, குத்ஸ, கௌதமரும், மற்ற ஸித்த வித்தியாதரரும், தேவர்களும் தங்கள் கோரிக்கைகள் நிறைவேற நீண்டதவம் இங்கே புரிகிறார்கள். கங்கை முதலிய புண்ய தீர்த்தங்கள் யாவும் இதைச் சுற்றிலுமிருந்து ஸேவிக்கின்றன. இதுதான் அருணாத்ரி என்று விளங்கும் மேன்மையான திவ்ய லிங்கம். இதைச் சேவி'' என்று தேவர்கள் யாவரும் கூற, கௌரி மீண்டும் மீண்டும் அதை வணங்கினாள்.

மஹரிஷிகள் யாவரும் அவளைத் தங்கள் அதிதியாய் வரவேண்டுமென்று பிரார்த்திக்க, அவள் ''சிவாஜ்ஞையால் கௌதமரைப் பார்க்கவேண்டும்''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றாள். பக்தர்களான ரிஷிகளால் "இதோ, இங்கே" என்று காட்டப்பட்டு அங்கே அவர்களுடன் கூடச் சென்றாள். "அந்த முனி சிவபக்தர்களில் முதல்வர்; தபோநிதி; காலையில் சமித்து, தர்ப்பை, பழ, புஷ்ப, பத்திரங்கள் கொண்டுவரக் காட்டுக்குள்ளே போயிருக்கிறார்; என்பதைக் கேட்டுக் கொண்டே, பார்வதி கௌதமரைப் பார்க்கப் பர்ணசாலைக்குச் சென்றாள். "முனிவர் எங்கே ?" என்று அவள் கேட்க, சிஷ்யர்கள் "க்ஷணத்தில் வந்துவிடுவார்" என்று சொல்லி, சிஷ்யக் கிரமப்படி வந்தவருக்கு உயர்ந்த ஆஸனம் சமர்ப்பித்து, பாதங்களைக் கழுவி, அர்க்கியங்கொடுத்து, பிரீதிகரமான வாக்குடன் பலமூலாதிகளைத் தந்து, "சிறிது பொறுக்க வேணும்" என்று மிகப் பணிவாயும் பிரியமாயுங் கூறி, தேவியின் பக்கத்தில் சூழ்ந்திருந்தார்கள்.

தேவி உட்கார்ந்தவுடனே மஹரிஷியின் ஆசிரமம் ரத்ன மண்டபங்கள் சூழ்ந்தும், கற்பக விருக்ஷங்கள் நிறைந்தும் மிகச் சிறந்து விளங்கிற்று.

கையில் தர்ப்பை, சமித்து முதலியவற்றை எடுத்துக்கொண்டு காட்டினின்றும் திரும்பிவந்த முனிநாயகர், தூரத்தினின்றும் அனேக விமானங்களால் பிரகாசிக்குந் தன் ஆசிரமத்தைக் கண்டு "இது என்ன?" என்று மிகவும் வியப்புடன் சிந்தித்தார். ஞானதிருஷ்டியால் அவர் கௌரியின் வரவையும் பிறயாவையுமறிந்தார். அதனால் ஜகன்மாதாவைப் பார்க்கப் பேராவலுடன் விரைந்து வந்த முனிவர், தன்னிடம் சமாசாரம் சொல்ல விரைந்து வந்த சிஷ்யர்கள் மூலம் விஷயத்தைக்கேட்டறிந்தார். அதன் மேல், ஆவலுடன் வேகமாய் நடந்து, தன்னை நாடினவர்களிடம் அன்பு மிகுந்த மஹரிஷி, சிவனருட் செயலால் தனதுண்மைத் தவப்பயனே தன்னைத் தேடி வந்ததை நினைத்து ஆச்சிரமத்தையடைந்தார்.

*ஸ்ரீ அருணாசல மாஹாத்திய வியாசர் வாக்கு*

*அண்ணல்பால் தெரிந்த நந்தி யடிகள்பாற்சனற் குமார*
*னுண்ணிறையன்பினாந்து வியாதருக்குணர்த்தவந்த*
*புண்ணியமுனிவர் சூசற் கோதிய புராணமூவா*
*றெண்ணிய வியற்றுட்காந்தத் தீச சஸ்திதையின் மாதோ.*

*(சிவபுராணம்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீணாகானத்தால் வேண்டியதைப் பெற்ற விச்சாவதி

முன்னொரு காலத்தில் விச்சுவாசு என்னும் விந்தையன் பெண்ணாகிய விச்சாவதி என்பவள் பார்வதி பக்தியுடையவளாய் வாழ்ந்தாள். ஒருநாள் தந்தையை வணங்கி ஐயா! நான் பார்வதியைவேண்டி பூசித்து ஈடேற வேண்டுகின்றேன். ஆகையால் அந்த உமையவள் மந்திரத்தை உபதேசியுமென்று தந்தை உபதேசிக்கப் பெற்று, பின்னும் ஐயா! நான் உமையைப் பூசிக்க இவ்வுலகிற் சிறந்த தவம் யாதென்று கேட்க தந்தை உலகத்தில் பெரியோர்கள் எப்பொழுதுஞ் சஞ்சரிப்பதாய் துவாதச முடியென்றும், பூலோக சிவலோகமென்றும் சொல்லத் தக்கது மதுரை. அதுவோ திரிலோகங்களிலும் சிறந்த சத்திபீடம். அறுபத்திநான்கிற்கும் முதல் பீடம். வேண்டினோர்க்குப் போகமும், வீடும், சித்தியும் தரத்தக்கது, என்றும் இரவும் பகலும் சுவர்க்கலோகக் கதவடையாமல் தேவர்கள் வந்து பூசித்து உமாதேவி அருளுகிற அந்த மதுரையிலேயே நல்ல வரங்கள் பெற்றார்கள். சராசரங்களெல்லாம் பெற்ற அங்கயற் கண்ணம்மை தன்னைப் பூசிப்போர்க்கு வேண்டிய இகபரபோகங்களைக் கொடுத்துப் பொருள் செய்து விளங்குகிறாள் என்று சொன்னார். இதைக்கேட்டு, தந்தையை வணங்கிக் கொண்டு அவரது அனுமதியைப் பெற்றுக் கொண்டாள். பின்னர் பூங்கொடி போல்வாள் நடந்து, காடு, மலை, ஆறுகள் கடந்து ஆதிபராபரையினுடைய பரிபூரண கிருபை தாங்கிய அந்த மதுரையில் வந்து சேர்ந்தாள். அங்கே பெண்யானை நீராடுதல் போலப் பொற்றாமரைக் குளத்தில் மூழ்கி கடவுள் இடப்பாகத்தில் எழுந்து படர்ந்த பொன்மலை வல்லியாகிய அங்கயற் கண்ணியை வணங்கி தவஞ் செய்யத் தொடங்கினாள்.

தைமாதம் தொடக்கம் பகலுணவு, இராத்திரி போசனம் இல்லாது, கிடைத்த சோறு, இலை, காய், கனி, கிழங்கு, மா முதலியவற்றை உண்டும் பஞ்சகௌஸியம், பால், நன்னீர், தருப்பை, வாயு. சிவனைச் சிந்தித்தும், பட்டினி கிடந்தும் தவஞ் செய்தாள். இப்படி பன்னிரண்டு மாதகாலம் கடந்தபின் மேல் வரும் தைமாதத்தில் சந்நிதிக்குப் போய் சேவித்து தன்தியானத்தில் மாந்தளிர் போலும் திருவடிகளையும், இருமணிக்கோவை சூழ்ந்த மின்போலும் இடையையும் நூலிழையையும், நடுப்புகாத திருக்கொங்கைகளையும் வரிசையாய்ப் பொன்வளையல்களை அணிந்த செங்காந்தள் மலர் போலும் திருக்கரங்களையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமங்கல்லியக் கழுத்தையும் பூரண சந்திரன் போலும் திருமுகத்தையும், வண்டுகள் இசைபாடுகின்ற இருண்ட திருச் சடையையும் இப்படியே பாதாதி கேசம் வரையும் கண்டு கழித்தாள். பின்னர் வீணைக்கடவுளைத் துதித்து கைகுவித்து இளஞ்சூரியன் போல் நிறத்தையுடைய மகமல் பட்டால் அளவுக்கிசைவாகத் தைத்த செம்பொன் மயமான கவசத்தை அவிழ்த்து முல்லைப் பூமாலையை முடியிற் சூட்டி சுரைப்பந்தாக பின்னே தோன்று பூங்கோதையைப் பொருந்திய பிடரியில் கிடக்க வீணையைத் தோள்மேல் அணைத்து மின் போலும் கண்களையே விச்சாவதி தந்திகளை முறுக்காணிகளால் சுதிகூட்டப் பண்விளங்க தெரிந்து பாடத் தொடங்கினாள்.

*"ஒளியாய் உலகீன்று உயிர் அனைத்தும் மீன் போற் செவ்வியுற நோக்கி*
*யளியாய் வளர்க்கும் மங்கயற்கண்ணே கன்னியன்னமே*
*யளியா விமவான் திருமகளாயாவி யன்ன மயில்பூவை*
*தெளியா மழலைக் கிளி வளர்ந்து விளையாட்டயருந் செயலென்ன?"*

*"அண்டக்குவை வெண்மணற் இதுசோறுக்கித் தனியேவிளையாடுங்*
*கொண்டந் கோதாய் படியெழுதகலாவுருவக் கோகிலமே*
*கொண்டற குடுமியவரையருவி கொழிக்குங் குளிர் முத்தால்*
*வண்டற் குதலை மகளிரொடும் விளையாட்டயரும் வனப்பென்னே?"*

*"வேதமுடி மேலாந்த வுருவாய் நிறைந்து விளையாடு*
*மாதரசே முத்தநகை மானே யிமய மடமயிலே*
*மாதரிம வான்றேவி மணிவிடந் தோய் மார்புந்தடந்தோளும்*
*பாதமலர் செப்புற மிதித்து விளையாட்டயரும் பரிசென்னே?"*

இப்படி விச்சாவதி வீணாகானத்தால் தோத்திரஞ் செய்ய ஆனந்த மெய்யன்பாகிய வலைக்குள் அகப்படுகின்ற அங்கயற்கண்ணம்மையாகிய காருண்ணிய ரூபி பூமியங்கொண்டைமுடித்த சிறிய திருமுகப் பெண்பிள்ளை வடிவாய்ச் சந்நிதி முன்னே வந்து நின்று வேண்டும் வரமென்ன? என்று திருவாய் மலர்ந்தாள்.

அப்படிக் கேட்ட மூன்று வயதுக் குழந்தையை விச்சாவதி சாஸ்டாங்கமாக விழுந்து வணங்கினாள். நமஸ்காரத்தின் முற்றைப் பெற்றாள். அவளை லோக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதாவானவள் அருட்கண்ணோக்கி விச்சாவதியே! நீ வேண்டிய தென்ன? சொல் என்று கேட்க அதற்கு விச்சாவதியோ "எக் காலத்தும் உமது பாதக்கமலங்களில் நீங்காத பரிபூரணபக்தியை அருள வேண்டும் என இரந்தாள். அப்படியே தந்தேன். இன்னமுமுனக்கு வேண்டியதென்ன." தாயே இப்போது நான் கண்டபிள்ளை வடிவாக என்னிடம் வந்து அருள் சுரந்து மடியிலிருக்கத் திருவுளமருளவேண்டும், என வேண்டினாள். சிவபரம்பரையாகிய தேவி சம்மதித்து விச்சாவதியே! நீ மலையத் துவச பாண்டியனுக்கு மனைவியாகப் பெற்று வந்த போது நான் பிள்ளையாய் உன் மடியில் வந்திருப்பேனென்று அனுக்கிரகித்தாள். அப்படியே விச்சாவதி பொன்மாலையாய் வந்த காலத்து மதுரை மீனாட்சி தடாதகைப் பிராட்டியாக அவதாரஞ் செய்தார்.

*(திருவிளையாடற் புராணம்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தக்கன் தவமும் தன் தவமும் ஒக்க உணர்த்திய உமை

*"திகட சக்கரச் செம்முக மைந்துளான்*
*சகட சக்கரத் தாமரை நாயகன்*
*அகட சக்கர வின்மணி யாவுறை*
*விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்...*

கந்தபுராணகாரர் விநாயகர் காப்பு

தக்கன் உய்ந்தான் தேவர்கள் உய்ந்தார்கள், பூதேவர்களாகிய பிராமணர்களுக்கு உய்தி கிடைக்கவில்லை. தக்கன் யாகத்தில் உண்டு களித்து தானமும் பெற்றவர்கள் அவர்கள்.

*"மேதக்க தக்கன் மகந்தன்னில் விரைந்து புக்காங்*
*கேதத் தடிசின் மிசைந்தே பொருள்யாவு மேற்றுப்*
*பூதத் தரின்மாய்ந் தெழுந்தேதம் புரிக டோறும்*
*பேதைத் தொழிலந் தணர்யாரும் பெயர்ந்து போனார்"*

என்கிறது கந்தபுராணம்

ததீசி முனிவரிட்ட சாபத்தினால் நீங்கள் சொல்லுதற்கருமையான வேதங்களெல்லாம் பணிந்து போற்றும் ஈசனையும் அவர் அன்பையும் இகழ்ந்து பேசியதைக் கேட்டுள்ளீர்கள். இஃது உங்கள் தகைமைக்குத் தகாது. பிராமணர்களே உலகத்துக்கு வழிகாட்டிகள். இறைவன் கருத்தை வெளிப்படுத்தும் உரிமை பூண்டவர்கள். அவர்கள் வைதிக சைவநெறி பிறழ்ந்து குருடுபடுவார்களாயின் உலகத்தின் கதி என்னாம்! உலகவினை அவர்களைக் குருடுபடுத்துமாயின் எத்துணைத்தவஞ் செயற்பாலது இந்த உலகம்.

தக்கனும் தவத்தால் மேம்பட்டவன்தான், உமையம்மையும் தவத்தின் வலிமையினால் உலக நாயகனை நாயகனாகப் பெற்றவள் தான். இருவரினதும் ஒப்பான தவம் தேவியின் திருமுகத்தினால் வெளியாகும். இறைவனை இகழ்ந்தானே தக்கன், "அரன்றன் பாதம் மறந்து செய் அறங்களெல்லாம் வீண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயல்'' என்பதை உணர்ந்திலானே தக்கன், ''இறைவன்தாளை மறந்து அவன்தாளால் நெரியுண்ட இராவணேஸ்வரனையிட்டு அப்பரடிகள் எப்படிச் சொன்னார் ''இன்பமே எந்நாளுள் துன்பமில்லை'' என்றாரே. ''மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்'' என்றாரே குழந்தை சம்பந்தர்.

தக்கன் தன்தேவியுடன் (வேதவல்லி) காளிந்தி நதியில் நீராடித் துண்ணெனவரலும் தேன் நிரம்பிய ஓர் தாமரை மலரின்மேல் சிவனிடத்திருந்த தோற்றமென்ன ஓர்பாவை தோன்றியது. இதைக் கண்ணுற்றவன் நனி மகிழ்ந்து கையினையுயர்த்தெடுத்து அது அழகு நிரம்பியதாய் இருத்தலைக் கண்டு இஃது பிறைதாழ் வேணியன் தந்ததென நினைந்து சுற்றியுள்ள தேவர்களையும் பாராது, ''வறியோன் பெற்றவான் பொருள் போலவும். மலையாடு மஞ்சுகண்ட மஞ்ஞை போலவும். புதையல்கண்ட புரவலன் போலவும் மகிழ்ந்து கரத்தளித்தான். இருவரும் ஒருவராய் ஆனாற்போல விரைவாக தம் தவக் கோயில் போய் பழையபடி அரசியற்றத் தொடங்கினான்.

*''நீவிர்செய் பூசைதன்னை நெடிதுநா மகிழ்ந்த வாற்றா*
*லாவிக ளனைத்து முய்ந்த வருவினையகன்று நும் போற்*
*பூவிலி லென்றும் பூசை புரிந்தவர்க் கெல்லாம் முத்தி*
*மேவர வளித்து மென்றே வியனருள் புரிந்து போந்தான்''*

உமைகயிலை நீங்கு படலம் 39ம் பா.

(தஷ காண்டம்)

அரனது அருளால் முற்றியது. பாவை வெளிவந்தாள் தக்கனும் தவஞ்செய்ததினால் தக்கவனானான். இனி நாம் உமையம்மையாரின் பெயர்க்காரணத்தைக் கச்சியப்பர் சொன்னவாறு கண்டு கொள்வோம்.

எண்ணற்ற உயிர் முழுதையும் ஈன்றருளிய உமாதேவியார் வளரும் பிறைபோல் வளர்ந்து வரும் பொழுது உள்ளத்தின் ஞான ஒளி வெளிவந்ததென்ன பற்கள் வெளிவந்தன. பழையவை வெளிவரும் காலம் வந்துள்ளது, அம்மையார் தாயாகியவேதவல்லியிடம் போய் தவஞ் செய்ய வேண்டி விரும்புவதை தக்கனாகிய தந்தையிடம் கூறச் சொன்னார். எப்படியெனில் கங்கையைத் தரித்த செம்மையாகிய சிவபெருமானுக்கு சத்தியாகும் பேற்றையுடையேன் ஆகையால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறொரு பக்கத்திலே காவல் பொருந்தியதொரு தவமாடத்தை அமைத்துத் தவஞ் செய்ய விடுத்திர் என்பதாம். நன்றெனவியந்து நல்லாயுந் தந்தையும் அங்கோர் கடிமாடமணி சிறக்கப் புனைவித்து அங்குரிந்தாக்குக என்றார். இவ்வாறு சிறுமியாகிய இவள் "சிவனை உணர் பெற்றிமை என் மொழிக என்ன தக்கன் பின்வருமாறு கூறினான்.

"மானதவாவியின்கண் யான் செய்த தவத்தைக் கண்டு சிவபெருமான் அங்கு எழுந்தருளுதலும் நான் தேவையானவற்றைக் கேட்டுப் பெற்றதோடு" தேவரீர் து வாமபாகத்திலிருக்கிற பிராட்டி என்புதல்வியாகவும் பண்ணவா! நீ என் மருமகனாகவும் வந்து மங்களமான திருமணத்தைச் செய்யவும் வேண்டினேன். "வேண்டுவார் வேண்டுவதை ஈவான் கண்டாய். என்பதனை முடித்துக் கொண்டார். அவ்வாறே காளிந்தி நதியில் நாம் கண்டெடுத்தோம், எஞ்ஞான்றும் அவ்வுணர்வினோடு இருக்கிறார். கரையிலா மகிழ்ச்சி கொண்டாள் வேதவல்லி.

அம்மையாரும் விரதத்தை பன்னிருவருடமாக மேற்கொண்டார் முன்னிய தவத்தின் முடிவினை நிறைக்கவே கயிலை மலையில் நின்றும் நீங்கி, தண்டு, கமண்டலம், தர்ப்பை இவைகளுடன் தவ சிரேஷ்டரின் முதல்படி போல பிரம்மச்சாரி வடிவு கொண்டு தக்கமாபுரத்தினை நண்ணினார். சங்கரி அதாவது சுகஞ் செய்பவள் என்னும் காரணத்தால் சங்கரி என்ற பழைய பெயரையுடையவர், உமையம்மை தவஞ் செய்தடிமாடம் புக்கார் தோழியர் கூறியதும் தேவியின் அழைப்பும் நடந்தது. பிராமணவடிவங் கொண்டுவந்த பிரமச்சாரியை எதிர்கொண்டு "இவர் என் நாயகராகிய சிவ பிரானிடத்து அன்புடையர் எனக்கருதி, பாதபூசை செய்தார். நீங்கள் வந்த காரியம் என்னவென வினவ,

*"எனக்கிசை யின்ற தொன்றை யிசைத்தியேயென்னின் இன்னே*
*விளக்கதுகூடு மிங்ஙனினைத்த தென மொழிது என்ன*
*வுளைக்கடி மனத்தி னெய்த வுய்தன னதுவே நீயென*
*தனக்கருள் புரியுமாறு தடுத்தெனிர் மொழிய வேண்டும்"*

(தஷாகாண்டம்)

யாருமேயறியவொண்ணா வார்த்தையால் இருவரும் அறிந்தபின்னர் தேவி இவ்வாறு கூறினார். "என்னை ஆளுகின்ற ஒரு விந்தன் வந்து வதுவை செய்ய நீள்தவஞ் செய்கிறேன் அவ்வாறு இருக்க நீர் இவ்வாறு கூறியதென்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநாவுக்கரசு நாயனார் பின்னே கூறியதுபோல "மைப்படிந்த கண்ணாளுந் தானும் கச்சி" என்ற தொடக்கத்து தாண்டகத்தில் ஒப்புடையனல்ல னொருவனல்ல னோரூரனல்லனோ ருவமனில்லி அப்படியு மன்னிறமு மவ்வண்ணமு மவனருளே'. "அவரை நீர் இப்படி இவ்வண்ணத்தின் இவன் இறைவன் என்று எவ்வாறு உணருவாய். ஆகையால் நீ பெரிய தவங்களைச் செய்து வருந்தாதே என இடித்துரைத்தார். "பரமனே விரும்பிவந்து பாரின் மா மணஞ் செய்ய அரிய தவத்தைச் செய்கிறேன். அவர் வராவிடில் ஆவி நீப்பேன், நீர் பித்தனோ? பொய் சொல்லவேண்டாம் என்றார். போதி போதி என்று புகழ்கிறாய் நான் ஆதியாய உருவினை எடுப்பேன் அறிது அறிது என்று அழகிய திருமேனியைக் காட்டினார். உமை அமைந்து செய்தவறு உய்யும் வகை செப்புவீரே எனப்பணித்தார்.

தோழியரால் உணர்ந்த தக்கன்.

*"போத நீடு புந்தியாற் புலப்படத் தெரிந்துழி*
*யாதி யந்தமின்றி நின்ற வண்ணல், வந்ததாகலு*
*மேதிலா மகிழ்ச்சி பெற்றெழந் துள்ளியான் பெது*
*மாதை யங்கு வற்கு அளிப்பன் வதுவை யாற்றியென்றனன்"*

ஞானம் மிகுந்த புத்தியினால் ஆராய்ந்த போது நடந்தவை எல்லாம் அறிந்த பின்னர், ஆதி அந்தமில்லாத இறைவன் கூறியவற்றைக் கேட்டு அளவிலா மகிழ்ச்சியால் கூத்தாடி. இனியான் இதற்கு என்ன செய்யவேண்டும் என்று யோசித்து எவ்வாறேனும் சிவபெருமானுக்குத் திருமணஞ் செய்து கொடுப்பேன் என்று கூறினான்.

*கந்தபுராணம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னிகரில்லா தடாதகைப் பிராட்டி

மலையத்துவச பாண்டியன் புத்திரகாமேஷ்டியயாகஞ் செய்ய வேண்டி தனது மனைவியாகிய (தேவியாகிய) பொன்மாலையுடனே உதாத்தம், அநூதாத்தக்கிரமான மந்திரங்களும் ஆகுதிக்குரியவைகளும் சேர வேள்வி வளர்த்தான். அவ்வேள்வியின்புகை, ஆகாயம், பூமி எங்கும் பரவி போர்வைபோல் இருந்தது. அக்கினிதேவன் நெய்க்கடலில் மூழ்கி எழுந்தார். அந்தயாக குண்டலத்தில், நெருங்கிய தளிர்களையுடைய தாமரை மலரில் அப்பொழுது மலர்ந்து கொண்டு முளைத்தெழுந்தாற் போல உலகத்தில் தருமத்தின் வழியிற் சென்றோருக்கு இகபர போக வீட்டையருளுமம்மை சூரியக் கொண்டை வட்டமதியின் பாதி போலவும், அதிலே தொங்கிவிடப்பட்ட முத்து மாலை அந்தச் சந்திரனிலிருந்து வருகின்ற கிரணத்தைப் போலவும் அமுதம் போலும் மின்னிய குதலை மார்பின் வழியேயொழுகி முத்து மாலையோடு விளங்கச் சூரியப் பிரகாசத்தை வென்று பவளமாளிகை யொளி வீச சிறிய இடையிற் சூழ்ந்த சிற்றாடையும், நவரத்தின மேகலையும் அசையா கரத்தில் குண்டமும், குதும்பையும் இருளைப் போக்கிச் சிறிய தோள்களைத் தொட்டாட தெளிந்தவமுதம் போல மழலை இந்த இளநகைதோன்ற மூன்று வயதுள்ள மூன்று முலையோடும் கூடிய பெண்பிள்ளையாகிச் சராசரங்களை யெல்லாம் பெற்ற உலகமாதாவாகிய உமையவள் விளங்கினாள்.

அப்படி இருந்த பிள்ளையைச் செல்வமாய் வெளியிருமலும். முலைக்கண் கருகாமலும் கருங்கண் பசவாமலும் பத்துமாதந்தாங்கி வயிறு வருந்தாமலும் பெற்றுக் கொண்டு எடுத்தணைத்து உச்சிமோந்து வாய்முத்தங்கொண்டு பார்வதியைப் பெற்ற மேனை போல மகிழ்ச்சியடைந்தாள் பொன்மாலை.

பராசக்தி, ஆதிசக்தி, இச்சாசக்தி, ஞானசக்தி, கிரியா சத்தியாய் உலகங்களையெல்லாம் படைத்துங், காத்தும், அழித்தும், மறைத்தும். அநுக்கிரகித்தும் தனது வடிவு வேறாகி வாக்குக்கும், வேதத்திற்கும், எட்டாத ஒப்பற்ற காரணியானவள் திருமகளாய்வர இந்தப் பாண்டியன் செய்த தவமோ போதுமானதன்று. இந்திரிய காரணங்களுளெல்லாங் கடந்து ஆனந்த வெள்ளமாகிய பரநாதமே வடிவாகவுடைய ஒரு முதல்வி தனது கருணையினாலே இன்று எல்லாருமறிய ஒரு பெண்பிள்ளையானாள். அப்படியானவள் பிள்ளையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருபையையும் தன்மனைவி செய்த தவப்பேற்றையும் மலையத்துவசன் ஆலோசியாமல், "நான் பிள்ளையில்லாமல் அனேககாலம் வருந்தி அரிய தவங்களைச் செய்து பின்பு பிள்ளைப் பேறுண்டாக இந்த யாகத்தைச் செய்தேன். இந்த யாகமும் ஐயோ ஒரு பெண்குழந்தையைத் தந்தது. அந்தப் பெண்குழந்தையும் முலை மூன்றுளதாய் என்கைவர் நகைக்கலாயிற்றென்று துன்புற்றான் அப்போது சிவனருளால் ஆகாயத்தினின்று ஓர்வாக்கு "இராசனே உமது குமாரியை குமரனாக வெண்ணி சடங்குகளெல்லாம் தப்பாமல் வேத விதிப்படி செய்து, தடாதகை என்று திருநாமமிட்டு உனது முடியுஞ் சூட்டக்கடவை. சூட்டியபின்பு குமரிக்கு நாயகன் வரக்காணும்போது நடுமுலை மறைந்துபோம். நீ கிலேசியாதே என்று ஓர் ஒலி கேட்டது.

அவ்வசரீரி வாக்கைக் காது நிரம்ப, அன்பும், மகிழ்வும் உள்ளத்தில் நிரம்பவும் உலகமெல்லாம் மகிழக் கேட்டான். பின்னர், உலகமெல்லாம் திரிகரணங்கள் ஒருமிக்கவும். ஆனந்தக் கண்ணீர் உடல் நிரம்பவும். கடவுளைத் துதித்து யாகத்தை முடித்தெழுந்து மனைவியோடு யாகசாலையை விட்டு இருபுறத்திலும் வாத்தியங்கள் ஒலிக்கத் தனதரண்மனையிற்சென்று மங்கல வாத்தியத்துடனே எதிர் கொள்பவர் முகத்தில் மகிழ்ச்சி பொங்க இராசரீகம் செய்யும் மண்டபத்தில் சிங்காசனத்தின் மேலிருந்தான்.

கற்றுங் கேட்டும் வல்லவரான வைதீகர்களுக்கு சுவர்ணமழை பெய்வதுபோல், மற்றவர்களுக்கெல்லாம் போதும் போதும் எனக் கொடுத்து மான் மழுவேந்திய பெருமானுடைய சன்னிதானத்துக்கு அதிக சிறப்புக்கள் பெருகக் கொடுத்து மகிழ்ந்தான். பின்னும் சிறையில் இருந்தவர்களை சிறை நீக்கி எழுபது வருடமாகக் குடிகளிடம் இருந்து வாங்குகிற இறைப் பொருளை விட்டான். கோயில்களும் தருமசத்திரங்களும் பெருகச் செய்யுங்கள் என்று ஆக்ஞாபித்தான். சத்துருத் துரோக வேலைகளை விடப்பண்ணினான். பொக்கிஷசாலையைத் திறந்து விட்டதுபோல தான தருமக்ளைக் குறையாமல் செய்தான். இராசவீதியால் விழா வெடுத்தான். மதுராபுரிபோல எல்லாப் பட்டணங்களையும் சிறப்புறச் செய்தான். மலைபத்துவச பாண்டியன் பெருங்களிப்படைந்து கடவுளருளிய படியே தன்பிள்ளைக்கு சாதககர்மம் முதலிய கிரியைகளெல்லாம் செய்து தடாதகைப்பிராட்டியாரென்று திருநாமமுமிட்டு வேதங்களுண்மை காணக் கூடாத தேவியை இமவானையும் மேனையும் போல வளர்த்துக் களித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகமாதா தடாதகையாய் சிற்றில் சமைத்து மணல் சோறாக்கி பிள்ளைகட்கு விருந்துண்ணவைத்து முலைப்பாலூட்டி பாவைகட்கு மகிழ்ந்து தோழியரோடு கழங்குப்பந்து, அம்மானை, ஊஞ்சல், இரதம், யானை குதிரை, இவைகளின் ஏற்றம் என்பனவற்றை முறையாகக் கற்று வாழும் நாளில் காருண்ணிய ரூபியான தடாதகைப் பிராட்டியாருக்கு மாணிக்க கிரீடஞ் சூட்ட வேண்டிய காரியங்களைச் செய்ய முற்பட்டான். ஓலை போக்கி அரசர்களை வரவழைத்து பட்டணங்களை அலங்கரித்து சிங்காசனத்தை விசுவாசத்துடனே பூசித்து ஆங்கொரு குறையுமின்றி நிறைவினை முற்றுவித்தான்.

(தனதரசாட்சியும்) மந்திரிமுதலியோர் தத்தமது காரியங்களைச் செய்யும், செங்கோல் கொடுத்து வெள்ளையானையின் மேலேற்றிங் வேப்பமாலையணிவித்து மற்கல வாத்தியங்கள் முழங்க நகரைவலஞ் செய்து அசரீ கேட்டபொழுதில் இருந்த ஆனந்தத்திலும் இப்போது திருமகள் விளங்குகின்ற பெண்ணரசியை செல்வி நோக்கி பேரானந்தம் அதிகரித்து பெருக மகிழ்ந்திருந்தான். பின்பு சில நாட்கழிந்து வீரலெட்சுமி கொண்டாடும் தன் தோள்களாற் சுமந்த உலகத்தை யெல்லாம் தன்மகளுக்குக் கொடுத்து மலைத்துவசன் வானாட்டைப்பெற்றான்.

தடாதகைப் பிராட்டியார் பெருமையாய் ஆக்ஞா சக்கரம் செலுத்தினார். மும்மூர்த்திகளாலே முத்தொழிலையும் நடத்துகிறாளென்று சொல்வதும் ஆதிமத்தியாந்தரசியான தேவிக்கு ஈடானதெதுவென்று புல்லறிவினனாகிய எனக்கு சொல்ல முடியுமோ, முடியாது தடாதகைப் பிராட்டியார் கன்னியாக விருந்து அரசோயதினாலே கன்னி நாடெனும் பெயராகிற்று அந்நாடு.

இன்னும் முன்னம் தக்கன் செய்த தவத்தினாலே தக்ஷாயணியாகவும், பர்வதராசன் செய்த தவத்திலே பார்வதியாகவும் வேதங்களுக்கு மெட்டாத தேவி அவதரித்தாள்.

*தன்னிகரில்லா தடாதகைப் பிராட்டி.*

*(திருவிளையாடற் புராணம்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரமனை வாங்கிய பார்வதி

பரமசிவன் பார்வதியின் எதிரிலேயே மன்மதனை எரித்து அவனது விருப்பம் நிறைவேறும்படி செய்தார். தன் அழகினால் சிவபிரானை வசப்படுத்திக் கணவனாக அடைய விரும்பியவள், செய்த முயற்சி கோரியபயனை அளிக்கவில்லை. தன் கண்ணெதிரிலேயே அழகு தெய்வத்தை எரித்தது தன் அழகுக்கு நேர்ந்த அவமானமாகக் கருதினார். பயன் கொடாத அழகைக் கொண்டார். ஸ்திரிகளின் அழகுக்கு முக்கியமான பயன் ஒன்று தான். அதாவது ஸ்திரியின் அழகு அவருடைய கணவனது மனத்தை வசப்படுத்தி, அவரது அன்பை நிரந்தரமாகப் பெற உதவ வேண்டும். அவ்வழகை கணவனைத் தவிர மற்றையவர்கள் சந்தோஷிக்கப் பயன்படுத்துவது தகாது. சேனபாக்கம் என்பதற்கு கணவன் அன்பு, கணவன் மேல் அன்பினால் அதிகாரம் செலுத்தும் உரிமை, என்பது பொருள்; அழகிற்குப் பயன் கணவனுடைய அன்பும், கணவனை விரும்பியபடி நடக்கச் செய்யும் உரிமையேயாகும்.

பார்வதி மன ஒருமையுடன் தவம் செய்து பரமசிவனை அடைவதன் மூலம் தன் அழகைப் பயனுடையதாக்க விரும்பினாள். அவர் அழகுக்குப் பரமசிவனைக் கணவனாகப் பெறுவது தான். அவ்வாறு அவள் தவஞ்செய்திராவிடில் பரம சிவனைக் கணவராக அடைந்திருக்கமுடியாது. அவரது அன்பும் சிறந்ததே. அந்த அன்பினால் தான் அவர் தனது சரீரத்தில் பாதி பார்வதிக்கு அளித்தார்.

மேனை பார்வதியின் கருத்தை அறிந்தார். முனிவர்களின் தொழிலான தவத்தினின்றும் அவளைத் தடுக்க விரும்பிக் கூறினாள். நீ விரும்பும் தேவர்கள் நமது வீட்டிலேயே இருக்கின்றனர். அவர்களைப் பூசித்து நீ விரும்பிய பயனைப் பெறலாம். உனது மிருதுவான சரீரம் தவம் செய்வதில் உள்ள கஷ்டத்தைத் தாங்க முடியாது. வாகைப் பூ தேனீயைத் தாங்குமேயன்றி பறவை உட்கார்ந்தால் தாங்குமோ?

பார்வதியின் மனத்தை மேனையால் மாற்றமுடியவில்லை. பள்ளத்தை நோக்கி ஓடுவது சலத்தின் இயற்கை. நீரின் சுவபாவத்தை மாற்றமுடியாதது போல் உறுதியான எண்ணத்தையும் யாரும் மாற்றமுடியாது.

பார்வதி தான் விரும்பிய பயன் கிடைக்கும் வரை தவஞ்செய்யப் போவதாகக் கூறி தவஞ் செய்யத் தந்தையின் அனுமதியைத் தோழியின் மூலம் கேட்டாள். ஒரு மலைச் சிகரத்தையடைந்தாள். அவள் தவஞ் செய்த காரணத்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச் சிகரம், பிற்காலத்தில், கௌரீ சிகரம் என அவள் பெயரை முன்னிட்டு அழைக்கப்படுவதாயிற்று.

அழகிய தாமரை, வண்டுகள் இருப்பதற்கான அழகாயிருப்பதென்பதில்லை, சிறுபாசிக் கொத்துக்களுடனிருந்தாலும் அழகாகவே இருக்கும். அதுபோல் பார்வதியின் முகம் அழகு செய்யப்பட்ட கூந்தலினால் அழகாயிருப்பதென்பதில்லை. தவத்திற்காக அவள் செய்து கொண்டசடைகளும் அவளுக்கு அழகை அளித்தன.

விலையுயர்ந்த மிக மிருதுவான படுக்கையில் படுக்கும் பார்வதி தனது தலைப்பூ உதிர்ந்து அதில் அவள் சரீரம் படுமாயின் வருந்துவாள். அவ்வளவு சௌகரியத்தில் வாழ்ந்த பார்வதி, தவஞ் செய்யும் பொழுது வெறும் தரையிலேயே உட்கார்ந்தாள். கடினமான தரையிலேயே கையைத் தலையணையாகக் கொண்டு படுத்தாள்.

தவத்தை மேற் கொண்டதால் பார்வதி, தவசிகளுக்குப் பொருத்தமான சில காரியங்களை விட்டாள். அவை: அங்கங்களில் அழகான சலனங்களும் மருண்ட பார்வையுமாகும். இவ்விரண்டில் அங்கங்களின் சலனத்தைக் கொடிகளிடத்திலும் மருண்டபார்வையைப் பெண் மான்களிடத்திலும் கொடுத்ததாகக் கவி ஆக்கத்தால் புனைந்து கூறுவர்.

பார்வதி ஆச்ரமத்தில் இளம் மரங்களை நட்டுத்தானே குடங்களால் ஜலம் ஊற்றி வளர்த்தாள். அம் மரங்களிடத்தில் குழந்தைகளிடத்தில் வைக்கும் பிரீதியை வைத்தாள். பிறகு பிறந்த சுவர்ண்கள் கூட, பார்வதி இம்மரங்களிடத்தில் வைத்த பிரீதியை மாற்ற முடியவில்லை. பிறகும் அம்மரங்களைப் பார்வதி நேசித்து வந்தாள்.

காட்டுத் தானியங்களைக் கொடுத்து வளர்த்த மான்கள் அவளிடம் அச்சமின்றி இருந்தன. அவள் தனது கண்களை அவைகளின் கண்களோடு அளந்தாலுங்கூட அவளால் வரும் கஷ்டங்களை உபமானமாகக் கூறுவது வழக்கம். பார்வதி அதன் உண்மையை அறிய ஆவல் கொண்டு சில சமயம் மான்களுக்குச் சிறிது கஷ்டமளித்தாலும், அவைகள் அவளிடம் அன்புடன் எல்லாவற்றையும் சகித்துக் கொண்டன. தம்மைக் கண்டு மிருகங்கள் அஞ்சாமல் இருக்கும்படி நடந்து கொள்வது தவஞ்செய்பவர்களுக்கு முதல் கடமை ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வதியின் தபோவனம் அங்கு வருபவர்களின் பாபத்தைப் போக்கித் தூய்மையை அளிப்பதாக இருந்தது. இயற்கையில் பகையுள்ள பிராணிகள் கூட அவ்வனத்தில் பகையைவிட்டு வசித்தன. மரங்கள் அதிதிகள் விரும்பும் பழங்களை வருஷம் முழுவதும் அளித்தன. அந்த போவன ஆச்சிரமங்களில் இடையறாது அக்கினி வளர்க்கப்பட்டு ஹோமம் முதலியன நடைபெற்றன. பார்வதி நட்ட மரங்கள் பழங்களைக் கொடுத்து பயனளித்தன ஆகும். பார்வதியின் ஆசை என்ற விதையில் முளையே தோன்றவில்லை. பார்வதி தாமரை இல்லாமல் செய்த குளத்தில் மூழ்கி தனது அருளினாலே குளத்திலே தாமரையில்லாக் குறையை நீக்கினார். முனிவர்களை விட மேலானதாக வனத்தில் இருக்கும் சருகுகளைக் கூடத்தின்று வாளாது தவம் செய்தாள். குளிர்காலத்தில் கழுத்தளவு தண்ணீரில் நின்று தவஞ் செய்வாள். இவ்வாறு கொடுந்தவச் செய்யுங்காலை ஓர் நாள் ஆச்சிரமத்துள் பிரமச்சாரி உட்புகுந்தான். அவன் பிரம்மசரியமே உருவெடுத்துள்ளது போல் காணப்பட்டார். பிரம்மச்சாரி ஆச்ரமத்துக்கு அடையாளமான மான் தோலும் பலாச தண்டமும் வைத்திருந்தார். தேவ தேசஸ் அவர் முகத்தில் திகழ்ந்தது. சடையும் தரித்திருந்தார். இவருடைய தோற்றம் பார்வதிக்கு அதிகமரியாதை செய்யத் தூண்டியது. பார்வதி கொடுத்த உபசாரத்பைப் பெற்றுக் கொண்டு சிரமம் நீக்கிக் கொள்வது போல பாவனை செய்தபின் மனத்திலுள்ள எண்ணத்தைக் கண்வழியே காட்டாது நேரான பார்வையுடன், புது மனிதர்களிடம் பேசவேண்டிய முறையிலிருந்து சிறிதும் வழுவாது பேச ஆரம்பித்தார் பிரம்மச்சாரி. ஹோமத்துக்கு வேண்டிய ஸமித்துக்கள் போதுமா ? தண்ணீர் குடிப்பதற்கு ஏற்றதா? சரீரம் தபத்துக்கு உபயோகிக்கும் கருவிக்ளிலும் மேலாது, சக்திக்கு மேலான தவஞ் செய்கிறீரா என்று பலவினாக்கள் பறந்தன. நீர் வளர்த்த கொடிகளின் தளிர்கள் உன் உதட்டிலும் பார்க்க சிவந்திருக்கின்றன. நான் அதிலும் பற்றுடையவள், இவ்வாறே பார்வதியின் விருப்புடைய பொருட்களை வியந்து கூறிக் கொண்டே போனார். சுவர்க்கத்தை விரும்பித் தவஞ் செய்யின் உன்தவம் பயனற்றதே. சுவர்க்கத்தில் வசிக்கும் தேவர்களும் விரும்பி உன் தந்தையின் நாட்டிலேயே வசிக்கின்றனர். இதைவிட சுவர்க்கம் சிறந்ததா ? கணவனை விரும்பித் தவஞ் செய்யற் தேவையில்லை. அழகு முதலான குணங்களில்லாத பெண்கள் தவஞ் செய்யலாமேயன்றி நீ செய்ய வேண்டியதில்லை. இரத்தினம் தன்னை அணிபவர்களைத் தேடிச் செல்லுமோ ? இரத்தினத்தை தேடியே வருவார்கள். ஆகவே நீ அவனைத் தேடுவது நன்றன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரம்மச்சாரி பலவாறு கூறி உனக்கு எனது தவத்தில் அரைவாசியைத் தருகிறேன், அப்போது உன்தவம் பூரணப்படும். நினைத்த காரியத்தைக் கூறி நின்றார். தாமரையைக் கொண்டு வெயிலைத் தணிக்கக் கூடாது. தாமரையே கெடும். உன் அழகைக் கொண்டு கணவனை அடைய முடியாது என்பதாம்.

முன்பு மன்மதன் தனது புஷ்ப பாணத்தை பரம சிவன் மேல் பிரயோகித்த பொழுது அது அவரது சங்காரத்தினால் தடைபெற்றுத் திரும்பியது. மன்மதனும் இறந்தான். இவன் பாணம் ஆழப்பதிந்து அழுத்தியது.

பரமசிவன் இவளை விரும்பாவிட்டாலும் இவளுக்கு அவர்மேல் காதல் அதிகமாயிற்று. பரமசிவன் மறுத்தது முதல் இவளுக்கு அவரிடம் காதல் அதிகமாயிற்று. குளிர்ச்சிக்காக இவள் நெற்றியில் பூசிய சந்தனமும் சரீர உஷ்ணத்தினால் உலர்ந்து பொடியாகி அவளது முகத்தின் முன்னுச்சியில் பதிந்து அதை மங்கிய வெண்ணிறமாக்கியது. பனிப்பாறையில் இருந்தாலும் இவளுக்கு சுகமுண்டாகவில்லை. சிவனை நினைத்துப் பாடுவது வழக்கமாயிற்று. இதனால் இன்னரர் இவருக்கு தோழியானார்கள்.

பார்வதியின் கருத்தையும் பிரம்மச்சாரியின் எண்ணத்தையும் நன்கு அறிந்த தோழி எதையும் ஒளிக்காமல் உள்ளதை உள்ளபடி கூறவே பிரம்மச்சாரியாக வந்த சிவன் மிகச் சந்தோஷப்பட்டார். பார்வதியை நோக்கி 'தோழி கூறியது உண்மையா ? பொய்யா ?' என்று கேட்க 'பரமசிவனை அடையவே பாடுபடுகிறேன்' என்று கூறினாள்.

மங்கள நூல் கட்டியுள்ள கரத்தை பாம்பணிந்த கையால் பிடிப்பேனோ. பட்டுடுத்த உன்னை இரத்தந்தோய்ந்த யானைத் தோலை உடுத்தவர் உம்மைத் தொடுவேனோ ? இவ்வாறு பிரம்மச்சாரி அவள் எண்ணத்திற்கு மாறாகக் கூறினார்.

பார்வதி இதனால் மிகக் கோபமுடையவளானாள். இவளது எண்ணத்தை நன்கு அறிந்த பிரம்மச்சாரி உலகமே சிவபெருமானுடைய உடல், அவருடைய வடிவம் இத்தகையதென நாம் அறிய முடியாது. அவர் விரும்பினால் ஆபரணங்களையும் அணிவார், பாம்பையும் தரிப்பார் யானைத்தோலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுவஸ்திரமும் அவருக்கு ஒன்று தான், மண்டை ஓடோ, சந்திரக்கலையோ எதுவும் அவருக்கு தலையணையாகும். சர்வேஸ்வரராகையினால் அவர்கள் எவ்வகையிலும் காணப்படுவார். முரண்பட்ட தர்மங்களும் அவரிடம் ஒன்றுபட்டுக் காணப்படும். அவரை முற்றிலும் அறிந்து அறிவு பெற்றவர் யாருமில்லை. பிரம்மச்சாரியின் சிவநிந்தனையை அவர் பொறுக்காமல் மேலும் பேசவிடாதபடி தோழிக்குக் கூறினாள். நானே இவ்விடத்தை விட்டுப் போகிறேன் என்று கூறி பார்வதியம்மையார் போகும் போது பிரம்மச்சாரி சிவவடிவமாக வந்து அவரைப் பிடித்துக் கொண்டார். பார்வதியம்மையார் உணர்விழந்து மலையினால் தடைப்பட்ட நீர் போலக் குளம்பினார். உனது தவம் இந்த நிலையைக் கொடுத்தது. நீ என்னை வாங்கி விட்டாய், இன்று முதன் யான் உனது அடிமை. எனப் பரமசிவன் கூறினார். அதைக் கேட்ட பார்வதி தவம் செய்ததால் வந்த கஷ்டங்களை எல்லாம் மறந்தாள். புதிய உற்சாகமும், சந்தோஷம் அடைந்தாள்.

*இசையுறு பண்பால் இமையவள் மகள் நீ*
*இயற்றுநின் தவத்தினால் எனையும்*
*இசைவுறு விலையாய் இன்றுகொண் டிலையோ*
*இனிஎனை உடைமைநீ உனையும்*
*வசையற உடையம் யாம்; என அரனும்*
*மறைந்தன தவவருத் தங்கள்*
*நசையுறு பயன்தாள் நண்ணினால் உழப்பின்*
*நலிவெலாம் அகன்றிடும் இயல்பே.*

*(குமாரசம்பவம்*
*பண்டிதர் ச. சுப்பிரமணியம்*
*தமிழ் மொழிபெயர்ப்பு)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாக்கியவதியான பார்வதி

ஸ்ரீ மகா விஷ்ணு மலையரசி மேனையைப் பார்த்து மேலும் தொடர்ந்து நல்லுரை கூறலானார்.

விளங்குகின்ற அனைத்தும் சிவபெருமானே" என்று வேதசிவாகமங்கள் கூறுகின்றன. குற்றியை மனிதனாகவும் கயிற்றை பாம்பாகவும் சிப்பியை வெள்ளியாகவும் சந்தேகித்துப் பிறகு தான் மனிதனாகக் கருதியது மனிதனல்ல குற்றியென்றும், பாம்பாகப் பயந்தது, பாம்பல்ல கயிறு என்றும் வெள்ளியாக மயங்கியது வெள்ளியல்ல வெறும் சிப்பி என்றும் தெரியும், உண்மையைக் கண்டறிந்த பிறகு சந்தேகம் தெளியும். அதுபோல மனதிடமுற்று இவ்வுலகம் முழுமையும் சிவனுக்கு இரண்டாவதான தோற்றம் என்று கண்டறிந்து அஞ்ஞானம் நீங்கி ஞானம்பெற்று பிறகே, இவ்வுலகம் கூட சிவனுக்கு இரண்டாவது தோற்றமல்ல இவையாவும் முக்காலும் சிவனே, சிவமயமானதே என்கிற உண்மை தெளிவாகும் மேனா மேலும் உதாரணமாக உனக்கு மேலும் ஒரு உண்மையைச் சொல்லுகிறேன். வேஷம் தரித்துக் கொள்ளுகிற வேடதாரி பலப்பல வேஷங்களில் காட்சியளித்தாலும் அவன் வேஷங்கள் தான் மாறுகிறதேயன்றி ஆள் ஒருவனாகவே இருக்கிறான். அதாவது அவன் அவனாகவே இருக்கிறான், வேஷம் தரித்தவனைப் பார்த்து, உண்மையை உணராதவன் அவனை நம்புகிறான். உணர்ந்தவனோ அவனைக் கண்டு நகைக்கிறான். இதைப் போலத்தான் உண்மை தெரியாத அஞ்ஞானி இவ்வுலகம் சிவனுக்கு இரண்டாவது தோற்றம் என்று கருதுகிறான். ஞானியோ காணுகின்ற அனைத்தும் காணாதவையான அனைத்தும் யாவும் சிவனே என்ற மெய்யறிவைக் கண்டறிகிறான். மேலும் ஒரு திருஷ்டாந்தத்தைச் சொல்லுகிறேன். அவை, வகை வகையாக உடுக்கிறான் அப்போது அவனும் வகை வகையான தோற்றங்களைப் பெறுகிறான் அவை வகைவகையான அம்சங்களைப் பெறுகின்றன. ஆனால் அவற்றை அணிந்தவன் அப்படியே தான் இருக்கிறான். அது போலத்தான் சிவஸ்வரூபமானது மற்றொரு அம்சத்தில் கலந்த பொழுது நானாத்மகமாகத் தோன்றுமேயன்றி விசாரிக்கும் போது அனைத்தும் சிவனேயாகும் 'நான்' எனது– என்னும் தத்போதம் இருக்கும் வரை ஒருவனிடத்தில் மந்தனம் இருக்கும், அகங்காரம் அவனைவிட்டு விலகிய பிறகுதான் அவனும் சிவனாக இருப்பதை உணர்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்படிகமணியானது செம்பருத்திப் புஷ்பம் கையோகத்தால் (கலப்பால்) வேறு நிறமாகக் காணப்படுகிறது அல்லவா ? இப்படியே பிரகிருதி சம்பந்தத்தால் சிவபெருமானிடம் அநேகதத்துவம் தோன்றுகிறது. பிரகிருதியை விட சிறந்த பரிபூரணப் பிரமமாகிய சிவ தத்துவார்த்தத்தை நாங்களே இன்னும் அறியோம். ஆகையால் நீ துக்கத்தை விட்டுச் சிவபெருமானுக்குச் சேவை செய்! என்று சிவபெருமானிடத்தில் பக்தியுண்டாகும் படி திருமால் போதித்தார்' அந்தச் சமயத்தில் நாரத முனிவர் குறுநகையோடு சிவபெருமானிடம் சென்று மணமகனாரே! நாங்கள் ஒவ்வொருவரும் உம் விஷயமாக உம்மாமியார் மேனையிடம் பலவிதமாகவும் இகழ்ந்து ஏளனம் செய்யப்பட்டோம் என்று சொல்வதற்கு முன் சிவபெருமான் பக்தவாத்ஸல்லியத்தால் கண்டோர் மோகிக்கத் தக்க திவ்வியத் திருவடிவத்தோடு தோற்றமளித்தார். நாரதர் மீண்டும் மேனையை நோக்கி அம்மா உலகமெல்லாம் மோகிக்கத் தக்க பேரழகுடைய உன் மருமகனை இப்போது பார் என்றார். அப்போது சிவபெருமான் கோடி சூரியர்களுக்குச் சமானமான காந்தியும் குளிர்ந்த பார்வையும் கொவ்வை வாயில் குமிழ் சிரிப்பும் அழகான அணிமணிகளும் அதி உன்னதமான கிரீடங்களும் விலையுயர்ந்த வஸ்திரங்களும் தரித்து விளங்குவதை மேனை உற்றுக் கவனித்தாள். சகல தேவசேவையோடு சூரியன் குடை பிடிக்கவும், சந்திரன் விசிறவும் அணிமாதி அஷ்டமா சித்திகளும் நடிக்கவும் கங்காதி கன்னியர்கள் சாமரையிரட்டவும், பிரமன் விஷ்ணு ருத்திரர் முதலான தேவர்கள் ஜய ஜயவென ஜயகோஷங்கள் முழங்கவும் மாபெரும் முனிவர்கள் பலவாறாக துதித்துக்கொண்டு கொடிகள், பிடித்துலாவவும், விச்சுவாவசு முதலிய கந்தர்கள் அரம்பை மேனகை முதலிய தேவதாசிகளுடன் பலவிதமான வேஷங்களும் பூண்டு சங்கீதகானஞ் செய்யும், சிவகணங்கள் யாவரும் மிருதங்கம் முதலிய வாத்தியங்களை வாசிக்கவும் வேத - அங்க - ஸ்ருதி - ஸ்மிருதிகள் வடிவம் பெற்று முன்னால் நடக்கவும், சமுத்திரங்களும் நதிகளும் அநேகமாக அலங்கரிக்கப்பட்டு முன்னே உலாவவும் மகாப்பிரகாசத்துடன், சிவபெருமான் விளங்கிய திருக்கோலத்தை வர்ணிக்க யாருக்கும் ஆற்றல் இராது. அப்படிப்பட்ட திவ்விய மங்களவடிவாக விளங்குஞ் சிவபெருமானைப் பார்த்து ராணி மேனை சித்திரப் பதுமைப் போல அசைவற்று ஒன்றும் தோன்றாதிருந்து சிறிது நேரத்தில் மனந்தெளிந்து, தேவர்கள், யாவருங் கூறியபடியே, "இவர் அவ்வகையான சரீரத்தையே யடைந்திருக்கின்றார்." இவரை மணாளனாக வரித்த என் மகள் பார்வதி மகா புண்ணியவதி. அதனால்தான் இத்தகைய ஜகன்மோகன் உருவம் படைத்த சிவனாரைக் கணவனாக அடைந்தாள்" என்று கருதி, அவரது அவயவங்கள் ஒவ்வொன்றையும் சிறிது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்றுப்பார்த்து மிகவும் சந்தோஷமடைந்து மனதில் நாணமுற்று இன்னுங் காணக்கூடாதவளாயிருந்தாள். தேவ கணங்களோடு சிவபெருமான் சர்வாலங்கார பூஷணராய்ப் பர்வதராஜன் மாளிகைக்கு வந்தார். அப்போது பிரமாவும் மகாவிஷ்ணுவும் இரு பக்கத்திலும் சூழ இடையேவரும் சிவபெருமானைக் கண்டமேனை அவரைப் பூஜித்தாள், மணநாயகன் வருகையைக் காட்டும் பொருட்டு எழுந்து பதினெட்டு வகையான மேளவாத்தியங்களின் ஒலியைக் கேட்டு அந்த நகரத்திலிருந்த மங்கையர் அனைவரும் மணநாயகனைக் காணும் ஆர்வப் பெருகாலும் ஆசையாலும் அவரவர் செய்து கொண்டிருந்த வேலைகளை விட்டு அப்படியே ஓடி வந்தார்கள். அதாவது நீராடிய பிறகு உடம்பில் வாசனை தேய்த்துக் கொண்டிருந்த கோமளாங்கியும் கணவன் பூஜை செய்யும்போது அவனுக்கு விசிறிக் கொண்டிருக்கையில் அந்தக் குழந்தையையும் விட்டுவிட்டு ஓடிவந்ததாயும், மெல்லிய இடையில் பொன் ஒட்டியாணம் அணிய முயன்று அதை அப்படியே கையிலேந்திக் கொண்டு வந்த காரிகையும், கண்களில் மைதீட்டிக் கொண்டிருந்த கன்னிகை ஒரு கண்ணில் மைதீட்டியும் மறுகண்ணில் தீட்டாமலும் கையில் சலாகையோடும், கண்ணாடி பார்த்திருந்தவள் கையில் ஏந்திய கண்ணாடியோடும் கணவனுக்கும், அன்னமிடப் போனவள் அன்னப் பாத்திரத்தோடும், நீராடியபோது தன் கால்களுக்கு மஞ்சள் பூசிக் கொண்டிருந்தவள், ஒரு காலுக்கு பூசியும் ஒரு காலுக்குப் பூசாமலுமாக ஓடி வந்தார்கள். இவ்வாறு அவரவரும் அவரவர் வேலைகளை அரைகுறையாக விட்டுவிட்டு, சர்வமங்கள வடிவமாக விளங்கும் சிவபெருமானைக் கல்யாணக் கோலத்தில் காண்பதற்காக ஓடிவந்து சர்வாங்க சுந்தர புருஷராய்த் தோன்றிய எம்பெருமானை அகல விரித்த கண்களால் அதிகமாகப் பார்த்துப் பார்த்துப் பெருவியப்பால், திறந்தவாய் திறந்தபடியும் திறந்த கண்கள் சிமிட்டாதபடியும் சித்திரப் பதுமைகளைப்போல் அசையாமல் நின்று கொண்டிருந்தார்கள். அவரவர் மனதும் சிவனாரோடு ஐக்கியப்பட்டன. சிவனாரின் வசீகர அழகில் யாவரும் மயங்கி நின்றார்கள். இந்த மயக்கம் நீங்க சிறிதுநேரம் ஆயிற்று. மயக்கத்திலிருந்து தெளிவுற்று எழுந்த அந்நகர மக்கள் ஒருவரை ஒருவர் பார்த்து! "ஆஹா! நம் அரசிளங்குமரி பார்வதி செய்த அருந்தவத்தால் அல்லவா இவ்வித அற்புதத் திருவுருவத்தைப் பெற்ற சாட்சாத் சிவபெருமானையே நாயகனாகப் பெறும் பாக்கியமடைந்தாள். மங்களமூர்த்தி எனும் திருநாமம் அவருக்கு அல்லவோ மிகவும் பொருத்தமானது. இத்திருப்பெயருக்குரிய மங்கள மூர்த்தியைக் கண்ணாரக் கண்டவர்களுக்குப் பற்பலப் புண்ணிய பயன்களெல்லாம் உண்டாகுமே. கடுந்தவம் புரிந்து இவ்வரியத் திருவுருவைக் கணவனாகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றதாலல்லவா பார்வதியே தன்யையாயும் கிருத கிருத்யையாயும் இருக்கிறாள். பார்வதியின் தவம் பெரும் பயன் அளித்தது. இச்சதிபதியை ஒன்று சேர்க்க பிரமன் செய்த முயற்சி சிறப்பானதல்லவோ? பொன்னும் இரத்தினமும் ஒன்று கூடினாற் போல் லஷ்மியும் விஷ்ணுமூர்த்தியும் மணஞ்செய்து கொண்டதுபோல, சாம்பவமூர்த்தியான சிவபெருமானைக் கணவனாகப் பெற்ற பார்வதி நல்ல சுகத்தை அனுபவிப்பாள் என்று சொல்லி கந்த புஷ்ப அக்ஷதைகளைச் சிவபெருமான் பேரில் சமர்ப்பித்தார்கள். இவர்களின் உரையாடல்களை கேட்டு மகிழ்ச்சியுற்று சிவபிரான் பர்வதராஜன் முன்னின்றழைத்துப்போக இதர பரிவாரங்களோடும் விவாகவேதிகையைச் சேர்ந்தார். பிரமதேவரே புரோகிதராக முன்வந்து சப்த முனிவர்கள் முதலானவருடன் சதுஷ்கோணமான திருக்கல்யாண மண்டபத்திலிருந்து அத்யாதிப்ரயோகம் முதலான விவாகச் சடங்குகளை நடத்தினர். பர்வதராஜனும் ராணிமேனையும் நீராடி ஆடை ஆபரண அலங்காரங்களோடு வந்தார்கள். பர்வதராஜன் தன்னுடைய கோத்திரமுறையை சாஸ்திர விதிப்படிக்கூறி சிவபெருமானுக்கு ஆவாஹநம், பாத்தியம், அர்க்கியம், பட்டாடை திலகம் மலர் மாலை, பொன்னாரம் முதலானவற்றை வழங்கி வழிபட்டு வேதிகையில் மேனையுடன் அமர்ந்து அக்கினிப் பிரதிஷ்டாபனஞ் செய்தான். மங்கலப்பாடல்களைச் சுமங்கலிகள் பாட லஷ்மியும் சரஸ்வதியும் பார்வதியின் தோழியராகி பார்வதியை அந்தப்புரத்திலிருந்து கைலாகு கொடுத்து அழைத்துவந்து சிவபெருமான் அருகில், மணப்பெண்ணாக உட்கார வைத்தார்கள். பிரமதேவன் மந்திரரோச்சாடனஞ் செய்ய மேனை கரகநீர்வார்க்க, ஹிமவான் சிவபெருமானுடையக் கமலப் பாதங்களை விளக்கி, அவ்வுதகத்தைத் தானும் தன் மனைவியுங் கிருதார்த்தர்களாகத் தங்கள் சிரமேற்புரோக்ஷித்துக்கொண்டும், சிறிது உட்கொண்டும், பின்சாக்ஷிதோ தகதாரா பூர்வகமாய்ப் பார்வதியின் கையைப்பற்றிப் சிவபெருமான் திருக்கரத்தில் வைத்து, "என் குமாரத்தியான இப்பார்வதியைத் தேவரீருக்குச் சமர்ப்பித்தேன்" என்று கன்னிகாதானம் செய்து கொடுத்தான். சிவபெருமான் பூரிப்படைந்தும் திருக்கரத்தால் பார்வதியின் கழுத்தில் மாங்கல்யதாரணஞ் செய்தார். கல்யாண மண்டபத்தில் சூழ்ந்திருந்த முனிவர்கள் தேவர்கள் அனைவரும் ஆசீர்வதித்தார்கள். சுமங்கலிகள் அக்ஷதைகள் சமர்ப்பித்து வணங்கினார்கள். தேவர்கள் நறுமண கற்பக மலர்களைத் தூவ, தேவதுந்துபிகள் முழங்க, உலகங்களெல்லாம் உற்சாகப் பரவசமடைந்தன. தம்பதிகளான பார்வதி–பரமசிவன் இருவரும் அக்கினிப் பிரதக்ஷிணம் செய்தார்கள். உமாதேவியின் திருவடியைச் சிவபெருமான் கரத்தால்தொட்டு எடுத்து வைக்க, பார்வதி அம்மி மிதித்தனள். அவர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமஸ்கரித்துக் கொண்டே அவர்கள் எதிரே கற்பரசி அருந்ததி வந்தாள் துருவனும் சப்த முனிவர்களும் எதிர்வந்தனர். அவர்கள் சிவபெருமானையும் பார்வதியையும் மீண்டும் சிங்காசனத்தில் வீற்று இருக்கச் செய்தார்கள். வேதாகமத் துதிகளைப் பாடி வேதோத்தமாக ஆசீர்வதித்தனர். பார்வதியையும் சிவபெருமானையும் நோக்கித் தாங்களே உலகத்திற்கு மாதாபிதாக்களாகப் பெற்ற நாங்களும் பெரும் புண்ணியத்தையடைந்தோம்!" என்று புகழ்ந்தார்கள். கந்தர்வர் அப்ஸரசுகள் நிருதம் கானம் வாத்தியம் முழங்கி தானும் தனது வமிசமும் தன் இல்லறவாழ்வும் சிறப்பும் பயனும் அடைந்தது என்று பர்வதராஜன் கூறிப் பெரும் களிப்படைந்தான். அதன் பிறகு சிவபெருமானும் பார்வதியும், தாங்கள் வதூரவர் கோல கொண்டதையும் தம்மைப் பார்த்துப் பிறர் புகழவும் குனதேவதா பிரார்த்தனஞ் செய்து கங்கண விசர்ஜனம் முடித்து அங்கு வந்திருந்த சப்தமுனிவர் சத்புருஷர் சகலகலாவித்யதரர் –தேவர் ஆகியோரை நோக்கிச் சிவபெருமான் கைகுவித்து வணங்கி அருள்பாலித்தார். ஹிமவானும் யாவரையும் பூஜித்தான். இப்பூஜாதானங்களைக் கண்டு பிரம விஷ்ணு முதலிய தேவர்கள் இதுகாறும் கண்டும் கேட்டும் இல்லாமையால், எதுவும் கூறமுடியாமல் அதோமுகமானார்கள். இப்படி அங்கு வந்திருந்த அனைவரும் மரியாதை பெற்று மனம் பூரித்திருந்தார்கள்.

சிவபெருமானாலும் ஹிமாவானாலும் பூஜிக்கப்பட்ட தேவர்களும் மாமுனிவர்களும் தாங்கள் நன்றாகக் கௌரவிக்கப்பட்டதை எண்ணி வெகுவாக உள்ளம் பூரித்திருக்கும்போது உங்கள் ஒத்துழைப்பாலும் வருகையாலும் என் பிறப்பு பிழைப்பு கிரகஸ்தாச்சிரமும் யாவும் பயனடைந்தன" என்று பர்வதராஜன் சொன்னான். அவனது மனைவியான மேனையோ, எனது குலம்பவித்திரமாயிற்று. என் புத்திரியான பார்வதியால் நான் எல்லாப் புகழ்களையும் அடைந்தேன். இவளே எங்கள் புத்திரியாக அவதரிக்காவிடில் சிவபெருமான், திருமால், பிரமதேவர் தேவர்கள்: முனிவர்கள் யக்ஷர், கருடர் முதலிய யாவரும் இங்கு வரக் கூடுமோ? இவர்களைத்தான் நாங்கள் காணவும் கூடுமோ? நீங்கள் மகா புண்ணியர்களாகையால் நான் உங்களை முன்பு நிந்தித்துப் பேசிய நிந்தனைகளையெல்லாம் மன்னித்தருள வேண்டும் என்று கேட்டுக் கொண்டாள். அதைக் கேட்டதும் தேவர்கள் மிகுந்த ஆனந்தமடைந்து, மேனா நீ கிருதகிருத்தியை, ஜகத்ரக்ஷகராகிய சிவபெருமானுக்குப் பார்வதியைக் கன்னிகாதானஞ் செய்த பயன் எவ்வளவு என்று நாங்கள் அளவிட்டுக் கூறுவோம்? பர்வதராஜனைப் பதியாய்ப் பெற்ற நீ, பார்வதியை உன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமாரத்தியாய் பெற்ற நீ அடைந்த புகழ் விவரிக்க முடியாததாகும். நீ எங்களை முதலில் நித்தித்ததையெல்லாம் சுகமயமாக எண்ணுகின்றோம். உன் சுகம் பெருகட்டும் உன் ஐஸ்வரியம் பெருகட்டும்! நாங்கள் வருகிறோம்!'' என்று பர்வதராஜனையும் மேனையையும் ஆசீர்வதித்து, அவர்களது நமஸ்காரத்தையும் பெற்றுப் புறப்பட்டார்கள். புதுமண தம்பதிகளாக சிவபெருமானும் பார்வதிதேவியும் தேவர்களும் புறப்பட்டு கைலையங்கிரியை நோக்கிச் சென்றார்கள். பர்வதராஜனும் மேனையும் கந்தமான பர்வதம் வரையில் சென்று வழிவிட்டுத் திரும்பினர்கள். அன்று முதல் பர்வதங்கள் கிருதார்த்தமாயின. அரி, அயன், இந்திராதி தேவர்கள் மாமுனிவர்கள் முதலான அனைவரும் எல்லாவித வாத்தியங்களோடும் நிருத்தம் நாட்டியம் முதலிய திருவிழாக்கோலத்தோடும் திருக்கைலாச பர்வதத்தையடைந்து சிவபெருமானின் மாளிகையில் பார்வதியை கிருகப் பிரவேசஞ் செய்வித்து, ''சிவபிரானே ! பார்வதி தேவியுடன் சுகித்திருந்து எங்களைக் காப்பாற்ற வேண்டும்'' என்று பிராத்தித்து அவரது திருவருளைப் பெற்று சிவகடாக்ஷமுற்று அவரிடம் விடைபெற்றுப் புறப்பட்டு, அந்த விவாகமகோற்சவ மகிமை பெருமைகளைப் பற்றிக் குதூகலம் பொங்கப் பொங்கப் பேசிக் கொண்டே தங்கள் தங்கள் நகரத்தையடைந்தார்கள். தேவர்களுக்குண்டான ஆனந்தத்தையும் சிவபெருமான் அநுக்ரஹித்ததையும் விவரிக்க வேண்டுமானால் நூறு ஆண்டுகளானாலும் விவரிக்க முடியாது. ஆகையால் சிவஞானிகளே, நீங்கள் கேட்டதைத் தட்ட முடியாமல் என் நினைவிற்பட்டதைக் கூறினேன். நைமிசாரண்ய வாசிகளே! அந்தத் திவ்விய மங்கள மூர்த்தியான சிவபெருமானின் திருமணக்கோல மஹோத்ஸவ சரிதத்தையையோ அல்லது அதில் காணும் ஒரு ஸ்லோகத்தையோ அல்லது அந்த ஸ்லோகத்தின் பொருளையோ கேட்டவர்கள், சகல சம்பத்தும் பெற்று அறியாமை நீங்கி, மெய்ஞானமும் சகல சம்பத்தும் சகல ஐஸ்வரியங்களும், கன்னியாலாபமும் பூரணமாகப் பெற்று விளங்குவார்கள்!'' – சூதமாமுனிவர் கூற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகளின் மாப்பிள்ளையை காணாது மதிமயங்கி மேலே இருந்த மேனை

தேவர்கள் அனைவரும் சிவபெருமானைத்தரிசித்து வணங்க வேண்டும் என்ற ஆசையோடு, திருமணத்துக்கு வேண்டிய உபகரணங்களோடு கந்தர்வர்கள் அப்ஸரஸ்திரீகள் வாத்தியங்கள் முதலியவற்றோடும் திருக்கயிலைக்கு வந்து சேர்ந்தார்கள்.

பரிபூரணரான பரமசிவனாருக்கு அலங்காரஞ் செய்ய வேண்டியது ஒன்றுமில்லை. ஆயினும் எல்லோரும் பகவத்சேவை செய்ய வேண்டும் என்ற கருத்துடையவர்களாய், தம்மால் இயன்றவாறு மண நாயகனாக சிவபெருமானை அலங்கரித்தார்கள்.

சிவனாரின் மகுடத்தில் சந்திரன் அமர்ந்தான். திருநெற்றிக்கண் திலகமாயிற்று. காதணிகளான சர்ப்பங்கள் பொற்குண்டலங்களாயின. விபூதியே சந்தனமாயிற்று. யானைத்தோலே பட்டுத் பீதாம்பரமாயிற்று. பாம்பு மாலைகள் நவரத்தின நகைகளாயின. சிவபெருமானது மகிமையாலே அவர் தேகத்திலிருந்து இயற்கைகளே! கண்டவர்களுக்கு அலங்காரங்களாகத் தோன்றின, மாப்பிள்ளைக்கோலம் பூண்ட சிவபெருமான் யாராலுமே வர்ணிக்க முடியாத சர்வாபரணலங்கார உருவத்தோடு விளங்கினார். அப்போது பிரமத கணங்கள் சகல வாத்தியங்களையும் முழக்கினர். தேவர்கள் மகேஸ்வரனுக்குப் பணியாற்ற வரலானார்கள். அவர்களில் பிரமதேவர், அன்னவாகனத்தில் அமர்ந்து சகல முனிவர்களும் புடைசூழ்ந்து வர பூதபதியான பரமேஸ்வரனைச் சேவிக்க வந்து, கும்பிட்டு நின்றார். மகாவிஷ்ணு கருடவாகனத்தில் அமர்ந்து சர்வலங்கார பூஷிதராக சகல சேவகர்களுடனும், பரிவாரங்களுடனும் வந்து சேவித்து, அருகில் இருந்தார். இந்திரன்முதலிய திக்கு பாலர்கள் யானைகுதிரை, சிவிகை, விமானம் முதலிய தத்தமது வாகனங்களில் ஏறிப் பரிவாரங்களுடனும் ஆயுதங்களுடனும் வந்து பணிந்து ஒருபுறமாக இருந்தார்கள். அஷ்டவசுக்கள் துவாதச ஆதித்தர்கள், முனிவர்கள் தேவதாசிகள், நாரதர்கள் முதலிய யாவரும் சர்வாலங்காரங்களோடும் தத்தமது பரிவாரங்களோடுப் பேருவகையோடும் சிவபெருமானைக் கண்குளிரக் கண்டு தொண்டு புரிய வந்து சேர்ந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தச் சமயம் சிவபெருமான், திருக்கைலாய மலையிலிருந்து புறப்பட்டுத் தேவர்களை நோக்கி, " நீங்கள் அனைவரும் எனக்கு முன் செல்லுங்கள்" என்று பணித்தார். உடனே தேவர்கள் எல்லோரும் மகிழ்ச்சியுடன் சகலவாத்தியங்களையும் முழக்கிக் கொண்டு புறப்பட்டனர். சப்தரிஷிகள் ஆசீர்வதிக்க, பாநுகம்பன் தன் ஆயிரம் வாய்களால் சங்கத்தொனி செய்ய, பாணாசுரன் தன் ஆயிரங் கைகளால் குடமுழவு அடிக்க நந்திதேவர் பொற்பிரம்பேந்தி தேவர் முனிவர் கூட்டத்தை விலக்கிக் கொண்டு முன்செல்ல, இந்திரன் காளாஞ்சி ஏந்த, ஈசானன் அடப்பைதாங்க வாயு ஆலவட்டம் வீச அக்கினி தூபம் ஏந்த, வருணன் பூரண கும்பம் தாங்க, நிருதி கண்ணாடி ஏந்த, குபேரன் நவநிதிகள் சிந்த: யமன் கஞ்சுகத் தொனிபுரிய நாகராஜன் மாணிக்க தீபங்கள் ஏந்த, வேதங்கள் திருவடியைச் சுமக்க, கங்கை யமுனை முதலிய நதிமங்கையர் குளிர்ந்த கவரிவீச, கண்டோர் குவிந்து வர சர்வ அலங்கார ஆடம்பர பூர்வமாகச் சிவபெருமான் ரிஷப வாகனத்தில் அமர்ந்த வண்ணம் இமயமலையை நோக்கி மணம் புரிய வரலானார்.

இந்நிலையில், பார்வதியின் தந்தை ஹிமவான் தனது உற்றார் உறவினர்களையெல்லாம் வரவழைத்து, திருமண மண்டபத்தை வினோதமாக அலங்கரிக்கும்படி கட்டளையிட்டான். நானாவித விசித்திர தோரணங்களும் கொடிகளுமாகத் தன் தலை நகரை அழகுறச் செய்தான்.

பர்வதராஜன் தன் குமாரியைக் கன்னிகா தானஞ் செய்யமங்கள ஸ்நானம் செய்வித்து கல்யாண திருக்கோலத்திற்கேற்ப அலங்கரித்து, நாந்தி, தேவதா, ஆஹ்வாநம அங்குரார்ப்பணம் முதலிய தேவ பூஜைகளைச் செய்வித்து விவாக மஹோற்சவத்திற்கான உபகரணங்களை சித்தப்படுத்திவிட்டு மணமகனாரான சிவபெருமானைச் சகல தேவர்களோடும் அழைத்து வரும்படி தன் ஆத்ம நண்பனான கந்தமாதன பர்வதத்தையும் மற்றொரு சேவகனையும், பதினெண்வகை மேள வாத்தியங்களோடு எதிர் அனுப்பி, சிவபெருமானின் வருகையை எதிர்பார்த்திருந்தான்.

மணக்கோலத்து மகேஸ்வரர் தம் சைன்னியங்களோடும் சகல தேவர்களோடும் வைபவமாக வருவதை பர்வதராஜன் தூதுவரால் அறிந்தான், உடனே தன் பரிவாரங்களுடன் எதிர் சென்று சகல தேவர்களோடும் வரும் சாம்பவ மூர்த்தியைக் கண்டு ஆச்சரியமடைந்தான். தேவர்கள் அனைவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பர்வதராஜனின் சேனையைக்கண்டு வியந்தார்கள். இரண்டு மாபெரும் கடல்கள் ஒன்றாகச் சேர்ந்தது போல இருசாராரின் சேனைகளும் ஒன்றுகூடின. இவ்வாறு அனைவரும் பட்டணத்தை நோக்கி வந்தார்கள். ஹிமவான் தேவர்களுக்குத் தக்கபடி விடுதிகள் நியமித்தனுப்பிவிட்டுத் திருமணமேடைக்குச் சென்று அலங்காரங்களைச் சரிவரப்பார்த்து ஸ்நானம்பானாதி நித்தியக் கடன்களை முடித்துக்கொண்டு மணமகனாரின் வருகையை எதிர்பார்த்திருந்தான்.

பர்வதராஜனின் பத்தினியான ராணி மேனையோ நாரதருடன் தன் உப்பரிகையின் மேல் நின்று, 'பக்தர்களுக்குச் சுகத்தைக் கொடுக்கும் பரமேஸ்வரனைக் காணவேண்டும்! அவர் எவ்வளவு அழகரோ? அவருக்காக என் அருமைச் செல்வி பார்வதி அரும் பெரும் தவஞ் செய்தாளே?.. என்று சொன்னாள். அதையுணர்ந்த சிவபெருமான் அந்த மேனை பிரமிக்கும்படியாகத் தம் சேனாபலத்தைக் காட்டி நின்றார். தேவர்களின் மாபெரும் சேனையைக் கண்ட மேனை மகிழ்ந்தாள். இவ்வளவு சேனைகளுக்கும் சிவபெருமானே நாயகராக இருப்பாராகில் அவர் புகழுடையவராகவும் பேராற்றல் உடையவராகவுமே இருக்க வேண்டும் என்று நினைத்தாள்.

முனிவர்களே! அப்போது ஒரு வேடிக்கை நிகழ்ந்தது. அதையுஞ் சொல்கிறேன் கேளுங்கள். மணமகனாரான சிவபெருமானின் ஊர்வலத்தில் வந்து கொண்டிருந்த தேவர்கள் கந்தர்வர்கள் முதலானோர் நானாவித அலங்காரங்களோடும் பலவித விருதுக் கொடிகளோடும், அதி அழகான தேவமங்கையர்கள் புடைசூழ வந்து கொண்டிருந்தார்கள். அவர்களில் விசுவாசு என்ற கந்தர்வராஜனைக் கண்ட மேனை அவனே சிவன் என்று நினைத்து மகிழ்ந்து 'என் மருகன் பெண்கள் சேனையுடன் வருகிறானே!" என்று நாரதரிடம் சொன்னாள். நாரதரோ புன்சிரிப்போடு, "இல்லை! அது மாப்பிளையல்ல சிவசந்நிதியிலே அவன் சங்கீதம் பாடுவோனாயிற்று" என்றார். அதைக் கேட்டதும் மேனை இன்னும் அதிக உற்சாகப்பட்டு "அந்த அழகனேமாப்பிளைக்கு ஊழியன்தான் என்றால் மாப்பிள்ளை சிவபெருமான் எப்படியிருப்பானோ" என்று நினைத்தாள். அப்போது கீழே ஊர்வலத்தில் மணிக்கிரீவன் முதலானயக்ஷர்களும் அவர்களுடைய சேனைகளும் வருவது தெரிந்தது. அவர்களது தலைவனான குபேரனைக் கண்டதும் மேனை மகிழ்ச்சி பொங்க ஆகா! என் மகளுக்கேற்ற மணாளனான சிவன் அவன் தான் என்று மயங்கினாள். அதற்குள் வருணன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் சேனாசமுத்திரத்துடன் வரவே, 'ஒரு வேளை அவன் தான் சிவன் ஆவானோ? என்றும், இந்திரன் தேவமங்கையருடன்வர, நான் பார்த்த எல்லோரையும்விட இவனே சிறந்தவன். இவனே சிவனாக வேண்டும்'' என்று நாரதரிடம் குதூகலத்தோடு சொன்னாள். ஆனால் அவர்களில் ஒருவருமே சிவபெருமான் அல்லவென்று நாரதர் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, சூரியன்தன் அகண்ட தேஜசுடன் கூடிச் சகல தேவர்களும் புடை சூழ வருவதைக்கண்டு, "இவன்தானோ சிவன்!'' என்று மேனை கேட்டாள். 'அவனுமல்ல' என்றார் நாரதர். அப்போது சந்திரன் சகலகிரகங்களோடும் குளிர்ந்தகாந்தியோடும் வருவதை மேனை பார்த்துவிட்டு, ''ஆஹா! இவன்தான் சிவன்! இவனே என் மருகனானால் என் குலம் முழுவதும் குளிர்ந்து பவித்திரமாகுமே. இத்தகைய தேஜசுடையவன் என் மருகனாயின் என் புதல்வி பார்வதியின் பாக்கியத்தை எத்தனையாண்டுகள் சொன்னாலும் கூறி முடியுமா? என்றார். அதற்கு நாரதர், "இவனும்சிவன்அல்ல. இவன் சந்திரன் என்றார். அப்போது பிரமதேவர் சகல பிரம்ம ரிஷிகளோடும் தேஜோராசியாக வருவதை மேனை உற்றுப் பார்த்து விட்டு, 'ஆகா' அவனாவது சிவனாவானோ ஆகானோ!'' என்றும் குழம்பினாள். மகாவிஷ்ணு மேகவர்னராய் சதுர்புஜ பீதாம் பரதாரியாயும் ஸ்ரீவத்ச சங்குசக்கரகிரீடம் முதலிய ஆபரண அலங்காரராகவும் கோடி மன்மதங்களின் பேரழகோடும், தாமரை போன்ற கவர்ச்சிகரமான கண்களோடும் பக்தர்கள் புடைசூழ கருடவாகனத்தில் வருவதைக் கண்டு ''இவனே சிவன் நான் தனியளானேன்'' என்று மேனை குதூகலம் பொங்க, ஆனால் நாரதரோ இவரும் சிவபெருமான் அல்ல இவரைக் காட்டிலும் சிறந்தவர் சிவபெருமான் அச் சிவபெருமானின் அழகை என்னால் வருணிக்கவே முடியாது என்றார் ஒரு குறும்புச்சிரிப்போடு, அப்போது பிருகு முதலிய முனிவர்களும் கங்கை முதலிய நதிகளும் சீடர்களும் இஷ்டகாமியங்களைக் கொடுக்கும் கற்பக விருட்சம் காமதேனு முதலியனவும் புடைசூழ அவர்கள் மத்தியில் பிருகஸ்பதி முனிவர் வருவதைக் கண்ட மேனை இவனே சங்கரன் என்றாள்'' அதற்கு நாரதர் இவரைக் காட்டிலும் சிறந்தவரும் நிர்குணருமான சிவபெருமான் வருவார் என்றார். அதற்கு மேனை 'மூவுலகத்திலுள்ளவர்களையும் கண்டேன். அவர்களில் ஒருவருமே சிவனல்லவென்றால் அந்த மாப்பிளை எப்படியிருப்பாரோ? என்று சிந்தித்துக் கொண்டிருக்கும் போதே கீழே ஊர்வலத்தில் சிவபெருமான் வந்தார். அவரை மேனைக்கு நாரதர் சுட்டிக்காட்டி 'மேனையே! இவரே சிவபெருமான் என்றார். மேனை மிகவும் ஆவலோடு சிவபெருமானைப் பார்த்தாள். அப்போது அவரோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயுரூபமான சேனைகள் மர்ம சப்தத்துடன் வந்தார்கள். நாரதர் மேனையை நோக்கி, இவர்கள் அவரது சேனைகள் இன்னும் அவரது சேனைகள் வரக்கூடும்' என்றார்.

அதே சமயத்தில் பூதப்பிரேத பைசாசங்கள் திரும்பிய முகமுடையவர்கள் வேடிக்கையான விகட உருவமுடையவர்கள் பயங்கரர் கரிய நிறத்தார், நொண்டிகள், ரோமமுடையோர், தண்தரர். பாசபாணிகள் விருத்த வாகனர். டமருக கல்ல வாத்தியக் காரர் கொம்புதாரை ஊதுவோர் முதலியவர்கள் கணக்கில்லாது வருஞ் சேனையைக் கண்டு மேனை பயந்தாள், அத்தகையவர்களுக்கு இடையே நிர்க்குணராயும் ஐந்து திருமுகமும் பத்துக் கரங்களும் மூன்று கண்களும், வீபூதிப் பூச்சும் சடைமுடியும் கபாலமாலிகாபரணமும் பெரும் புலித்தோல் ஆடையும் பிநாதம் என்னும் வில்லும் கங்காளமும் சங்க பூஷணமும் உடையவராய்ச் சிவபெருமான் எருதுவாகனத்தின் மேல் யானைத் தோல் விரித்து, அதன்மீது அமர்ந்து நித்திரை செய்து உடலசைவான் போல இருந்தார். நாரதர் உடனே குறுஞ்சிரிப்போடு தன் அருகே இருந்த மேனையைக் கூப்பிட்டு மேனா ! அதோ அவரே சிவபெருமான் என்று சுட்டிக் காட்டினார். உடனே மேனை திடுக்கிட்டு சூறாவளிக் காற்றில் அடிபட்ட கொடிபோலத் துக்கமடைந்து "ஆ பார்வதி என்ன காரியம் செய்து விட்டாய்?" ஏ துன்மார்க்கி என்று சொல்லிக் கீழே விழுந்து மூர்ச்சை அடைந்தாள். பிறகு சிறிது நேரம் கழித்து மயக்கம் தெளிந்து எழுந்திருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவியின் தவமும் மஹிஷனின் மதிமயக்கமும்

மஹிஸாசுரனால் பீடிக்கப்பட்ட, தேவர்கள் பூமிக்கு வந்து தவசியான கௌரீதேவியிடம் சரணடைந்தார்கள் : தேவி! அபயம் கொடு! என்று பயந்த தேவர்களைப் பார்த்து "என்னசமாச்சாரம்" என்று தேவிகேட்டதற்கு இந்திராதி தேவர்கள் கைகூப்பி மகிசாசுரனால் உற்றபீடையை அப்பிணக்கைத் தெரிவித்தார்கள். மகிசன் நந்தவனத்தில் அற்பசுரார்களுடன் விளையாடுகிறான், ஐராவதம் முதலிய திக்கு யானைகளை எல்லாம் தன்னாதீனத்தில்வைத்து, உச்சைசிரவால் முதலான குதிரைகளை வசப்படுத்திக் கொண்டு பலவகைப் பெண்களுடன் போகிக்கிறான். அக்னி வாகனங்களான ஆடுகளை இலட்சக்கணக்காகவும் கோடிக்கணக்காகவும் வைத்து தன்புத்திரர்கள் சவாரி செய்ய உபயோகிக்கிறான். எமனுடைய எருமையைத் தன் வண்டியில் பூட்டி இழுக்கச் செய்கிறான். சகல ஸ்திரிகளையும் தன்வீட்டு வேலைக்கு ஏவுகிறான். அசுரகணங்கள் முழுவதையும் தன் பணிவிடைக்கு வைத்திருக்கிறான். மூவுலகத்திலும் அவனடையாத மேன்மையான பொருள் ஒன்று இருந்தால் அதைத்தான் அடையும் வரை, அவனுக்குக் கோபம் தணிவதில்லை. நாங்களோ அவனுக்கு சேவகர்களாகப் பயந்திருக்கிறோம், அவன் கட்டளைக்கு உடன்படுவதைத் தவிர எங்களுக்கு வேறுகதியில்லை.

சரணாகதியடைந்தவர்களுக்கு அபயங் கொடுப்பது தவத்தின் பயனாகச் சொல்லப்பட்டது. இந்த அசுரன் சகிக்கப்படாதவன். சிவனிடம் வரம் பெற்று சுராசுரர்களிலும் யாவரிலும் அதிக பலவானாயிருக்கிறான். அவன் கொம்பினால் குத்தப்பட்டு சமுத்திரராசன் "இதோ கொடுத்து விட்டேன்", இதோ கொடுத்துவிட்டேன், என்று கதறிக் கொண்டே தினந்தோறும் இரத்தினங்களை மகிசனுக்குக் கொடுக்கிறான். மலைகளைத்தன் கொம்பினால் குத்தி, இரத்தின தூளிகளால் தன்னுடம்பு கோலப்பட்டு அவன் கர்வத்துடன் விளையாடுகிறான். அவன் பலத்திற்கு நிகரில்லை. அவனை ஒருவராலும் எதிர்க்க முடியாது. உன் அழகால் அவனைக் கொல்வதை நீயே தெரிந்து கொள்வாய். சம்புவின் சக்தியாய் பெண் வடிவாய் நீ விளங்குகிறாய். உன்னாலே அவன் கொல்லப்படவேண்டும். ஏனெனில் அவன் சம்புவிடம் வரம்பெற்றவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவி ! சம்புவின் எண்ணமேதோ எங்களுக்குத் தெரியாது நீயோ ஜகன்மாதா! நீ எங்களை ரட்சிக்க வேண்டும் என்று பணிந்து கேட்டார்கள். தேவி பிரசன்னமாகி ஆசித்தத்துடன் அவர்களுக்கு அபயங் கொடுத்து தாபமாய்ப் பேசினான். தேவர்களே! தவத்தில் ஈடுபட்ட என்னால் சரணாகதர்களுக்கு அபயந்தர வேண்டிய கடமையுண்டு. கொஞ்சக் காலத்தில் உங்கள் சத்துரு சீணமடைவான். அந்த மகிசாசுரனை உபாயத்தால் கொல்லுகிறேன். தற்சமயத்தில் குற்றமற்றவனைக் கொல்லுவது சரியல்ல. "தர்மநீதியாய் இருப்பவர்களுக்கு தர்ம விரோதம் செய்பவன் பூச்சியைப் போல் நசுக்கப்படுவான், என தேவியின் வார்த்தைகளைக் கேட்டு, தேவர்கள் கிரிகன்னியை வணங்கி, பயம் நீங்கி, சந்தோஷமாய் வந்தவழியே திரும்பினார்கள். தேவர்கள் சென்ற பிறகு கமலலோசனையான கௌரி, காந்திமதியான மோகினி சத்தியாகப் பிரதிபலித்து அருணகிரியின் நான்கு திசைகளிலும் நான்கு உத்தமர்களான பைரவர்களைக் காவல் புரியத் திட்டமிட்டார்.

கைலாச கிரியின் நின்று வரும்போதே கௌரி தேவியை, நான்கு மாதர்கள் சேவைக்காகப் பின்தொடர்ந்தார்கள். அவர்கள் துந்துபி, சத்தியவதி, ஆனவம், சுந்தரி என்பவர்கள். அவர்கள் அவளைத் தொடர்ந்தும் சேவித்திருந்தார்கள். அவர்களைப் பார்த்து "அருணாத்திரியைச் சேவிக்க வந்த, களைத்துப் பசி தாகத்துடனுள்ள அதிதியை மாத்திரம் உள்ளே விடுங்கள்; மற்றவர்கள் உள்ளே வரக்கூடாது; என்று கட்டளையிட்டார். எல்லைப் பிரதேசங்களில் பலவான்களை நியமித்துவிட்டு கௌரிதேவி கௌதம ஆச்சிரமத்திலே தவம் புரிந்தனர்.

அவள் அப்படித்தவம் புரியும் போது தேசத்தில் தாபமே இல்லை. காலத்தில் மழை பெய்தது. பயிர் பச்சையாய் விருத்தியடைந்தது. வைரியான பிராணிகள் தங்கள் தங்கள் வைரங்களை மறந்தன. அந்த ஆச்சிரமம் சகல மூவராசிகளுக்கும் பயத்தை நீக்கி தங்குவதற்கு தக்கவிடமாயிற்று. இரண்டு யோசனை சுற்றளவிற்கு அருணகிரிகாவற்காரர்கள் காக்கப்பட்டு எல்லோருக்கும் இரட்சனை ஏற்பட்டது. பயமே காணப்படவில்லை. காமக்குரோதிகளுமில்லை. முனிவர்கள் யாவரும் கிருதார்த்தர்களாய கௌரியைப் புகழ்ந்தார்கள். யாவரும் அவளுடைய ஆச்சிரமத்தை சிவலோகம் என்றே கொண்டாடியிருக்கிறார்கள். கௌரியும் இரவும் பகலும் தவத்திலே ஈடுபட்டு சிவப்பிரீதிகரமான விடயத்திலே மிகவும் சந்தோசித்தார்.

மகாபாரக்கிரம சாலியான மகிசன் வேட்டையாடும் பொருட்டுத் தனது நாட்டிநின்றும் தூரமான அருணாசலக்காட்டிலே நுழைந்து, தன் பரிவாரங்களால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழப்பட்டுவரும்போது அனேக மிருகங்கள் பயந்தோடின. அவற்றுள் சில தேவியின் ஆச்சிரமத்துள் நுழைந்தன. அவைகளை விரட்டிவந்த அசுரர்களைக் காவற்காரர்கள் உள்ளே நுழையாமல் உடனே தடுத்தார்கள். அங்கே என்ன விசேடம்? என்று அசுரர்கள் கேட்க இங்கே கௌரி தேவி தவம்புரிகிறாள். ஆகையால் இந்தச் சேத்திரத்தில் சரணாகர்த்தர்களை இரட்சிக்க தேவி கடமை பூண்டாள். இது முனிவர்களுக்குத் தக்க ஸ்தானம், ஒருவரும் உள்ளே பலாத்காரமாய்ப் பிரவேசிக்கக் கூடாது'' என்று காவற்காரர்கள் பதில் சொன்னதின் பேரில், அவர்களும் சரி என்று பின் திரும்பிப் போய், மேற்கொண்டு நடத்த வேண்டிய காரியத்தைப் பற்றி ஆலோசித்தார்கள் அவர்கள் பட்சிரூபங் கொண்டு ஆச்சிரமத்துள் பிரவேசித்து நந்தவன விருஷ்சங்களின் கிளைகளில் உட்கார்ந்து அங்கிருந்த கௌரி தேவியை நன்கு பார்த்து அதையெல்லாம் மஹிசனுக்குத் தெரிவித்தார்கள்.

அதைக் கேட்டு காமபீடிதரும் ஒரு விருத்த வேடம் பூண்டு அவள் ஆச்சிரமத்துள் நுழைந்தான். தேவியின் சசிகளால் ஆதரிக்கப்பட்டு களைப்பாறியது போல் நடித்து அவர்களை நோக்கி ''இங்கே ஏன் தவம் புரிகிறீர்கள் என்றான். அவள் உத்தேசப்படி குணசாலி ஒரு போதும் கிடைக்கமாட்டான், விவாக காலத்திற் கேற்க இவள் கோரிக்கைகளுக்கு இணக்கக் காரியம் நடக்க வேண்டுமாம், அது என்ன வெனில், இணையற்ற பிறப்பினால் புதிது புதிதானதும் மகத்தானதும் உபகரணங்கள் பல வேண்டும். தற்சமயம் பிறந்தனவான, தற்சமயம் செய்யப்பட்ட பாண்டங்களும், அன்றே விளைந்து முதிர்ந்த தானியங்களும் இவ்விதமாகவே மற்ற சர்வ சாதனங்களும், இதற்குமுன் காணப்படாத உபகரணங்கள் சித்தமானால் இவள் அந்தக் கணமே விவாகம் புரிவாள் என்றனர், என்றதை மஹிசன் கேட்டுச் சிரித்துத் தான் சொல்லத் தொடங்கினான்.

''ஹே, 'பாவமே!' தபசனி உன்னுடைய தவத்தின் பயனாக நான் இங்கே வந்தேன் போலும், இது மெய்தான். என் ஐசுவரியங்களை நீ கேட்பாயாக ''நான் மஹிஷன், மஹாவீரன், அசுரபதி, அமரர்களால் சேவிக்கப்பட்டவன். மூவுலகங்களும் எனது ஆதீனத்தில் உள்ளன. என்புயபராக்கிராமத்தினாலே அன்னிய வீரத்துவம் என்னிலேதான் உள்ளது. சிறுமியே! நான் காமரூபி எல்லா போகங்களையும் கொடுக்கவல்லவன். என்னை உன்பதியாகக் கொள். நான் பிராணிகளுடைய சர்வ தபசின் பயனையும் கற்பக விருட்சத்தின் மூலம் சம்பாதித்துக் கொடுப்பேன் என் தவத்தால் விஸ்வகர்மாவையே சிருஷ்டிக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லவன், ஒரு நொடியில் ஆயிரக்கணக்கான காமதேனுக்களை உண்டாக்குவேன். என்னைச் சூழ்ந்து நவ நிதிகளும் இருக்கின்றன. அவற்றின் மூலம் எல்லாக் கோரிக்கைகளையும் அந்தட்சணமே நிறைவேற்றிக் கொள்ளலாம், என்றான். அவன் பேச்சைக் கேட்டவுடன் தேவர்களின் ஞாபகம் தேவிக்கு உண்டாயிற்று. அப்போது தன் மௌனத்தை விட்டு சிறிது சிரித்து 'நான் பலவானுக்குத் தான் பாரி ஆவேன் அதற்காகவே வெகுகாலம் தவஞ் செய்கிறேன். நீ பலசாலியானால் உன்பலத்தைக் காட்டு தவறினால் நீ அபலை என்று ஒப்புக்கொள் என்றாள். இந்த வார்த்தைகளைக் கேட்டு மஹிசாசுரன் மிகக் கோபங் கொண்டு "இனி நீ செத்தவள் தான். இது யார் இப்படிப் பேசினது என்று கர்ச்சித்து தேவியைக் கொல்லத்தாவினான். அப்படி வந்த மஹிசாசுரனைக் கண்டதும். அக்கன்னிகை நெருங்க முடியா அனல் வடிவமான துர்க்கை ஆனாள். தன் எதிரிலே சுவாலையின் மஹாசனைக் கண்டதும் மஹிசாசுரனும் மேருகிரியைப் போல் மிகவும் வளர்ந்தான்.

கிரி சிகரங்களைப் பெயர்த்து, எறிந்து, நான்கு திசைகளிலும் நிறைந்திருந்த தன்சேனைகளை அவன் அழைத்தான். அதன் மேல் பிரம்மாவை முன்னிட்டுக் கொண்டு தேவர்கள் யாவரும் பல ஆயுதங்களை ஏந்தி காலாக்கினி வடிவான துர்க்காம்பாளை தங்களுக்குள்ளே ஆராதித்தார்கள். ஹரி ஐந்து பாணங்களை அவர்களுக்குச் சமர்ப்பித்தார்: சதாசிவன் ஐந்து பாணங்களையும், பிரம்மா நான்கு பாணங்களையும் சமர்ப்பித்தனர். மற்றைய மாயைநீங்கிய திக்குப் பாலகர்களும், தேவர்களும், கிரிகளும், சமுத்திரங்களும், தங்கள் தங்கள் ஆபரணங்களையும் அஸ்திர சாஸ்திரங்களையும் அம்மனுக்குச் சமர்ப்பித்து அவைகளைக் கொண்டாடினார்கள். அம்பிகையும் அந்த ஆயுதங்களால் மிகச் சிறந்து விளங்கினாள். தான் ஒரு கவசம் பூண்டு உடனே சிம்மவாஹனம் ஏறினாள்.

எங்கும் வியாபித்த ஜோதியைக் காணமுடியாமலும், அம்பிகையின் பார்வையைப் பொறுக்கக்கூடாமலும் மஹிசன் ஓடிவிட்டான். தன் சுயமான உக்கிரகத்தைக் கண்டு அதன் சுவாலிக்கும் தேஜஜ்யைக்கண்டு பொறுக்கமாட்டாமலும் ஓடிப் போன மஹிசனைப் பற்றித் தேவி ஆலோசித்தாள்.

இந்த மஹிசாசுரன் துஷ்டன், இவனை உபாயத்தினாலேயே. கொல்ல வேண்டும். வேட்டைக்காரர்கள் எப்படி மிருகங்களைத் தூண்டிக் கோபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டாக்கி திரும்பும்படி செய்கிறார்களோ, அப்படியே சாமர்த்தியமுள்ள தூதர்களால் இவனுக்குக் கோபம் உண்டாக்கி உடனே இவனை யுத்த அரங்கத்திற்குத் திருப்பவேண்டும். அதர்ம விருத்தியுள்ளவர்கள் தர்மோபதேசத்தைக் கேட்டு அவன் சாந்தமாகி விட்டால் அதுவெகு நல்லது. ஏனெனில் அதனால் பிறகு அவனால் தர்மத்திற்குக் கெடுதியில்லை. தவசிகளுக்கு கோபம் காட்டாது, கோபமின்மையே தவத்தின் பயன். தர்மலோபத்தை அங்கீகரிக்கக் கூடாது. அதர்மத்தின் மீது கோபம் உண்டாவது சரியே. தர்மரட்சணையின் பொருட்டுத் தவம் மேன்மையானது என்று ஆலோசித்து கொளரீ தேவி சுரருகு வென்னும் வானரமுகமுனியை மஹிசனிடம் அனுப்பினார். "வானரமுக மஹரிஷியே நான் கொடுக்கும் மாயா சத்தியுடன் நீர் மஹிஷனிடம்போய் பின் வரும் வார்த்தைகளை அவனுக்குச் சொல்லி அவனைச் சீக்கிரம் திருப்புங்கள்".

"உன் துர்ப்புத்தியால் அருணாத்ரீசனைச் சுற்றி ஒருவரையும் பீடிக்கச் செய்யவேண்டாம். அப்படிச் செய்யும் துஷ்டர்கள் வீரியம் எல்லாம் ஒரு நொடியில் நசிந்துபோம். அவ்விடத்தில் கலியின் உபதாபங்ளோ அசுரபீடைகளோ, சாஹஸமோ கிடையாது. ஏனெனில் அது சிவபக்தர்களுக்கு அது சுபகரமான க்ஷேத்திரம். நீ ஏதோ பூர்வஜன்மத்தில் புண்ணியத்தால் இப்பொழுது வீரியமும் பாக்கியமும் அடைந்திருக்கிறாய். உன் அசுர சுபாவத்தால் இதைக் கொண்டு அருணாசலாக்கினியில் பூச்சியைப் போல் விழுந்து விடாதே.. பூர்வ தவத்தால் சிவ ஆஞ்ஞைமூலம் அடையப்பட்ட உன் ஐஸ்வரியம் முழுவதும் காட்டுத்தீயில் விருட்சங்கள் எரிக்கப்பட்டது போல் எரிக்கப்பட்டு நாசமாகிவிடும். அங்கே தர்மாத்மாக்களும் சிவபத்தர்களும் மட்டும்தான் வசிக்கக் கூடும். பிறரைப் பீடிக்கப்படுத்துகின்றவர்களுக்கும் பலவித ரோகங்கள் உண்டாகும். உனக்கோ வேறெவராலும் அடையப்படாத ஐசுவரியமும் வேறொரு வீரலாலும் எதிர்க்கக்கூடாத வல்லமையும் இருக்கிறது. நீ புத்தி கெட்டு இவற்றைக் கெடுத்துக் கொள்ள வேண்டாம்.

நீ ஆசை கொண்ட கன்னிகையை நானும் பார்த்தேன். அவள் உண்மையிலேயே அபலை; ஆனாலும் அவள் அனாதைத் தீஷ சம்ரக்ஷணையில் இருக்கிறபடியால் அவளை வெல்ல முடியாது. அப்படியின்றி நீ நல்ல யோசனைகளாலும், சிவாகமங்களாலும் உன்சித்தவிருத்தியை அடக்க முடியாமல் உன் சேனைகளைச் சேகரித்தால் அவற்றைக் கொண்டு வா என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவியின் மாத்ருக்களும், அனேகவடிவான யோகினி கணங்களும் பூத, பிரேத, பிசாச, ராக்ஷசர்களும், துர்ஜயமான படியால் அசுரசேனையைத் தின்றும், பொடித்தும் வெட்டியும், குத்தியும், நொடியில் கொன்றார்கள். இவ்வண்ணம் கொல்லப்பட்ட ராக்ஷசர்களாலும், ரத்த மாமிசங்களைப் புசித்து ஜய வெறியால் கூத்தாடும் பூதகணங்களாலும் சூழப்பட்டு தேவி ஆயுதராணியாய் விளங்கினார். அவள் பக்கத்தில் கைலாஸகிரியினின்றும் தொடர்ந்து பரிசாரர்களாக வந்து துந்துபி, சத்தியவதி, அந்தவரி, சுந்தரி என்ற தேவிகளும் இருந்தார்கள். தேவியால் சிருஷ்டிக்கப்பட்ட சாமுண்டா தேவி கோரப் பற்களோடும் பயங்கரமான ரூபத்தோடும் அசுரருடைய சர்மத்தையே வஸ்திரமாய்த் தரித்து மாமிசத்தை தின்று, ரத்தத்தைக் குடித்து, நான்கு திசைகளிலும் அட்டகாசத்துடன், திரிந்து, ஒரு அசுரனைக் கீழே தள்ளி அவன் மேல் நடனஞ் செய்தாள்.

அத்தகைய அவளைப் பார்த்தவுடன் மஹிஷன் கோபாக்கினியால் ஜுவாலித்தான். பயங்கரமான கண்களையும் காதுகளையும் அதி கோபத்துடன் விளித்து, தன் கொம்புகளின் நுனிகளால் மேகங்களைப் பிளந்து தீச்சுடர் போல் விளங்கும் நாக்கை இப்படியும் அப்படியும் நீட்டி மலைச் சிகரம் போல் உள்ள கொம்பினால் பூமியைக்குத்தி குளம்புகளால் பூமியைக் கீறி எல்லாத் திசைகளிலும் மண்ணை எறிந்து மிக உக்கிரமாய் தீர்க்க கர்ஜனை செய்து மயிரடர்ந்த வாலைத் தடிபோல் தூக்கி, அடித்து, அதனால் அளவற்ற அமராஸ்திரங்களைப் பொடியாக்கி அமரர்களைப் பயப்படுத்திய மஹாசுரன், மூன்று வரிகளால் அலங்கரிக்கப்பட்ட சிம்மவாஹனியாம் பவானியை நோக்கி; தன் மரணத்தின் பொருட்டே வேகமாய் ஓடினான்.

மஹிஷவதமும், அவன் கழுத்துலிங்கம்
அம்பிகையின் அங்கை பற்றுதலும்

மஹிஷன் அநேக ஆயுதங்களோடு சிம்மவாஹனத்தில் விளங்கிய கௌரீதேவியின் பேரில் அம்பு மாரி பெய்தான். தேவி அம்மாரியைத் தன் அஸ்திரங்களால் தூரத்திலேயே தடுத்து, அவன் சரீரத்தைக் கூர்ந்த அம்புகளால் அடித்தாள். அப்படி அடிபட்ட போதிலும், அசுரபதி அதைத்தாங்கி, துக்கமடையாமல், யுத்தத்தில் அதிகமுயற்சி உள்ளவனானான். கத்தியாலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்கரத்தாலும், கோடரிகளாலும் கதைகளாலும், சூலத்தாலும், மற்றும் அனேக ஆயுதங்களாலும் பீடிக்கப்பட்டு அவன் அவ்விடத்தினின்றும் மறைந்தான். சிறிது நேரத்தில் பயங்கரமாய்க் கர்ஜித்து, வாயைத் திறந்து கொண்டு, கூர்மையான நகங்களையும் பற்களையும் காட்டி, ஒரு உக்கிரமான சிங்கமாக மாறி யுத்தகளத்தில் திரிந்தான். தேவியின் வாஹனமான சிங்கம் அசுரசிங்கத்தைத் தன் கையாலறைந்தது. அசுரசிங்கம் தேவியின் வாஹனத்தை நகங்களால் மார்பில் கீறிற்று. அதன் பிறகு மஹிஷன் புலியாக மாறினான். மஹாசுரனைக் கொல்ல, தேவி கையை வீசினாள். நீண்ட நீல ரேகைகளும், வண்டித்தடம்போல் அகலமான சிவந்த வரைகளும் அடர்ந்த ஒரு பெரிய சுவர்ண மலைபோல், தன்னை எதிர்த்து வேகமாய் வந்த புலியின்மேல், சிவன் திரிபுராசுரன்மேல் பாணம் எறிந்தது போல், தேவியும் பாணத்தைப் போட்டாள். அந்த அம்பு அவன் முகத்தில் பதிந்து ரத்தத்தைக் குடித்து, உடனே ஊடுருவிச் சென்று ஆகாயத்தில் மறைந்தது. அந்த அசுரன் ஒரு யானையாக மாறி, தேவியின் அருகே ஓடி வந்தான். அவன் செய்கை தேவிக்குப் பிரீதி யுண்டு பண்ணினாற்போலிருந்தது. மதங் கொண்டு ஓடிவந்த யானையை சிம்மவாஹனம் பார்த்ததும், கர்ஜித்துப் பிளந்தது. உடனே அதினின்றும் ஒரு கத்தி ஏந்தி, கோரமான பற்களைக் காட்டி, வாயைத்திறந்து, புருவங்களை நெறித்து, ஒரு வீரன் கிளம்பவே, கத்திகேடயம் சக்கரங்களைப் பிடித்திருந்த தேவியும் அவனுடன் யுத்தம் செய்து அவன் தலையை முறித்தாள். மேலும் அவன் முன் போல் மஹிஷனாகிச் சலிக்காமல் தேவியுடன் போர் புரிந்தான். அதன் பிறகு தேவர்களும் முனிவர்களும் கௌதமகாரிஷியைத் தூண்டினார்கள். அவர் ஜகதம்பிகையைத் துதித்து, அவளுக்கு சுயமஹிமையை ஞாபகப்படுத்தினார்: "பகவதீ ! நீயே ஜகத்தின் பிராணசக்தியாகவும், பகையாகவும் இருக்கிறாய். நீயேதான் ஓஜஸாகவும், ஞானமாகவும், பலமாகவும் சொல்லப்படுகிறாய். இதென்ன ஆச்சரியம் ! மருட்டும் பொருட்டு யுத்தம் செய்கிறாயே! லோக ரக்ஷணத்தின் பொருட்டு இந்த அசுரன் உபசம்ஹரிக்கப்படட்டும். இவனுடைய அனேக உருவங்கள் உனக்குப் பலியானபடியால் அவனுக்கு அவை வரப்பிரசாதங்கள் என்று ஆகமங்கள் கூறுகின்றன. அன்றி, ஒரு தருணத்திற்கே சமானமான இந்த சத்துருவைக் கொல்லக் காலாக்னியான உனக்குப் பிரயத்னம் கூட வேண்டுமா? உன் சக்தியை வெளியிட்டு சத்துருவின் பிராணனைத் திரிகுணவடிவான திரிசூலத்தால் நீயே இழுத்துக் கொள்வாயாக !" என்று அதே சமயத்தில் தேவி பிரார்த்திக்கப்பட்டு, மஹிஷனை எதிர்த்துத் திரிசூலத்தால் குத்தினாள். அனேக கிரிகள் ஒன்றுகூடி உருவங் கொண்டாற்போல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஹாகாயனான மஹிஷாசுரன் தேவியின் பராக்கிரமத்தை சகிக்கக்கூடாமல் கீழே வீழ்ந்தான். அசுராதிபன் கீழே வீழ்ந்து, புரண்டு, கூச்சலிட்டுத் துடித்து, ரத்தம் கக்கியுங்கூட, திரிசூலத்தை மீற முடியவில்லை. முகம், அங்கங்கள் யாவும் தாரையுடன், ஸந்நிதியில், சிவந்த சமுத்திரம் போல் காணப்பட்டான். அதன் பிறகு, கூரான கத்தியால் அவன் தலையை வெட்டிவிட்டு, அந்தத் தலையின் மீது நின்ற மஹிஷமர்த்தனி நர்த்தனம் செய்தாள். அதைக்கண்டு ரசித்த, கந்தர்வ, மஹர்ஷிகள் துர்க்கா தேவியைத் துதித்தார்கள். தேவபதியான இந்திரனும் கைகூப்பித் தேவியை வணங்கித் துதித்தான்.

இந்திரன்: "ஜகன்மாதா ! பூதங்களின் மூல அறிவே ! உனக்கு வந்தனம். நீயே பக்தர்களின் பக்தியாயும், விசுவாசமாயும், சக்தியாயும் இருக்கிறாய். நீயே மூல காரணம், பராசக்தி, கீர்த்தி, சாந்தி, பொறுமை, கலை, அடக்கம் ! நீயே ஜகத்ரூபம் ! உன் பேதங்கள் தான் நாமபேதங்களால் கூறப்படுவன. அவரவர்களின் தபோதகுணமாக ஸித்திகளாய் இருக்கிறாய். ஹே சாம்பவி ! இத்துஷ்டனான மஹிஷன் உன்னால் ஒறுக்கப்பட்டான். அவன் தலை வெட்டப்பட்டபோதிலும், அவன் உயிருடன் கூடியவனாகக் காணப்படுகிறான். அவனுடைய சிவந்த கண்களும், கூர்மையான கொம்பும், வெளிவந்த நாக்கும், அசைகிற தலையும், அதன் பேரில் நின்ற நின்ரூபமும், எங்களுக்கு எப்போதும் ஞாபகம் இருக்கவேண்டும். சக்கரம், கொம்பு, பாணம், அம்பு, கத்தி, கேடயம், வரம், அபயம், சூலம், மணி, அங்குசம், பாசம், கபாலம், கோடரி முதலான ஸகலாயுதங்களோடும் கூடிய அம்பிகையே ! எங்களுடைய பகைவர்கள் அனைவரையும் கொல்வாயாக. ஸகல விதமான ஆயுதங்களும் உன் விபூதிகளே. தர்மத்துவேஷிகள் எத்தனை ஆயுதங்கள், வாஹனங்கள், ரத, கஜ, துரக, பதாதிகளுடனுங் கூடிய அரசர்களாயினும், உன் பிரசாதமில்லாவிட்டால், ஒரு நொடியில் ஜெயிக்கப்பட்டுத் தங்கள் வீரியத்தை இழக்கவேண்டியது தான். ஆனால், கதியற்றும் வீரியமற்றும் இருந்தபோதிலும், உன் பாதகமலத்தை சேவிக்கிற புண்ணியர்கள் திரிலோகாதிபத்தியமும் கீர்த்தியும் அடைவார்கள். அதி உக்கிரமான இந்த ரூபத்தைத் தியானித்துப் பூஜிப்பவர்களுக்கு எப்போதும் ஜயமுண்டு; சத்துருபயமில்லை. தேவ பூஜ்யமான இந்த ரூபத்தைத் தேவர்களும் பக்தர்களும் தங்கள் இஷ்ட சித்தியின் பொருட்டு எப்பொழுதும் மூவுலகிலும் ஆராதிக்கட்டும். ஸர்வபீஷ்ட பலப்பிரதர்களான மாதர்கள் உன்னால் சிருஷ்டிக்கப்பட்டார்கள். கணங்களோடு கூட அவர்கள் எங்கும் எப்போதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூஜிக்கப்படட்டும். இந்த அசுரன் உன்னால் கொல்லப்பட்டு உன் பாதத்தின் கீழ் அமர்ந்தான்; ஆகையால் உன் பிரசாதத்தில் இவன் உன் முன்னிலையில் உன் பக்தர்களால் சதா ஆராதிக்கப்படட்டும்!"

தேவேந்திரனால் இவ்வாறு துதித்து வணங்கப்பட்டு, சகல தேவரிஷிகளாலும் ஆராதிக்கப்பட்டு, "அப்படியே ஆகட்டும்" என்று வரங்கொடுத்து, தேவலோகத்தில் நாநாவித ஆயுதங்களைக் கொண்ட அந்த ரூபத்தை சிருஷ்டித்து நிறுவி, தான் சுயமாக மாத்ருக்களுடன் கூட தேவி இங்கே ஸ்தானரக்ஷை செய்தாள். அப்போதுதான் சாந்தமான விமல ரூபத்துடன் சகிகளோடுங் கூடி, கத்தியால் வெட்டப்பட்ட மஹிஷனுடைய சிரத்தை நோக்கினாள். அதைப்பற்றித் தன் சகிகளுக்குச் சொல்லிக் கொண்டே பாலாதேவி லோகபூஷணமான அவனுடைய கண்டத்தை உற்றுப்பார்த்தாள். அங்கே ஒரு லிங்கம் இருக்கக்கண்டு, அதைப் பூஜிப்பதற்கு, கௌரி அவன் கழுத்திலிருந்து அதைச் சரேலெனத் தன் கையால் பற்றியதும், அது ரத்தத்தால் பூசப்பட்டிருப்பதைத் தீர்க்கலாம் கவனித்துப் பார்த்தாள். அவள் உள்ளங்கையில் அந்த லிங்கம் ஒட்டிக் கொண்டது. அங்கிருந்து அதை எடுக்க முடியவில்லை; ஆச்சரியத்தோடு "இது ஏன்?" என்று வியந்தாள். அதன்மேல் மனம் துக்கித்து, மஹர்ஷியின் எதிரில் வந்து, "சிவபக்தனாம் இவன் என்னாலே கொல்லப்பட்டான். அதனால் எனக்குத் துக்கம் மேலிடுகிறது. ஸ்த்ரீ சுபாவமான மூடத்தனம் என்னிடத்தில் மிக நிந்திக்கத்தக்கது. ஆலோசியாமல் சிவபக்தனைக் கொன்றுவிட்டேன்" என்று சொல்லி, சரீரம் முழுவதும் மிக நொந்து, கௌதமமுனிவரிடம் தான் செய்ததைச் சொன்னாள்:

"பகவன் ! ஸகல தர்மஜ்ஞரே ! கௌதம முனிவரே ! தேவர்களின் ரக்ஷையின் பொருட்டு அபயங்கொடுத்து, வார்த்தையைக் காப்பாற்றவேண்டி, தர்ம பரிபாலன ரூபமாக ஏதோ அதர்மம் நேர்ந்துவிட்டது. சிவபக்தனான மஹிஷனை அஞ்ஞானத்தால் கொன்றுவிட்டேன். ராஜஸ புத்தியுள்ளவர்களுக்குத் தர்மம் கிட்டாது. அது அனேக விக்னங்களால் தடைப்படும்; ஆனாலும் குருவனுக்கிரகத்தினால் மட்டும் சுலபமாய்க் கிட்டும். துராசாரரானாலும் சிவபக்தர்களைப் பீடிக்கவும் எதிர்க்கவுங் கூடாது. அதிலும் லிங்கதாரிகள் இன்னும் விஷேசம்; ஏனெனில், சிவனே அவர்களைக் கொண்டாடுகிறார். பூர்வகாலத்தில் புரத்திரய வாசிகள் லிங்கத்தைத் தரித்தவரைக்கணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜயிக்கவில்லை. அவர்கள் லிங்கங்களைக் களைந்துவிட்ட பிறகுதான் சிவனால் தஹிக்கப்பட்டார்கள்.

''இவனுடைய கழுத்தினுள் இருந்த இந்த லிங்கம் என்கையைவிட்டு நீங்கவில்லை. சிவபக்தனைக் கொன்ற பாபத்தை நான் எப்படிப் போக்குவேன் ? இந்த லிங்கத்துடனே நான் சிவப்பிரசாதம் சித்திக்கும் வரையில் தீர்த்தயாத்திரை செய்து தவம் புரிகிறேன். பின்பு கைலாஸம் முதலான விசேஷ சிவக்ஷேத்திரங்களில் ஸ்நானம் செய்து பாபத்தைப் போக்குகிறேன்'' என்று அதர்ம காரியம் செய்துவிட்ட சந்தேகத்துடன் பயந்து, கௌரீதேவி மொழிந்ததை சிவதர்மஜ்ஞரான கௌதமர் கேட்டு, ''கௌரீ ! அஞ்ஞானத்தால் சிவபக்தன் கொல்லப்பட்டான் என்று பயப்படாதே! கிரிகன்னிகையே ! தர்ம சூக்ஷமத்தை அறிந்தவர்கள் மஹா துர்லபம். சத்யோஜாதாதி பஞ்சமுகங்களினின்றும் இருபத்தெட்டு கோடி ஆகமங்கள் உண்டாகி இருக்கின்றன. அவை சிவபக்தர்களுக்குத்தான் தெரிவன. அவற்றுள் சில, முனிவர்களால் அனுஷ்டிக்கப்பட்டன. அவைகளில் காலோன்முகம், கங்காளம், சைவம், பாசுபதம், மஹாவிரதம் என்ற ஐந்து ஆகமங்கள் சைவமார்க்கத்தில் பிரசித்தமானவை. அவைகளிலும் எவ்வளவோ பேதங்கள் உண்டு. ஆனால் அவற்றின் முக்கிய தாற்பரியம் சிவன் ஒருவனே ஆராதிக்கப்படவேண்டும், என்பது தான். பூஜை, தர்ம நிஷ்டை, துவேஷமின்மை, சிவாஜ்ஞா பபிபாலனம், வேதமார்க்கம், சிரௌதஸ்மார்த்த தர்மம், யஜ்ஞம், யாகம், பக்தியாகிய எவ்விதத்தாலும் ஸகல வரப்பிரதனான சிவனே பூஜிக்கத்தக்கவன். ஜீவஹிம்ஸை ஒருபோதும் கூடாது; அதிலும் முக்கியமாய் தபஸ்விகள் அஹிம்ஸையை அனுஷ்டிக்கவேண்டும். சிவதர்மத்தைக் கெடுக்கிறவர்கள் கட்டாயம் சிக்ஷிக்கப்படவேண்டும். வேஷதாரிகளின் லிங்கத்தைப் பார்க்கக் கூடாது. அவர்தம் வரலாற்றையும் கவனிக்கக் கூடாது. சிவதர்மத்துவேஷியை யோசிக்காமல் ஒடுக்க வேண்டும். இவ்வாறு அநேகமாய்த் தெரிந்தவர்களால் தர்மம் போதிக்கப்பட்டபோதிலும் சிவதர்மத்தைக் கெடுத்தால், சக்தி தன்னாலேயே குன்றிப் போகிறது. அவன் லிங்கத்தைக் கொண்ட பாக்கியத்தாலேயே ஸகல தேவர்களாலும் ஜெயிக்கப்பட்டான். அவன் சிவபக்தர்களான மஹரிஷிகளைக் கோபமூட்டி, துவேஷித்து, அவமதித்து, அவர்களால், ''நீ எருமைக் கடாவைப்போல் நடந்து கொள்வதல் நீ துஷ்ட எருமைக் கடாவாவாய் !'' என்று சபிக்கப்பட்டு உடனே மஹிஷனானான். பிறகு அவர்களை வணங்கி, ஆராதித்து, சாபவிமோசனத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிக்கொண்டதின்பேரில், ரிஷிகள் பிரசன்னர்களாகி அவனுக்கு வரங்கொடுத்தார்கள். அதாவது: "நீ மஹிஷமானபோதிலும், சிவாஞ்ஞையால் தேவியே உன்னை சம்ஹரிக்கட்டும். உன் உடலைக் கண்டு நீ துக்கிக்கவேண்டாம். சிவரூபிகளான ஸித்தர்களை அவமானம் பண்ணுதல் யாரைத்தான் பீடிக்காது? உன் பாபத்தால் மஹிஷத்தன்மையை அடைந்தபோதிலும், ஸித்தப் பிரசாதத்தால் சாப விமோசனமும் பெறுவாய்".

ஸகல லோகங்களையும் பீடித்த இந்த துஷ்டனும் ரக்ஷிக்கப்பட்டான். சாபதோஷத்தாலே உண்டான மஹிஷத்தன்மை, தவம்புரிந்த உன்னால், ஒ கௌரீ! விமோசனம் அடைந்தது. அதுவும் பரம சிவப்பிரீதிக்காக. வேண்டுமானால் தேஜோலிங்கமான அருணாத்ரிபரியின் பக்தனாய் இருந்திருக்கவேண்டும். பிறகு மஹிஷனாகி, மதங் கொண்டு, எப்படியோ லிங்கமொன்றைப் பெற்றான். மூவுலகங்களிலும் யார்தான் லிங்கதரனைக் கொல்லக்கூடும்? இந்த விஷயம் திரிபுரசம்ஹாரத்திலே தெளிவாயிற்று; ருத்திரனே திரிபுரர்களைப் பாராட்டினார்.

இப்போது உன் கத்தியால் வெட்டுண்ட இவன் கழுத்தினுள், மஹிஷனான போதிலும், லிங்கம் தரிக்கப்பட்டிருக்கிறது. (தீக்ஷையில்லாமல் வஹித்த லிங்கம் நாசகரம் என்று சொல்லப்பட்டது.) ஒரு வேளை சமணர்களுடைய துர்ப்போதனையால் நல்வழியினின்றும் நழுவினானோ? பூர்வஜன்ம தபோபலத்தாலும், ஜாதி ஸ்மரணையினாலும், லிங்காராதனையினாலும், உன் பாதகமல ஸ்பரிசத்தினால் இவன் முக்தனாள் என்பதில் சந்தேகமில்லை. என்னவானாலும் எல்லாப் பாபங்களுக்கும் இந்தக் கிரிவர தரிசனமே உத்தமமான பிராயச்சித்தம்.

தேவி ! நாநாவித சைவ ஸித்தாந்த வேதிகளை அமர்வித்து, ஸகல தீர்த்தங்களையும் வருவித்து, ஒரு தீர்த்தத்தை உண்டாக்கி, அதில் இந்த லிங்கத்தோடு அகமர்ஷண மந்திரத்தை ஜபித்து ஸ்நானம் பண்ணினால், இந்தப் பாபம் ஒழியும். மூன்று வேளைகளும் தினந்தோறும் ஸ்நானம் செய்து, ஒரு மாதம் முடிந்தவுடன் தேவையாக மஹோத்சவம் நடத்தி, அருணாத்ரீசனை ஸகலோபசாரங்களுடன் ஆராதிப்பாயாக. இவ்வாறு, சிவ தத்துவ வசனங்களை முனிவரிடம் மிகப் பிரியத்துடன் ஜகத்ரக்ஷகியான பகவதி கேட்டு, சோணாசல ஸந்நிதியில் தன் பாபங்களைப் போக்கிக் கொள்ள உடனே தீர்த்தஸ்நானம் செய்யத் துணிந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவி சிவனோடு சேருதல்
நம பார்வதி பதயே.

இவ்விதம் முனிவர்களால் பூஜிக்கப்பட்ட கௌதமர் சொன்னதின் பேரில் சிவபக்தனைக் கொன்ற சந்தேகம் கௌரீதேவிக்கு நீங்கியது. பிறகு ஆகாயவாணி காதுக்கு இனிமையாய்,

"கிரீபுத்திரீ ! பாபத்தை போக்க, நீ வேறெங்கும் போகத் தேவையில்லை. நீ உன் கத்தியால் பாறையைப் பிள; அந்தப் பிளப்பிலேயே கங்கை, யமுனை, சிந்து, கோதாவரி, சரஸ்வதி, நர்மதை, காவேரி, சோணாநதி, சோணநதம் ஆகிய நவதீர்த்தங்களும் வெளிப்படும். அதில் அகமர்ஷண மந்திரத்தோடு ஸ்நானம் செய். ஆஸ்விஜமாதத்தில், ஜேஷ்டா நக்ஷத்திரத்தில், கட்க தீர்த்தத்தில் லிங்கத்துடன் கூட நீ ஒரு மாதம் இருந்து, தினந்தோறும் திரிஷவண ஸ்நானம் செய்து, அந்த மாத முடிவில் கையில் உள்ள பாபஹர லிங்கத்தைத் தீர்த்தக் கரையில் திக்பந்தனம் செய்து, லோகரக்ஷணையின் பொருட்டு பிரதிஷ்டை செய். யாரேனும் இந்தத் தீர்த்தத்தில் குளித்து, இந்த லிங்கத்தை ஆராதித்தால், அவனுக்கு சந்தேகமில்லாமல் தாபத்திரயங்களும் நீங்கும். இது மூவுலகங்களின் பாபஹரமான ஸ்தாவர லிங்கம். இதைப் பக்தியோடு தீர்த்தக்கரையில் உத்திராட நக்ஷத்திரத்தில் லோக க்ஷேமத்தின் பொருட்டு ஸ்தாபித்து, பத்து நாள், அனுமதி. பாலா, சினீவாலீ, குஹூ, யாத்ரீயென்னும் தேவகிகளுடன் மஹோத்சவங் கொண்டாடி, கிருத்திகை நக்ஷத்திரத்தில் அவப்ருதஸ்நானம் செய்து, சாயங்காலத்தில் சோணாசலத்தை விதிப்படி ஆராதிப்பாயாக. அதன் பிறகு என் நிஜதேஜோரூபத்தைக் காட்டுகிறேன். நீ இப்படிச் செய்வது லோக ரக்ஷணியின் பொருட்டேதான்" என்று ஒலித்தது.

இதைக்கேட்டு, கௌரீதேவி மஹர்ஷியின் சொல்லையும் ஆகாயவாணியின் வசனத்தையும் ஆதரித்து அவற்றின்படியே செய்யத் தொடங்கினாள்.

தன் தபோபலத்தால் கத்தியைக் கொண்டு பூ தளத்தை அக் கன்னிகை பிளந்தாள். உடனே அந்தப் பிளப்பினின்றும் நவ தீர்த்தங்களும் உண்டாயின. முனிவர்களின் ஆஜ்ஞை பெற்று, தேவி, லிங்கத்துடன் தியானம் பண்ணி, அத் தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணினாள். நவ தீர்த்தங்களும் ஸ்படிகம்போல் இருக்க,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவி இறங்கவே அவள் காந்தியால் அவை உடனே நீலநிறமாயின. தேவி அங்கே முப்பது நாள் வசித்தாள். அவளுக்கு சம்புவின் விரஹத்தால் மனது சலித்தது. தன் சக்தியால், தன் கண் போன்ற கமலங்களையும், தன் முகம் போன்ற உத்பலங்களையும், தன் மந்தஹாசம் போன்ற குமுத புஷ்பங்களையும் அந்தத் தீர்த்தத்தில் உண்டு பண்ணினாள். தேவி அங்கே வசித்ததால் லோகங்களுக்கு நலம் உண்டாயிற்று. எல்லோரும் அபீஷ்ட பலன்களை அடைந்து கிருதார்த்தங்கள் ஆனார்கள்.

ஒரு மாதம் ஆனவுடன், தேவி, உற்சவம் நடத்தி, கார்த்திகை மாதத்தில், கிருத்திகை நக்ஷத்திரத்தில், சாயங்காலம் ஸகல உபசாரங்களுடனும் அர்க்கியங்களுடனும் பூஜித்து அருணாத்ரீச்வரனை சந்தோஷிப்பித்தாள். பிறகு ஜனதம்பிகை,

"விசுவரூப ! சோணாசல மூர்த்தீ ! தேஜோமய ! கிரிலிங்க ! ஸகல பாப ஹர ! உமக்கு வந்தனம் ! பிரம்மா விஷ்ணுக்களாலும் அறிய முடியாத மஹிமையுடைய நீர் அக்னியேயானாலும் லோகானுக்ரகத்திற்காக சாந்தமானீர். ஆனால் தகுந்த காலத்தில் சுயமாகவே காலாக்னியாகி யாவற்றையும் தஹித்துவிடுவீர்."

"கிரி சிரேஷ்ட ! அருணாத்ரீச ! சுந்தரரூபக் கடலே ! உமது ரூபம் மஹா விசித்திரம் ! அதுவோ தங்களுக்குத்தான் தெரியும். தேவர்களால் தான் பூஜிக்கக் கூடியது. தேவ ! நீர் ஸகல தேவர்களுக்கும் மூலமென்று சொல்லப்படுகிறீர். நீர் மஹேசுவரன். உமது ரூபம் திவ்யம். உமது தேஜஸ் மனோவாக்கு இந்திரியங்களுக்கு எட்டாதது. யாரொருவர், முன்னர் பிரம்மாவினால் பார்க்கப்பட்டாரோ, விஷ்ணுவினால் தியானிக்கப்பட்டாரோ அவ்வுண்மை இன்று நான் தெளிவாய்க் கண்டு சுத்தமாகிறேன். ஸர்வ தோஷத்தையும் நீக்கக் கூடிய உமது திவ்யஜோதியைக் காட்டியருளும்" என்று தேவி பிரார்த்தித்து நிற்க, அருணாத்ரிசிவன் திசைகள் யாவையும் ஜ்வலிக்கச்செய்து, தேஜோராசியாய் ஆவிர்ப்பவித்தார். அப்போது கோடி சூரியோதயம் போலவும், கோடி பூர்ண சந்திரன் போலவும், கோடி காலாக்னி போலவும் பரம தேஜஸாய்க் காணப்பட்டார். பரம பக்தியுடன் முனிவர்களும் தேவியும் நமஸ்கரித்தார்கள். ஆனந்தபரவசமாய் தேவி நிற்கையில், தேஜோராசியினின்றும் அருணாத்ரி நாதன் ஹிரண்யமயபுருஷனாகவும் ஸ்ரீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீலகண்டனாகவும் வெளிக் கிளம்பி, "என்னால் குறிக்கப்பட்ட இடங்களில் நீ இருந்து தவம் புரிந்ததைப் பற்றி எனக்கு மிகவும் சந்தோஷமாயிற்று. என் தேஜோரூபம் உன்னால் இப்பொழுது நேரே அறியப்பட்டது. நீ ஜகன்மயமாயிருந்து, அனேக காரணங்களால் லோகங்களை ரக்ஷிக்கிறாய். பூலோகத்தில் நீ தவம் புரிகிறாய். இன்னும் உனக்கு என்ன வேண்டும்? என் கண்மணியே ! உனக்கு இப்போதிப்படியுண்டான அஞ்ஞானம் முழுவதும் என் தேஜஸைப் பார்த்தமாத்திரத்தில் மறைந்தது."

"இந்த மஹிஷன் துஷ்டன்; ஆனால், லிங்க பூஜை செய்த சிவபக்தனை விழுங்கியதால் லிங்கம் ஒன்று இவன் கழுத்தினுள் சிக்கிக் கொண்டது. அது அவன் கழுத்தில் இருந்தபோதிலும், ஒரு நாஸ்திகனுடைய உபதேசத்தால் அவனுக்கு என்னிடத்தில் விசுவாசம் இல்லை. ஆகையால் காலப்போக்கில் இவன் முனிஜன்மத்தை அடைந்தான். என்னை அர்ச்சித்துத் தியானித்துக் கணநாதனானான். பூர்வ ஜன்மத்தில் என் பக்தர்கள் ஒரு போதும் செய்யக்கூடாதது. தீக்ஷையின்றி பலாத்காரமாய்க் கொண்ட லிங்கதாரணம் அதன் உண்மையான பயனைத் தராதது மாத்திரமல்ல; அது இவனுக்கு வஜ்ராயுதம் போல் மரணத்தையும் உண்டு பண்ணியது."

"உனக்கு இதனால் தோஷமொன்றுமில்லை. மேலும் சோணாசலத்தைத் தரிசித்ததால் உனக்கு ஸகல பாபநாசமும் நேத்திரானந்தமும் உண்டாயிற்று. நீ உன் புத்திரனுக்கு வளர்ப்புத் தாய் வைத்து ஸ்தன்யபானம் பண்ணி வைத்ததாலும், பக்தரக்ஷணியானபடியாலும் நீ உண்ணாமுலையாய், கிருத்திகை நக்ஷத்திரத்தில், புத்திரனிடமில்லாமல் பக்த ரக்ஷணையின் பொருட்டு இங்கிருந்தபடியாலும், அதற்குப் பிராயச்சித்தமாக அபீதகுசாம்பிகை என்று விளங்குவாயாக. பக்தானுக்கிரகத்தின் பொருட்டு நீ இந்தப் பூஜையை முழுவதும் செய்துவிட்டு, என்னைத் தியானிப்பாயாக" என்று மிகக் குளிர்ந்த வசனங்களைச் சொன்னார். அம்பிகை வணங்கி, "தேவ தேவ ! என் விரதபூர்த்தி மஹோத்சவத்தில் கருணையோடு உம்மால் எந்த திவ்யரூபம் காட்டப்பட்டு, தேவர்களும் மனிதர்களும் பார்த்தார்களோ அதே ரூபத்தை வருஷந்தோறும், எல்லோரும் கஷ்டங்களினின்றும் விடுபடும் பொருட்டு, இந்தக் கிருத்திகை பௌர்ணமியில் காட்டுவீராக" என்று அவரிடம் பிரார்த்தித்தாள். மஹாதேவன் "அப்படியே ஆகட்டும்" என்று சொல்லி, அருணகிரியிலே மறைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன்பிறகு சகிகளுடன் கூட அம்பிகை பிரதக்ஷிணம் சென்றாள். அவளைச் சுற்றிலும் வியாபித்த திரு மேனியின் காந்தியால் அருணாசலமே மரகதம்போல் விளங்கிற்று. மெதுவாய் நடந்த அவளுடைய பாதபத்மங்களின் காந்தி, பூமியைத் தாமரைப் புஷ்ப தளங்களால் தெளித்தது போல் இருந்தது. அவளுடைய பார்வையின் காந்தி, சோணாத்ரியைச் சுற்றி, மலர்ந்த நீலோத்பலங்களால் அர்ச்சித்தது போல் இருந்தது. இந்திராதி லோகபாலர்களின் ஸ்த்ரீ வர்க்கங்களால் ஸேவிக்கப்பட்டும், மாத்ருணங்களால் சந்தன புஷ்ப பூஷணங்களால் சந்தோஷிக்கப்பெற்றும், வெண்குடை, சாமரங்கள், வாத்தியங்கள், தாம்பூலம் முதலியவைகளை ஏந்தி வரும் தேவஸ்த்ரீகளால் சூழப்பட்டும் சுயம்பிரகாசமான அருணாத்ரியை கௌரீதேவி பிரக்ஷணம் செய்தாள்.

சிவ சாயுஜ்யத்தை விரும்பி, விவாஹக்னியாகச் சுற்றி வருவது போல் பக்தியுடன் சுற்றி வரும் கௌரீதேவியுடன், ஒவ்வொரு அடிவைப்பிலும், சம்புவினால் அனுப்பப்பட்ட தேவர்கள் புதிது புதிதாய்ச் சேர்ந்து கொண்டனர். ஸரஸ்வதீ சமேத பிரம்மாவுடனும், லக்ஷ்மீ சமேத விஷ்ணுவுடனும், தங்கள் தங்கள் சக்தி சமேத திக்குப் பாலகர்களுடனும் ஹிமகிரிகன்னிகை தேவேந்திரனைக்கூட வெட்கச்செய்யும்படி குளிர்ந்து வரங்கொடுத்து, அக்னி மலையைக் குளிரச் செய்வது போலும், தன் தவத்தால் இடைவிடாத மஹாதேவ ஸ்மிருதியுடன் தீர்த்தவசனத்தின் பெருமையை வெளியிடுவதுபோலும், தேவ சமான ரிஷிகளுக்கு உபதேசிப்பது போலும் பால்யத்தின் விளையாட்டும் யௌவனத்தின் தவமும் ஒன்றுகலந்தாற்போலும், விரஹத்தால் தான் தபிக்கையில் தன்னுள்ளிருக்கும் சிவனும் அப்படியே தபிப்பதை சாந்தம் பண்ண வேண்டி ஜலத்தில் இறங்கி நின்றாள். பாறையில் ஸகல தீர்த்தங்களும் ஒன்று கூடியிருப்பதால், தீர்த்தத்தின் மேன்மையை லோகத்திற்குத் தெரிவிக்கவேண்டியேபோல், தானே; அவள் அங்கே நின்றாள்; துஷ்கரமும், கஷ்ட நிவர்த்தகமும், மனோரத சம்பாதகமுமான பஞ்சாக்னியில் செய்த தவத்திற்கு ஆறுதல் தேடுவது போல் நின்றாள்; மஹிஷாசுரனைக் கொன்று, அவன் கழுத்தின் ரத்த தாரையால் நனைக்கப்பட்ட லிங்கத்தைச் சுத்த ஜலத்தால் கழுவ வேண்டியது போல் நின்றாள்.

அபீதகுசநாயிகை – சோணாத்ரீசர்களின் பிதிரீயின் பொருட்டு விசுவசர்மாவால் அருணை என்ற ஒரு மனோஹரமான பட்டணம் உண்டு பண்ணப்பட்டது. அதன் மாளிகைகளின் மாடகூடங்களில் வசித்த வாரஸ்த்ரீகள் உன்னதமான மேடைகளின் கீழே, படிந்த மேகங்களின் மின்னலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெட்கச்செய்யும் சாமரங்களை ஏந்தி, அங்கே பாடினார்கள். ஊரில் ஸித்த, சாரண, கந்தர்வ, வித்தியாதரர்கள் கூடினார்கள். இந்நகரம் எட்டு வாயில்களோடும், எட்டுச் சக்கர ரதங்களோடும், ரதமோடும் வீதிகளோடும், எட்டுத் திக்குப்பால ஸேவையோடும், அஷ்ட ஸித்திகளை உடைய ஸித்தர்களை அஷ்டமூர்த்தியைப் பூஜித்தும், அஷ்டாங்க பக்தியுடன் ஆராதிக்கும் பக்தர்களோடும், அஷ்டாங்க யோகிகளோடும், சாதுர் வர்ண நியமனமும் உபவர்ணமும் கூடின ஜன சமூகத்தோடும், பார்வைக்கு அழகான சோலை வரிசைகளோடும், சங்க, துந்துபி, பேரிகை, மிருதங்கம், மத்தளம், வீணை, வேணு, தாளம் முதலிய வாத்தியங்களுடன் சங்கீதங்களோடும், சிவபரர்களான மஹர்ஷிகளின் வேத கோஷங்களோடும் மிகவும் விளங்கிற்று.

நவக்கிரஹங்களும் ஒருமித்து உதித்தாற்போல் ஜ்வாலிக்கும் நவரத்னங்களுடைய காந்தியால் அல்லும் பகலும் தேவலோகத்தின் கொலுவைப்போல் விளங்கும் விருஷத்துவஜனை எல்லா வேளைகளிலும் நிரந்தரம் ஸேவிக்க எண்ணினாற்போல விஷ்ணு எதிரில் நின்று ஸேவித்தார். தேவ கணங்களோடு இந்திரனும் அங்கு வந்தான். எல்லாப் பக்கங்களிலும் பரிமள புஷ்ப விருஷ்டிகள் தேவலோகத்தினின்றும் பெய்தன. காற்று, ஆகாய கங்கையால் குளிர்ந்து வீசி நான்கு திக்குகளிலும் இனிமையான பரிமளத்தை நனி பரவச் செய்தது. கொம்புகளில் பொன்னாபரணங்கள் சூட்டப்பட்டு, மிகக் கம்பீரமான நந்தியும் "ஹுங்" காரத்துடன் கர்ஜிக்க, எதிரொலிகளால் திக்குகள் குலுங்கின. வஸந்தம் முதலான ருதுக்களும் தங்களுக்குரிய புஷ்பவர்க்கங்களுடன் ஸேவித்தன. நாநா கணங்கள், ஸித்தர்கள், பரமரிஷிகள், தேவர்கள் மற்ற யாவரும் மிக உற்சாகத்துடன் தரிசிக்க வந்து, குங்குமம், கற்பூரம், வாசனைப்பொடிகளைக் கலந்து, கைகளில் முஷ்டி முஷ்டியாய் எடுத்து எல்லா விடயங்களிலும் வாரி இறைத்தார்கள்.

(ஸங்கிரதம்) அதன் பிறகு மிருதங்கம், மத்தளம், பிரம்மதாளம், படகம், துந்துபி, தாளம் வாத்தியங்கள் முதலியவைகளோடு தேவகணங்கள் கோஷிக்க, பூமண்டலம் முழுவதும் மங்களவாத்தியம் நிறைந்தது. தேவ ஸ்த்ரீகள் நடனம் செய்ய, தும்புரு கானம் செய்ய, முனி தேவகணங்களால் சூழப்பட்ட விருஷத்துவஜராம் கருணாநிதியான சிவனும், லஜ்ஜையால் குனிந்த முகத்துடன் நின்ற கௌரீ தேவியைத் தன் மடிமீது அமர்வித்து சந்தோஷித்து, தேவ கணங்கள் சமர்ப்பித்த சந்தனபுஷ்பாதிகளை ஏற்றுக் கொண்டு, மாலை பூண்டு, உமையுடன் மிகவும் விளங்கினார்; தேவியை, வேண்டிய வரம் கேட்கும்படி சொன்னார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது ஜகதம்பாள் திரிபுரஹரனை வணங்கி, சம்புவுடன் பிரியா நிலையை யாசித்தாள். இனிய வார்த்தைகளிற் சிறந்த கௌரீதேவி, லோகானுக்ரஹத்தின் பொருட்டு, பரம கருணையுடன் பின்வருமாறு, "திருஷ்டியையும் மனத்தையும் கவரும் இந்த ரூபத்தை விடக்கூடாது. அபராதியான போதிலும் நான் ஒருக்காலும் உம்மால் கைவிடப்படக்கூடாது. உம்முடைய இந்த ரூபம் மனோஹரமும், லோகமங்களமுமானபடியால் திவ்யானந்தத்தோடுங்கூடின இந்த ரூபத்தை எல்லாரும் எக்காலத்தும் காணட்டும்." "பாம்பும், விஷமும், பிரம்மகபாலமும், பஸ்மமும், மற்ற பயங்கரமான வேஷங்களும் போதும்; இனி வேண்டாம். திவ்ய மாலை, கந்தம், வஸ்திரம், ரத்ன பூஷணங்களோடு நீர் சுகுமாரனாய் ரமியுங்கள். மஹேச்வர ! இங்கே தினம் தினம் தேவ கந்தர்வ கன்னிகைகள் வந்து, நிருத்திய, வாத்திய கீதங்களுடன் உம்மை ஸேவிக்கட்டும். உமது கணங்களும் மானிடராய் உம்மை இரவும் பகலும் இடைவிடாது ஆராதிக்கட்டும்." "உங்கள் கிருபையால் நம்மிருவரின் ஐக்கிய ரூபமான இந்தக் காட்சி பக்தி, ஐசுவரியம், ஸர்வாபீஷ்டஸித்திகளையும் கொடுக்க வல்லதாய் எப்பொழுதும் இருக்கட்டும். தேவே ! சகல மந்திராத்மகமான இந்த அர்த்தநாரீசுவர பிம்பம் தற்சமயம் கொள்ளப்பட்டு, சதா காலமும் பக்தி கைங்கரியத்திற்காக நிலைத்திருக்கட்டும். தெரிந்தோ தெரியாமலோ செய்யப்பட்ட ஸகல அபராதங்களும் உம்மைச் சரணமடைந்த பக்தர்களிடம் க்ஷமிக்கப்படட்டும்" என்று பிரார்த்தித்தாள்.

தேவி சொன்ன இவ்வார்த்தையை அருணாசலேசுவரர் கேட்டு அவள் அஷ்டங்களை நிறைவேற்றினார். மிகப் பிரியத்துடன் கௌரீதேவிக்குப் பூசுவதற்குப் புனுகு கொடுத்து, அவளை நோக்கி, "புலகன் என்ற ஓர் அசுரன் மிருகரூபங்கொண்டு தவம் புரிந்து, என்னிடம் வரம் பெற்றான். அதனால் அவனுடல் அற்புதமான வாசனை வீசவே அதர்ம காரியத்தால் லோகத்திற்குக் கஷ்டம் உண்டாயிற்று. தேவர்கள் என்னைப் பிரார்த்தித்தார்கள். லோக ரக்ஷணையின் பொருட்டு, நான் அந்த அசுரனைக் கூப்பிட்டுத் தன் அசுர தேகத்தை விடும்படி கட்டளையிட்டேன். அவனும் என்னிடம், 'தேவே! உம் ஆக்ஞைப்படி தேகத்தை விடுகிறேன்' என்று சொல்லி, பக்தியுடன் என்னை வணங்கிப் பூஜித்து, மேலும் 'தேவே ! என் சரீரத்தினின்றும் உண்டான வாசனைத் திரவியம் மிகவும் மனோஹரமும், லோகத்தை மோஹிக்கச் செய்வதுமாம். அதை நீங்கள் ஆதரவோடேற்றுத் தரிக்கவேண்டும்.' 'புலகனுடைய சரீரம் சிருங்காரரஸ விருத்திகரமானது. அதை நீரும் ஆதரிக்கவேண்டும். அது பிரியகரமாய் காந்தி சௌபாக்கிய லாவண்யங்களைத் தரட்டும்'. 'தேவ தேவ! ஜகத்பதி! என் தேகத்தை விட்டுவிடுகிறேன். திவ்ய வாசனைகளை விரும்பும் தேவியாலும் இந்தத் திரவியம் கொண்டாடப்படும்'. 'என் வம்சத்தில் உதித்தவர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் தபோபலத்தால் இந்த வாசனை பெற்று, உமது வரைகளிற் சாய்ந்து தங்கள் உடல்களைத் தேய்க்கட்டும்' என்றான். நானும் 'சரி' என்றேன் ! "புலகன், ஜீவனை என்னிடம் ஒப்புவித்துத் தன் சரீரத்தை விட்டான். அவன் சரீரத்தை நான் தரிக்கிறேன். தவம் புரிந்து உன் சரீரம் இளைத்தது. நீயும் இதைப் பூசிக் கொள்" என்று பிரியத்துடன் சிவன் பார்வதிக்குப் புனுகு பூசினார்.

அப்போது பார்வதியின் கையை நோக்கி, "இதென்ன?" என்று கேட்க பார்வதி தன் கையில் புஷ்பம் எப்படி உண்டாயிற்று என்பதைச் சொன்னாள்.

"உம் ஆஜ்ஞையின் பேரில் நான் கைலாஸத்தினின்றும் காஞ்சீபுரத்துக்குத் தவம்புரிய வந்து மானஸ தீர்த்தத்தில் உதித்த சுத்தமான இந்த அல்லிப் புஷ்பத்தால் உம்மை ஆராதித்தேன்; அது அர்ச்சனைக்கு அக்ஷயமாகட்டும் என்று சங்கற்பித்தேன். சதா காந்தியோடு கூடியும், காமதேனு நெய்யினால் அபிஷேகிக்கப்பட்டுமுள்ள ஏகாம்ரலிங்கம் பூபாலர்களால் நன்கு ஆராதிக்கப்பட வேண்டும். லோகத்தைக் காப்பதன் பொருட்டு, அது தர்மக் குறியாக சதா விளங்கவேண்டும். அதனால் ஸர்வாபீஷ்ட ஸித்தியும், என் பிரதீயும் உண்டாகும். முப்பத்திரண்டு லோகங்களின் க்ஷேமத்தின் பொருட்டு, அது என்னால் ஸ்தாபிக்கப்பட்டது. அதைத் தொழுகிறவர்கள், முயற்சியுடன் ஸகல பூஷணங்களால் அலங்கரித்து, ஸகல போகங்களும் கற்பித்து அந்த லிங்கத்தை ஆதரிக்கவேண்டும்; ஏனெனில், என் கன்னிகா பாவத்தில் மிகக் காந்தியோடு அது ஸ்தாபிக்கப்பட்டது."

"என்றிவ்வாறு சொன்னதைக் கேட்டு வரப்பிரதரான சோணாசலேசுவரர் தேவிக்கு வேண்டிய வரங்கள் அனைத்தையுங் கொடுத்தார். அந்த ஈசுவரன் தானே லோகபூஜ்யமான சோணாசலமாய்க் காணப்படுகிறார். அது எக்காலத்திலும் வரப்பிரசாதம். கௌரியோடும், ஸகல உத்தம போகங்களோடும் நிறைந்த சாம்பமூர்த்தி, அருணாசலமாக நிற்கிறார். இதைத் தரிசித்தவர்கள், நினைத்தவர்கள், வணங்கியவர்கள் யாவரும் கிருதார்த்தர்களே. அருணாசல மாஹாத்மியத்தைக் கேட்டமாத்திரத்தில் ஸகல சம்பத்தும் முற்றிலும் உண்டு. இதை ஞாபகம் கொண்டவர்கள் ஸ்ரீமந்தர்களும், வாசஸ்பதிகளும், ரூபவந்தர்களும், அளவற்ற பலமுடையவர்களும் ஆவதுடன் அவர்களுடைய ஸகல பாபங்களும் நசிக்கின்றன. இதைத் தரிசித்த அளவில் ஸர்வ புண்ணிய ஸ்நான பலனும், ஸகல யஜ்ஞ யாகங்களின் பலனும், சதாசிவகிருபையும் கைகூடும். சிவாஜ்ஞையால் கைலாஸத்தினின்றும் இங்கு சாப விமோசனத்திற்காக வந்து, அருணாசல தரிசனத்தால் தேவி சாபவிமோசனம் அடைந்தாள். பூமண்டலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவக்ஷேத்திரங்கள் பலவற்றிலும், தேவ லோகத்தில் புண்ணியக்ஷேத்திரங்கள் பலவற்றிலும், இங்கேதான் சம்பு விசேஷப் பிரீதி அடைந்தார். சதாசிவன் அருணாசலமாக இங்கே காணப்படுகிறார்; இதுவே பரம தேஜஸ்; இதுவே ஸகல தேவர்களும் வணங்கும் தேஜோலிங்கம்; கர்மபூமி இதனால் தர்மாதிக்கியம் அடைந்தது. அருணபாதலநாதருடைய காந்தியால் ஸகல பாபங்களும் தஹிக்கப்பெற்ற பக்தகோடிகள் நாட்டில் எங்கும் சுகமாய் இருக்கிறார்கள்.

அருணாத்ரீசனைப் பிரதக்ஷிண, நமஸ்கார, தபோ நியமங்களால் ஆராதித்தவர்களுக்கு சம்பு வசமாகிறார். வேறு எவ்விதத் தவத்தாலும், தானங்களாலும், யோகங்களாலும், அருணாசல தரிசன சமமான பிரீதி சம்புவுக்கு உண்டாவதில்லை.

சுயம்புவான அருணகிரியைச் சுற்றிலும் வானுறையும் வேதங்கள், இதிஹாஸங்கள் எல்லாம் கிரிகள் வடிவாய் நின்று துதிக்கின்றன.

அருணாசல மஹிமை முழுவதையும் பிரம்மாவாகிய நானாவது, விஷ்ணுவாவது கோடி வருஷங்களில்கூடச் சொல்லி முடியாது. விஷ்ணுவை முன்னிட்ட தேவர்களும், கற்பக விருக்ஷங்களும் மறைந்திருந்து அருணாசலத்தை ஸதா ஸேவிக்கின்றார்கள்.

அருணாசலலிங்கத்தை என்றும் பூஜிப்பவர்களுக்கு வியாதி, பீடை, மனோ துக்கம், முதலான கலி தோஷங்கள் எவையும் இரா என்று புஷ்பவதன மகிழ்வுடன் கூறினார்.

கற்பகாலத்திலும் அடையமுடியாப் புண்ணியத்தைத் தரக்கூடிய அருணாசலசரிதம் என்ற சிவமாஹாத்மியம் முழுவதையும் சொன்னேன்." என்றிவ்வாறு பிரம்மாவின் முகத்தினின்றும் வெளிவந்த உதாரமான அருணகிரிகதாம்ருதத்தை இரு காதுகளாலும் மனம் பூரிக்கக் கேட்டு, ஸனகமுனிவர் தவத்தின் பயனை அடைந்தார்.

*ஸ்ரீ அருணாசல மஹாத்தியம்.*

*ஹர ஹர மஹா தேவா.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரமனை வாங்கிய பார்வதியும் பங்கம் விளைத்த காமனும்

தேவர்கள் அனைவரும் பிராமனைக் கும்பிட்டுத் தலைகுனிந்து நின்றார்கள். அப்போது நான்முகப் பிரமன் அத்தேவர்களைப் பார்த்து, 'அமரர்களே! நீங்கள் எதற்காக இங்கே வந்தீர்கள்? உங்களுக்கு என்ன துன்பம் நேரிட்டது?' என்று கேட்டார்.

தேவர்கள் அனைவரும் ஒன்றாகக் கூடி தாரகாசுரனால் நாங்கள் அனுபவிக்கும் துன்பம் தங்களுக்குத் தெரியாததா? அந்தத் துன்பத்தைத் தயவு செய்து தீர்க்க வேண்டும், என்றார்கள். பிரம தேவன் அவர்களை நோக்கி வானவர்களே! நச்சுமரமாக இருந்தாலும் அதை வளர்த்துக் காப்பாற்றியவனே வெட்டுவது உசிதமல்ல என்பதைப் போலவே என்னால் வரம் பெற்று விருத்தியடையப் பெற்றவன் என்னாலேயே வதம் செய்யப்படுவது சரியல்ல. ஆகையால் உங்களுக்கு நான் ஓர் உபாயம் சொல்லுகிறேன். சிவபெருமானின் வீரியத்திற்கு உற்பத்தியாகும் குமாரன் தான், அவ்வசுரனைக் கொல்ல முடியும்! அப்படிப் சிவ வீரியத்தில் புத்திர உற்பத்தியாவது துர்லபமாம். இது விஷயமாக ஒரு யோசனை சொல்லுகிறேன். அதன்படி நீங்கள் செய்ய வேண்டும்.

இமயமலையின் அழகான கொடுமுடியின்மீது சிவபெருமான் யோக நிஷ்டையில் அமர்ந்திருக்கிறார். நாரத முனிவராலும் பர்வத ராஜனாலும் மகாதேவனுக்குப் பணிவிடை செய்ய வேண்டும் என்று பார்வதிதேவி நியமிக்கப்பட்டிருப்பதால் அப்பார்வதிதேவி தன் தோழியர் இருவருடன் சிவபெருமான் யோகஞ் செய்யுமிடத்தில் பணிவிடை புரிந்து வருகிறாள். அவளோடு சிவபெருமான் எப்போது இணங்கிக் கூடுகிறாரோ அப்போது வீர்யம் உண்டாகும். பிறகு உங்கள் காரியமும் கை கூடும். இதில் சந்தேகமில்லை. பரமேஸ்வரனின் வீரியத்தைக் கவர்வதற்கு பார்வதியே தகுதியானவள்' அவளையன்றி வேறு அன்னியப்பெண்களால் அது இயலாது. எனவே அதற்கேற்ற உபாயங்களை நீங்கள் கையாள முயலுங்கள் அப்போது தான் உங்களுக்குக் காரியசித்தி உண்டாகும்! என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரம்மாவின் யோசனையைக் கேட்டதும் தேவர்கள் ஒருவரோடொருவர் ஆலோசித்துக் கொண்டு தேவேந்திரனிடம் சென்று நடந்தவற்றை அறிவித்தார்கள்.

'அமரர்பதியே! என்ன செய்தால் சிவபெருமானுக்குப் பார்வதியிடம் இச்சை ஏற்படுமோ அதைச் செய்து பிரமனது யோசனையை நிறைவேற்றுவது உமது பொறுப்பு என்று சொல்லிவிட்டு தேவர்கள் தம் இருக்கைகளை அடைந்தார்கள். தேவர்கள் சென்றதும் தேவேந்திரன் மன்மதனை நினைத்தான்.

உடனே மன்மதன் தன் தேவியான இரதியோடு இந்திரன் முன்னால் வந்து நின்று வணங்கி, 'தேவராஜரே, நீங்கள் ஏன் என்னை நினைத்தீர்கள்? அதைச் சொல்லுங்கள், அந்த வேலையைச் செய்வதற்கே நான் வந்திருக்கிறேன்!' என்று சொல்லி விட்டு மௌனமாக இருந்தான். இந்திரன் மன்மதனை நோக்கி "மீனக்கொடியுடையவனே! இப்போது எந்தக் காரியம் வந்துள்ளதோ அது உன்னால் செய்யக் கூடியதாகும். எவ்வெவை என்காரியங்களோ அவையெல்லாம் உன் காரியங்களே தவிரவேறல்ல நல்ல நண்பர்கள் எனக்கு பலருண்டு. ஆயினும் காமதேவனான உனக்கு இணையான நண்பன் எப்போதுமே எனக்கு இருந்ததில்லை. போர்க்களத்தில் எனக்கு பயன்படுவதற்காக பிரமதேவனால் என் வஜ்ராயுதம் சிருஷ்டி செய்யப்பட்டது. மாறனான உன்னை மற்றொரு அஸ்திரமாக பிரமனே நியமித்தார். இந்த இரண்டு அஸ்திரங்களில் வஜ்ராயுதம் ஹிம்சிக்கும் இயல்புடையது. ஆனால் காமதேவனான நீயோ இன்பம் விளைவிக்கும் இயல்புடையவன் மன்மதனே! இவ்விரண்டு அஸ்திரங்களில் நீயே சிறந்தவன். நீயே ஆற்றல் மிகுந்தவன் ஏனென்றால் என் வஜ்ராயுதம் பயனின்றிப் போனாலும் போகும் ஆனால் பஞ்சபாண மன்மதனான நீயோ ஒரு சமயத்திலும் பயனளிருக்காமலிருக்க மாட்டாய்! இப்போது நேர்ந்துள்ள நோக்கத்தைச் சாதிக்க நீயே தகுந்தவன். உன்னைத் தவிர மற்றவர்களால் அதைச் செய்யவே முடியாது. உலகத்தில் வள்ளலுக்கு வறுமை வந்துள்ள போதும் சூராதி சூரனுக்குப் போர்க்களத்திலும் நண்பனுக்கு அபாய நெருக்கடியிலும் புருஷனுக்கு அசக்தி காலத்திலும், பெண்களுக்கும் நற்குலத்தில் பிறந்தவர்களுக்கும் ஆபத்துக் காலத்திலும் தொல்லைகள் மூளும் போது மனிதர்களால் பரீட்சை உண்டாகிறது. ஓ ! நட்பிற் சிறந்த ரதிநாதனே ! இப்போது உன் சம்பந்தமான பரீட்சை ஏற்பட்டுள்ளது. இந்தக் காரியம் எனக்கு மட்டும் சுகமளிப்பதல்ல. தேவர்கள் அனைவருக்குமே சுகத்தைக் கொடுக்கத்தக்கது. இந்த விஷயமாக நானே யாசிப்பதால் இந்தச் சுபமான காரியத்தை நீயே செய்ய வேண்டும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு தேவேந்திரன் சொன்னதைக் கேட்ட மன்மதன் புன்னகையோடு இந்திரனை நோக்கி, 'தேவாதிபரே! நம் இருவருக்கும் பேதமில்லை. ஆகையால் நீர் ஏன் இப்படிச் சொல்ல வேண்டும்? உலகத்தில் உபகாரம் செய்பவன் தான் செய்யும் செயலால்தான் தன்னைத் தெரியப்படுத்திக் கொள்கிறானே தவிர வெறும் வாய்ப்பேச்சால் தெரியப்படுத்துவதில்லை. எவன் ஒரு வேலையைத் தானே செய்து முடிக்கத் திறமையுள்ளவன் என்று விளக்கமாக வாய் விட்டுச் சொல்கிறானோ அவன் எந்த வேலை செய்யப் போகிறான்? அப்படி வாய் விட்டுச் சொல்வது உசிதமல்ல என்றாலும் நான் சொல்வதைக் கேளும், உம்முடைய பதவியைப் பறித்துக் கொள்வதற்காக எவன் உக்கிரமாகத் தவஞ் செய்கிறானோ அவனை ஒரே க்ஷணத்தில் பெண்ணின் கடைக்கண் பார்வையாலும் என் காம பாணங்களாலும் வீழ்த்திவிடுகிறேன். அவன் தேவனாயினும் ராட்ஷதனாயினும் மகா முனிவனாயினும் அவனை க்ஷணநேரத்தில் காம இச்சைக்கு ஆளாக்கி வீழ்த்தி விடுகிறேன். இப்போதே உமது வஜ்ராயுதத்தையும், இதர போர்க்கருவிகளையும் தூர எறிந்து விடும். உமக்கு மிகவும் நண்பனும் மன்மதனுமான நான் வந்திருக்கும் போது அக்கருவிகள் என்ன வெற்றியைத் தரப் போகின்றன? யோகமூர்த்தியான சிவபெருமானைக் கூட என் காம பாணங்களுக்கு இலக்காக்கி விடுவேன் என்றால் மற்றவர் விஷயத்தில் என் வெற்றியைப் பற்றிக் கேட்கவும் வேண்டுமா? என்று பெருமையோடு சொன்னான்.

உடனே இந்திரன் உற்சாகமடைந்து 'மன்மதா' நான் எந்தக் காரியத்திற்காக உன்னை நினைத்தேனோ அந்தக் காரியத்தையே நீயும் சொல்லி விட்டாய். உன்னை எதற்காக நினைத்தேன் என்பதைச் சொல்லுகிறேன், கேள்.

தாரகன் என்ற கொடிய அசுரன், பிரமதேவரிடம் வரம் பெற்றுத் தர்மங்களை அழித்து உலகங்களுக்கு ஒரு பெரும் துன்பமாக பீடித்துக் கொண்டிருக்கிறான். சகல தேவர்களும் நிர்மலர்களான மகரிஷிகளும் அந்த அசுரனால் துக்கப்பட்டு தத்தளிக்கிறார்கள். அவ்வசுரனை எதிர்க்கும் விஷயத்திலோ தேவர்களின் ஆயுதங்கள் பயனற்றுப் போயின இத்தகைய கொடிய அசுரனுக்கு அஸ்திரங்களால் மரணம் கிடையாது. அந்தத் துன்மார்க்கன் தாரகாசுரனுக்குச் சிவபெருமானின் வீரியத்தால் உற்பத்தியாகும் குமாரனால் தான் மரணம் உண்டாகுமாம்! ஆகவே காம சம்பந்தப்பட்ட இந்தக் காரியத்தை உன்னால் தான் நிறைவேற்ற முடியும். இந்தக் காரியத்தை நீ உடனடியாகச் செய்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். சிவபெருமான் இப்போது கண்மூடி நிஷ்டையில் அமர்ந்து மாபெரும் யோகஞ் செய்து கொண்டிருக்கிறார். அவருக்குப் பணிவிடை செய்வதற்காகப் பார்வதிதேவி தன் தோழியருடன் அவர் அருகில் அவளது தந்தையான ஹிமாசல மன்னனின் உத்தரவு பெற்றுக் கொண்டு இருப்பதாக நாமும் கேள்விப்படுகிறோம். ஆகையால் மகாயோகியான சிவபெருமானுக்கு யோகம் கலைந்து எப்படி அந்தப் பார்வதியின் மேல் ஆசையும் காமமும் உண்டாக முடியுமோ அப்படிச் செய்ய வேண்டியது உன் கடமையாகும். இந்த உபகாரத்தைச் செய்தால் நீயும் கிருதார்த்தனாவாய், இதனால் உலகங்களுக்கு மூண்டுள்ள துன்பங்களும் நீங்கிப்போய் விடும். அதில் சந்தேகமேயில்லை!' என்றான்.

உடனே கரும்புவில் காமதேவன் புன்முறுவலோடு தேவேந்திரனைநோக்கி, சிவபெருமான் இப்போது யோக நிஷ்டையில் அமர்ந்திருந்தாலும் சரி! அவரை பார்வதியிடம் மிகவும் மையல் கொள்ளச் செய்து விடுவேன். இதில் சந்தேகம் வேண்டாம்!' என்றான்.

பிறகு அவன் தேவேந்திரனின் வார்த்தையைத் தன் தலை மீது தாங்கித் தன் காதல் நாயகியான ரதிதேவியோடும் அன்பான வசந்தனோடும் சேர்ந்து கொண்டு எந்த இடத்தில் பரமசிவன் கண்மூடிப் பரம யோகம் செய்து கொண்டிருந்தாரோ அந்த இடத்திற்குப் போய்ச் சேர்ந்தான்.

உடனே வசந்தன் தன் தர்மச் செயல்களைத் துவக்கினான். வஸந்த ருதுவிற்கு உரிய தர்மங்கள் அந்த வனத்தைச் சேர்ந்தன. அந்தவனத்தில் இருந்த பலபூமரங்களில் மலர்கள் பூத்துக்குலுங்கி கமகமவென வாசனை வீசின. தென்னைமரங்களிலும், மாமரங்களிலும், அசோக மரங்களிலும் அரும்புகள் அலர்ந்தன. மகிழம்பூ மரங்களில் வண்டுகள் இன்னிசை மீட்டி மொய்த்தன. பூங்குயில்கள் கூவி மோகமூட்டின, குளுமையான சந்திர கிரணங்கள் காமாவஸ்தையடைந்துள்ள ஆடவர்களைக் கூடிக்களிப்பதற்கான காலங்களில் தம் நாயகரிடம் வேட்கையோடு செல்லவைத்தன. தென்றல் இன்னிசை பாடி இனிமையாக வீசியது. அவ்வனத்திலிருந்து முனிவர்களுக்கும் அடக்கவொண்ணாத காமப் பெருக்கைத்தென்றல் காற்று எங்கும் பொங்கி எழச் செய்தது. மரங்களும் கற்களும் கூட மன்மதா சக்தியைப் பெற்றனவென்றால் தேவர்கள் மனிதர்களைப் பற்றிச் சொல்லவா வேண்டும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாவருடைய துன்பத்தையும் போக்குபவரான சிவபெருமான் அப்போது அங்கு அகாலத்தில் வஸந்த ருது தோன்றியதைக் கண்டு வியந்துவிட்டு மீண்டும் கடூரமான யோகத்தில் ஆழ்ந்தார்.

இவ்வாறு வஸந்த ருது வியாபித்திருக்கும் போது மன்மதன் தன் தேவி ரதியோடு கூடியவனாய் சிவபெருமானுக்கு இடது புறத்தில், தன் கரும்புவில்லை ஏந்தியவனாக நின்றான். அந்நிலையில் இரதி அந்த மன்மதரைக் கண்டு யார்தான் மோகிக்க மாட்டார்கள்? அந்தச் சமயத்தில் பார்வதி தேவியானவள் பலவிதமான நறுமண மலர்களைச் சேகரித்துக் கொண்டு தன்தோழிகளுடன் சிவபெருமான் இருக்குமிடத்திற்குச் சிவபூஜை செய்வதற்காக வந்தாள். இந்த உலகத்தில் அதி உன்னதமான சௌந்தர்யங்கள் எத்தனை உண்டோ அத்தனை அழகுக் கவர்ச்சிகளும் பார்வதி தேவியிடம் பொலிவுடன் நிலைத்திருந்தன. அதோடு வஸந்த ருதுவில் பூத்த புத்திளம் மலர்களும் மன மகிழ்ச்சியோடு அத்தேவியால் அணியப்படுமானால் அவளது பேரழகைப் பற்பல ஆண்டுகள் வருணித்தாலும் முற்றிலும் வருணித்துவிட முடியுமா? யோக நிஷ்டையில் அமர்ந்திருக்கும் சிவபெருமானின் அருகே பருவ சுந்தரியாக பார்வதிதேவி எப்போது நெருங்கினாளோ அப்போதே அவள் மீது சிவபெருமான் காதலும் மோகமும் கொள்ளும்படி காமதேவனான மன்மதன் தன் கரும்பு வில்லை வளைக்க முயன்றான். உடனே அந்த வில் அவன் கையிலிருந்து நழுவி சிவபெருமானின் அருகில் போய் விழுந்தது. அதனால் சிவனாரின் யோகமும் கலைந்தது.

அப்போது கருநெய்தல் மலர்களைப் போல் கவர்ச்சியான கண்கள் வாய்ந்த பார்வதிதேவி மிகவும் பிரியத்தோடு சிவபெருமானை வணங்கிப் பூஜைகள் செய்து கொண்டிருந்தாள். அதி அழகான உடற் பொலிவுடன் குலுங்கும் பார்வதி தேவியைச் சிவபெருமான் உற்றுப் பார்த்துக் கவர்ச்சியுற்று அவளது வனப்பையெல்லாம் வருணிக்கத் தொடங்கி விட்டார்.

இது முகமோ அல்லது முழுநிலவோ? இவை கண்களோ கரு நீல மலர்களோ? இக்கண் புருவங்கள் இரண்டும் காமதேவனின் கரும்பு விற்களோ? இது அதரமோ? கொவ்வைக் கனியோ? இது நாசியோ கிளியின் மூக்கோ; இது குரலோ குயிலின் ஆலாபனையோ? இது மத்யமோ? இந்தச் சுந்தரியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடையையும் உருவத்தையும் மலர்களையும் ஆடைகளையும் சௌந்தரியத்தையும் என்னவென்று வர்ணிப்பது? என்று பார்வதியை வருணித்துக் கொண்டே சிவபெருமான் தமது யோகத்தை விட்டுவிட்டார். அவர் பார்வதி தேவியின் முன்றானையை எவ்வளவு நேரம் கையால் தொட்டு ஸ்பரிசித்தாரோ அத்தனை நேரமும் தேவி தூரத்திலேயே நின்று கொண்டிருந்தாள். மங்கையருக்குரிய நாணத்தோடு தன் அங்கங்களில் ஒளிவீச அவள் அடிக்கடி கடைவிழிகளால் சிவபெருமானைப் பார்த்துக் கொண்டும் நின்றாள் அவ்விதம் பார்வதிதேவி செய்யும் சிருங்காரங்களையெல்லாம் பார்த்த சிவனார் அதிக மையல் கொண்டு 'ஆஹா! இவளைக் கட்டியணைக்கும் ஆலிங்கனத்தை நான் அடைவேனானால் இதை விட நான் அடையும் சுகம் வேறுண்டோ? என்று க்ஷண நேரம் யோசித்து, நான் ஏன் மோகமுற்றேன்? சர்வவேஸ்வரனான நானே ஆனந்தத்தோடு இவளது அங்க ஸ்பரிசத்தை இச்சிப்பேனானால் வேறு எந்த க்ஷீத்திரன் தான் எந்தெந்த அற்பச் செயல்களையும் இச்சிக்க மாட்டான்!' என்று மனந்திரும்பி சர்வாத்மாவான சிவபெருமான் திடமான பயங்க பந்தமாயயோக பட்டத்தைத் தரித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரதியின் வினையை நீக்கி பயனை அடைந்த பார்வதி

'தவஞானிகளே! அதன் பிறகு நிகழ்ந்தவற்றைச் சொல்லுகிறேன் கேளுங்கள், யோக நிலையிலிருந்து வழுவியதை உணர்ந்த சிவபெருமான் இதற்குக் காரணம் ஏதாவது இருக்கவேண்டுமேயென்று நினைத்து நான்கு திசைகளையும் பார்த்தார். அப்போது தன் இடது பக்கத்தில் இருந்து கொண்டு மன்மதன் கரும்பு வில்லை வளைத்து காமக்கணைகள் தொடுத்துக் கொண்டிருந்ததைப் பார்த்து விட்டார். பார்த்ததுமே அவர் கடுங்கோபம் கொண்டு 'இதென்ன விந்தை? எவராலும் ஆக்கிரமிக்க முடியாத என்னைக்கூட துஷ்டனான மன்மதன் விட்டுவிடவில்லையே' என்று சிவபெருமான் தமது திருவுளத்தில் எண்ணும்போதே அவரது நெற்றிக் கண்ணிலிருந்து உயரக் கிளம்பும் ஜ்வாலைகளோடு நெருப்பு வெளிப்பட்டது. அந்த அக்கினியால் அப்பொழுதே மன்மதன் எரிந்து சாம்பலானான். மகா வலிமைசாலியும் காமவல்லபவனுமான மன்மதன் மாண்டதை அறிந்ததும் தேவர்கள் மிகவும் துக்கப்பட்டார்கள். சிவபெருமான் அந்த க்ஷணத்திலேயே அந்த இடத்தைவிட்டு வேற்றிடஞ் சென்றார், பார்வதியும் திடமான உள்ளத்தோடு தன் ஆபரணம் முதலானவற்றை எடுத்துக் கொண்டு தன் தோழியருடன் தன் தந்தையின் அரண்மனைக்குச் சென்றுவிட்டாள்,

அப்போது மன்மதனின் நாயகியான இரதிதேவி கைலாசநாதரின் கடும் கோபத்தால் தன் காதற்கணவன் எரிந்து சாம்பலானதைக் கண்டதும் துக்கம் மேலிட்டு மூச்சுமுட்டி மூர்ச்சையானாள்... பிறகு சுயநினைவு திரும்பியதும் ஆற்றமுடியாத துக்கத்தோடு கூச்சலிட்டு அழுதாள். இரதிதேவி அழும்போது அந்த வனமே துக்கத்தில் ஆழ்ந்தது. ஆடும் மயில்கள் ஆட்டத்தை மறந்து அயர்ந்து நின்றன. மரங்களின் கிளைகளும் இலைகளும் அசைவற்று ஒடுங்கியிருந்தன. மிருகங்கள் தங்கள் மேய்ச்சலை ஒழித்தன. வண்டுகள் தங்கள் ரீங்காரத்தை நீங்கின. தவ முனிவர்கள் எப்படி மௌனமாக இருப்பார்களோ, அவர்களைப்போலவே பறவைகளுங்கூட மௌனமாக இருந்தன. காற்றுக்கூட பத்துத் திசைகளிலும் வீசவில்லை. இவ்வாறு சூழ்நிலைகள் முழுவதுமே சோகத்தில் ஸ்தம்பித்துப் போயிருக்கும்போது அசைவற்ற அந்த நிசப்தத்தில் இரதிதேவி பெரிதாகப் புலம்பலானாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஐயோ! என்ன செய்வேன்? இனி எங்கு போவேன்? என் கணவரைத் தேவர்கள் வீணிலே அழைத்து என்ன காரியஞ் செய்து விட்டார்கள்? ஓ நாயகனே என்று கதறி அழுது கைகளையும் கால்களையும் அடித்துக் கொண்டு கூந்தலையும் அறுத்தாள். பிறகு அவள் துயரத்தினூடே 'உலகத்தில் சுகத்தைக் கொடுப்பவன் ஒருவனுமில்லை, துக்கத்தைக் கொடுப்பவனும் ஒருவனும் இல்லை. ஆனால் எல்லா உயிர்களும் தான் செய்த வினையை அனுபவிக்கிறது. ஆகையால் தேவர்களைக் குறித்துச் சோகிப்பதில் பயனில்லை!' என்றாள்.

இரதிதேவியின் அழுகைக் குரலைக் கேட்டதும் தேவர்கள் நெஞ்சுருகி சிவபெருமானிடம் சென்று அவரைத் துதித்து, உலகங்களுக்குச் சுகத்தை விளைவிக்கும் சர்வேஸ்வரரான சங்கரரே! எங்கள் விண்ணப்பத்தைக் கேட்டருள வேண்டும், இப்போது மன்மதன் செய்த காரியம் அவனுக்காகச் செய்யப்பட்ட குறும்பல்ல? துஷ்டனான தாரகாசுரனால் பீடிக்கப்பட்ட தேவர்களின் வேண்டுகோளாலே செய்யப்பட்டது. இதில் ஐயமில்லை. எம்பெருமானே! பிறை சூடிய பெம்மானே. கருணைகூர்ந்து அருள் புரியவேண்டும். ஆண்டவனான நீரே கோபித்தால் அகில அண்டங்களும் இப்பொழுதே அழிந்துவிடும். காதற்கணவனை இழந்துகதறும் ரதிதேவியின் துக்கத்தைகண்டவர்களெல்லாம் மரணமூர்ச்சைக்கு ஆளானவர்கள் போலச் சோகமுற்று இருக்கிறார்கள். ஆகையால் ஐயனே இரதிதேவியின் சோகத்தைப் போக்க வேண்டும்!'' என்று சொல்லி சிவபெருமானைப் பிரார்த்தனை செய்தார்கள்.

சிவபெருமான், மனமிளகிக் கூறலானார்;

தேவர்களே! இரதிதேவி துக்கிப்பது உண்மை. ஆயினும் எது உண்டோ அது வேறாக மாட்டாது. ருக்மணிபதியான ஸ்ரீ கிருஷ்ணன் துவாரகாபுரியில் வாசம் செய்து குமாரர்களை உண்டு பண்ணப் போகிறான். அதுவரையில் சாம்பலான இந்த மன்மதன் சரீரம் இல்லாதவனாகவே இருக்க வேண்டும். அதன் பிறகு கிருஷ்ணன் ருக்குமணியிடம் மன்மதனை உருவாக்குவான். அந்த மன்மதனுக்கு பிரத்யுமனன் என்ற பெயர் வழங்கும். அதில் சந்தேகப்பட வேண்டாம். இந்த மன்மதன் ருக்மணியிடம் மீண்டும் பிறந்தவுடனேயே இவனைச் சம்பரன் என்ற அசுரன் ஒருவன் கவர்ந்து தூக்கிக் கொண்டு பெரும்கடலைக் கடந்து தன் தலைநகருக்குச் செல்வான். அவ்வளவு காலம்வரை ரதிதேவி அவ்வசுரனது பட்டினத்தில் இருக்கட்டும்! அதே நகரத்தில் அவள் மன்மதனையடைவாள், அதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறகு சம்பராசுரனை மன்மதன் யுத்தத்திலே கொன்று, அவனது பொன்பொருட்களையெல்லாம் தன் நகரத்திலே கொண்டு போய்ச் சேர்த்துத் தானும் தன் நாயகியுடன் துவாரகையை மீண்டும் அடைவான். இது சத்தியம் என்று அருள் புரிந்துவிட்டு. தேவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும்போதே தம் திருவுருவை மறைத்தார். தேவர்களும் இரதிதேவியிடம் சென்று சிவபெருமான் சொன்ன வார்த்தைகளை அவளிடம் எடுத்துக்கூறிவிட்டுத் தங்கள் இருப்பிடத்தை அடைந்தார்கள். இரதிதேவியும் தனக்குச் சிவபெருமான் கட்டளையிட்டவாறு அந்த சம்பராசுரனின் நகரத்திற்குப் போய்ச் சேர்ந்தாள்.

மாமுனிவர்களே, அவள் அசுரப் பட்டணத்தை அடைந்ததும் சிவபெருமானால் குறிப்பிடப்பட்ட காலத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தாள். தேவர்களும் ஆ, ஆ இனி என்ன நேருமோ? சிவகுமாரன் எப்போது உற்பத்தியாகி எப்போது தாரகாசுரவதம் நடைபெறுமோ? என்று மிகவும் கவலையோடு எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள். பார்வதி தேவியும் தன் தந்தையான பர்வதராஜனின் அரண்மனையை அடைந்து மாதாவான மேனையுடன் சேர்ந்து, தன் சௌந்தரியரூபத்தை நிந்தித்துக் கொண்டிருந்தாள். தூங்கும்போதும் தண்ணீர் அருந்தும் போதும், உணவருந்தும்போதும், நடக்கும்போதும் தோழியர்களின் நடுவில் இருக்கும்போதும் சிவபெருமானையே நினைத்து ஏக்கத்தோடு வருந்திக் கொண்டிருந்தாள். இவ்வாறு துக்கத்துடன் சுகமின்றி சிவ தியானத்துடன் 'சிவ சிவ' நாமங்களை ஸ்மரித்துக் கொண்டிருந்தாள், அந்தச் சமயத்தில் நாரத முனிவர் புன்சிரிப்போடு வீணாகானம் இசைத்தபடி பார்வதி இருக்குமிடத்தில் வந்து சேர்ந்தார். தேவி பார்வதியும் அவரை வரவேற்று உபசரித்தாள். அப்போது சிவபெருமானை அடையும் வழி பற்றி நாரத முனிவரிடம் பார்வதி கேட்டாள். அதற்கு நாரதன் புன்முறுவல்பூத்து 'ஓ. தேவி! சிவபெருமானைத் தவத்தாலேயே அடைய வேண்டும் அவ்விதம் தவத்தாலும் அவரை அடைய முடியவில்லையென்றால் பிரமன் முதலிய தேவர்களாலும் அவரை அடைய முடியாது! என்றார்.

*அரகர நமப்பார்பதிபதயே*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாய்கொடுத்து வார்த்தையாடிய வேதியர் தேவியோடு விடு செல்லுதல்

பார்வதி அனுப்பிய பிராண சகி புன்னகையோடு கிழட்டு வேதியரிடம் சென்று ''ஐயரே! பார்வதிதேவி ஏன் தவஞ்செய்கிறாள் என்பதுதானே தங்களுக்குத் தெரிய வேண்டும்? சகல ஐசுவரியங்களும் கூடியிருந்துங்கூட இந்திரன் முதலான தேவர்களையெல்லாம் புறக்கணித்துவிட்டு பிநாசம் என்ற வில்லேந்திய சிவபெருமானையே பிரிய தன் காதற் கணவராக அடைய வேண்டும் என்று தான் பார்வதி இப்படி அரும் தவம் செய்கிறாள் இவள் வைத்த மரக்கன்றுகள் கூட பெரிய விருட்சங்களாகிப் பூத்துப் பயன் தரத் துவங்கிவிட்டன. இவளோ நாரதர் கூறியபடியே இன்னும் தவஞ் செய்கிறாள்!'' என்றாள். அவளை அவ்வாறு பேசவைத்து விட்டு பார்வதி தனித்து நின்றாள்.

வேதியர் வியந்தவர் போல் பார்வதியை நோக்கி, 'ஏ பார்வதி உன் தோழி சொல்பவை உண்மைதானா? அல்லது பெண்களுக்கே உரிய வெறும் பரிகாசமா? நிச்சயத்தை நீயே ஏன் என்னிடம் சொல்லக்கூடாது?'' என்று கேட்டார்.

அதற்குப் பார்வதிதேவி, ''பெரியவரே! என் தோழி சொல்வது யாவும் உண்மைதான், மனத்திற்கும் வாக்குக்கும் எட்டாத அச்சிவபெருமானை என்னால் எப்படி அறியத் தகும்? அப்படித் துர்லபமாக இருந்துங்கூட, என் விருப்பத்தாலேயே நான் அவரைக் குறித்துத் தவஞ் செய்கிறேன்! '' என்றாள்.

''பார்வதி! நான் இப்போது என் விருப்பப்படிச் செல்கிறேன். நீ எதை இச்சித்தாயோ. அதை அறிய எனக்கும் பெருவிருப்பம் இருந்தது. அதை உன் தோழியிடமிருந்தும் உன்னிடமிருந்தும் தெரிந்துகொண்டேன். இனி நான் போயாக வேண்டும்' இல்லையென்றால் நமது சினேகம் குன்றிவிடும்' என்று மறையவர் மந்தகாசத்தோடு சொல்லிவிட்டு, அங்கிருந்து புறப்பட்டார். உடனே பார்வதி, வேதியரைப் பார்த்து, ''சுவாமி நீங்கள் ஏன் புறப்படுகிறீர்?' என்று கேட்டாள்.

''பார்வதி! நான் உனக்கு மிகவும் அன்பனாகையால் சொல்லுகிறேன். நீயோ சந்தனத்தை விட்டுச் சேற்றைப் பூசிக் கொள்ளவும் யானை வாகனத்தை விட்டு, எருதின்மேல் ஏறிச் சவாரி செய்யவும், கங்கை நீரைவிட்டு, கிணற்று நீரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அள்ளிக் குடிக்கவும் சூரிய ஒளியை விட்டு மின் மினியின் மினுக்கு ஒளியைக்கண்டு ரசிக்கவும், வீட்டுவாசத்தை விட்டுவிட்டு காட்டு வாசஞ் செய்யவும் விரும்பியவளாய், தவஞ்செய்கிறாய், உன்னுடைய இந்த முயற்சி உசிதமாகத் தோன்றவில்லை, தேவர்கள் நிறைந்த சபையை விட்டு அசுரரும் பைசாசரும் நிறைந்த சபையை நீ இச்சிக்கிறாய், அலங்காரமான இந்திரன் முதலான தேவர்கள் எல்லோருரையும் விட்டு ஆண்டியான சிவனை நீ விரும்புகிறாய்? இது உசிதமல்ல, மிகவும் அலட்டுத்தனமாகவே எனக்குத் தோன்றுகிறது. இன்னுஞ் சொல்கிறேன் கேள். பார்வதி! கமலப் பூக்களைப் போன்ற கரு விழிகள் வாய்ந்த கட்டழகியான நீ எங்கே? முக்கண்ணனான அந்தச் சுடலையாடிச் சிவன் எங்கே? வெண்ணிலா முகம் படைத்த நீ எங்கே? ஐந்தலையனான அந்த ஆண்டிப்பித்தன் எங்கே? வருணிக்கவே முடியாத கூந்தல் அலங்காரியான நீ எங்கே? விரிசடையனான அந்த ஜடாதரன் எங்கே? சந்தனம் முதலான வாசனைகள் பூசிப்பரிமளிக்கும் உடல் வளம் வாய்ந்த நீ எங்கே? சுடுகாட்டுச் சாம்பலைப் பூசித் திரியும் உடலுள்ள அந்தச் சிவன் எங்கே? சுகமான வெண்பட்டாடை எங்கே? சுகமற்ற அவனது யானைத்தோல் போர்வை எங்கே? உனது திவ்யமான தோள் வளைகள் எங்கே? அவனது பாம்பு அணிகள் எங்கே? உன் சேவகர்களான தேவர்கள் எங்கே? அவனது பூத கணங்கள் எங்கே? உன் மிருதங்கம் முதலான வாத்தியங்கள் எங்கே? அந்தச் சிவனின் டமருகம் எங்கே? உனது பேரிகை எங்கே? சிவனது கல்லவாத்தியமெங்கே? ஆகையால் உனக்கும் அந்தச் சிவனுக்கும் பொருத்தமோ உருவ ஒற்றுமையோ சிறிதும் கிடையாது, அந்தச் சிவனோ விருபாக்ஷி (கோணல் கண்ணன்) அவனது குலங்குடி முதலியனவும் நன்றாக அறியப்படவில்லை. அந்தச் சிவன் என்ன செல்வந்தனா? அப்படியிருந்தால் அவன் ஏன் திகம்பரனாக (நிர்வாணனாகத்) திரிய வேண்டும். உலகத்தில் ஆடவர்களுக்குள்ள விசேஷ குணங்களில் ஒன்றாவது சிவனுக்குண்டா? அவன் ஏறித் திரியும் வாகனமோ எருதுமாடு! உடுத்தும் ஆடையோ யானைத்தோல், அவனது படை வரிசைகளோ பூத பைசாசங்கள்! அவனது நீல கண்டத்திலோ நீல நீறத்துகடுவிஷம் வீடுகளில் வசிக்க லாயக்கற்றவனாய், வனத்தை அடைந்துகாடுமேடுகளில் சுற்றுபவன்! அவன் ஜாதியோ இன்னதென்று இன்னும் தெரியவில்லை. அவனது வித்தையும் ஞானமும் இவ்வளவுதான் என்று இன்னும் கணக்கிடப்படவில்லை. அவனே ஏகாங்கி! அதிலும் பற்றற்ற விரக்தன்! அந்தச் சிவன் சர்வ சம்மதமான புருஷனாக இருந்தால் மன்மதனைத் தகனஞ் செய்வானா? ஆகையால் அந்தச்சிவனிடம் உன் மனதைச் செலுத்துவது உசிதமல்ல! உனக்கும் அந்தச் சிவனுக்கும் பலவகையிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றத்தாழ்வுகள் எத்தனையோ இருக்கின்றன. ஆகையால் இது எனக்கு யுத்தியாகத் தோன்றவில்லை, ஆயினும் வினையைவெல்ல முடியுமா? நீ உன் விருப்பப்படியே செய்! தலை விரித்தாடும் அந்தத் தான் தோன்றிக் கூத்தனை நான் அறிவேன். அவன் வசிப்பதோ ருத்திர பூமி, அவனோ உலகத்திலுள்ள அசத்தான பொருள்களை அணிகின்றான். ஆகையால் அப்படிப்பட்டவனிடமிருந்து, உன் மனதைத் திருப்புவது உனக்குத்தான் நல்லது இது உனக்கு இஷ்டமில்லையென்றால் நீ என்முன் நிற்காதே போ! என்று வேதியர் வடிவத்தில் வந்திருந்த சிவனாரே கூறினார்.

அவற்றையெல்லாம் பொறுமையின்றிக் கேட்ட பார்வதிதேவி மிகவும் கோபங் கொண்டாள்.

அவள் முதுபெரும் வேதியரை நோக்கிக் குமுறிக்குமுறிக் கூறலானாள். சிவதூஷணை செய்வதில் வாய்த் தேர்ச்சி பெற்ற கிழவரே ! இவ்வளவு நேரம் உம்மைத் தனயர் என்று எண்ணியிருந்தேன். இப்போதல்லவோ நீ அபக்தமானவர் என்பதைப் புரிந்துகொண்டேன். தேவாதி தேவனான சிவபெருமானை அறிவேன் என்று நீர் கூறிய வார்த்தை பொய்யே அன்றி வேறல்ல. நீர் நிச்சயமாக அவரைப்பற்றி அறிந்திருந்தால் அவருக்கு விரோதமாக ஏளனம் சொல்லமாட்டீர்! நீர் ஒரு வஞ்சகர் அதிலும் நீர் வயதான வாயாடிக்காரர். உலகைக் காக்கும் அச்சிவபெருமானின் வாசமகோசரமான ஸ்வரூபத்தை நான் சொல்கிறேன். கேட்டுத்தெரிந்து கொள்ளும்! . . .....

"அந்தப் பரமசிவனார். யோசித்துப் பார்த்தால் நிர்க்குணர், காரணத்தால் ஸகுணராகவும் நிர்க்குணராகவும் விளங்குகிறாரே தவிர அவருக்குப் பிறவி ஏது? ஜாதி ஏது? சகல வித்தைகளுக்கும் அவர் பிறப்பிடமானவர், அவரே முன்பு ஒரு காலத்தில் வேதங்களை ஸ்வாசமார்க்கமாக மகாவிஷ்ணுவுக்கு வழங்கியவர். பரமாத்மாவும் பரிபூரணருமான அந்தச் சிவனாருக்கு வித்தைகளால் ஆக வேண்டியது என்ன? ஆனாதிபூதரான அநந்த ஆனந்தக்கூத்தருக்கு வயது ஏது? பிரகிருதியே அத்தப் பெருமானிடத்திருந்தல்லவோ தோன்றியது? எவன் அந்தப் பெருமானை நித்தியமாக அடைகிறானோ? அவனுக்குப் ப்ரஹாஷ உத்ஸாஹ, மந்திர சக்திகள் கைகூடும். சுடலையாண்டி என்று நீர் குறிப்பிட்ட அவரே மரணத்தை வென்ற மிருத்யுஞ்ஞயர். அவரது பூஜையால் எல்லோருக்கும் சுகம் பொங்கி வருமே தவிர, அவருக்கென்று ஏன் சுகம்? துன்மதியாளரே ! வேதநுட்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியாத கிழட்டு வேதியரே! எந்தச் சிவபெருமானின் கருணைக் கண்ணோக்கினால் தேவர்கள் ஜீவந்தர்களாக இருக்கிறார்களோ, எந்தச் சிவபெருமானின் திருத்தொண்டிற்காகத் தேவர்களும் காத்திருப்பார்களோ, அந்தச் சிவபெருமானே ஸ்வயம்பு அத்தகைய சிறப்புகள் வாய்ந்த சிவபெருமான் என்னை விரும்பி இச்சிப்பாரானால் கல்யாணரூபரும் தேவதேவருமான அந்தப் பெருமானின் சேவையால் எனக்கு என்ன குறைதான் உண்டாகும்? எல்லாப்பிறவிகளிலும் தரித்திரனாக இருப்போன் ஆண்டியே நீர் இகழ்ந்த அந்த ஆனந்தமூர்த்தியை சேவித்தால் அஷ்ட லக்ஷ்மிகளையும் அடைவான். அந்தச் சிவபெருமானிடம் அஷ்டமாசித்திகளும் நர்த்தனஞ் செய்கின்றனவோ, அந்தப் பரமேஸ்வரனுக்கு ஐசுவரியம் எப்படி எட்டாததாகும்? சாதாரணமானவர்களுக்கு அவர் காட்சிக்கு எளியவராகத் தமது லீலா மாத்திரையால் காணப்பட்டாலும் அவரை உச்சரித்தாலேயே சர்வ மங்களமும் கிடைத்துவிடுமே! சிவம் என்ற மங்களகரமான பெயர் எவன் முகத்தில் நிலைத்திருக்கிறதோ அவனைக் கண்ணால் காண்பதாலேயே அன்னியர்களும் பரிசுத்தராகி விடுவார்கள். நீர் சொல்லுவதுபோல் பஸ்பமானது பரிசுத்தம் இல்லாத வெறும் சாம்பல் என்றால் அம்பலவாணரான அந்த அண்ணல் மாபெரும் நடனமாடிய பிறகு தேவர்கள் ஏன் தமது சிரசின்மீது அந்தச் சாம்பலைப் பூசிக் கொள்கிறார்கள்? பொன்னார் மேனியில் தூய வெண்ணீறு அணியும் எந்தச் சிவபெருமான் அகில உலகங்களுக்கும் ஆதியாக இருக்கின்றாரோ அவர் சர்வேஸ்வரனாக இருந்து, அனைத்தையும் ஆக்கலும் காத்தலும் அழித்தலுமான முத்தொழில் புரிந்து அலகிலா விளையாட்டுடைய தலைவராக விளங்குகிறாரோ அந்த ஆதிநாயகரை உம்மைப்போன்ற குறைமதியாளர்களால் எப்படி அறிய முடியும்?

"கேளும் வயதான வேதியரே! இன்னும் கேளும், பரமாத்மாவாகவும் பரபிரம்மமாகவும் விளங்கும் சிவபெருமானது அறியக்கூடாத உருவத்தை உம்மைப்போன்ற அஞ்ஞானிகள் எப்படி அறியக்கூடும்? துராசாரமுடையவர்களும் மகாபாவிகளும் வேதமார்க்கத்திற்குப் புறம்பானவர்களும் நிர்க்குணரான சிவபெருமானை எப்படி உணர்ந்தறிவார்கள்? தத்துவஞான விசாரணையில்லாமல் எவன் ஒருவன் சிவபெருமானை நிந்திக்கிறானோ, அவன் பல பிறவிகளில் சேகரித்த புண்ணியங்களும் வீண் சாம்பலாகி விடும். நீரோ அளவற்ற தேஜஸ் வாய்ந்த சிவபெருமானை இழித்தும் பழித்தும் பலப்பல பேசிவிட்டீர். உமது அற்பஞானத்தை அறியாமல் வயதான பெரியவர் என்று மதித்து வழிபட்டு உபசரித்த காரணத்தால் நானும் பாவத்தையடைந்தேன். எவன் ஒருவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவநிந்தனை புரியும் துவேஷியாக இருக்கிறானோ அவனைக் கண்ணால் பார்த்தாலும் ஃ ஸசேவ ஸ்நானம் செய்ய வேண்டும். துஷ்டவேதியரே, உம் ஊனக் கண்களுக்குச் சிவபெருமான் எப்படிப்பட்டவராக இருந்தாலும் அவரே என் மனக்கண்ணிற்குப் பிரியரும் என் விருப்பத்திற்கு உரியவருமாவார்! திரும்பத் திரும்பக் கேட்டாலும் அதையே தான் நான் சொல்லுவேன்." இவ்வாறு பார்வதி வெகுண்டுரைத்துவிட்டுத் தன் தோழியைப் பார்த்து, "சகியே! துஷ்டபுத்தியும் கெட்ட மனமும் படைத்த இந்தக் குறும்புக் கிழவரை நீயே இங்கிருந்து போகச் சொல்லடி. ஏனென்றால் சிவநிந்தை செய்பவன் தானும் பாவத்தை அடைவான். அந்த நிந்தையைக் காது கொடுத்துக் கேட்பவர்களும் பாபத்தை அடைவார்கள். இவர் இங்கிருந்தால் மேலும் சிவநிந்தையே செய்வாராகையால் நாமே இந்த இடத்தைவிட்டு வேறு இடம் செல்வோம்" என்று சொல்லிவிட்டுத் தன் தோழியருடன் காலெடுத்துப் பெயர்த்துவைப்பதற்கு முன், விருத்த வேதியரின் வேடத்திலுள்ள சிவபெருமான் தம் மாறு வேடத்தை நீக்கிவிட்டுத் தம் சுயவடிவமெடுத்து சிவபெருமானாகக் காட்சியளித்தார். அவ்வாறு அவரைக் கண்டதும் பார்வதி தேவி நாணத்தோடு தலைகுனிந்து நின்றாள், அவளைச் சிவபெருமான் உற்று நோக்கிப் புன்னகை பூத்து "பார்வதி, நீ என்னை விட்டு எங்கே போகமுடியும்? நீ என்னால் விட்டுவிடத் தக்கவள் அல்லவே, உன் தவத்துக்காக மகிழ்ந்த நான் உன் பிரசன்னமானேன். உன் மனதைச் சோதிப்பதற்காகவே, விளையாட்டாக இப்படியெல்லாம் வாய் கொடுத்து வார்த்தையாடினேன். உன் திடப்பக்தியைக் கண்டு உவந்தேன், உனக்குக் கொடுக்கத் தகாத வரமே இல்லை. உன் தவத்தால் நீ என்னை அடைந்தாய். உன் அழகைக் கண்டால் ஒரு க்ஷணம் ஒரு யுகமாகத் தோன்றுகிறது, நீ நாணத்தை விடு. நமது வீட்டுக்குப் போகவாம் வா" என்று சிவபெருமான் கூப்பிட்டார். பார்வதி நீண்ட காலம் தவஞ் செய்தபயனையடைந்து, தவத்தால் உண்டாகிய சிரமமும் நீங்கினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவி திருமணம்

திருச்சிற்றம்பலம்
தேவி திருமணம்

*தரைபுகழ் தென்னன் செல்வத் தடாதகைப் பிராட்டிதானே*
*திரைசெய் நீர் ஞாலங்காத்த செயல்சிறி துரைத்தேன்தெய்வ*
*விரைசெம்பூங்கோதைமாதை விடையவன்மணந்துபாராண்*
*டரசுசெய்திருந்ததோற்ற மறிந்தவாறியம்பலுற்றேன்.*

திருவிளையாடல் புராணம்

இவ்வுலகத்தார் புகழாநின்ற மலையத்துவச பாண்டியராசன் புத்திரியாகிய தடாதகைப் பிராட்டியார் அலையை வீசுகின்ற நீரையுடைய கடல்சூழ்ந்த பூலோகத்தைக்காத்த திருவிளையாடல் சிறிது தெரிந்தமட்டிற் சொன்னேன், இனித் தெய்வமணங் கமழுகின்ற பூமாலையணிந்த அளகத்தையுடைய அந்தத் தடாதகைப் பிராட்டியைக் கயிலாசபதியானவர் திருமணங் கொண்டருளிப் பூமியையாண்டு அரசுத்தன்மையை நடத்திக் கொண்டிருந்து (திருவிளையாடலை அறிந்த மட்டில் சொல்லுகிறேன்.) திருமணம் நிறைவேறும் தன்மையை இயன்ற அளவு கூறுகிறேன்.

உலோகமாதாவானவள் பெண்ணரசியாகி ஆக்ஞாசக்கரம் பகையிருளைப் போக்க வெள்ளைக் குடையாகிய சந்திரன் குளிர்ந்த நிழலைக்கொடுக்க மனுநீதிப்படியே பெரிய உலகங்களெல்லாம் தனியரசு நடாத்தி வருங்காலத்தில் திருவிடை இளைத்துமறையவும், செம்பொன் மலைபோலக் கொங்கைகள் வளரவும், கரியகூந்தல் பாதிராத்திரி இருளைவெல்லவும், வீணை போல் கொஞ்சுதலைச் சொல்லும் இனிய நகையையுமுடைய பெண்ணரசுக்குத் திருக்கல்யாணகாலம் நேரிட்டதாயிருக்க, அந்தக்குளிர்ந்த சந்திரனைக் கொண்ட கொம்பு போன்ற தடாதகையைப் பெற்ற பொன்மாலையானவள் கண்டு நிறையப்பூத்து வளைந்த கொம்பு போன்றவுனக்குக் கன்னிப் பருவம் பழுக்குங் காலம் வந்தும் இன்னும் கல்யாணம் கூடாதிருக்கின்றதேயென்று கிலேசித்துச் சொல்லக்கேட்டு தாயே, நீர்நினைத்தஎண்ணம் கூடுங்காலம் வரும்போது கூடும், இப்போது நீ கிலேசிக்க வேண்டாம், நான் சென்று எட்டுத் திசைகளும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுத்திரதீவுகளும், எனது விசையம்நிலைபெறச் செய்து வருகிறேன். நீ இங்கிருக்கக் கடவையென்று தடாதகைப் பிராட்டி விரைவில் எழுந்துவந்து சபைகூடக்கண்ட அரசர்களும் மந்திரிகள் முதலிய யாவருங்கூடி பிராட்டியின் திருவுள்ளந் தெரிந்து தாவுகின்ற குதிரைகட்டிய தேரைக் கொண்டு வந்து சாரதி நிறுத்த அத்தேரில் உலகங்களுக்குள்ள இடையூறுதீர எழுந்தருளி சங்குமுழங்கவும் அஷ்டாதச வாத்தியங்கள் முழங்கவும், வாள்வீரர்களாகச் சில பெண்படைகளும், தேரேறிச் சூழ்ந்துவர சதுரங்க சேனைகளும் சூழ, மீனக் கொடியும் , புலிக்கொடியும், விற்கொடியும் பீலிக்குடைகளும், சாமரங்களும், வேப்பம்பூமாலை யணிந்த தேவிதேரைச் சூழ்ந்து வர வெண்கொற்றக் குடை நிழலைச் செய்ய வேதங்கள் முழங்க, பக்கத்தில் வியாழபகவானையொத்த சுமதியென்னு மந்திரி கையிற் பொற் பிரம்பை நீட்டிச் சதுரங்க சேனைகளுஞ் செல்லச் சேவகஞ் செய்துவர இந்திரலோகமுதலான லோகங்களிலுள்ள, செல்வங்களெல்லாங்கொள்ள நினைத்து கெஜபதிமுதலிய வடதிசை அரசர்கள் புஜபலமடங்கலென்று அவ்வரசர்களாலே தேவி முதலிய சேனைகளும் ஊழியப் பெண்களும் இன்னும் பலபொருள்களுந் திறையாகக் கொடுக்கக் கொண்டு வேறே பகைவரில்லாமையால் திக்குப் பாலர்களை வெல்லக்கருதி இந்திரதிசையிற் சென்று அவன் சேனைகளோடெரித்து இந்திரன் சூடிவந்த தும்பை மாலையற்று அவனது கெருவபங்கமாய் ஊழியப்பெண்களும் சதுரங்க சேனைகளுமற்றத் திக்குப்பாலகரையும் வென்று அவர்கள் கொடுக்குந்திறைகளைக் கைக் கொண்டு ஈசான்ய திக்கிற்சென்று கைலாயத்தைச் சமீபித்துத் தனது சதுரங்கசேனைகளின் முழக்கமும் பலவாத்தியங்களின் முழக்கமுன்சென்று பரமசிவத்துக்குரைக்க நெருங்கி, மலைகளோடு மலைகள் மோதிச் சண்டை செய்வது போல யானைகள் கெர்ச்சித்துப் பாயவும் முதுகில் அம்பறாத்தூணிகட்டி அம்புகள் பூட்டிய வில்லுடனே வீரர்கள் இடிபோல் முழங்கிச் சூழ்ந்து கொண்டார்கள்.

அது கண்டகாவலாளர்கள் திருநந்திதேவரது சந்நிதியில் போய்ச் சொல்ல; அப்போது நந்திதேவர் சிவபெருமானுடைய திருவுள்ளந்தெரிந்துபிராட்டி சேனைகளின் மேல் ஜெயம் பொருந்திய சிவகணங்களையனுப்ப இரண்டு சேனைகளும் கடலுங் கடலும் பொருதாற்போலக் கண்ணில் நெருப்புப் பொறிசிந்த வெகுண்டுசூலங்கள்–மழுக்கள் தோமரங்கள் – சக்கரங்கள் – பிண்டிபாலங்கள் கழுக்கள் வாளாயுதங்கள் – தண்டாயுதங்கள் – கலப்பைகள் வேலாயுதங்கள் முதலிய ஆயுதங்களை எறிந்து ஊழிகாலத்துக் கடல்போல் வீரர்கள்கெர்ச்சித்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எறிவனவும், செலுத்துவனவும், பிரயோகிப்பனவுமாகிய படைகள் சில இரத்தத்தில் முழுகிவெளிப்படுவனவும், தப்பிப் போனவும் பட்டுமுறிவனவும், வினைக்கொத்த போகம் போலாகக்காணவந்த தேவர்களின் வாகனங்களில் அன்னமுங்கருடனும் பறந்து ஓடிப்போயின, சிலர் வாகனங்கள் ஆயுதங்களாலழிந்தன. எமனது எருமைக்கடா துர்க்கை பலிகொண்டது போல ரத்தத்தைக் கக்கின. அப்போது சுவாமி தரிசனத்துக்கு வந்த விஞ்சையரும் அவர்மனைவியரும் இவ்வனர்த்தத்தைக் கண்டு பயந்து வேறுவழியிற் செல்ல சந்திராஸ்திரம் சூரியாஸ்திரம் – அக்கினியாஸ்திரம் – வருணாஸ்திரம் – நாரசிங்காஸ்திரம் – சர்பாஸ்திரம், வாயுவாஸ்திரம், நாகாஸ்திரம் இவைகளை இருதிறத்தாரும் ஒன்றுக்கொன்று மாறாகவிட்டுப் போர்செய்யும் போதுதிருநந்தி தேவரைச் சேர்ந்த கணங்கள் முறிந்தோட தடாதகைப் பிராட்டியார் புற்றினின்றும் அரவஞ்சீறி வந்தது போல் வில்லில்நின்றும் பாணவருஷங்களை வருஷித்துக் கணங்கள் கையிலுள்ள அஸ்திரசஸ்திரங்களையெல்லாம் பறித்து அவர்களை நிராயுதராக்க அவர்கள் மலைகளைவாரி பிராட்டியார் சேனைகளின் மேல் விடுக்க அவைகளையெல்லாம் வச்சிராயுதத்தாலே அறுத்துப் பொடியாக்கித் தண்டாயுதத்தாலவர்களையடிக்க அவர்களெல்லா முறிந்தோடிப் போனார்கள். அண்டங்களையும் சராசரங்களையும் உண்டு பண்ணி அவைகளில் எங்கும் வியாபித்திருக்கிற தேவியின் பெருமையை யாராலே சொல்லி முடியும். ஆதலால் கணங்கள் ஆயுதங்களுமற்ற, விமானங்களுமழிந்து, அணிந்தமாலைகளும் உதிர்ந்து போர் செய்ய மூண்ட புஜவலியுங் கெட்டுக் கோபமுங்குலைந்து, வீரநடையுமிழந்து வீரசிங்கம் போன்ற நடையும் தளர்ந்து, நிற்கிறநிலையை திருநந்திதேவர் கண்டு எல்லாரையும் அடிமையாகவுடைய சிவபெருமானுடைய திருவடியில் வணங்கி இவைகளைச் சொல்ல கங்காதரனான கடவுள் கேட்டுப் புன்னகை செய்து தமசஸ்வரூபமாகிய சிவந்த கண்களையுடைய இடபவாகனத்திலேறி வலிய வில்லும் ஜெயத்தைத் தருகிற தேவாஸ்திரங்களையுங் கைக்கொண்டு யுத்தகளத்துக்கு வந்து பூதவீர்களோடு போராடி ஜெயங்கொண்டு, இனி யார்வந்தாலும் ஜெயங்கொள்ள வல்லேனென்று பெண்சிங்கம் போல் நிற்கிறதேவி திருவடியையும் சேவகத்திறத்தையுங் கண்டார். அவர்கண்டபோதே வீரக்கழலணிந்த ஒரு திருவடியும், பாம்பாலிறுக்கியுடுத்தின புலித்தோலும், வெற்றி மழுவைக் கொண்ட திருக்கரமும் திருவெண்ணீறணிந்த அழகிய முந்நூன்மார்பும் சிவந்த சடைக்கற்றையும், தன்னையே பார்க்கின்ற கிருபாதிருஷ்டியுங்கொண்டு விளங்குகின்ற தனது வலப் பாகத்தைத் தடாதகைப் பிராட்டியுங்காண கண்டவுடனே தனது மூன்றுமுலைகளிலொருமுலை மறைந்தது மறையவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்தில் நாணம் மடம் அச்சம் தோன்றி வளையும் பூங்கொம்புபோல் துவண்டு துவண்டு பழைய வன்புவந்து தங்க, கூந்தலவிழ்ந்து பிடரியிற் றொங்கமீன்போலுங் கண்கள் புறவடியை நோக்க காற்பெருவிரலால் நிலத்தைக் கவ்விக்கொண்டு மின்னலைப் போல் நின்றாள்.

அப்படிநிற்கிற தடாதகைப் பிராட்டிக்கு முன்னே ஆகாசவாக்கைக் கடவுள்கூறிய திருவார்த்தை தெரிந்த மந்திரியாகிய சுமதிதேவி திருவடியை வணங்கித் தாயே, இந்தக் கொன்றை மாலையையணிந்த செஞ்சடைக்கடவுளே உனக்கு மணவாளன் என்று சொல்ல அப்போது சிவபரஞ்சோதியானவர் அன்புமிகுந்து தடாதகையை நோக்கிப் பெண்ணே ! நீ திக்குவிசயம் பண்ண என்று புறப்பட்டாயோ? அன்று தொடங்கி நாமும் மதுரையைவிட்டு உன் கூடவே திரிகிறோம். இனி உன்னை வேதவிதிப்படி விவாகஞ்செய்து கொள்ள இனிவருகிற திங்கட்கிழமை நல்ல சுபமுகூர்த்தத்தில் உன் பட்டணம் வந்து சேருகிறோம், நீ முன்னே செல்லக் கடவை யென்று விடைகொடுக்க, அப்படி விடை தந்த நாயகன் மேலன்பையும் உயிரையும் வைத்துப் பெண்படைகள் சூழ்மலை போலுந் தேர்மேற்கொண்டு பலவரத்தியங்களுங் கடல்போல் முழங்கவழியில் அநேக மலைகளுங் காடுகளும் ஆறுகடலுங்கடந்து சந்திரகுல தீபம் போல் மங்கலமெதிர்கொள்ள மதுராபுரியில் வந்து இந்திரச் செல்வம் நிறைந்திருக்கிற மாளிகையில் வந்திழிந்தனள். பின்பு மந்திரிகள் திருக்கலியாண விசேடங்கண்டெழுதி எங்கும் ஒலைகளனுப்பிக் கலியாணத்துக்குத் தக்கபடி பட்டணம் அலங்கிருதமாக வேண்டுமென்று யானை மேல் முரசறைவிக்க, அந்தக் கலியாண வாத்தியங் கேட்டவுடனே பட்டணத்திலுள்ளவர்கள் அளவிறந்த மகிழ்ச்சியடைந்து தெய்வத்தைத் துதித்து வணங்கித் தேகம் புளகாங்கிதங் கொள்ள அழகிய பெண்களை அலங்கரிப்பது போலப் பட்டணத்தை யலங்கரிக்கத் தொடங்கிக் கழித்தெறிந்த மாலைகளும், சந்தன முதலியனவுமாகிய குப்பைகளை நீக்கிக் குளிர்ந்த பனிநீரைத் தெளித்து வீதிகளிலுள்ள புழுதியடங்கச் செய்து, ஆடவரும் மகளிரும் பாண்டிய குமாரியுமாகிய தடாதகைப் பிராட்டியாருக்குத் திருக்கலியாணமென்கிற பெருங்களிப்பால் குண்டலங்கள் வளையல்கள் கண்டிகைகள் முதலியவைகழன்று வீழ்வனதெரியாமல் அலங்காரஞ் செய்வராகி ஒருவரையொருவர் முகூர்த்தமென்று விசாரிப்பவர், சிலர் சோமவாரமென்று சொல்வார், அப்படிச் சொல்லுவோரை சிலர் விரைவில் வந்து தழுவிக் கொள்ளுவார்கள். சிலர் அளவிறந்த சந்தோஷத்தால் மகிழ்ந்து நிற்பார்கள். முன்னே நமக்குத் தோள்துடித்தது, தடாதகைப் பிராட்டியார் திருமணக்கோலங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணத்தானோ வென்பார்கள். சிலர் சுவர்களை சுண்ணச்சாந்தாய்புதுக்கிச் சித்திரங்களெழுதித் நெற்றிகளுக்குக் குங்குமக் குழம்புபூசி, முளைப்பாலிகைகளும் பூரணகலசங்களுந் திண்ணைகளில் வரிசையாகவைத்து, வாயில்களுக்கு நேரே தோரணங்கட்டி வீதிமுழுவதும் நடைப்பந்தலிட்டு, பாளைகள் குலைகளுடனே கமுகுகளும் வாழைகளும் கரும்புகளும் நிறுத்தி, நிலைக்கண்ணாடிகள் வரிசையாக வைத்துக் கொடிகள் கட்டி, பூவும் பனிநீருமிறைத்து, நிலவிளக்குகள் வைத்து, மலர்மாலைகளைத் தொங்கக்கட்டி நவரத்னமாலைகளும் தொங்கவிட்டு யானைகளுக்கு சித்திரங்களாலலங்கரித்து முகபடாமணிந்து, குதிரைகளுக்குக் கழுத்தணி – காலணி – கல்லணைகளா லலங்கிர்தஞ்செய்து தேர்களை யலங்கரித்து, மாணிக்க தீபங்கள் வைத்து, பட்டணத்தையிவ்விதமாக அலங்கரித்தும், பட்டணத்திலுள்ளவர்கள் புதியவாபரணங்களையணிந்தும் சந்தனபனிநீர் குங்குமகளபகஸ்தூரி மிளிர்ந்தும், கண்களுக்கு மையிட்டும், பாதங்களிற் செம்பஞ்சுக்குழம்பு பூசியும் சிலம்பு முதலியவையணிந்தும், கின்னர மிதுனம் போல விறலியர்பாடிப் பரிசுகள் பெற்றும், களியாட்டங்கொண்டும், பிராமணப் பெண்களும் அரசர் கன்னிகைகளும் வந்து பொன்மாலையைச் சோபனம் விசாரித்தும், பிராட்டியார் திருமணக் கோலங்கண்டும், வரிசைபெற்றுக் கொண்டும் போவாராக யானைத்தலைகளின்மேல் கங்கை முதலிய தீர்த்தங்களைப் பொற்குடங்களில் நிரப்பிப் பட்டு வஸ்திரங்களால் மூடி மங்களவாத்திய முழங்கக்கொண்டு வரவும் அவரவர்களுந் தங்கள் தங்கள் வீட்டில் கலியாணம் போல அறுசுவை –யுணவுகள் சமைத்துச் சந்தியாசி முதலானவர்களை எதிர்கொண்டு வணங்கி உபசரித்தும் இவ்வாறாக அலங்கரித்தார்கள்.

தடாதகைப் பிராட்டியார் இந்திரனைச் ஜெயித்துக் கொண்டு வந்த விமானங்கள் போலவும், தங்களின் ராஜகுமாரியென்று தரிசிக்கவந்த மலைகள் போலவும் சுற்றிலுந் தேர்களை நிறுத்தி பளிங்காற்செய்த யானைமேல் நீலரத்னத்தாற் செய்தயாளிகளைச் சிற்றோரங்களில் நிறுத்திப் பளிங்காற்செய்த சுவரில் மரகதச் சாளரங்கள் வைத்து ஆயிரம் பவளத்தூணிறுத்தி அதன் மேல் வைத்த இந்திர நீலப் பொதிகைமேல் பொன்னுத்தரங்களிட்டு ரத்னவிட்டங்கள் பரப்பி இப்படி சந்திரகாந்தக் கல்லால் வீடுபோல் அவள் விவாகமண்டபஞ் செய்து மூக்கினாற் பாளைகளும், மரகதத்தாற் பச்சிலைகளும், பவளத்தால் பழங்களும், வெள்ளியால் அடியும் உள்ளதாகக் கமுகுகள் நட்டு மரகதத்தால் வாழைகள் நிறைத்தும், அதைச் சுற்றிலும் வண்டுகள் பாட தேன்கள் சிந்த தென்றல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாளரவழியில் வீச பலவித பூமரங்களைச் சோலைபோல வைத்தும் யாகசாலையும், வேதியும் ,குண்டமும் விதிப்படியமைத்தும், கண்ணாடி முதலிய அஷ்டமங்கலங்கள் வைத்தும் வாசனைச் சந்தனத்திலே குங்குமப்பூ கலந்து சவ்வாது கஸ்தூரியும் சேர்த்துக் குழப்பி நிலமெழுகி இருபுறத்திலும் பாவைகள் மாணிக்கத்தீபங்களேந்தச் சூரிய மண்டலம்போல் விளங்கவும் ஆகாயம் நட்சத்திரம் பூத்ததுபோல நவரத்னங்களால் மேற்கட்டி கட்டியும் கோயிலுக்கு முன்னே ஆகாயத்தையளாவப்பந்தலிட்டும், முளைதெளித்துப் பொற்பாலிகைகள் வைத்தும் பிரமா முதலான தேவர்களுக்குத் தகுந்த பிரப்பம்பாய் விரித்து ; மேலே செம்பொன் மயமான ரத்தினக்கம்பளம் விரித்தும், சிவகணங்களிருக்கச் சுற்றிலும் ஆசனங்களிட்டும், நடுவில் கற்பகத்தரு வேண்டியனவெல்லாம் கொடுக்க வயிரப் பணியாலே செய்த சிங்கத்தின் பிடரியில் பொன்னாலாகிய பலவகைப் பொருந்தப் பரப்பிச் சதுரமாகத் தூண்கள் பச்சை மணியால் நிறுத்திப் பளிங்கினால் உத்திரமிட்டுப் பவளத்தினாலே கொடுங்கைகூட்டி இப்படியாக மூன்றடுக்குப் பவளக்குடம் வைத்த விமானம் பலரத்தினங்களாலும் விளங்க சாஸ்திரப்படி அங்கங்களாறும் கால்களாக முதலெழுத்து பொற்பீடிகையாக வேதசாஸ்திரங்கள் எல்லாம் முத்துக்கோர்த்த ஊஞ்சற்கயிறாக நமது நாயகன் பிராட்டியோடு எழுந்தருளியிருப்பதற்கு ஒரு சிங்காசன ரூபங்கொண்டு நின்றாற்போல் நவரத்தின கச்சிதமான ஆசனஞ் சமைத்து இந்திரன் கொடுத்த கற்பகமானது பொன்வஸ்திரங்கள், பொன்னாபரணங்கள் பஞ்சாமிர்தம், அறுசுவையுண்டி, சந்தனம், பனிநீர், புஷ்பம் முதலியவெல்லாம் கொடுக்க சிந்தாமணி சிந்தித்தனவெல்லாம் உதவ இப்படி இந்திரலோகமும் தோற்க அலங்கரித்து நிற்க, பாண்டியராஜ புத்திரியான பிராட்டி திருமணவோலை எங்கும்போய்ச் சேர எதிர்கொண்டு வாங்கி வணங்கித் தங்கள் மணிமுடிமேல் ஓலையை வைத்துக் கொண்டு, அது கொண்டு வந்த தூதருக்கு வஸ்திராபரணங்கள், வெகுமதி செய்து சந்தோஷம் முன்னே செல்ல மனத்தினும் வேகமாய்ப் பிரயாணப் பட்டு கொங்கர் – சிங்களவர் – பல்லவர் – வில்லவர் – கோசலர் – பாஞ்சாலர் – வங்கர் – சோனகர் – சீனர் – சாளுவர் – மாளவர் – காம்போசர் – மாகதர் – ஆரியர் – நேரியர் – அந்தியர் – சைதர்ப்பர் – கங்கர் – கொங்கணர் – விராடர் – மராடர் – கருநாடர் – குருநாடர் – கலிங்கர் – சர்வகர் – கூவிளர் – ஒட்டியர் – நடாரர் – காந்தாரர் – குலிங்கர் – கேகையர் – விதேகர் – பௌரவர் – கொல்லர் – கல்யாணர் – தெலுங்கர் – குர்ச்சரர் – மர்ச்சரர் – மிலேச்சரர் செஞ்சையர் முதலான தேசாபதிகளெல்லாம் பூமி தாங்க மாட்டாமல் முதுகு நெளிக்க சேனைகளோடு கூடி பலவரிசை வளங்களுடனே வந்து தடாதகைப் பிராட்டியாருக்குத் தெரிவிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள் செய்தபடியே தருமந்தழைத்து அருள் பழுத்து சிங்காசனத்தின் மேல் விளங்குகின்ற கொடிபோன்ற பாண்டியராஜ புத்திரியைக் கண்டு கண்கள் கூர்ந்து முடிமாலை திருவடியில் விழ வணங்கி அருளின் படியே அவரவர்கள் இருக்கை சென்றிருக்கப் பின்பு மலைவளம், காட்டுவளம், நாட்டுவளம், கடல் வளம் முதலியனவெல்லாம் நிறைந்து மங்களவாத்தியங்கள் மதுராபுரியெல்லா முழங்கிக் கொண்டிருந்தன.

அங்கே கயிலாயத்தில் வேதவரம்பைக் கடந்த கடவுள் தமது ஏகநாயகியான தடாதகைப்பிராட்டியார் போர்செய்வதைவிட்டு மதுரைக்குத் திரும்பின பின்பு பரமசிவம் உயிர்களுக்கெல்லாம் தானே போகங்களைக் கற்பிக்கிற நியதி தெரிந்து நந்திதேவரானவர் இந்திரன் – விஷ்ணு – பிரமன் – உருத்திர கூட்டங்கள் வரவேணுமென்று சங்கு கன்னன் முதலிய சிவகணாதிசயங்களை யனுப்ப அவர்கள் போய் தேவேந்திராதி தேவர்களுக்குத் திருமணச்சோபனஞ் சொல்ல அவர்கள் பேரன்பு பின்தள்ள தசவுருத்திரர்களும், அவர்களைச் சேர்ந்த பூதகணங்களும், புத்தியட்டகரும் அவரைச் சேர்ந்த பூதகணங்களும், நூறுகோடி யுருத்திரர்களும், பசுபதி யுருத்திரர் முதலான அஷ்டமூர்த்திகளும், நீலலோசிதர்களும் ஏகாதசவுருத்திரர்களும், வயிரவரும், விஷ்ணுவும், பிரமனும் இந்திரன் முதலிய திக்கும் பாலகர்களும், அஷ்டவசுக்களும், சத்தமருத்துக்களையும், அச்சுவினி தேவர்களும் துவாதசாதித்தர்களும், சந்திரனும், வியாக்கிரமபாதரும், பதஞ்சலியும், உபமன்னிய பகவானும், அகஸ்தியமுனிவரும், சவுனதிகளும், வாமதேவரும், சுகரும் வியாசரும், நாரதரும், சத்தமாதர்களும், சித்தரும், விஞ்சையரும், இயக்கரும், கின்னரரும், தேவரிஷிகளும், யோகிகளும், உரகரும், நிருதயமும், அசுரரும், பூதவேதாள கூளிகளும், அரம்பையரும், வருஷங்களும், அயநங்களும், பருவங்களும், மாதங்களும், பக்ஷங்களும், ஐம்பொழுதும், யோகங்களும், கரணங்களும் இரவும், பகலும், நாழிகையும், நிமிட முதலிய சிறுகாலங்களும், கடலும், நதியும் திக்குகளும், அஷ்டகுலவரைகளும், திக்குயானைகளும், மேகங்களும், இடியும், மின்னலும், பஞ்சபூதங்களுங் மந்திரங்களும், புவனங்களும், தத்துவங்களும், கலைஞானங்களும், வருணங்களும், நிலைகளும், வேதங்களும் தந்திரங்களும், சமயநூல்களும், தர்மார்த்த காமமோக்ஷங்களும், சரியை – கிரியை – யோகம் – யோகஞானங்களும், சதுஷ்பாதமும், அஷ்டசித்திகளும் அண்டங்க ளுடைபடும்படி வாத்தியங்கள் முழங்க சிவகணங்கள் முதலிய யாவரும் வெள்ளிமலைக்குச் சமீபத்தில் வந்து தங்கள் தங்கள் வாகனத்தைவிட்டிறங்கி வணங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவநாமங்களைத் துதித்துப் பரமசிவமாகிய தேனை வண்டுகள் போல மொய்த்துச்சூழ, அப்போது திரு நந்திதேவர் பிரம்புகொண்டு அடித்துச் சந்தடிலிலக்கிச் சிவபெருமானுக்குத் தெரிவிக்க சுவாமி யருளினாலேயே வந்து காண்பவரில் சிலர்க்கு வார்த்தை சொல்லியும், சிலர் நகை முகங்காட்டியும், சிலரைக் கண்ணாற் பார்த்தும், சிலர்க்கு திருமுடியசைத்தும் இப்படியுபசரித்துத்தான் ஒரு மண்டபத்திற்சென்று, மணக்கோலங் செய்து கொள்ள நினைத்து குறிப்பறிந்து குபேரனானவன் மிகுந்த அன்பும் ஆதரவுங் கொண்டு வேதங்களும் பிரமா – விஷ்ணு முதலிய தேவரிஷிகளுந் தொடப்படாத திருமேனியைத் தன்கையாற்றொட்டுப் பட்டுவஸ்திரத்தைக் கொய்து பின் கோவணஞ் சாத்தி முன்கொய்சகம் வைத்து அதன்மேல் இரட்டைப் பொன்னரைஞாணால் இறுக்கி சிகையில் திவ்யபுஷ்பங்களை யணிந்து கற்பக மலராலே சிகழிகை முடித்துத் திருநீறணியும் திருமேனியில் பனிநீர் கலந்து குழைத்த சந்தன கஸ்தூரிகளைப் பூசிச் சூரியசந்திரர்போல் விளங்க இரண்டு செவிகளிலும் பொற்குண்டலமணிந்து தோளின்மேலசையவும் நீல கண்டத்தில் கண்டிகை தரித்து முப்புரி நூலணிந்த மார்பிலே முத்துமாலைசாத்தியும் இரத்தினமாலையுஞ்சாத்தி நான்குதிருத்தோளிலும் கேயூரங்களணிந்து யானைத்தோலை நீக்கிப் பொன்னுத்தரீயமணிந்து பவுத்திரமுதலிய மோதிரங்கள் விரல்களுக்கிட்டு உடுத்தகோவணத்தின் மேல் ஐந்தலைநாகம்போலந் தொங்கச் சரிகை வதிரத்மதைச் சூழக்கட்டித்திவ்ய புஷ்பமாலைகள் கழுத்திலணிந்து சிலம்பும் வீரக்கழலும் திருவடிகளணிந்து ஆனந்தித்து நிற்க இந்திரன் முதலிய தேவர்க்கெல்லாம் அழகுசெய்விக்கும் சோமசுந்தரக் கடவுள் தானும் அழகு செய்து கொண்டு தேவர்கள் பூமழைபொழிய கும்போதரன் முதுகின் மேல் ஸ்ரீ பாதங்களை வைத்து மால்விடையேறி ஆகாசவாசிகள் பஞ்சவாத்தியங்களும் முழங்கிச் சூழ, அரக்கர் இயக்கர் பூதகர்கள் மங்களவாத்தியங்கள் முழங்கிக்கொண்டுவர, விஞ்சையர்கள் தாளம்போட, கந்தருவர் வீணைவாசிக்க தேவரம்பைகள் நடனஞ்செய்ய ஆயிரஞ் சிங்கங்கள் முழங்கினாற்போல பாணு கம்பன் ஆயிரம் வாயினாலும் சங்கத்தொனி செய்ய, வாணாசுரன் ஆயிரங் கைகளாலும் மத்தளமுழங்க, தேவரிஷிகள் கைகொட்டி ஆனந்தக் கண்ணிரொழுகக் கணாதிபர்களுடனே ஆடிப்பாடிச்சூழ, இந்திரன் இரத்னக் காளாஞ்சி கொண்டொருபுறத்தில்வர ஈசானன் ஒருபுறத்தில் அடப்பைதாங்கிவர, வாயு பகவான் விசிறிவிசிற அக்கினி சாம்பிராணிப்புகை கொடுக்க, வருணன் கெண்டிகை சுமந்துவர நிருதி கண்ணாடிகொண்டு வர, குபேரன் அடிக்கடி சுவர் மழை பொழிந்து வர தண்டியடிகள் சேவகஞ்செய்ய, கொடிகளுக்கரசாகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடைக்கொடி புடைபெயர்ந்தாட, குண்டோதரன் சூலந்தாங்கிவர, பதினெட்டாயுதங்களும் சூழ்ந்துவர புட்பதந்தன் வடமொழிப் பாடல்கள் பாட அவரது நிழல்வடிவமான ஆலாலசுந்தரர் திருமாலையும் விபூதியுங்கொண்டுவர அன்ன வாகனத்திலேறிப் பிரமன் வலப்புறத்திலும், கருடவாகனத்திலேறி விஷ்ணு இடப்புறத்திலும் கைகுவித்துத் துதித்துவர வெள்ளி மலைமேல் வந்தாற் போல இடபவாகனத்தின் மேலெழுந்தருளிய மதுராபுரிவீதியில் வருமுன்னே.

*தேவர்கள் தேவன் வந்தான் செங்கண்மால்விடையான் வந்தான்*
*மூவர்கள் முதல்வன் வந்தான் முக்கணெம்பெருமான் வந்தான்*
*பூமலரயன்மால்காணாப் பூரணப்புராணன் வந்தான்*
*யாவையும்படைப்பான் வந்தானென்று பொற்சின்னமார்ப்ப*

தேவர்க்கெல்லாந் தேவனானவன் வந்தான், செங்கண்மாலாகிய ரிஷபவாகனத்தை யுடைவன் வந்தான், மூம்மூர்த்திகளுக்கு முதல்வனா யிருப்பவன் வந்தான், திரிநேத்திரங்களையுடைய எம்பிரான் வந்தான் தாமரை மலரில் வீற்றிராநின்ற பிரமதேவனும் மகாவிஷ்ணுவுங் காணாத எங்கும் பூரணமாயிரா நின்ற பழையோன் வந்தான், எல்லாவுலகங்களையும் படைப்பவன் வந்தானென்று பொன்னாலாகிய சின்னங்களொலிக்கவும் பெண்ணரசியாகிய தடாதகைப் பிராட்டியார் வாயில்மந்திரிகள் முதலான அரசர்களும் சேனைகளும் கடவுள் சுந்தர பாண்டியனாகவருகிறதை எதிர்கொண்டு வணங்க, இந்திரலோகமென்று அதிசயிக்கத்தக்க மதுராபுரிக்குள் முகவாயில் கடந்து மாடவீதியை வலமாக வரும்போது பொன் கொம்புபோலப் பெண்குலம் தோழிகளும் வந்து கூடிக் குமிழம்பூ–கோங்கம்பூ – காந்தட்பூ – அசோகப்பூ என்கிற பலமலர்களும் பூத்தந்த நந்தவனம் போல மொய்த்து மேகலைகளும் வளையல்களும் உங்களுக்குக் கடவுள் போலகண்மால் விட்டு விடும் சொன்னோம் சொன்னோம் என்று தடுப்பது போலக் கால்களிலேயே சிலம்புகள் ஆரவாரிக்க தாமரைக்காடு பூத்த கருணைக் கடலைப் பாதமுங் முடியளவும் கண்டு கைகளைத் தலைமேற்கவித்து இந்தத் தடாதகைப்பிராட்டியார் என்ன தவத்தைச் செய்தாளோ? இந்தச் சுந்தரனையணையவெண்பார்கள் சிலர் அப்படியே சொல்லத்தகு மிந்த சோமசுந்தரக்கடவுளுக்கு மென்பார்கள் சிலர் இந்த மதுரை என்ன தவத்தைச் செய்ததோ, இந்தத் திருக்கலியாணத்தைக்காண நாம் என்ன தவத்தைச் செய்தோமோ மலையத்துவசபாண்டியன் பெறாதுபெற்ற திருமகள் மனக்கோலத்தைக் காணாது போயினனே? இங்கே கோலம்வருகிற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழகன்கன்னியழகுக்கேற்ற அழகனே என்பார்கள். சிலர் இந்தச் சுந்தரனே மதுரைக்கரசன் வேறில்லை ஆனாலும் இந்த நங்கைக்கேற்ற நம்பியைப் பொருந்தச் செய்த மந்திரி சுமதி நல்ல தந்திரி கன்னியே அல்லது பொன்மாலை இப்படி மகளுக்கேற்ற மாப்பிள்ளை கிடைக்கச் செய்த தவமே தவம் என்று இடையிலாடையை நெகிழ்த்துக்கொங்கைகளைக் கசக்கிப் பூசினசந்தனத்தை உதிர்த்துக் கொண்டுநாணிநிற்பார்கள். சிலர் கூந்தலை அவிழ்த்துவிட்டு வாரிக்கூட்டி முடிக்கும்போது உடம்பெல்லாம் மன்மதபாணம்பட்டு நடுங்குவார்கள். சிலர் குளிர்ச்சியான மலர்கள் அம்பாய்த் தைக்கின்றதேயென்று தலையிற்சூடின நீலமாலையையும் முறுவலாகியமுல்லைமாலையையும் மன்மத பாணங்களென்று வெறுத்து ஒருவர்க்கொருவர் முகம்பாராமல் தலைகளைக் குனிந்து கொண்டு உடம்பெல்லாம் பொன்னிறப் பசலைபடரக்கடவுள் விடைமேலழகனாய் வீதியிலே போகாமல்நமது மனங்கள் மேலும் செல்லலாமோ? இதுவோ சடைக்கொன்றைமாலை ? அக்கினிபோலே சந்திரன் சுடலாமோ? கடவுள் தலைமேலிருந்தால் அவரைச் சுடாதோ? கங்காநீர் அந்தச் சூட்டை மாற்றுமல்லவா என்று மேகலை வெட்கம் கறுத்து நிறம் எல்லாம் வெவ்வேறாய் உலையிலிட்ட மெழுகுபோலக் கடவுள் பவனியைக் கண்டு கடவுள் மெய்யன்பராய் நன்றி மறந்தவர்போலச் சிலர் நீங்க சிலம்புகலங்க ஒருத்தி, விடைமேலழகனைக் கண்டு முப்புரத்தையெரித்த நகையும் காமனையொத்த கண்ணும் என்னைச் சுடாதுவிடுமோவென்றாள் இன்னுமொருத்தி, உருவெளியாகத் தோன்றுகிற கடவுளை ஆலிங்கனஞ் செய்து நாணினாள் ஒருத்தி தேவர்கள் பிழைக்க நஞ்சுண்டு கறுத்ததன்று கண்டம் தமது நெஞ்சு இரும்பென்று தெரியவைத்த குறியென்றாள் ஒருத்தி, இந்தச் சுந்தரனுக்கு முன்னே தூதுபோன என்மனம் ஏனின்னம் வரவில்லையென்று வருந்தினாள் ஒருத்தி, முன்னே காமனையெரித்த கண்ணாலேபாராமல் ரக்ஷித்தீரேயானால் புகழுண்டு இல்லா விட்டால் பெண்பழிபெருகுமென்றாள் ஒருத்தி, இந்த விடையழகன் என்னைக் கடைக்கண்ணாலும் பார்க்கவில்லையென்று ஒருவனைப் படத்தில் எழுதிக் காட்டென்று கேட்க, அவன் இவரழகை எழுதிமுடியாதென்ன மயங்கினாள் ஒருத்தி வலப்புறத்தில் பிரமனும், இடப்புறத்தில் லிஷ்ணுவும், விண்ணோர் மண்ணோர்கள் சூழ்ந்துவரவும், காணாமல் சிவயோகிகளைப் போல எங்கும் மான்மழுவேந்தின கடவுளாகக் கண்டாள். இடபம் விரைந்து செல்லக் கண்டு முன்னே ஒருத்தி பார்க்க ஓடும்போது மேகலையவிழ்ந்து காலிற்சிக்கித் தடுமாறி விழுந்தாள், ஒருத்தி அத்துடனே விலங்கிட்டது போலநடந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி விடைமேல்வருகிற ஆனந்தத் தேன்கடலைக் கண்ணாற்பருகி உடை கலை – வளை – நெகிழ்வதுதெரியாமல் பெண்களெல்லாம் மயங்கி எழுதின சித்திரங்கள்போல் காமவெள்ளத்தில் முழுகிநின்று கடவுளென்று தெரியாமல் தழுவநினைத்து அவர்கள் உதிர்த்தவைகளும் தேவர்கள் சிந்தினமலரும், வீதிநெருங்க அரசிலையாலும் தருப்பையாலும் பொற்கலசத்து நீரில்தோய்த்துப் பிராமணர்கள் வீச, அந்தப்பிராமண பெண்கள் ஆலாத்திசுற்ற அஷ்டமங்கலங்களும் பெண்கள் தாங்க கற்பூர தீபமும் வலஞ்செய்து கானமும் முரசு முழங்கச் சந்நிதானத்துக்கு முன்னே வந்தவுடனே வைதியர்கள்வேதஞ்சொல்ல திருநந்திதேவர் கையைப்பற்றிவாகனத்தை விட்டிறங்கி இருபுறத்திலும் வந்து நின்ற பிரமன்கையையும் விஷ்ணுகையையும் பிடித்துக்கொண்டு வேதமாகிய பாதுகைமேல் பேரின்பத்தைத் தந்தருளுகிற திருவடிகளைவைத்து, கீழே விரித்திருக்கிறநடைபடர்த்தின்மேல் நடந்து மந்தாரமழை பொழிய உள்ளே எழுந்தருளுமளவில் பொன்மாலையானவள் மங்கிலியப்பெண்களுடனே எதிர்கொண்டுவந்து பொன் குடத்தினிரப்பியிருந்த கங்காசலத்தை மங்கிலியப் பெண்கள் வார்க்கச் சிவபெருமானது பாதங்களை விளக்கி அந்தநீரைத் தலைமேற்றெளித்துக்கொண்டு ஈரம்போகப் பாதகமலங்களை வெண்பட்டாலே துவட்டிப் பனிநீராட்டிக் கஸ்தூரிசேறு பூசி மந்தரமலராலருச்சித்துத் தலை மேலிருகைகளையும் குவித்துக் கொண்டோங்கி ஒரு பக்கத்திலே நின்று சுவாமி அருமையாக நான்பெற்ற பெண்ணரசியைத் திருமணம்புணர்ந்து இந்த ராஜலட்சுமியையான என் கன்னியையும் தேவரீர்விவாகஞ் செய்துகொண்டு ஆள்வீராகவென்று துதிக்க, அதற்கு உள்ளே நகையையுடையவராய் மருமகனான சோமசுந்தரக்கடவுள் மங்களவாத்திய முழங்கத் திருக்கலியாண மண்டபத்தில் வந்து வேதங்கள் முழங்கச் சிங்காதனத்தி லெழுந்தருளியிருந்து சுற்றிலுநின்று பிரமன், விஷ்ணு, உருத்திரகணங்கள், தேவர்களானவர்களையெல்லாம் தகுந்த ஆசனங்களிலிருக்க அருள்புரிந்து எல்லாரையும் பூமிதாங்க முன் கலியாணத்தில் அகத்தியரைப் பொதிகையிலிருக்கச்செய்தது போலே இப்போது வடக்கிலிருக்கச்செய்தானோவென்னத் தமதருளாலே நிரம்பியிருக்கத் திருக்கலியாண முகூர்த்தகாலம் வருமளவும் பெண்களாடல் பாடல்களாலே பொழுது போக்குதலாகவிருந்தார்.

தடாதகைப் பிராட்டியை ஒரு ரத்னசிங்காசனத்தி லிருந்திக் கஸ்தூரியணிந்து குங்குமச்சேறு பூசி வாசனைத் திருமஞ்சனத்தா லபிஷேகஞ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து முரசுஞ் சங்குமுழங்க மெல்லியபட்டாடை சாத்தி ராஜகுலத்துக்குத் தக்கபடி வேதப்பிராமணர்களுக்கு வேண்டியதானங்கள் கொடுத்துப் பின்பு திருமகளும் கலைமகளும் தங்கள் தவப்பயன் பலித்ததாக மகிழ்ந்து பிராட்டியினது அனிச்சப் பூவிலு மேன்மையான பாதங்களுக்குச் செம்பஞ்சுகுழம்பு பூசிக் கூந்தலுக்கு மயிர்ச்சாந்தம் வழியவார்த்துக் கொங்கைகளில் பனி நீரிலே குழையசந்தனம் பூசிக்கால்களிற் சிலம்பணிந்து, பாதசாலமுங் கிங்கிணியும்புலம்ப முப்பத்திரண்டு கோவையான இரசிகையும், இருபத்தொரு கோவையான கலாபமும், இரண்டு கோவையான பருவமும், எட்டுக்கோவையான மேகலையும், பதின்மூன்றுகோவையான காஞ்சியும், ஒருபூங்கொம்பிலே வண்டுகள் புலம்புகிறது போலப் பூட்டிகாந்தளில் வண்டுபோல மணியாழி விரலுக்கிட்டு கைகளில் வைரக்கடக மணிந்து தோளில்கேயூரம்பூட்டிமரகதமாலை–செம்பொன்மாலை பவளமாலைகளை மேருவைச்சூழ்கிற நவக்கிரகங்கள்போல முலைகளைச் சூழவணிந்து காதிலேகுண்டலமுதலியன அணிந்து மேகத்துக்குஞ் சந்திரனுக்கு நடுவே இந்திரவில்லைப்போல நெற்றிப்பட்டங்கட்டிப் புஷ்பமாலைகளாலே கூந்தலையலங்காரஞ்செய்து திவ்வியாபரணங்களெல்லாம் விளங்க அணிந்து சுந்தரக்கடவுளுக்கு மிகவும் மகிழ்வுதோன்றச் சிங்காரித்துச் சோபனமென்று வாழ்த்தி இருகைகளையும் அவ்விருவருந்தாங்க எழுந்தபோது வாத்தியங்கள் முழங்கிச் சங்கத்தொனிக்க, பூமழை பொழியசாமரைவீச, பல்லாண்டுபாட வேதவாத்தியங்கள் முழங்க இந்திராணி அடப்பைதாங்க திலோர்த்தமை கண்ணாடிகொள்ள விந்தை சந்தடிவிலக்க, அரம்பைகாளாஞ்சி தூக்க, ஊர்வசி விசிறி வீச, மேனகைகொடிகளேந்த சந்தனகந்தமகள பகஸ்தூரிபனி நீரிறைக்க, தூப தீபங்கொடுக்கசோபனங்கள் பாடி, புஷ்பங்கள் பரப்பின பூம்பாடத்தின்மேலே பாடகக்கால்களை பையப்பையவைத்துச் சரஸ்வதியும் லட்சுமியும் கைப்பற்றித்தொடர, செல்வங்கல்விபெற, வேண்டினர்க்கிதுவேசமயமென்று சிலம்புகள் சொல்ல நடந்து துவண்டு அன்பு மிக்கிருந்த பெருமானுக்கருகே பிடரிமேலே தலையைச் சாய்த்துக்கொண்டு இருந்தருள அந்தரத்னபீடத்திலே சுந்தரபாண்டியனென்கிற கடவுளோடிருந்த தடாதகையைக் கண்டவர்கள் மேருமலைமேலே கற்பகத்தருவைச் சேர்ந்த . பச்சைக்கொடி போலிருக்கின்றதென்று– புகழ பண்ணுமிசையும், நீருங்– குளிர்ச்சியும்பாலும், சுவையும், பூவும் வாசமும் வெவ்வேறு வடிவுகொண்டிருந்தாற்போல அம்மையும் அப்பனுமிருக்க எல்லாரும் கடவுளடி நிழலிற் கலந்ததுபோலக் கலந்து மகிழ்ந்திருந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது மகாவிஷ்ணு பொன்கலசத்திலே நீராலேசிவபரஞ்சோதி பாதம் விளக்கிப்புஷ்ப சந்தனங்களணிந்து தூபதீபங்கொடுத்துப் பூசித்துப் பிரமன் முதலானவர்களெல்லாம் பாததீர்த்தங்கொள்ள அவ்விடத்தேநின்ற மகாவிஷ்ணுகடவுள்கையிலே பிராட்டிகையை வைத்து மந்திரங்கள் சொல்லித்தாரை நீர்வார்க்கத் தேவர்களெல்லாரும் பூமழைபொழிய, அரம்பைகளாட, விஞ்சையர்கீதம்பாட, அரகரவென்று சிவகணங்கள்சொல்லப் புளகாங்கிதராய் திருக்கலியாணமென்கிற ஆனந்தக்கடலிலே எல்லோரும் மூழ்கினார்கள் பின்னும்தேவர்களும் முனிவர்களும் ஆசீர்வதித்து முறைப்படி சேஷையிட்டு உலகத்துக்கெல்லாம் தாயும் தந்தையுமான இவ்விருவரும் அருள்விளையாட்டாலே இப்படிக் கூடக்கண்டோ மென்று கொண்டாடிப் பொற்கலசத்திலே காமதேனுவின்பால், கற்பகக்கனி, நெய், கருப்புக்கட்டி, தேன், இவற்றைக்கலந்து கடவுளை அமுதுகொண்டருளச் சொல்லகடவுளும் மனமகிழ்ந்து அமுதுசெய்தருளி நகைக்க பெண்களெல்லாம் மங்களம்பாட, பிரமதேவன் தன்னுடைய புத்திரர்களுடனேயிருந்த நெய்முகந்து வார்த்து வேள்விவளர்க்க, அந்தத்தெய்வாக்கினி வலஞ்சுழித்தோங்க, வேதங்கள் முழங்க, சங்கங்களூத சாஸ்திரப்படி சடங்குகளெல்லாஞ்செய்து திருமங்கிலியஞ்சாத்திப் பிராட்டிகையைப்பற்றி அக்கினியும் அக்கினிவளர்ப்பவனும் ஆகுதி கொள்ளுகிறவனுந்தானே யானபரமயோகி திருக்கலியாண நிறைவுபெற்றுத்தன்பத்தினியாருடனே பொரிமுகந்து செந்தீயிற்பெய்து வேதப் பிராமணர்களுக்குத் தக்க தானங்கள் செய்து அக்கினியை வலம்வந்து மணாட்டிபாதத்தை அம்மிமேலேயெடுத்து வைத்து அருந்ததியைநோக்க வேதவிதிப்படி தப்பாமல் வேள்விச்சடங்குகளெல்லாம் முடித்து இப்படி உலகத்தார் தெளிய புருடனும் பெண்ணுமாகி மணவறைக்குள்ளே செல்ல அந்த அழகுகண்ட மனிதருங்கண்களிமையாமல் ஐயன் மணக்கோலங்காண்கிற தேவர்கள்போலாக உயர்ந்தவர் தாழ்ந்தவர்ரென்கிற பேதமில்லாமல் கடவுளருளாலே நிறைய மணவறையுளிருந்து கலியாணமண்டபத்தில்வந்து பிரமன் முதலானோர்க் கெல்லாஞ் சிறப்புகள்செய்து அவரவர் தங்கள் தங்களிடங்களுக்குச் செல்ல விடைகொடுத்தனுப்பி அரசர்களுக்கரசுசெய்து காட்டுவான்போல சௌந்தரபாண்டியனென்கிற திருநாமங்கொண்டு அரசாட்சிசெய்யத் திருவுள்ளமாய்கருணைபூத்து இடக்கொடியே மீனக்கொடியாகவும், பாம்பாபரணமே பொன்னாபரணமாகவும், கொன்றைமாலையே வேப்பமாலையாகவும், புலித்தோலே பொன்வஸ்திரமாகவும், மதிமுடியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயிரமுடியாகவும், மதுராபுரியில் சோமசுந்தரக்கடவுள் பாண்டியனாகி வீற்றிருக்க அவர் திருவிளையாடலுக்குத் தகுதியாய்ச் சங்குகன்னன் முதலாகிய கணாதிபர்கள் தாங்களும் உருமாறி ஏவல்செய்து கொண்டிருந்தார்கள். பின்பு சௌந்தரபாண்டியனான கடவுள் அரசர்கள் சிவபூசைசெய்வது வேதவிதிதானென்பதை நிலைநிறுத்த அந்தமதுரை நடுவிலே கோயிலுண்டாக்கிச் சிவலிங்கமும் நிலைபெறச்செய்து இம்மையே நன்மை நல்கு மிறையென்று பெயரிட்டுப் பூசைசெய்து கடம்பவனத்துக் கடவுள் மூன்று காலமும்போய்த் தொழுதுகொண்டு உலகமெல்லாம் தமதுசெங்கோல்செல்ல மனிதருக்கு அரசனாகவும் பகைவருக்குச் சிங்கமாகவும், பெண்களுக்கு மன்மதனாகவும், நிலமகளுக்குதிருமாலாகவும் விளங்கிச்சாதனசதுட்டயந் தெளிந்தவர்களுக்குச் சச்சிதானந்தமான பரதத்துவமாகிய கடவுள் பூசித்த சிவலிங்கப் பெருமையை யாராலே சொல்லி முடியும்.

*திருவிளையாடற் புராணம்.*

*திருச்சிற்றம்பலம்*

*"சடைமறைத்துக்கதிர் மகுடந்தரித்து நறுங் கொன்றையந்தார்*
*தளந்துவேப்பன்*
*தொடை முடித்துவிட நாகக் கனலகற்றி மாணிக்கச்சுடர்ப்பூணேந்தி*
*விடைநிறுத்திக் கயலெடுத்து வழுதி மருமகனாகி மீனநோக்கின்*
*மடவரலை மணந்துலக முழுதாண்ட சுந்தரனை வணக்கஞ்செய்வாம்*

*(திருவிளையாடற் புராணம்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலட்சுமி உபாக்கியானம்
## (வினாவும் விடையும்)

நாரதர் கூறியது –

ஈசுவரரே ! இப்பொழுது லக்ஷ்மி உபாக்கியானத்தைக் கேட்க விரும்புகிறேன். அந்த தேவி ஆதியில் யாரால் பூசிக்கப்பட்டாள்? அவள் முதலில் எப்படி உற்பவித்தாள்? எக்காரணத்திற்காக? வேதத்தை அறிந்தவர்களிற் சிறந்தவரே ! அவளுடைய குணகீர்த்தனத்தை எனக்குக் கூறியருளும்.

பிரம்மசுயரூபியே ! முன்பு, சிருஷ்டியின் ஆதியில் பரமாத்மாவாகிய ஸ்ரீகிருஷ்ணனுடைய சக்தி ராஸமண்டலத்தில் அவருடைய இடது அம்சமாகத் தோன்றினாள். ஈசுவரருடைய இச்சையால் அந்த தேவி இரண்டாகப் பிரிந்தாள். அவளுடைய இடது பக்கத்திலிருந்து மகாலக்ஷ்மி, வலது பக்கத்திலிருந்து ராதிகை அவர்களை கௌரவிக்க ஸ்ரீ கிருஷ்ணனும் இரண்டு வடிவானார்; வலது புறத்திலிருந்து நான்கு புயங்களுடைய உருவம். முதலில் இரண்டு புயமூர்த்தியானவர் நான்கு புயமூர்த்திக்கு மகாலக்ஷ்மியைக் கொடுத்தார். இரண்டு புயமூர்த்தி ராதாகாந்தர், நான்கு புயமூர்த்தி லக்ஷ்மீகாந்தர். கிருஷ்ணரும் நாராணருமாகிய அவ்விருவரும் எல்லா அம்சங்களிலும் சமமானவர்கள். மகாலக்ஷ்மி யோகசக்தியால் பலவடிவு கொண்டாள். வைகுண்டத்தில் மகாலக்ஷ்மி பரிபூர்ணமானரமாதேவியாக விளங்குகிறாள். சுவர்க்கத்தில் இந்திரனுடைய சம்பத்ஸ்வரூபிணியாக ஸ்வர்க்கலக்ஷ்மியாக உள்ளாள். பாதாளத்தில் நாகலக்ஷ்மியாகவும், அரசர்களிடம் ராஜலக்ஷ்மியாகவும், கிருஹஸ்தர்களின் வீடுகளில் தனது கலையின் அம்சத்தால் கிருஹ லக்ஷ்மியாகவும் உள்ளாள். கிருஹஸ்தர்களின் சம்பத்ஸ்வரூபிணியாய் எல்லா மங்களங்களுக்கும் மங்களமாய் விளங்குகிறாள். பசுக்களின் தாயாகி காமதேனுவாகவும், யஜ்ஞபத்னியான தக்ஷிணையாகவும் இருக்கிறாள். பாற்கடலில் சிந்துகன்னியாகவும், தாமரையின் அழகாகவும் அவள் உள்ளாள். தெய்வ விக்ரகங்களிலும் மங்களமான கும்பங்களிலும் உள்ளாள். அந்தத் தேவி ஆதியில் வைகுண்டத்தில் நாராயணனால் பூசிக்கப்பட்டாள். பாத்ரபத

---

*சைத்ரம் – சித்திரை, – பௌஷம் – தைமாதம்*

*பாத்ரபதம் – கார்த்திகை, சுக்கில பக்ஷத்துவிதியை துதிப்பதற்கு விசேடமானது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுக்லாஷ்டமியில் பிரம்மாவால் பூசிக்கப்பட்டாள். சைத்ரம், பௌஷம், பாத்ரபதம் ஆகிய மாதங்களில் புண்ணியமான மங்கள வாரத்தில் விஷ்ணுவால் பக்தியுடன் மூவுலங்களிலும் பூசிக்கப்பட்டாள். அவள் எப்படிப் பூமியில் விந்து கன்னியாக அவதரித்தாள்? முன்பு ஆதியில் அவள் யாரால் துதிக்கப்பட்டாள்? அதை எனக்கு விளக்கிக் கூறியருள வேண்டும்.

ஸ்ரீ நாராயணர் கூறியது –

நாரதரே ! முன்பு துர்வாச மகரிஷியுன் சாபத்தால் இந்திரன் செல்வமிழந்தவனானான். தேவ கணங்களும் மனித லோகத்திற்கிழிந்தனர்.

நாரதரே ! மகாலக்ஷ்மியானவள் கோபங்கொண்டு மிகுந்த துக்கத்துடன் ஸ்வர்க்கம் முதலியவற்றை விட்டு விலகிச் சென்று வைகுண்டத்தில் மறைந்து விட்டாள். அப்பொழுது எல்லோரும் துக்கத்துடனும் சோகத்துடனும் பிரம்மாவின் சபைக்குச் சென்றனர்; பிரம்மாவை வணங்கிக் கொண்டு வைகுண்டம் சென்றனர்.

ஸ்ரீ பகவான் கூறியது –

பிரம்மாவே ! தேவர்களே ! என்னைப்பற்றியும் என் பக்தர்களைப் பற்றியும் எங்கே நிந்தை நிகழ்கிறதோ அங்கிருந்து மகாலக்ஷ்மியானவள் அவமதிக்கப்பட்டவளாய்க் கருதி மிகுந்த கோபத்துடன் விலகிவிடுகிறாள். எங்கெங்கு ஹரிபூசையும் ஹரிசங்கீர்த்தனமும் நிகழ்கின்றனவோ அங்கு சர்வமங்களங்களுக்கும் மங்களமாக அவள் நிலை பெறுகிறாள்.

ஸ்ரீ நாராயண ரிஷி கூறியது –

தேவர்களனைவரையும் நோக்கி இங்ஙனம் கூறி விட்டு லக்ஷ்மீநாராயணர் லக்ஷ்மியிடம் 'பாற்கடலில் நீ உன் கலையால் தோன்றுவாயாக' எனக் கூறினார். ஜகந்நாதர் இவ்வாறு கூறிவிட்டு பிரம்மாவினிடம் மீண்டும் 'பிரம்மாவே ! கடலைக் கடைந்து தேவர்களுக்கு லக்ஷ்மீயைக் கொடும்' என்றார். நாளடைவில் தேவர்கள் பாற்கடலுக்குச் சென்றனர். மந்திரமலையை மத்தாகச் செய்து, கூர்மத்தை மத்தைத்தாங்கும் பாத்திரமாக்கி, ஆதிசேஷனைக் கடையும் கயிறாக்கி அசுரர்களும் தேவர்களும் கடைந்தார்கள். தன் வந்திரியையும், அமிருதத்தையும், உச்சைசிரவஸ் என்ற குதிரையையும், விரும்பத்தக்க பல ரத்னங்களையும், யானைகளின் சிறந்த ஐராவதத்தையும், லக்ஷ்மீயையும், சுதர்சனத்தையும் அடைந்தார்கள். முனிவரே ! அந்த விஷ்ணு சக்தியும் பதிபக்தியிற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்தவளுமான லக்ஷ்மி பாற்கடலில் பள்ளி கொண்டவரும் சர்வேசுவரருமான அழகிய விஷ்ணுவுக்கு வனமாலையை அளித்தாள். பிரம்மாவாலும் சங்கரராலும் தேவர்களாலும் துதித்துப் பூசிக்கப் பெற்ற அவள் தேவர்களுடைய வாசஸ்தானத்தில் பிரம்ம சாபவிமோசனத்திற்காகத் தனது பார்வையைச் செலுத்தினாள். அசுரர்களால் பயங்கரமாய் பீடிக்கப்பட்டிருந்த தங்கள் ராஜ்யத்தை தேவர்கள் மகாலக்ஷ்மியின் பிரசாதத்தாலும் வரதானத்தாலும் மீண்டும் அடைந்தனர்.

நாரதர் கூறியது –

மங்களமான ஹரியின் கீர்த்தனமும் உத்தமமான ஞானமும் கேட்கப்பட்டது. பிரபுவே ! விரும்பிய லக்ஷ்மி உபாக்கியானத்தில் தியானம், தோத்திரம் ஆகியவற்றைக் கூறியருளும்.

நாராயணரிஷி கூறியது –

ஆதியில் இந்திரன் பூசித்த முறையைக் கூறுகிறேன். தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து பரிசுத்தமான ஆடையணிந்து பாற்கடலில் கலசத்தைத் தாபித்து ஆறு தேவதைகளைப் பரிவுடன் பூசித்தாள். கணேசரையம் சூரியனையும் அக்னியையும் விஷ்ணுவையும் சிவனையும் சிவசக்தியையும் புஷ்பம், கந்தம் முதலியவற்றால் பக்தியுடன் பூசித்துப் பின்னர் பரமேச்வர்ய ரூபிணியான மகாலக்ஷ்மியை ஆவாஹனம் செய்து பிரம்மாவையே புரோகிதராய்க் கொண்டு தேவேந்திரன் பூசை செய்தான். பிரம்மாவின் வாக்கியப்படி பக்தியுடன் பூசித்துப் பதினாறு உபசாரங்களில் ஒவ்வொன்றையும் தனித்தனி மந்திரத்துடன் முறைப்படி சமர்ப்பித்தான். மூலமந்திரத்தை முறைப்படி பக்தியுடன் பத்துலக்ஷம் தடவை சபித்தான். அம்மந்திரமாவது ('ஸ்ரீம்–ஹ்ரீம்–க்லீம்– ஐம்) கமலவாஹின்யை சுவாஹா'. 'சுவாஹா' வுடன் கூடிய இது வைதிகமான மந்திரம் என்பது பிரசித்தம். இந்த மந்திரத்தால் குபேரன் சிறந்த ஐசுவரியத்தை அடைந்தவனானான். மந்திரசித்தி எய்திய இந்திரனுக்கு பக்தர்களுக்கு அருள் புரியும் மகாலக்ஷ்மியானவள் புன்முறுவல் பூத்தவளாய்ப் பிரசன்னமாகிக் காட்சியளித்தாள். லோக மாதாவும் சாந்தஸ்வரூபிணியுமான அவளைக் கண்டு இந்திரன் உடல் புளங்கிக் கண்களில் நீர் பெருகக் கை கூப்பியவனாய், பிரம்மாவால் அளிக்கப்பட்ட தோத்திரராஜத்தாலும் எல்லா ஆசைகளையும் பூர்த்தி செய்விக்கும் வைதிக மந்திரங்களாலும் துதித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திரன் கூறியது –

கமலவாசினிக்கு நமஸ்காரம், நாராயணிக்கு நமஸ்காரம். கிருஷ்ணபிரியையும் மகாலக்ஷ்மியுமான உனக்கு எப்பொழுதும் மீண்டும் மீண்டும் நமஸ்காரம். தாமரையிதழ் போன்ற கண்படைத்தவளும், தாமரை போன்ற முகம் படைத்தவளும், தாமரையை ஆசனமாய்க் கொண்டவளும், பத்மினியும், விஷ்ணுசக்தியுமானவருக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரம். செல்வத்திற்கு அதிஷ்டமான தேவதையும், மகாதேவியும், புத்திஸ்வரூபிணியும், விருத்தியை அளிப்பவளுமான உனக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரம். நீயே தேவமாதாவாகிய அதிதிதேவி, கமலா லயத்திலிருக்கும் லக்ஷ்மி; ஹவிஸ்ஸை அர்ப்பணம் செய்கையில் நீ சுவாகா தேவியாகவும், பிதிருக்களுக்குக் கவ்யம் அளிக்கையில் ஸ்வதா தேவியாகவும் கூறப்படுகிறாய். நீயே விஷ்ணுஸ்வரூபிணீ, அனைத்தையும் தாங்கும் பூமிதேவி, சுத்தசத்துவஸ்சரூபீணீ, நாராயணனிடம் உறைபவள். உன்னிடமிருந்து விலகிய உலகனைத்தும் சாம்பல் போல் சாரமற்றதாகிறது; உலகனைத்தும் நீயல்லாமல் உயிரற்றது போலாகிறது. ஞானத்தையும் தருமத்தையும் விரும்பப்படும் சௌபாக்கியமனைத்தையும், பிரபாவத்தையும், பிரதாபத்தையும், அதிகார மனைத்தையும் தந்தருள் புரிவாயாக.

'யுத்தத்தில் வெற்றியையும் பராக்கிரமத்தையும், சிறந்த ஐசுவரியத்தையும் தந்தருள்வாயாக' என்று கூறி மகேந்திரன் எல்லா தேவர்களுடன் கண்களில் நீர் ததும்ப மீண்டும் மீண்டும் தலையால் வணங்கினான். லக்ஷ்மியானவள் தேவர் கூட்டத்தில் மகிழ்ந்து அவர்களுக்கு வரமளித்துவிட்டுக் கேசவருக்கு மனதிற்கினிய புஷ்பமாலையை அர்ப்பணம் செய்தாள். நாரதரே ! அதன்பின் தேவர்கள் தத்தம் இருப்பிடமேகினர்.

பிருகுரிஷிக்கு கியாசியிடத்தும் அமிரீத பாதாளத்தில் திருப்பாற்கடலில் ஜேஷ்டா தேவியுடனும் பிறந்து திருமாலை மணந்தவள் ஒரு முறை பசுக்களின் கோமயத்தையும் கோமூர்த்திரத்தையும் இடமாகக் கொண்டவள் பிருகுவாலுதையுண்ட திருமாலின் மார்பினின்றும் நீங்கி கபிலரிடத்தில் இருக்க வந்தவள். இரத்த பிக்ஷாடனத்தில் பீடன மூர்த்தியை விஷ்ணுவின் உயிர்ப்பிச்சை வேண்டியவள். பிரமன் சிரங்கிள்ளிய வைரவருக்கு அக்கபாலம் கையைவிட்டு நீங்க பிக்ஷையிட்டவள். தத்தாதிரேயரிடம் இருந்து அசுரர் கொள்ளச் சிலதூரந் சென்று மறைந்தவள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமாவதாரத்தில் சீதையாகவும் கிருஷ்ணவதாரத்தில் ருக்மணியாகவும் வேதவதியாகவும், சூடிக்கொடுத்தாளாகவும் மற்றும் அடியவர் வேண்டியபடியும் திருவவதரித்து உலகத்து உயிர்களுக்கு வேண்டிய பெருவாழ்வு அளித்து வரும் விஷ்ணுவின் சக்தி இவள்.

சாபத்தாற் கோட்டுருவான அம்முட்டைகளில் குதிரைகள் பிறந்தன. இலக்ஷ்மி விஷ்ணுவுடன் இருக்கையில் வாலக்கில்லியர் வந்தனர். அவர்களது வரவை மதியாமல் நகைத்தது பற்றி விஷ்ணு மூர்த்திவியா குலக் கேடியாக சாமமேற்றவர். (திருப்பூவணபுராணம்)

இந்த இலக்ஷ்மி, தாளியலக்ஷ்மி, கஜலக்ஷ்மி, வீரலக்ஷ்மி, என்று பல பெயர்கள் பெறுவாள்.

இலக்ஷ்மி சிருஷ்டி முதலில் நாராயணனது வாமபாகத்தில் தோன்றித் தானே இரு கூறாய் ராதை என்றும் லக்ஷ்மி என்றும் பெயரடைந்தனள். இவள் தனது போகத்தால் பல உருவடைந்து சுவர்க்கத்தில் சுவர்க லஷ்மியாகவும், அரசர்களிடத்து இராஜலக்ஷ்மியாகவும், சிருகத்தில் கிருஹ லக்ஷ்மியாகவும், சம்பஸ்வ ரூபிணியாகவும், கோக்களில் சுரபியாகவும், யக்ஞன் தேவியாகிய தக்ஷிணையாயும், க்ஷீரசமுத்திர கன்னிகையாகவும், சூர்யசந்திரர்களிடம் சோபாரூபிணியாகவும் மற்ற மங்களப் பொருள்களிலெல்லாம் நிறைந்து மங்கள ரூபிணியாவும் இருப்பாள். இலக்குமி பூர்வத்தில் நாராயணனால் பூசிக்கப்பட்டவள். இவள் எல்லாத் தேவர்களாலும், அரசர்களாலும் பூசிக்கப் பெற்றவள். இவள் சர்வஜஸ்வரியங்களுக்கும் அதிதேவதை இந்திரனுக்குச் செல்வங்கெட துருவாசரிட்ட சாபத்தால் வைகுண்டமடைந்து மீண்டும் தேவர் அச்செல்வம் பெற கடல் கடைந்த போது பாற்கடலில் பிறந்தவள் வராக கற்பத்தில் நக்ன சித்தின் குமரியாய் விஷ்ணுவைமணந்தவள்.

இவள் இடதுகையில் வில்வப்பழம், வலக்கையில் பதுமம், தங்கநிறம், இரண்டு யானைகள் பொற்கலசங்களில் கங்கா சலங்கொண்டு இரண்டு புறங்களிலும் துதிகையால் அபிசேகங் கொள்ள இருப்பவள்.

*திருச்சிற்றம்பலம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிய வேண்டிய அரி அரன் பிரமேந்திராதிகள்

## பிரம விஷ்ணு உற்பத்தி

முனிவர்கள், வாயுதேவனை வணங்கி, "தேவா! தாங்கள் கூறியபடைப்புக்கிரமம், ஈஸ்வர அநுக்கிரகத்தால் உண்டானதாக இருக்க, அந்தப் படைப்பைச் செய்பவன் நான்முகப் பிரமன் செய்வதாகச் சொல்லப்படுகிறதே! இது எங்களுக்குச் சந்தேகமாக இருப்பதால் இதை விளக்க வேண்டும்!" மேலும் தாங்கள் இது வரையில் சொல்லிவந்ததில் பிரமனைச் சிவனுடைய புத்திரனாகச் சொன்னீர்கள். பிரமனும் விஷ்ணுவும் ஒருவரிடம் ஒருவர் பிறந்ததாகக் கேட்டிருக்கிறோம். எல்லாப் பூதங்களுக்கும் ஏதுபுதர்களான பிரம்ம விஷ்ணுக்களுக்குப் பிறப்பு என்பது எப்படி உண்டாயிற்று? வாயுபகவானே! தாங்கள் பிரமதேவரின் மாணவர். உமக்குத் தெரியாத விஷயங்கள் இல்லை. ஆகையால் இந்த விஷயத்தைத் தெளிவுபடுத்த வேண்டும்" என்றார்கள். அதற்குவாயுதேவன், "முனிவர்களே! நீங்கள் கேட்டவிஷயம் அருமையானது. இந்த விஷயத்தைப் பற்றி ஒருசமயம் நான் பிரமதேவரிடம் கேட்டபோது, அவர் எனக்குக் கூறியதைசொல்லுகிறேன், கேளுங்கள்! என்று கூறலானான்.

"மகேஸ்வரனிடத்தில் ருத்திரன், விஷ்ணு பிரமர்கள் முறையே பிறந்தார்கள். இந்த மூவரும் சர்வேஸ்வரனாகிய பரமேஸ்வரனை நோக்கிப் பெருந்தவஞ்செய்து, மகிமாதிசயங்களை அடைந்தார்கள் அவர்களில் உருத்திரன், பூர்வத்தில் பிரம்மவிஷ்ணு இருவரையும் படைத்தான், மற்றொரு கற்பத்தில் பிரமதேவன் விஷ்ணுவையும் ருத்திரனையும் படைத்தான். இப்படியாக ஒருவர் மற்றொருவரைப் படைத்தும் ஒருவரையொருவர் வெல்லக் கருதியும் என்றும் கற்பங்களில் நடத்திய விசேஷங்களைக் கண்ட முனிவர்கள் அவர்களுடைய பிரபாவங்களைச் சொல்லிக் கொள்ளுவதுண்டு. முன்பு நடந்த தற்புருஷ கற்பத்தில் ஆயிரம் தேவ வருஷங்கள் வரையில் நாராயணன் மேகவடிவங்கொண்டு, சகல லோக நாயகனாகிய சாம்பவமூர்த்தியைச் சுமந்தான், அந்தக் காரணத்தால், அது மேகவாதன கற்பம் என்று வழங்கலாயிற்று. சிவபெருமான் விஷ்ணுவால் உலகங்களைப் படைக்கச் செய்யும்போது, பிரமதேவன் கண்டு, அசூயை கொண்டு "விஷ்ணுவே! உனக்கு இத்தகைய பிரபுத்துவம் வந்த காரணம் என்ன? நானும் அந்தச் சர்வேசனைக் குறித்துத் தவஞ்செய்து உன்னையே படைப்பேன்' என்று கூறி அருந்தவம் செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபெருமானைத் தரிசித்து, "பகவானே, விஸ்வேஸ்ரா! மஹேஸ்வரா! தங்களது வலது புறத்தில் நானும் இடதுபுறத்தில் விஷ்ணுவுமாகப் பிறந்தோம், எனக்குச் சமானமாக அந்த விஷ்ணுவும் சிருஷ்டியைச் செய்கிறான். தங்களுடைய வரத்தின் சிறப்பால் என்னை அவமதிக்கிறான். என் பக்தியைவிட விசேஷபக்தி தங்களிடம் உண்டோ? நாங்கள் சமானமானவர்களாக இருக்க அவனுக்குமட்டும் ஏன் மேம்பட்ட அதிகாரங்களைக் கொடுத்தீர்கள்? எனக்கும் அத்தகைய சிறப்பை அளிக்கவேண்டும் என்று விண்ணப்பஞ்செய்தான். பகன் என்னும் சூரியனின் கண்களைப் பறித்த சங்கரன் தயாமூர்த்தியாய்ப் புன்னகையுடன் அந்தப் பிரமனுக்கும் சிறந்த சக்தியைக் கொடுத்தார். உடனே, பிரமன் கம்பீரமாக நடந்து, திருப்பாற்கடலை அடைந்து ஆதிசய காந்திப் பிரகாசத்துடன், பொன்னாலும் இரத்தினங்களாலும் அலங்கரிக்கப்பெற்ற திவ்வியவிமானத்தில் ஆதிசேஷசயனத்தில் யோக நித்திரை செய்து கொண்டிருக்கிற செந்தாமரைக் கண்ணும் நான்கு தோள்களும் கம்பீரமான சரீரமும், நவரத்தின சகிதமான ஆபரணமும் சங்கு சக்கர தாரணமும் சந்திர, பிம்பம் போன்ற முகமும் ஸ்ரீ வற்சம் பொருந்திய மார்பும் புன்னகையும், பூதேவியின் மெல்லிய கரங்களின் ஸ்வரிசத்தால் சேவிக்கும் காதங்களுமுடையவனாய் விளங்கும் ஸ்ரீவிஷ்ணுமூர்த்தியைக்கண்டு, "விஷ்ணுவே! நீ பூர்வம் என்னை விழுங்கிப்படைத்ததுபோலவே, இப்போது நானும் உன்னை விழுங்கிப் படைப்பேன். "என்று கூறினான். உடனே, விஷ்ணு எழுந்து புன்னகை செய்ய, பிரமன் அவ்விஷ்ணுவை விழுங்கி, மீண்டும் தன் புருவங்களிடையே தோற்றுவித்தார். அந்தச் சமயத்தில் அவ்விருவருடைய வன்மையும் காணக்கருதிய கடவுள் நாயகன், அருந்தவத்தால் அறியக்கூடிய திருமேனி வெளிப்பட்டுநிற்க; பிரம விஷ்ணுக்கள் இருவரும் பெருமகிழ்ச்சியுடன் சாஷ்டாங்கமாக அவரைப் பணிந்து துதி செய்தனர். அவர்களுக்கு அருள் புரிந்து கடவுள் நாயகர் மறைந்தார்.

## உருத்திரன் உற்பத்தி

"முனிவர்களே! பிரதிகற்பங்களிலும் பிரமனின் படைப்பு நிறைவேறும்படி சிவபெருமான் அநுக்கிரகிக்க உருத்திரன் தோன்றுவான். அந்த வரலாற்றைச் சொல்லுகிறேன். அண்டங்களில் விளங்கும் பிரமன், கற்பங்கள் தோறும் பிரஜைகளைப் படைத்து அவர்கள் விருத்தியடையாமையால், தன் படைப்பு பரவாமைக்காக மனம் வருந்த, அந்தத் துக்கத்தை விலக்கவும் பிரஜைகள் விருத்தியடையவும் அவ்வக்கற்பங்களில், காலஸ்ரூபனும் பரமசிவனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டளைசெய்யப்பட்டவனும் நீலலோகிதனும் உருத்திரகணபதியுமாகிய உருத்திர பகவான் பிரமனிடம்தோன்ற அந்தப்பிரமனை அநுக்கிரகிக்கின்றான். அந்தருத்திரனே, சற்குண ஐசுவரியவானும் எல்லாப் பூதங்களையும் கற்பாந்தரத்தில் சங்கரிப்பவனும் தேசோமயரூபனும், பரமேஸ்வரனால் பிரேரிக்கப்பட்டவனும், பரமேஸ்வரசம்பந்தமான சக்தியுடன் கூடியிருப்பவனும் சிவ சின்னங்களுடையவனும் சிவநாமம் தரித்தவனும் சிவரூபமே உடையவனும், எல்லாத் தொழில்களிலும் சமர்த்தனும் சிவ சமானமானவனும் சிவாக்ஞையைப் பரிபாலிப்பவனும் ஆயிரஞ்சூரியர்கள் ஒரேகாலத்தில் பிரகாசித்தாற்போன்ற திருமேனியுடையவனும், சர்ப்பங்களையே ஹாரகேயூர குண்டலகங்கள் கடிசூத்திரங்களாகவுடையவனும் முன்னோர்காலம் செய்த பிரம விஷ்ணுக்களுடைய கோடானுகோடிசிரங்களை மாலையாக அணிந்த தோள்களையும் மார்பையும் உடையவனும் கங்கையின் அலைகளால் நனைக்கப்பட்ட சடையையுடையவனும், கைலையைப் போன்ற பெரிய வெள்ளி இடபவாகனமுடையவனும்மேக கோஷம்போன்ற கண் உத்வனியமுடையவனும் பிரளயகாலாக்கினியைப் போன்ற காந்தியையுடையவனும் ஆகிய உருத்திரன் கோரரூபதாரியுமாக பிரத்தியட்சமாகத் தரிசனம் தந்து, பிரமனுக்கு ஞானத்தையளித்து, படைப்பதற்குச் சகாயஞ்செய்கிறான். இத்தகைய உருத்திர அனுக்கிரகத்தால் பிரதி கற்பங்களிலும் பிரமதேவன் பிரவாகரூபமும் நித்தியமுமாகிய படைப்பைச் செய்கிறான். ஒரு கற்பத்தில், நீலலோகிதனாகிய இந்தருத்திரன் படைக்கவேண்டும் என்ற விருப்பமுடைய பிரமனால் பிரார்த்திக்கப்பட்டவனாய், சடையையுடையவர்களும் பயமற்றவர்களும் நீலகண்டர்களும் முக்கண்ணர்களும், ஐதாமரணம் அற்றவர்களும் சூல பாணிகளும் தனக்கு ஒப்பானவர்களுமாக எண்ணற்ற உருத்திரர்களை மனத்தால் சிருஷ்டி செய்தான். அந்த உருத்திரர்களைப் பிரமன் கண்டு சர்வேஸனாகிய உருத்திர பகவானே! நான் இத்தகைய பிரஜைகளைக் கண்டதேயில்லை. இறக்கத்தக்கவர்களாகவும் சிலரைப் படைக்க வேண்டும்!'' என்று பிரமன் பிரார்த்திக்க பரமேஸ்வரன் சிரித்து, பிறப்பு இறப்புள்ள பிரஜைகளைப் படைக்கமாட்டேன். அத்தகையவர்களை நீயே படைக்கக் கடவாய். என்னாற் படைக்கப்பட்டவர்கள், உன்படைப்புக்கு துணை நிற்பவர்களாய் எப்போதும் என்னுடன் சஞ்சரித்துக் கொண்டிருப்பார்கள்!'' என்று கூறினார். உருத்திரகணங்களுடன் கூடிப்பிரமன் சிருஷ்டித் தொழிலை நிறைவேற்றிக் கொண்டிருந்தான். அதுமுதற்கொண்டு சர்வேசன் மரணகாரண படைப்பைச் செய்யாது இருக்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரமன் உருத்திரனைத் துதித்தது

"பிரமதேவன் செய்த படைப்புக்கள் எல்லாம் விருத்தியடையாமல் மனத்திருப்தியுமில்லாமல், துக்கமிகுந்து, இனிப்பெண்கூடலால் உண்டாகும் படைப்பைச் செய்யவேண்டும் என்று கருதியவனாய் சர்வேசனால் பெண்கள் படைக்கப்படாததால், தானே சுதந்திரமாகப் பெண்களைச் சிருஷ்டிச் செய்யும் வலிமையற்றவனாய் இவ்வகையில்தான் சிருஷ்டிசெய்யவேண்டும் என்று தீர்மானித்து, சர்வேசனுடைய திருவருளையடையவேண்டும் என்று விரும்பி, முதற்பட்டதும் பரமானதும் அநந்தமானதும் உலகங்களிற்காக்கத்தக்கதும் நிர்குண, நிஷ்பிரபஞ்ச, நிஷ்கள, நிரந்தர நித்தியமானதும், ஈஸ்வரனை எப்போதும் விட்டுப்பிரியாததுமாகிய சக்தி என்னும் உமாதேவியைப் பாகமாகவுடைய சிவபெருமானை இதயதாமரையில் இருத்தி, உக்கிரமான தவத்தைச் செய்தான். அப்போது சர்வேசன் அந்தத் தவத்திற்கு மிகவும் மகிழ்ந்து தன்னுடைய ஓர் அம்சத்தால் அர்த்தநாரீஸ்வர மூர்த்தியாகப் பிரத்யட்சமானார். அவ்வாறு காட்சியளித்த பராத்பரனும் சகத்துக்குக் காரணனும் அவ்வியக்த ஸ்வரூபனும் அத்விதீபனும் பாவிகளாற்காணப்படாதவனும் உலகங்களையெல்லாம் உண்டுபண்ணுபவனும் சர்வலோகமாதாவைத் தன் பங்கில் உடையவனும் சர்வ வியாபியுமாகிய பகவானைப் பிரமதேவன் சாஷ்டாங்கமாக வணங்கி வழிபட்டு பக்தி சிரத்தைகளுடன், மதுரமான வியாகரணலக்ஷண சம்பத்துக் கூடிய ஸ்தோத்திரங்களால், மஹாதேவனையும் மஹாதேவியையும் ஸ்தோத்திரஞ் செய்யலானான்.

## பெண்கள் படைப்பு

முனிவர்களே! இவ்வாறு துதிசெய்த பிரமதேவனைக் கண்டு மகிழ்ந்து அர்த்த நாரீசனாகிய பகவான் மேகம்போன்ற தொனியும் மதுராகாரமும் கம்பீரமுமாகிய சிறந்த பொருளமைந்த வாக்கியத்தால் புன்னகையுடன், "மகனே உன் துதிக்கு மகிழ்ந்தேன். பிரஜாவிருத்தியைக்குறித்து நீ தவஞ்செய்தாய். உன் விருப்பத்தை நிறைவேற்றுவேன்" என்று தம் வாமபாகமாகிய திவ்வியகுணமுடைய பராத்பரையாகிய, சக்தியும் சன்மமிருத்யுசராதிகளற்ற உலகமாதாவும் மனோவாக்கு, காயங்களுக்கு எட்டாதவளுமான பார்பதியைத் தம் சரீரத்திலிருந்து பிரித்தார். பரமேஸ்வரியும் எல்லா உலகங்களுக்கும் மஹேஸ்வரியும் சர்வக்ஞையும் சர்வ வியாபியுமாகிய மஹாதேவியைப் பிரமதேவன் வணங்கி, 'தேவி தேவனாகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாம்பவமூர்த்தியால் யான் தோன்றினேன். பிரஜைகளைப் படைக்கும்படி அவரால் நியமிக்கப்பட்டு, மனத்தால் தேவாதியரையும் எல்லாச் சகத்தையும் படைத்தேன். அவ்வாறு படைக்கப்பட்ட படைப்புகள் அனைத்தும் விருத்தியடைத்தில. ஆகையால் இனி ஆண் பெண் சங்கமத்தால் உலக விருத்தியை உண்டு பண்ண வேண்டும் என்று இச்சித்தேன். முன்பு சர்வேஸ்வரனால் பெண் இனத்தினர் படைக்கப்படாததால் அதைப் படைக்க, எனக்குச் சாத்தியப்படவில்லை. எல்லாச் சக்திகளும் உன்னாலேயே உண்டாதலின் உன்னை யான் அது விசயமாக வேண்டுகிறேன். சராசரப்பிரபஞ்சம் ஈடேறும்படி உனது ஓர் அம்சத்தால் என் புதல்வனான தக்ஷனுக்கு மகளாய் அவதரிக்க வேண்டும்" என்று வேண்டினான். அதற்குப் பார்வதிதேவி, தன் புருவ மத்தியில் ஒரு சக்தியை உண்டாக்கினாள். அப்போது சிவபெருமான் அப்படித் தோன்றிய சக்தியை நோக்கி, "நீ பிரமனது விருப்பத்தின்படியே செய்வாயாக!" என்று கட்டளையிட்டு' உமாதேவியுடன் திருக்கயிலாய கிரியை அடைந்தார். சிவபெருமானுடைய வலது புறத்தில் உதித்த பிரமதேவன், பார்வதியின் புருவமத்தியில் தோன்றிய சக்தியைப் பணிந்து, "நீ என் மகனாகிய தக்ஷப்பிரஜாபதியின் மகளாகி, உலக விருத்தியை உண்டாக்க வேண்டும்!" என்று வேண்ட, அந்தச் சக்தி அப்படியே தக்ஷப்பிரஜாபதியின் மகளானாள். அன்று முதல் பெண்களும் ஆண்களும் கலவி செய்து மக்களைப் பெறுவார்களானார்கள்.

## தக்ஷன் முதலியோர் சாபமேற்றது

முனிவர்கள், வாயுதேவனை நோக்கி, "தேவரே! சிவபெருமானே சர்வலோகநாயகனாகையால் அந்தப் பகவான் விஷயத்திலேயே எங்கள் திரிகரணங்களும் விநியோகிக்கத்தகும். நாங்கள் மன்னர்களின் கதைகளைக் கேட்க ஆசைப்படவில்லை. தேவதேவனாகிய சங்கரபகவானுடைய சரிதங்களையே நாங்கள் கேட்கவிரும்புகிறோம். ஆகையால் தக்ஷன் மகளாகித் தாக்ஷாயணி என்ற பெயர் சூடிய சர்வலோக மாதாவாகிய பார்வதிதேவிபர்வதராஜகுமாரியாக அவதரித்தவகையும், தக்ஷப்பிரஜாபதி சிவபெருமான் அவனைச் சினந்த விதமும் கூறவேண்டும்" என்று கேட்க, வாயுதேவன் மகிழ்ந்து, சிறிது சிவத்தியானத்திலிருந்து கூறத்துவங்கினான்.

"முனிவர்களே ! காமதேனு, கற்பகத்தருசங்கநிதி, பதுமநிதி சிந்தாமணி முதலிய செல்வத்யையும் கற்பகச் சோலையையும் அரமகளிர் சுகத்தையும் அனுபவித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திரன் முதலிய இமையவர்கள் அனைவரும் சேர்ந்து, "நாம் இதுவரையில் சுகத்தை அநுபவித்துப் பலவகையான பாவங்களைச் செய்தோம். ஐயகோ! அவை எப்படி அமையும்?" என்று ஏங்கி, முனிவர்கள் தவஞ்செய்யும் இமயமலையை அடைந்தார்கள். சிவபெருமானையும் சிவசக்தியையும் தரிசித்தார்கள். அவர்களிடம் வரம் பெற்றுத் தங்கள் தேவநகருக்குச் சென்றார்கள். அந்தச் சமயத்தில் தக்ஷன் தன் குமாரியாகிய சதிதேவியையும் தன் மருகனான சங்கரனையும் காண விரும்பி, இமயமலைக்குத் தேவருடன் வந்திருந்தான். பார்வதிதேவி அங்குவந்த தேவர், முனிவர் முதலியவர்களுடன் தக்ஷனையும் சமமாகக் கருதிப் பேசினாள். தக்ஷன் தன் அஞ்ஞானத்தால் சதிதேவியைச் சர்வலோக மாதாவென்று உணராமல், தன்னைத்தன் மகள் சிறப்பாக வரவேற்று மரியாதை செய்யவில்லையே என்று துவேசங்கொண்டு தன் விதிவசத்தால் தன் மருமகனாகிய சர்வேசனையும் தன் மகளாகிய சதிதேவியையும் அவமானஞ் செய்ய வேண்டும் என்று கருதி, சிவபெருமானுக்கும் பார்வதிக்கும் அவிர்ப்பாகம் கொடுக்காமல் ஒரு யாகஞ்செய்யத் தீர்மானித்துக் தன் நகரடைந்து, அவர்களை அழைக்காமல், பிறபுத்திரிகளையும் மருமகர்களையும் ஓலை அனுப்பித்து அழைத்தான் அதனால் சதிதேவியும் சிவபெருமானும் நீக்கிய சகல தேவர்களும் அங்குவந்திருந்தார்கள் அதையறிந்த நாரத முனிவர் சிவபெருமானையும் சதிதேவியையும் தரிசித்து நடந்தவற்றைச் சொல்ல, சதிதேவி தானும் அந்தயாகத்தைக் காணவேண்டும் என்று சிவபெருமானிடஞ் சொல்ல, சிவபெருமான், "நீ அங்கு போனால் அவமானமடைவாய்!" என்று கூறி, மீண்டும் தேவியின் விருப்பத்திற்கு இசைந்து விடை கொடுப்ப சதிதேவி எல்லாத் திக்குகளிலும் முகங்களும் திவ்விய சோபானங்களுமுடையபுடமிட்ட பொன்னாற் செய்யப்பட்டதும். இரத்தினங்கள் இழைக்கப் பெற்றதும், முத்து விதானமிட்டு, புஷ்பமாலைகள் தொங்கவிட்டு, தூண்களையுடையதும் பவளத்தோரணங்கள் கட்டப் பெற்று, மலர் மெத்தை பரப்பியுள்ளதுமான ஒரு விமானத்தில் சித்திர விசித்திர நவரத்தினங்கள் இழைக்கப்பெற்ற சிங்காசனத்தில் அமர்ந்தாள். அந்த விமானத்திற்கு எருதுக்கொடி கட்டப் பெற்றது. பார்வதிதேவி புறப்படும்போது, பரிவாரப் பெண்கள் புடைசூழ்ந்து அந்த விமானத்தில் மெய்க்காப்பாளராக ஏறிக் கொண்டார்கள். அவர்களில் இருவர் வஜ்ரதண்டம் பொருந்திய சாமரைகளை வீச அவை இரண்டு அன்னங்களையும் அந்தச்சாமரைகளுக்கிடையேயுள்ள தேவியின் திருமுகம் ஒரு தாமரை மலரும் போலிருந்தன. சுமாலினி என்ற கன்னிகை' பூரணச் சந்திரன் போன்ற குடையைப் பிடித்தாள். சுபாவதி, தேவியுடன் கவறாடினாள். தேவியின் பாதுகைகளை ஒரு கன்னி மார்பிலணைத்து நின்றாள். ஒருத்தி கண்ணாடி காட்டி நின்றாள், ஒருத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசிறினாள். ஒருத்தி தம்பலப் படிக்கமேந்தினாள். ஒருத்தி கிளியைக் கரத்தில் ஏந்தி நின்றாள். ஒருத்தி மலர்மாலைகளையும் ஒருத்தி ஆபரணப்பெட்டகத்தையும் ஏந்தியிருந்தார்கள். இப்படிப்பல மங்கையர், தத்தமக்கு விதித்த பணிவிடைகளைச் செய்து கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு மத்தியில் சதிதேவி, நட்சத்திரங்களின் இடையே விளங்கும் சந்திரனைப் போலிருந்தாள். பிரயாணத்தை விளக்கத்தக்க பேரிகை சங்கம், வேணுமிருதங்கம் முதலிய கருவிகளும் அநேகவாயிரம் கரஹனங்களும் ஒலிக்க, எண்ணாயிரர் கணநாதர் முழக்கமிட்டு முன்செல்ல, குமாரக்கடவுள் கஜாரூடராக வந்தாற்போல, சோமநந்தி என்ற கணநாயகன் எருதுவாகனத்தில் முன்செல்லவும் தேவதுந்துபிகள் முழங்கவும் அப்சரமங்கையர் நடனஞ்செய்யவும், மலர்மாரி பொழிய, விமானம் புறப்பட்டது. சதிதேவி, தன் தந்தையின் யாகசாலையை அடைந்தாள். அவளது வருகையைக் கண்ட தக்ஷன், சிறிதும் மரியாதை செய்யாமலும் உபசாரவார்த்தைகள் சொல்லாமலும் தன் அழிவுகாலத்தால் மிகவும் கோபங்கொண்டு, சதிதேவியைவிடத் தாழ்ந்த பிற புத்திரிகளை விசேஷமாகப் போற்றிக் கொண்டிருந்தான். அதைக்கண்ட சதிதேவி பெருங்கோபங் கொண்டு, தேவர்கள் நடுவில் வேதவல்லியுடனிருந்த தன் தந்தை தக்ஷனை நோக்கி, "பிரமன் முதல் பைசாசம் ஈறாகவுள்ள உலகத்துக்கு நாயகனாகிய சங்கர பகவானைப் பூஜை செய்ய மறந்தாயே ஏன்? அதிருக்கட்டும், உன் புதல்விகளில் மூத்தவளாகிய என்னைப் பிற புத்திரிகளுடன் சமானமாகக் கருதி மதிக்காமல் என் கணவனைப் போல என்னையும் அவமதித்த காரணம் என்ன? சொல்வாய்!" என்று கேட்டாள். அதற்குத் தக்ஷன் கோபத்துடன் "ஓ சதி! உனக்கு இளையவர்களாகிய என் குமாரத்திகள் யாவரும் குணத்திலே சிறந்தவர்கள். உன் கணவனாகிய திரியம்பகனைவிட என் மருகர்கள் யாவரும் சிறந்த அறிஞர்களாகவும் பலவான்களாகவும் இருக்கிறார்கள். ஆகையால் உங்கள் இருவரையும் போலன்றி அவர்கள் யாவரும் என்னால் போற்றுதலுக்கு உரியவர்களே ! உன் கணவனோ பித்துப்பிடித்து, மயானத்தில் பேய் பசாசுகளுடன் அங்கு கூத்தாடுகிறவன். உத்தமலக்ஷணம் சிறிதும் இல்லாதவன், எலும்பு மாலையும் கபால மாலையும் அணிந்தவன். அவன் எனக்குப்பகைவன். ஆகையால் அவனும் அவனுக்கு மனைவியாகிய நீயும் இந்த யாகத்திற்கு வருவதற்குரிய யோக்கியதையற்றவர்கள் என்றான். அதைக்கேட்ட சதிதேவி கோபங்கொண்டு, தக்ஷனை நோக்கி, யாகசாலையிலிருந்த அனைவரும் கேட்க; கொடியவனே! சிவபெருமானே நிந்தித்த நீ குருத்துரோகியானாய். ஆகையால் மஹா பாவி! உலக நாயகனாகிய மகேசனுடைய கோபத்திற்கு இரையாவாய்! விரைவில் நீ தண்டிக்கப்படுவாய்!" என்று சபித்துத் தன் தக்ஷ சம்பந்தமான உடலை மாயா சம்பந்தமாக ஒழித்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடுங்காலமாகப் பார்வதிதேவியை மகளாகப் பெற வேண்டும், என்ற கருத்துடன் ஹிமாசல மன்னன் பெருந்தவஞ் செய்து கொண்டிருந்தான். ஆகையால் சதிதேவி தன் மாயா உடலுள் அவனை அடைந்து, அவனுக்கு மகளானாள்.

முனிவர்களே! சதிதேவி தக்ஷனைவெகுண்டு பிரிந்தவுடனேயே மந்திரங்கள் யாவும் மறைந்தன. யாகமும் நிறைவேறாது நின்று உணர்ந்த தேவர்களும் முனிவர்களும் நடுங்கினார்கள். இந்தச் செய்தியைச் சிவபெருமான் உணர்ந்து, அத்தகைய யாகத்தைச் செய்த தக்ஷன் மீது கோபங்கொண்டு "தக்ஷா! நீ என்னையும் என் மனைவியையும் அவமதித்துப் பிறபுத்திரிகளையும் மருகர்களையும் போற்றினார்களாகையால், நீ மானுடனாகப் பிறக்கக் கடவாய்! அப்போது நீ யாகஞ் செய்ய எத்தனிப்பாய். அந்த யாகத்தையும் யாமே அழிப்போம். உன்னால் போற்றப் பெற்ற மருகர்கள் வைவஸ்வதமனுவந்தரத்தில் மானுடராவார்கள். உன் காரியங்கள் யாவும் விக்கினம் அடைக" என்றும் சபித்து, அவ்வாறே அவர்கள் தோன்றிய காலத்தில் சிவபெருமான் அவர்களை அழித்தார்.

## வீரபத்திர அவதாரம்

"முனிவர்களே! சகல லோக மாதாவாகிய உமாதேவியைக் குறித்து நெடுங்காலம் தவஞ்செய்து புத்திரியாகப் பெறக்கருதிய மலைமன்னன் மனங்களிக்கும்படி, அவ்விறைவியே புதல்வியாகி அவனிடம் வளர்ந்து வந்தாள். சிவபெருமான் அந்தப் பார்வதராஜன் மகளான பார்வதியை மணந்து, இமயமலைச் சிகரத்தில் நெடுங்காலம் தேவியுடன் கூடி வாழ்ந்திருந்தார். அநேக யுகங்கள் கழிந்தன. தக்ஷன் சிவபெருமானின் சாபப்படி பிரதேசசு என்பவனுக்குப் புத்திரனாகிய, மோக்ஷ விருப்பத்தால் அஸ்வமேதயாகஞ் செய்ய விரும்பி, இமயமலையில் முனிவர்களும் சித்தர்களும் விரும்பிய, இமயமலையில் முனிவர்களும் சித்தர்களும் நிரம்பிய கங்காத்துவாரம் என்ற இடத்தில் யாகாரம்பம் செய்தான் அந்தயாகத்தில் இந்திரன் முதலியதேவர்களும் ஆதித்தர்களும் வசுக்களும் உருத்திரர்களும் மருத்துவர்களும், பிதுர்க்களும் ஆத்தியர்களும் தூமபர்களும் அஸ்வின் தேவர்களும் பல முனிவர்களும் விஷ்ணுமூர்த்தியும் தத்தமது யாக பாகத்தை ஏற்க வந்தார்கள், எண்ணற்ற முனிவர்களுடன் வந்த ததீசி முனிவர், அங்கிருந்த தேவர்களையெல்லாங்கண்டு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபெருமானைக் காணாததால் கோபங் கொண்டு, தக்ஷனை நோக்கி "தக்ஷா! பூஜிக்கத் தகாதவர்களைப் பூஜித்ததாலும் பூஜிக்கத் தக்கவர்களைப் பூஜிக்காமல் விட்டதாலும் மனிதன் பெரும்பாவத்தைச் சந்தேகமில்லாமல் அடைவான். அசத்துக்களுடைய ஆதரணையைக்கொண்டு தக்கவர்களை அவமதித்தால் சர்வேசன் அப்போதே தண்டிப்பான். சர்வலோக நாயகனாகிய சங்கரனை நீ ஏன் பூசிக்கவில்லை?" என்று கேட்டார். தக்ஷன் அந்த முனிவரை நோக்கி, "முனிவனே! எருதுமீது சவாரிசெய்து ஜடைமுடிதரித்த, சூலமேந்திய பதினொரு ருத்திரர்கள் இங்கு வந்திருக்கிறார்கள். இவர்களையன்றி வேறு ஒரு ருத்திரனும் இருக்கிறானோ?" என்று கேட்டான். ததீசி முனிவர் கோபங்கொண்டு "அடா தக்ஷா! நீ யாது கூறினை? இந்த யாகத்தே கர்த்தாவாகிய முதல்வனை விடுத்து, பின்னவர்களாகிய பிரம விஷ்ணு முதலியவர்களுக்குப் பூசைசெய்து யாது பயன்? பிரமன் முதலியவர்களைப் படைத்தவனும் பிரகிருதி புருஷர்களுக்குத் தலைவனும் திருமால் முதலிய தேவர்களையெல்லாம் ஏவலாளர்களாகக் கொண்டவனும் தத்துவஞானிகளால் உணரத்தக்கவனும் அழிவற்றவனும் அக்ஷர சொரூபனும் பரம்பொருளும் சிருஷ்டியாதித் தொழில்களை நடத்துவோனும் ஆதி மத்தியாந்த ரஹிதனும் மனம், வாக்கு, காயங்களுக்கு எட்டாதவனும், அநாதி புருஷனும், மும்மூர்த்தி சொரூபனுமாகிய சர்வேஸ்வரனே இந்த யாகத்தில் பூஜிக்கத் தக்கவன். அந்தப் பகவானையே பூசிக்க வேண்டும்; அந்தச்சர்வேசன் யாகம் உனக்குப் பயனளிக்கமாட்டாது! என்று கூறினார். அதைக் கேட்ட தக்ஷன் "முனி சிரேஷ்டரே! இந்த யாகத்திற்குப் பிரபுவும் சமானரஹிதனுமாகிய விஷ்ணுபகவானுக்குச் சாஸ்திர விதிப்படிப் புனிதமாகிய அவிசைச் சுவர்ண பாத்திரத்தில் மந்திர பூர்வமாகக் கொடுக்கப் போகிறேன்" என்று சொன்னான். ததீசி முனிவர், முன்னிலும் அதிக கோபங்கொண்டு, தக்ஷா! சர்வேசனை ஆராதிக்காத இந்த யாகம், யாகம் ஆகமாட்டாது. இது விரைவில் அழிந்த போகக்கடவது!" என்று கூறிச் சிவத்தியானத்துடன் தன் ஆசிரமத்தை அடைந்தார். மகா புத்திசாலியாகிய ததீசி முனிவர் நிர்சுவர யாகத்தைக் காணக்கூடாது என்று சென்றதைப் பார்த்தும், இங்கிருந்த தேவர்கள் யாக அவிசை உன்னிக் கருதியதாலும், தமக்கு நேரிடும் துன்பத்தை அநுபவிக்க வேண்டிய விதிவசத்தாலும் அங்கிருந்து நீங்காமல் இருந்தார்கள். இந்த விவரங்களை உணர்ந்த சர்வேஸ்வரியான உமாதேவி, தன் கணவனாகிய சங்கர பகவானைப் பணிந்து, 'நம்மை இகழ்ந்து செய்யும் தக்ஷனுடைய யாகத்தை அழிக்க வேண்டும்" என்று கூற சிவபெருமானும் தேவியினுடைய வேண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோளுக்கிரங்கி, மகா பராக்கிரம சாலியும் கணங்களுக்கெல்லாம் தலைவனும் ஆயிரம் தலைகளும் ஆயிரங்கண்களும் ஆயிரங்கரங்களுமுடையவனும் சூலம் டங்கம், வேல், வாள், வில், சக்கரம், வஜ்ஜிரம் முதலிய ஆயுதங்களை ஏந்தியவனும், சந்திரனைச் சிரத்தில் அணிந்து மின்னல் போல விளங்கும், தலைமயிரும் வக்கிர தந்தங்களும் பெருவாயும் சிவந்த நாவும் தொங்கிய உதடுகளும் சமுத்திர கோஷம் போன்ற த்வனியும், புலித்தோலுடையும், பிரம விஷ்ணுக்களின் கபாலமாலையை அணிந்தவனும் வீரக்கழல் வாகுவலையம், இரத்தினாபரணங்களும், சரபசார்த்து சிங்கங்களைப் போன்ற பராக்கிரமமும் மதயானை போன்ற நடையும் சங்க சாமரம் போன்ற வெள்ளிய தேகமும் இமாசலம் நடந்துவந்தாற்போன்று முத்துமாலைகளசைய நடந்து வருகையுமுடைய பிரளய காலாக்கினி போன்ற வீரபத்திரனைப் படைத்தார். அந்த வீரபத்திரர், சிவபெருமானைச் சாஷ்டாங்கமாகப் பணிந்து அவர் சந்நிதியில் இருந்தார்.

அப்போது உமா தேவியும் தன் கோபத்தால் ஆயிரம் சிரங்களும் கரங்களும் கரிய மேனியுமுடைய காளியைச் சிருஷ்டித்தாள் சிவபெருமானும் பார்வதிதேவியும் வீரபத்திரரை நோக்கி, "உனக்கு மங்களம் உண்டாகுக! என்று வாழ்த்தினர். அப்போது வீரபத்திரர் சிவபெருமானை வணங்கி "எனக்கு என்ன கட்டளை?" என்று கேட்க சிவபிரான், "வீரா! பிரதேச புத்திரனான தக்ஷன் கங்காத் வாரத்தில் யாகஞ்செய்கிறான். நீ இந்தக் காளியுடன் சென்று அந்த யாகத்தை அழிப்பாயாக! நான் பார்வதிதேவியுடன் ரைப்பிய முனிவரின் ஆசிரமத்திலிருந்து பார்த்திருக்கிறேன்!" என்று கட்டளையிட்டார். பார்வதிதேவி வீரபத்திரனையும் காளியையும் அணைத்து மூர்த்தாக்ரஹணஞ் செய்து புன்னகையுடன், 'குழந்தாய்! வீரபத்திரா! எனக்குப் பிரியமுண்டாக்க நீ பிறந்தாய் ஆகையால் நீ என்கோபத்தை ஒழிக்கவேண்டும். அது என்ன வென்றால், நீ காளியுடன் சென்று, சிவபெருமானைப் பூசிக்காமல் தக்ஷன் செய்துவரும் யாகத்தை அழித்துத் தக்ஷனையும் அங்குள்ளவர்களையும் கொன்றுவிட்டு வரவேண்டும்" என்று கூறினாள். வீரபத்திரர் அவ்விரு முதுகுரவர் சொல்லையும் சிரமேற்கொண்டு, காளியுடன் புறப்படும்போது, தனக்குத் துணைவரைப் படைக்கவேண்டும் என்று கருதி, தன் கோபத்தால் தன் உரோமங்களிலிருந்து உரோமஜர்கள் என்றகணங்களையும், வலதுபுயத்திலிருந்து நூறுகோடி கணங்களையும் இடது புயத்திலிருந்து மனைவியருடன் அநேகம் புத்திரகணங்களையும் பாதத்திலிருந்து கடுங்கோபமுடைய அநேக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருத்திரர்களையும் தொடை, பிருஷ்டம், பக்கம், முகம், குய்யம் முதலிய அவயங்களிலிருந்து எண்ணற்ற கணங்களையும் சிருஷ்டித்தான். அவர்கள் அனைவரும் தன்னைப்போலவே கண்கள், கரங்கள் சிரம் முதலியன ஆயுதங்களாகவுடையவர்களும் அநேக சூலம், வாள், கவு, வேல் முதலிய ஆயுதங்களை ஏந்தியவர்களாகவும் ருத்திரனைப் போன்றதோள் வலிமையுடையர்களாகவும், விளங்கி. அவர்கள் கூத்தாடிக் கொக்கரித்துக் கொண்டிருந்தனர். வீரபத்திரர் அவர்களை உடன்கொண்டு இடபவாகனமேறி காளியுடன் புறப்பட்டார். ஆயிரம் வாய்களையுடைய பானகம்பன் தன் ஆயிரம் வாய்களிலும் சங்குகளை முழக்கினான். துந்துபிகள் முழங்கின பத்தரகணங்களுடனும் காளியுடனும் விளங்கிய வீரபத்திரன், உருத்திரகணங்களிடையே விளங்கும் உமாதேவியுடன் விளங்கும், உருத்திரகணங்களிடையே விளங்கும் உமாதேவியுடன் விளங்கும் சிவபெருமானை ஒத்திருந்தான். அந்த க்ஷணமே, அவன் தக்ஷன்யாகஞ் செய்யும் இடம்நோக்கி பிரளயகாலத்தில் பிரளயகால ருத்திரன் புவனங்களை நோக்கிச் செல்வது போலச் சென்றான்.

*திருச்சிற்றம்பலம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாநிலம் கண்டறிந்த நாரதர்

நாரதீயபுராணம்:– இது, 25,000 கிரந்தங்களையுடையது விஷ்ணு துதி, விஷ்ணுவின் ஆராதனைக்குரியது. புண்ணியகாலம் துருவர், பிரகலாதர் சரிதை, மோகினியின் சரிதை, முதலியவற்றைத் தெரிவிக்கும். இவைகளைக் கற்றுக் கதையறிய ஊழிக்காலமும் உலகில் வாழ வேண்டும். ஆகவே அதைவிடுத்து அவிதான சிந்தாமணியில் உள்ளதைக் கூறக்கடமைப் பட்டுள்ளேன். இவருடைய சரிதை புராண அறிவின் புத்தியாகும். பிரமன் புத்திரர், இவர்கையிலிருப்பது மகதியாழ் இவர் தக்ஷன் குமரராகிய அரியவர்களுக்கு சபன சுபர்களுக்கு ஞானோபதேசஞ் செய்து ஞானிகள் ஆக்கினமையால் தக்ஷனால் நிலையிலாது திரியச் சமிக்கப்பட்டவர். வந்தை முதலியவர் முதலையாகச் சாபம் பெற்று எந்தத் தீர்த்தத்தில் அடையலாமென்றெண்ணியிருந்த போது தோன்றித் தென் சமுத்திரக் கரையிலுள்ள தீர்த்தங்களைக் கூறி மறைந்தவர்.

1000 வருஷம் பிரமசபையைக் காணத் தவஞ் செய்தார். தரும புத்திரரை இராச சூய யாகஞ் செய்யத் தூண்டிவிட்டார். விசுவநாதனுக்கு உன் குமரனாகிய அக்னி 12 வயதில் இடிவிழுந்து சாவான் எனக் கூறியவர், கம்சனுக்கு கிருஷ்ணன் முதலியோர் உற்பத்தி கூறினார். நாகாசுரனாற் சிறையிடப்பட்ட கன்னிகைக்கு முன் தோன்றி நீங்கள் கண்ணனாற் சிறை மீட்கப்படுவீர் என்றனர். பாண்டவர் காட்டிற்கேகியபின் திருதராட்டிரனுக்கும் குலநாசங்கூறியவர். இன்னும்,

தமயந்தியின் சுயம் வரத்தைத் தேவேந்திரனுக்குத் தெரிவித்தவர். உன்னைப் போல் உயர்ந்தமலை உலகத்திலில்லை என்று மேருவைப் புகழ்ந்தவர், தருமனுக்கு மூர்த்த மகிமை கூறியவர், மேருவின் தன்மையை விந்தமலைக்குக் கூறி விந்தமடைந்த

இறுமாப்பைக் கண்டவர், அசுபதி என்னும் மந்திர தேசாபதியதிக்குச் சாவித்திரி விரதம் கற்பித்தவர், அசுபதிக்குச் சத்தியவான் குண முதலியன கூறியவர். சாவித்திரிக்கு உபதேசமளித்தவர்,

பாகவதத்தை வியாசருக்கு உபதேசித்தவர், துருவனுக்கு தத்துவமும் தேசித்தவர், பிராசீன பர்சியிடஞ் சென்று, நீ செய்த கர்மத்தால் சுகப்பிராத்தியில்லை என்று துறவடையக் கூறியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் பிரமபுத்திரர்களை வஞ்சித்து தவசிகளாக்கியதால் பிரமன் இவரைப் பல பெண்களைப் புணர்ந்து காமுகராயிருக்கச் சபித்தார். இவர் பிரமாவை நோக்கி நிரபராதியாகிய என்னை சபித்ததினால் உன் மந்திரங்கள் உலகத்தில் பலிக்காமலிருக்க, மூன்று கற்பங்கள் வரை நீ பூஜ்சியனாகுக எனச் சபித்து, நாரதா உபகர்ணன் சிவகாந்தரூபஸ்தினகன் என்றும் கந்தரூபனாய்ப் பிறந்து தவஞ் செய்கையில் இவரைக் கண்டு மோகித்து அவ்வுடலைவிட்டு சுத்ராதன் குமரிகளாய் இவரை மணந்தார்.

இவர் ஒரு நாள் பிரமன் சபைக்குச் சென்று அவ்விடம் நடித்துக் கொண்டிருந்த அரம்பையைக் கண்டு நேத்திக்கை விட்டனர். இவரது சித்த சம்பவத்தைக் கண்டபிரமன் இவரை மனிதராகப் பிறக்கச் சபித்தார் (பிரம்மகை வர்த்தம்) உபபர்க்கணன் தேவியரில் சிறந்தவள், மலாவதி. இவர் பிறந்த காலத்தில் மழையில்லாதிருந்தது. இவர் பிறந்தவுடன் நாரமாகிய மழை வருஷித்ததால் நாரதர் என்று பெயருண்டாயிற்று பின்னும் இவர் தம்மோடு கூடியிருந்த சிறுவர்களுக்கு நாரம் என்னும் ஞானத்தை உபதேசித்ததில் இப்பெயர் பெற்றனர். நாரதன் என்னும் நாமம் பூண்ட காச்யப முனிவன் அநுக்கிரகத்தால் பிறந்தமையின் இப்பேருண்டாயிற்று (பிரம்மகை வர்த்தம்) இவர் சூத்ர யோனியராகிய நாரதர் பிரம்ம புத்திரராகிய நாரகம் பிரமனது கண்டத்திலிருந்து அநேக நரர் பிறந்தமையால் அக்கண்டம் நரதம் எனப்படும். அந்த நரதமாகிய கண்டத்தில் இவர் பிறந்த படியால் நாரதர் எனப்பட்டனர்.

பிரதேசக்களுக்கு ஞானோபதேசஞ் செய்தார். இவர் ஒரு கற்பத்தில் உபபிராமணன் என்னும் காந்தருவனாயிருந்து நவப்பிரசாபதியின் சத்திரயாகஞ் செய்கையில் கானஞ் செய்ய இவரை அழைத்த காலத்தில் போய்க் கானஞ்செய்து அவ்விடத்து தம்மோடு வந்த காந்தருவப் பெண்களைக் கண்டு காமாதுரராய்க் கூடியிருக்கப் பிரசாபதிகள் சூத்தரராய்ச் சபித்தனர்.அவ்வகை பிறந்து பிரமஞானிகளுக்குப் பணி செய்து மறுசன்மத்தில் பிரமனுக்கு மானச புத்திரராய்ப் பிறந்தார். இவர் தக்ஷசப் பிரசாபதி புத்திரருக்குப் பொருளுண்மை உபதேசித்து அவர்களைத் திருப்பினதால் அந்தக் தக்ஷப்பிரசாபதியால் நிலையிலாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரியவும், மனைவி, புத்திரரில்லாதிருக்கவும் சாபமேற்றனர். நைட்டியப் பிரமச்சாரியம் அனுட்டித்த ஊர்த்தேசான இருடி.

பிரகலாதன் கருவிலிருக்கையில் நாராயண மந்திரம் உபதேசித்தவர். மணிக்கிறீவனை விருக்ஷமாகச் சபித்தவர். இரணயகசிபின் தேவியைச் சிறை கொண்ட இந்திரனுக்கு ஞான உபதேசஞ் செய்து நீக்கியவர். திரிமூர்த்திகளும் எழுந்தருளி இருக்கையில் பொதுவில் நமஸ்கரித்து உத்தமதேவருக்கென்று கலகம் விளைவித்தவர். பெண்ணுருவடைந்து கண்ணனைப் புணர்ந்து பிரபவாதி கடுஷங்களைப் பெற்றவர். வாயுவுக்கும் ஆதிசேடனுக்கும் நடந்த யுத்தத்தில். ஆதிசேடனிடஞ் சென்று இசைவாசித்துச் சேடனைத் தம்வசப்படுத்தித் தலை யெடுக்கச் செய்து வாயுவிற்கு வெற்றி பெறச் செய்தவர். (காஞ்சிபுராணம்).

சந்திரகேது வென்னும் சூரகேது தேவத்தரசனுக்கு ஞானோபதேசஞ் செய்து துக்கநிவாரணஞ் செய்தவர், தேவாசுரனை கொன்ற யுத்தத்தில் இருவரையுஞ் சமாதானப்படுத்தி நிலைக்கனுப்பினவர், அரிச்சந்திரனுக்குப் புத்திர உற்பத்தி நிமித்தம் வருணமந்திரம் உபதேசித்து புத்திரப்பேறு அளித்தவர், இவர் பஞ்சபாரதீயமென ஓர் நூல் எழுதியவர், தருமருக்கு சிசுபாலன் பூர்வநிலை கூறியவர்.

தேவேந்திரன் சபையில் புரூரவசு சரியைக் கானஞ்செய்ய உருவசி கேட்டு புரூவரசுவினிடம் மோகங் கொண்டு புரூவரசுவை அடைந்தான், கம்சனிடஞ் சென்று கண்ணன் வசுதேவருக்கு தேவகியிடம் பிறந்தவரென்று உண்மை கூறியவர், கண்ணனிடஞ் சென்று உற்பாதங்கூறிக் களித்தவர், மாயாவதியிடஞ் சென்று பிரத்தியும்னன் முன்பிறப்புணர்த்தி பிரத்தியும்னனை மணக்கச் செய்தவர் மீண்டும் துவாரகை சென்று பிரத்தியுனன் மாயாவதி இவர்களின் பூர்வோத்திரங் கூறியவர், கிருஷ்ண மூர்த்தியிடத்து பாரிசாத மலர் கொடுத்து அதைக்கண்ணன் உருக்கு மணிக்குக் கொடுத்ததைக் கண்டு வந்து சத்தியம்மைக்கு அறிவித்துச் சத்தியம்மைக்கும் கண்ணனுக்கும் ஊடல் உண்டாக்கியவர்.

கண்ணன் முதலியவர்களுக்கு அகிருத்தன் இருக்கை கூறியவர், கண்ணனது சர்வவியாபகநிலை கண்டு துதித்தவர், நாராயணரிஷியிடம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்துவங்கேட்டு வியாசமுனிவருக்குக் கூறியவர். சிரஞ்சயனுக்கு புத்திரப்பேறு அருளிச் செய்தவர், திரிபுராதிகளை அழிக்க புத்தர் உருக்கொண்ட விஷ்ணுவுக்குச் சீடராய்ச் சென்றவர், சுவயர்ணடீ என்னும் குழந்தை இறந்தகாலத்துத் தந்தைக்கு உறுதிகூறி இறந்த பிள்ளையை யமனிடத்துச் சென்று மீட்டு அளித்தவர், பஞ்ச சூதையால் பெண்பிறப்பு இழிவெனச் சொல்லக் கேட்டவர், மருத்துவிற்கு சமவர்த்தனரால் யாகம் முடிக்கக்கற்பித்தவர், பாண்டவர்க்கு திரிதராட்டிரன், காந்தாரி, குந்தி சஞ்சயன் இவர்கள் தாங்கள் இருந்தவனம் விட்டு வேறு வனஞ்சென்று மூங்கிற்தீயில் பட்டு இறந்ததைத் தெரிவித்தவர்.

தருமனைச் சுவர்க்கத்திற் கண்டவர், தக்கன் வேள்வியை உமைக்குத் தெரிவித்தவர், திருமால் சந்நிதானத்து தும்புரு முதலியோர் ஏடு கால் பாடப் பார்க்கச் சென்ற காரதாரை விஷ்ணுகணங்கள் துரத்த வெட்கி யாழ்கற்கத் திருமாலை நோக்கித் தவம் புரிய, திருமால் அசரீரியாகக் கானவிந்துவிடம் கற்க வென அதைக் கேட்டு கானவிந்துவிடம் கற்று அமையாது சாம்பவதியிடத்து பூர்ணமாய் யாழ் கற்றவர். அம்பரீஷன் குமரியாகிய சிரீமதியை விரும்பி அரசனைக் கேட்க அம்பரீஷன் பருவதரிஷியும் விரும்பின படியால் உங்களிருவரில் கண்ணகை யாருக்கு மாலையிடுவாளோ அவரைக் கொள்கவென முனிவர் மணமாலை காலத்துப் பருவதனுக்குக் குரங்குமுகமாகவெனச் செய்து தான் மணமண்டபம் வரப் பருவதரிஷியும் அவ்வாறு நாரதரைச் சபித்து மணமண்டபம் வர இருவரும் குரங்கு முகமாய் இருக்க இருவருக்கும் நடுவில் விஷ்ணு தோன்றினார். அப்பெண் விஷ்ணுவை மாலையிட்டனர் நாரதர் அவ் பரீஷினிடம் வந்து கோபிக்க அப்பரீஷினிடம் இருந்து ஆழிதுரத்த விஷ்ணுவால் ரஷிக்கப்பட்டு மாயஞ்செய்த விஷ்ணுவைத் துதியாதிருந்தவர்.

இராவணன் திக்கு விஷயஞ் செய்து வருகையில் தோன்றி அவனை இதுயமபுரம் போகும் வழியெனத் தூண்டி யமனுக்கு இராவணன் வருகையைத் தெரிவித்தவர். சராசந்தனிடம் அடைபட்ட அரசன். செய்தியைக் கண்ணனுக்குக் கூறி அரசரை மீட்பித்தவர். தக்கன் சிவத்தை நோக்கி வேள்வி செய்வதை சிவமூர்த்திக்கு அறிவித்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரும் பர்வதரென்றும் உடன் பிறந்தான் குமரரும் ஒருவருக் கொருவர் மனோ விருத்தியில் எப்படி நேருகிறதோ அதனை மறைக்கக் கூடாதென்று பூப்பிரதஷ்ணம் செய்ய வந்து கார்காலத்தில் சஞ்சயதேசத்தரசனிடம் தங்க அவ்வரசன் இருடிகளிருவரையும் வரவேற்றுத்தன் குமரி தமயந்தியை அவர்களுக்குப் பணி செய்யக் கட்டளையிட்டான். அவ்வாறு தமயந்தி பணிவிடை செய்து வருகையில் இவள் நாதனின் மகஷியாழின் இசை வசப்பட்டு நாதரிடம் அதிக அன்பு வைத்தாள். தன்னை அவ்வாறு நடத்தாதிருத்தலை அறிந்த பருவதர் இவரைக் காரணங்கேட்க இவர் கூறாது தாமதித்ததால் இவரைக் குரங்குமுகமாகுக, எனச் சபித்தார். நாரதரும் சொற்ப குற்றத்திற்கு இவ்வகை சபித்தலால் நீ சுவர்க்கவாசலொழிந்து மிருத்தியு லோக வாசியாக எனச் சபித்தார். பின் தமயந்திக்கு தந்தை மணஞ் செய்விக்க எண்ணி நாயகனைத் தேடுகையில் தமயந்தி நாரதரொழிந்த மற்றவர்களை மணக்கேன் எனத் தாயாகிய கைதையும், தந்தையும் குரங்கு முகனாகிய இருடிக்கே. வாழ்க்கைப்படவுள்ளாயென்று பலவாறு தடுக்கவுங் கேளாது நாரதரை மணந்தனள். பின் நாரத முனிவர் மனங் குன்றி அவ்விடமிருந்த காலத்தில் பர்வதர் அவ்விடம் வர நாரதர் எதிர் கொண்டு உபசரிக்கத் தமயந்தியை எண்ணி இரக்கமுற்று நன்முகமுடையை என்று நாரதருக்குக் கூற இருவரும் பிரதியாய்ச் சுவர்க்க சஞ்சாரஞ் செய்ய வரந்தந்தனர். (தேடபாகவதம்)

ஒரு காலத்தில் இவர் ஸ்தேவ தீபத்தில் விஷ்ணுவைக் காணச் சென்றனர். அப்போது அவருடனிருந்த லக்ஷமி மறைந்தார். என்னைக் கண்டு லஷ்மிமறையக் காரணமென்ன ? எனக்கு அறிவிக்க வேண்டுமென வேண்ட, விஷ்ணு இவரை உடனழைத்துச் சென்று கன்னியாக குப்சமெனும் பட்டணத்தருகில் ஒரு சிங்கார வனத்திலுள்ள தடாகத்தில் இவரை ஸ்னானம் செய்யும்படி கூற இவர் அவ்வாறு தனது மகதியாழை வைத்து விட்டு ஸ்னானம் செய்து கரையேறுதலும், ஒரு திவ்வியமான பெண்ணுரு வடைந்தனர். விஷ்ணுவோயாழைக்கையிற் கொண்டு மறைந்தனர். இவ்வாறு நாரதர் பெண்ணுருக் கொண்டிருக்கையில் அவ்வழிவந்த காலத்துவசன் என்னும் மரசனிவரைக் கண்டு காமுற்றுத் தன்நகரங் கொண்டு சென்று மணந்தனர். இவருக்கு அவரிடம் பன்னிரண்டு குமாரர் பிறந்து அக்குமரர் பாணிக் கிரகணம் செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு அவர்களுக்குப் பல குமரர்கள் பிறக்க அவர்களைக் கண்டு களித்துத் தனது பூர்வ நிலை இதுவென்று அறியாமலிருக்கையில், வேற்றரசன் காலத்துவசனோடு யுத்தத்திற்கு வந்து போர் செய்து, அவன் குமரர்களையும் பேரன் மார்களையும் கொல்ல இவர் விசனமடைந்து இருக்கையில் விஷ்ணு விருத்த வேதியராய் வந்து தேற்றி அவ்விடமிருந்து தடாகத்தில் மூழ்கச் சொல்ல, இவர் மூழ்கவும் புருஷவுரு பெற்று தமக்கு இந்த உரு இவரால் வந்த தென்று சிந்தித் திருக்கையில் நாம் போகலாம் வா வென்று அழைக்க தமக்கு பெண்ணுருவமும் ஆண் உருவமும் வந்ததற்குக் காரணம் அறியாமற் போயினர். இவர் பெண்ணாய் பன்னிரண்டு வருஷம் இருந்தபோது பிறந்த பல பிள்ளைகள் வீரவன்மன், சுதன்மன் முதலியோர்.

பிரமவிஷ்ணுக்கள் தாம்பரமென்று யுத்தஞ் செய்த காலத்துச் சிவனுண்மை கூறியவர். சூரபன்மனுக்கு பயந்து இந்திரன் ஒழித்த காலத்துச் சமயந்தனுக்கு உறுதி கூறியவர். அகத்தியர் கமலண்டலத் திருந்த காவிரியை இந்திரனிடத்துக் கூறி விநாயகரால் கவிழ்க்கச் செய்தவர். இவர் ஒரு யாகஞ் செய்ய அதில் ஆடு பிறந்தது அதனைக் குமார கடவுள் வாகனமாகப் பெற்றனர். ஒரு கிருத்திகா விரதர் விநாயகரிடம் போதிக்கப் பெற்றுச் சப்த ரிஷிகளிலும் மேலாப் பதம் பெற்றவர். சம்புவன் தவஞ் செய்வதை இராமமூர்த்திக்கு அறிவித்தவர். இவர் கங்கையைப் பணியாது சென்று அக்கரையில் நிஷ்டைகூடியிருந்தவர். அவ்வகை இருக்கையில் கங்கை நம்மைப்பணியாது சென்றனன் எனப் பெருகிவர அதை இவர் அறியாதிருந்தனர். அப்போது அவ்விடம் வந்திருந்த யானை அக்கங்கை நீரை வாரியிறைத்து அறிவித்தது. நாரதர் கங்கையின் நீரைக் கண்டு மந்திரத்தால் அதைத் தப்பிக்கச் செய்தனர்.

கிருஞ்சயனிடஞ் சென்று அவன் குமரியாகிய கருமாரியை மணக்க எண்ணியிருக்கையில் இவர் தங்கை குமரனாகிய பர்வதன் இளைத்துப் போதலைக் கேட்டுச் சொல்லா திருத்தல் கண்டு குரங்கு ஆக என இவரைச் சபிக்க இவர் சுவர்க்கலோகம் போகாதிருக்க என அவனைச்சபித்தார். சுகருக்கு ஞானோபதேசஞ் செய்து தந்தையின் நின்றும் நீக்கியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூதர் :-

உரோமஹருஷணர் குமார். வியாசர் மாணாக்கர் சூதர். இவர் ஒருமுறை புராணபடனஞ் செய்யுங்கால் பலராமரைக் கண்டெழாது இறுமாந்திருந்த காரணத்தால் பலராமனாலுயிரிழந்து இருடிகள் வேண்டுகோளால் மீண்டும் உயிர்க்கப்பெற்றவர். (இவரைக் கொன்ற காரணத்தால் பலராமரைப் பிரமகத்தி பற்றியது) உக்கிரவசு என்னும் பெயரும் பெற்றவர். அவர் திரையாரணி முதலிய அறுவரிடத்தில் ஆறு சங்கிதைகளைக் கற்றவர். சௌகாதி முனிவர்களுக்கு புராணங்களை ஒதினவர். இவர் திரையாரணி முதலிய அறுவரிடத்தில் ஆறு சங்கிதைகளைக் கற்றவர். சௌகாதி முனிவர்களுக்குப் புராணங்களை ஒதினவர். இவர் ஆச்சிரமத்து உபதேசம் கேட்ட முனிவர்கள் தேவியைப் பற்றியும் சிவமூர்த்தியைப் பற்றியும் பல வினாக்களை கடாலி அவற்றிற்கு விடை கூறியவர். அதிகமாகப் புராணங்களை முனிவர்களுக்கு உபதேசித்தவர்.

வியாசர் :-

பராசருக்கு சத்திய வதியிடம் பிறந்த குமாரர். சத்தியவதி பரிமளகந்தி என்பார். வேதத்தை வகுத்ததினால் இப்பெயர் பெற்றவர். புராணங்களை அருளிச் செய்தவர். பாரதம் எழுத விநாயகரை வேண்டி அவர் எழுதப்பாரதம் கூறியவர் பிரம சூத்திரங் கூறியவர். தாயின் கட்டளைப்படி காசிராசன் பெண்களையும் அவர்களின் தோழிகளையும் கூடித் திருதராட்டினன், பாண்டு, விதுரன், இவர்களைப் பெற்றவர் பாண்டவர்கள் வனத்தில் வசிக்கையில் ஆங்காங்குத் தோன்றித் தருமங் கூறியவர். வியாசர் மஹிஷாசுரன் கொல்லப்பட்டபோது ஆனந்தமடைந்த தேவர்களுக்கு இக்கதையாகக் கூறியது. நாரதர் அசுரரைக்கண்டு ஞானோபதேசஞ் செய்து நீங்கிய காலத்துக் குமாரர் தம்மை விட்டு நீங்கிச் செல்லுகையில் அவரைப் பின் தொடர்ந்து சுக, சுக, என அழைக்கையில் மலை முதலியன ஏன் ஏன் என்றன. அவ்வழியில் ஓர் தடாகத்தில் நீர் விளையாடிக் கொண்டிருந்த தேவஸ்திரிகள் அசுரரைக் கண்டு நீரில் இருந்து எழுந்திராமல் வியாசரைக் கண்டபோது நாணி உடை உடுக்கக் கண்டு அந்ததைப்பற்றி விசனமுற்ற தருமரைத் தேற்றியவர்.

தருமரைப் பாரத யுகத்தில் வந்த பாவம் தொலைய அசுவ மேதயாகஞ் செய்ய ஏவினவர். திருதராட்டினன் பாண்டவரை நீக்கி திருதராட்டினருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்விடம் திருதராட்டினரைக் காணாமல் இருந்த பாண்டவர்க்கும் கர்ணன் அபிமன்னன்–அரவான் முதலியவர்களைச் சுவர்க்கத்தில் நின்று சுவர்க்கமடையச் செய்தவர்.

பிரமன்மனத்தில் பிறந்த குமார, தேவிகளை, குமரர்காசியர் குமரி பூர்ணிமா, இவர் சவாயம்பு மன்வந்தரத்தில் ஆறு புத்திரர்களைப் பெற்றனர். அவ்வறுவரும் பிரமன் சரஸ்வதியைச் சிருஷ்டித்து தானே மணஞ் செய்து கொண்டதைப்பற்றிச் சிரித்தனர். அதனால் பிரமதேவனால் அசுரராகச் சபிக்கப்பட்டு இரண்ணிய கசிபுத்திரராய் பிறந்து ஐஸ்வரியம் அடையப் பிரமனை எண்ணித்தவஞ் செய்கையில் அசுரர்களால் பாதாளத்திற்குத் தள்ளப்பட்டு ஆநுமனவந்தரம் பாதாளத்திலிருந்து ஏழாவது மனவந்தரத்து கிருஷ்ணமாயையால் கிரகிக்கப்பட்டு தேவகிகர்ப்பத்தில் பிறந்தார். இவர்கள் கஞ்சருற கொல்லப்பட்டு பாதாளத்திலிருந்து தேவகியிடம் செல்ல தேவகி பாலூட்ட தேவசன்மம் பெற்று விடை கொண்டனர். இவர் ஒருமுறை சயதுர்கனைச் சபித்தனர். இவர் தேவி வேதவல்லியெனப்பட்டனர். சத்தி வல்லமையாகப் பிறந்தவர். சுவர்க்கத்தில் இருந்து அழைத்துக் காட்டியவர். அவர்களின் பத்தினிகளைக் கங்கையில் நின்று சுவர்க்கமடையச் செய்தவர்.

இவர் நைமிசாரண்ய முனிவரிடம் கேசவன் பரமென்று அவர்கள் காசி ஷேத்திரமடைந்து கூறுக என அவ்வகை கூறிக் கையும் நாவும் எழாது விஷ்ணுமூத்தியால் சிவமூர்த்தி பரமபதி எனக் கூறக் கேட்டு சிவத்துதி செய்து கையும் நாவும் பெற்றவர். காசியில் மாணவர்களுடன் விக்ஷபெறாதது கண்டு ஒட்டை எறிந்து அன்னபூரணியால் அன்னமளிக்க உண்டவர்.

வியாசர் மனுவந்தரத்தில் உள்ள இருபத்தெட்டு வியாசர்களில் இருபத்தெட்டாவது துவாபர யுகத்தில் இருந்தவர். நைமிசாரணியத்தில் இருந்த போது மாணாக்கர்களின் வினாவுக்குத் தேவியின் திருவிளையாடல்களைக் கூறியவர்.

மரீசி பிரசாபதி :–

பிரமன்மனத்தில் பிறந்த குமார, தேவிகளை, குமரர்காசியர் குமரி பூர்ணிமா, இவர் சவாயம்பு மன்வந்தரத்தில் ஆறு புத்திரர்களைப் பெற்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வறுவரும் பிரமன் சரஸ்வதியைச் சிருஷ்டித்து தானே மணஞ் செய்து கொண்டதைப்பற்றிச் சிரித்தனர். அதனால் பிரமதேவனால் அசுரராகச் சபிக்கப்பட்டு இரண்ணிய கசிபுத்திரராய் பிறந்து ஐஸ்வரியம் அடையப் பிரமனை எண்ணித்தவஞ் செய்கையில் அசுரர்களால் பாதாளத்திற்குத் தள்ளப்பட்டு அநுமனவந்தரம் பாதாளத்திலிருந்து ஏழாவது மனவந்தரத்து கிருஷ்ணமாயையால் கிரகிக்கப்பட்டு தேவகிகர்ப்பத்தில் பிறந்தார். இவர்கள் கறந்தருவரால் கொல்லப்பட்டு பாதாளத்திலிருந்து தேவகியிடம் செல்ல தேவகி பாலூட்ட தேவசன்மம் பெற்று விடை கொண்டனர். இவர் ஒருமுறை சயதுர்கனைச் சபித்தனர். இவர் தேவி வேதவல்லியெனப்பட்டனர். சத்தி வல்லமையாகப் பிறந்தவர்.

*இவற்றை விட நாரத புராணம் பலவாக விரித்துக் கூறும்.*

*திருச்சிற்றம்பலம்.*

*அல்லையீதல்லை யீதென மறைகளு மன்மைச்*
*சொல்லினாற்றுதித் திளைக்குமிச் சுந்தரனாடற்*
*கெல்லையாகுமோ வென்னுரையென் செய்கோ விதனைச்*
*சொல்லு வேனெனு மாசையென் சொல்வழிகோற.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூர்த்தி விசேடம்

*ஆலவாயலர்ந்தசெம்பொ னம்புயப்பெருந்தீர்த்தத்தின்*
*மேலவாம் பெருமைதன்னை விளம்புவாரெவரேயங்கண்*
*நீலமாமிடற்றுமுக்க ணிராமயனறிவானந்த*
*மூலமாவிலிங்கமேன்மை முறையினாலறையலுற்றாம்*

இதன்பொருள்

*திருவாலாவயில் மலர்ந்த பொற்றாமரைத் தீர்த்தத்தின் மேலாகிய பெருமையையெல்லாம் சொல்லத்தக்கவர்கள் யார். அந்தத்திருவாலவாயில் வீற்றிரா நின்ற காளகண்டத்தையும், திரிநோத்திரங்களையும் உடையவனாய் நிராமயனாகிய சோமசுந்தரக்கடவுளுடைய ஞானானந்தமயமாகிய பெருமை பொருந்திய மூலவிலிங்கத்தின் மேன்மையைபு முறையினால் சொல்லுகிறோம்.*

மஹாமேருவும், வெள்ளிமலையும், மந்தரமும், கேதாரமும், காசியும் முதலிய தலங்களில் பராபரமான லிங்கங்கள் உண்டாகுமுன்னே இந்தக் கடம்ப விருக்ஷத்தினடியிலே யுண்டாகிய இந்தச் சிவலிங்கம். அந்தத் தலங்களிலுள்ள இலிங்கங்களெல்லாம் பின்பு அருட்குறியாக இதினின்று கிளைகள்போல் உண்டாயின. இந்த விரண்டு காரணத்தினாலும் இந்தத் திவ்வியமான லிங்கம் மூலலிங்கமென்று பெயராய்ப் பிரகாசிக்கிறது, இந்த மகாலிங்கத்தில் முப்பத்திரண்டிலக்கிணமுமுள்ள மாத்திரஸ்வரூபியான அழியாத அழகையுடையவன் இடப்பாகத்தில் உமையவளுடனேகூடி யழகாயெப்போதும் விளங்குகின்ற பெருமையைக் கண்டு சோமசுந்தரப்பெருமானென்று தேவர்கள் அழகிய திருநாமம் வைத்தார்கள்.

உலகமெல்லாம் வியாபியாய் சிறந்து விளங்குகின்றவன் அறப்பெருங்கடவுளாகிய சோமசுந்தரனாதலாலே அரிமர்த்தனபாண்டியன் கைப்பிரம்பாலடித்த அடித்தழுப்பு திரிலோகமும் படலாயிற்று என்று சொல்லாகிசமஷ்டி ரூபமான சோமசுந்தரனைத் தரிசித்தவர்கள் மற்றத்தலங்களிலுள்ள வியஷ்டி லிங்கங்களைத் தரிசித்த பலனைப் பெறுவார்கள். எப்படியென்றால், வேரிலே கொட்டிய ஜலம் மரத்தின் கிளைகளெல்லாஞ்சென்று தழைக்கச் செய்வது போலாகும். அந்தப் பரமசிவன் இந்தத் தலத்திலே யல்லாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தத் தலங்களிலும் அறுபத்துநான்கு திருவிளையாடல் செய்ததில்லை. ஆதலால் அவனுக்குச் சமானமும், அதிகமும் ஆனசிறப்பு ஆனசிறப்புறம்பெற்ற உத்தமன் எந்த வுலகினுமில்லை. அவனதிகமான தெப்படியென்றால் மலைகளில் சிறந்தது மகாமேரு. விருக்ஷங்களிற் சிறந்தது கற்பகவிருக்ஷம், யாகங்களிற் சிறந்தது அஸ்வமேதயாகம், தானங்களிற் சிறந்தது அன்னதாம், மனிதர்களிற் சிறந்தவர்கள் ஆதிசைவப்பிராமணர்கள், தெய்வங்களிற் சிறந்தவன் சந்திரசேகரன், விரதங்களிற் சிறந்தது சோமாவார விரதம், மந்திரங்களிற் சிறந்தது ஸ்ரீ பஞ்சாக்ஷரமத்திரம், மணிகளிற்சிறந்தது சிந்தாமணி, தருமங்களிற் சிறந்தது சிவதருமம். சற்பாத்திரங்களிற் சிறந்தவர்கள் சிவனடியார்கள் பசுக்களிற்சிறந்தது காமதேனு, தீர்த்தங்களிற் சிறந்தது பொற்றாமரைத் தீர்த்தம் போல இலிங்கங்களிற்சிறந்தது சோமசுந்தரலிங்கமே. முதலும் முடிவுமில்லாதவனா யெங்கு நிறைந்தவனா யெல்லார்க்கும் பிறப்பும் வீடுந்தருகிற பராபரச்சோதிதானே தன்னை வணங்குவோர்க்கு இகபரபோக மோக்ஷங்களை யருளுதற்கு இந்தச் சோமசுந்தரனாகிய இலிங்கத்திலே வேதங்கள் போற்ற எழுந்தருளியிருப்பான். இந்தச் சுயம்புலிங்கத்தை அதின்வேறாகிய லிங்கங்களெல்லாந் தினந்தோறுந்தரிசித்துச் செல்லத்தக்க நிருமலசோதியான பெருமையினாலே இந்த உத்தமலிங்கத்தைத் தரிசித்தவர்கள் வாக்குமனமும் ஒடுங்கங்கமுள்ள களங்கமற விளங்குகின்ற சிவபரஞ்சோதியைத் தரிசித்தவராவார்கள். இன்னமும் இந்த ஒப்பற்ற சுயம்புவை நேரேகண்டு வணங்கினவர்கள் பாவங்களெல்லாம் நெருப்புப்பொறிப்பட்ட பஞ்சுபோலவும், கோபம்பற்றிய தவம்போலவும், நல்ல மருந்துதின்ன வியாதிபோலவும், உலோபகுணமுண்டாக உத்தமகுணம் போலவும், சூரியனுதயமாக இருள்போலவும், பெருங்காற்று வீசமேகங்கள் போலவும், சிங்கங்கோபிக்க யானைபோலவும், வச்சிராயுதந்தாக்க மலைகள் போலவும், காமந்தோன்ற புத்திபோலவும், சிவஞானந்தோன்ற அஞ்ஞானம்போலவும், கருடன்சீறப் பாம்பு போலவும், செருக்குத் தோன்ற கல்வி போலவும் கெடும். ஜீவன் முத்திபுசேரனை காலையில் தரிசித்தால் நான்கு கடலாலுஞ் சூழப்பட்ட உலகமெல்லாம் தானஞ்செய்த பலனுண்டாகும் மத்தியானத்தில் தரிசித்தால் சற்பாத்திரத்தில் ஆயிரங்கபிலைப் பசுத்தானம் பண்ணின பலனுண்டாகும். மாலையில் தரிசித்தால் கோடி பசுத்தான பலன் உண்டாகும். அர்த்தசாமத்தில் தரிசித்தால் அஸ்வமேத பலனுண்டாகும். இப்படிப்பட்ட அதிக பலனுண்டாவது தெரிந்து சமஷ்டி விச்சாபுரேசனை காலை யுச்சி மாலை யர்த்தசாமம் ஆகிய காலங்களெல்லாம் வணங்கித் துதித்துப் பூசிக்கிற அன்பர் பரிசுத்த சீலர்கள் சஞ்சித பாபங்களெல்லாந் தீர்ந்து நிர்மலசித்தராய்க் கெடாத சிவஞானத்துடனே ஐஸ்வரியமும் பெருகபேரானந்தத்தில் மூழ்கி ஆணவகாமிய மாயை நீக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரமசிவனுடைய திருநாமத்தைக் காதாற்கேட்டால் பத்துப்பிறவிகளிற்செய்த பாவங்கள் போம், நினைத்தால் நூறுபிறவிகளிற்செய்த பாவநோய் நீங்கும் ஆவலாய்ப்பெருமானை வணங்குவோமென்று வீட்டினின்றும் வெளியேவந்தால் ஆயிரம் பிறவிகளிற்செய்த தீராத பாவங்களெல்லாந்தீரும். அப்பெருமானைத் தரிசித்தவர்கள் ஆயிரம் அஸ்வமேதயாகபலனைப் பெறுவார்கள். உருத்திரசூக்கம் என்னுமந்திரத்தால் தவத்தையுடைய தேவர்கள், தொழுதற்கரிய நாயகனைத் துதித்தவர்கள் ஒரு கணத்திற்கு ஆயிரம் இராஜசூயயாகஞ்செய்த பலனைப் பெறுவார்கள். இன்னும் சமஷ்டிவடிவாகிய அந்த லிங்கத்தை உள்ளங்கையளவாகிய நீரால் அபிஷேகஞ்செய்து பூசித்தவர்கள் மற்றத்தலங்களிலுள்ள அங்கங்களையெல்லாம் சைவாகமத்திற் சொன்னபடியே சோடசோபசாரமும் வழுவாமல் அபிஷேகஞ்செய்து பூசித்த பலனைப் பெறுவார்கள். இன்னும் அவ்வாலவாய்ச் சுந்தரனை அப்படியே பஞ்சாமிர்தம் பஞ்சகௌவியம், தேன், பழம், சந்தனம் முதலிய மட்டித்துக்குளிர வாசனைத் திருமஞ்சனத்தாலபிஷேகஞ் செய்து விதிப்படிபூசித்தவர்கள் பாபங்களெல்லாந் தீர்ந்து தர்மார்த்த காமமோக்ஷங்களைப்பெற்று வாழ்வார்கள். இன்னும் சோடசோபசாரத்திலும் வாசனைத் திருமஞ்சனத்தால் அபிஷேகஞ்செய்ய வல்லவர்கள் நூறாயிரம் அஸ்வமேதயாகஞ்செய்த பலனைப்பெறுவார்கள். இன்னும் அவ்வாலவாய்ச் சுந்தரனை அப்படியே பஞ்சாமிர்தம் பஞ்சகௌவியம்—தேன்—பழம்—சந்தனம் முதலிய மட்டித்துக்குளிர வாசனைத் திருமஞ்சனத்தா லபிஷேகஞ் செய்து விதிப்படிபூசித்தவர்கள் பாபங்களெலாந் தீர்ந்து தர்மார்த்த காமமோக்ஷங்களைப் பெற்று வாழ்வார்கள். இன்னும் சோடசோபசாரத்திலும் வாசனைத் திருமஞ்சனத்தால் அபிஷேகஞ்செய்ய வல்லவர்கள் நூறாயிரம் அஸ்வமேத யாகஞ்செய்த பலனைப் பெறுவார்கள். இன்னும் வாசமிகுந்த கஸ்தூரி மிருதுவாகிய குங்குமம் சந்தனமுதலிய மடித்தவர்கள் தேவரம்பைகளுடனே வாசக்கலவைகள் பூசிக்கொண்டு இன்பத்தின் மூழ்கிவாழ்வார்கள். நல்லவொருபுஷ்பத்தை அத்திருவாலவாயான் திருமுடிமேல் அருச்சித்தால் அன்னியதலங்களில் நூறுசுவந்னபுஷ்பத்தால் அருச்சித்த பலனைப் பெறுவார்கள். அச்சுந்தரர்க்கு ஒருதரம் தூபங்கொடுப்பவர்களுக்கு அவர்களை நோக்குவர்க்கக் காயங்களால் தெரிந்து செய்த குற்றங்கள் ஆயிரமும் பொறுத்தருளுவார். திருவமுது நைவேதிப்போர் அவிழொன்றற்கு யுகமொன்றாக சிவலோகத்தை யடைந்து நிறைந்தபோகத்துடன் வாழ்வார்கள். தாம்பூல முகவாசங்கொடுத்தவர்கள் நூறுகோடி தேவவருஷம் சிவலோகத்தில் வாழ்வார்கள் ஒரு கற்பூரதீபங் கொடுப்பார்கள் சிவன் சாரூபத்தைப் பெறுவார்கள். திருமஞ்சன மெடுக்கக் குடமும், மொண்டு அபிஷேகஞ்செய்யக் கலசமும், வாசப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகைகொடுக்கத் தூபக்காலும் தீபங்காலும், மணியும் முதலியவைகளைக் கொடுப்பவர், செய்த பாவத்தை நீறாக்கி பேரின்பக்கடலுண்மூழ்குவார்கள், சோமசுந்தரக் கடவுள் சந்நிதிமுன்னர் பலவாத்தியங்களுமொலிக்க ஆடல்பாடல் செய்விப்பவர்கள், செல்வக்களிப்பையடைந்து மேகம்போல் பலவாத்தியங்க ளொலிக்க திரிலோகங்களும் வணங்க, தேவரம்பையர்களாடக்கண்டு இராஜபோகத்தைப் பெறுவார்கள். ஒருதரம் அஷ்டாங்கத்துடனாவது பஞ்சாங்கத்துடனாவது வணங்குவோர் தனதொரு செங்கோல் செலுத்தி அரசர்கள் வணங்க இருப்பார்கள். சந்நிதிமுன் செய்யும் ஓமம், தவம், மந்திரம், தானம் இவைகள் அணுவளவானாலும் மேருவளவாகும். ஆதலால் இவ்விலிங்கத்தின் பெருமையாராலே சொல்லி முடியும் என்றாற்றெரிந்த வளவு சிறிதுசொன்னேன். இந்தத் தலத்துக் கொப்பானவொரு தலமும் இந்தத் தீர்த்தத்துக் கொப்பான ஒரு தீர்த்தத்துக்கொப்பான ஒரு தீர்த்தமும் இந்த விலிங்கமூர்த்திக் கொப்பான வொருமூர்த்தியும் திரிலோகத்தினுமில்லை, இனி அந்த மூர்த்தித் திருநாமங்களைச் சொல்லுகிறேன் கேளுங்கள்.

கருப்பூரசுந்தரன், கடம்பவனசுந்தரன், கலியாணசுந்தரன், அபிராமசுந்தரன், சண்பகசுந்தரன், மகுடசுந்தரன், மான்மதசுந்தரன், பழியஞ்சு சுந்தரன், சோமசுந்தரன்,ஆலவாய்ச் சுந்தரன், நான் மாடக்கூடவ் நாயகன், மதுராபுரேசன், சமஷ்டி விச்சாபுரநாதன், ஜீவன்முத்திபுரநாதன், பூவுலக சிவலோகாதிபன், கண்ணிபுரேசன், மூலலிங்கம் என்று சொல்லப்படும். இன்னுமந்த லிங்கத்துக் கநேகந் திருநாமங்களுண்டு. கீழேழுலக முருவ முளைத்தெழுந்த அந்த லிங்கஸ்வரூபமே ஆதாரமாகமர்ந்து அறுபத்துநான்கு திருவிளையாடல் செய்த சச்சிதானந்த ஸ்வரூபமானது பெருமையை எங்களாசாரியனாகிய முருகக் கடவுள் சொன்னபடியே சொன்னேனென்று அகத்தியர் சொல்லக்கேட்ட முனிவர்கள் ஐயாகிருபைக்கடலே ! அக்கடவுள் திருவிளையாடல் அறுபத்துநான்கென்றீர். அவ்விளையாடல்கள் யாவர் நிமித்தமாக எந்தக்காலங்களில் செய்யப்பட்டன. அவைகளெல்லாம் எங்களுக்குத் தெளியக்கிரமப்படி சொல்லவேண்டுமென்றுகை குவித்துத் தோத்திரஞ் செய்து பிரார்த்திக்க அகத்தியமுனிவர் சொல்லத் தொடங்கினார்.

*மூர்த்தி விசேடம் முற்றிற்று.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலவிசேடம்

*நாட்டமொரு மூன்றுடைய நாயகனுக்கன்புடையீர் நயந்து*
*நீவீர், கேட்டல் மீண்டுரைத்த திருவாலவா யதனுட்*
*கிளைத்துப்பொன்னந், தோட்டலர்தா மரை முளைத்த தொருதடமுஞ்*
*சுந்தரச் செஞ் சோதிஞான, வீட்டமென முளைத்த சிவலிங்கமு*
*மொன்றுள இன்னு மிசைப்பக்கேண்மின்.*

இதன்பொருள்

*திரிநேத்திரங்களையுடைய சிவபெருமானிடத்து அன்பு நிறைந்த முனிவர்களே, விரும்பி நீங்கள் கேட்ட தலம் இப்போது நாம் கூறிய திருவாலவாயாம், அத்தலத்தில் நிறைந்த பொன்னிறம் வாய்ந்த இதழ் அலர்ந்த தாமரை முளைத்த ஒரு தடாகமும், அழகிய சிவந்த சோதி மயமாகிய ஞானக்கூட்டம் போலத்தோன்றியருளிய சிவலிங்க மொன்று மிருக்கின்றது, இன்னமுஞ் சொல்லுவேன் கேளுங்கள்.*

திருநேத்திரதாரியாகிய பரமசிவனுக்கு அன்புள்ள முனிவர்களே நீங்கள் விரும்பிக்கேட்ட தலம் இப்போது சொன்ன திருவாலவாயேயாம் அந்தத்தலத்தில் பொன்போலும் நிறத்தையுடைய இதழ்களுடனே மலர்ந்த தாமரைத்தடாகமும், அழகிய சிவந்த சோதியான ஞானத்திரள்போல உண்டாகிய ஒரு சிவலிங்கமும் உண்டு. அந்தத் திருவாலவாய்க்கு நிகரான ஒரு தலமும் தெய்வீகமான மணம் பரிமளிக்கின்ற பொற்றாமரைத் தீர்த்தமும், அந்தத் தீர்த்தத்தின் பக்கத்தில் ஞான ரூபமாய் விளங்குகின்ற சோம சுந்தரக் கடவுள்போல் இகபரபோகமும், அழியாத வீடும், தருகின்ற கடவுளும் திரிலோகத்தினுமில்லை இது சத்தியம், தலம், தீர்த்தம், மூர்த்தி, என்னும் மூன்றில் முன்னர் தலமான்மியத்தைச் சுருக்கமாகச் சொல்லுகின்றேன். எப்படியென்றால், எல்லாவுலகங்களிலும் புண்ணிய க்ஷேத்திரங்களே அதிகம் அந்தப் புண்ணிய க்ஷேத்திரங்களிலும் சிவ க்ஷேத்திரம் அதிகம் அந்த சிவக்ஷேத்திரங்களிலும் அறுபத்தெட்டுச் சிவஸ்தலங்களதிகம் அந்த அறுபத்தெட்டிலும் பதினாறு தலங்கள் அதிகம். அந்தப் பதினாறிலும் நான்கு தலம் அதிகம், அவையாவன, சிதம்பரம், காசி, காளத்தி, திருவாலவாய் ஆகிய இந்த நான்கிலும் திருவாலவாய் அதிகம். எப்படியென்றால் சிதம்பரம் தரிசிக்க முத்தி, காசி அங்கு நின்றிருக்க முத்தி, காளத்தி பூசிக்க முத்தியைக் கொடுக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதையல்லாமல் யெங்கும் நிறைகின்ற பரமசிவம் சிவஸ்தலங்களை யெல்லாம் உண்டாக்குதற்காக முன்னே இந்தத் திருவாலவாயை யுண்டாக்கி அதில் வாசஞ் செய்தருளினார். ஆதலால் திருவாலவாயென்னக் கேட்டவர்களே அறத்தைப் பெறுவார். திருவாலவாயென்று தியானித்தவர்களே பொருளைப் பெறுவார்கள். இதைத் திருவாலவாயில் சோமசுந்தரக் கடவுளை தரிசித்தவர்களே இன்ப நலத்தைப் பெறுவார்கள். திருவாலவாயில் எப்பொழுதும் வசிப்பவர்களே மோக்ஷத்தைக் பெறுவார்கள். இன்னமும் கங்காநதி சூழ்ந்து வருகிற காசி முதலிய ஸ்தலங்களில் வசிப்பவர்க்கு முன்னே சீவன் முத்தியைக் கொடுத்துப் பின்பு விதேகமுத்தியும் கொடுக்கும் மகிமையால் திருவாலவாயே அதிகம். இந்தச் சீவன் முத்திபுரமாகிய திருவாலவாய்க்கு நிகரான தலங்கள் எந்த லோகங்களிலும் இல்லை. அதற்கதுவே ஒப்பாகும். ஆதலால் இந்தத் தலத்தை விட்டு வேறு தலங்களில் சென்று தவ விரதங்களைச் செய்பவர் கையிற் கிடைத்தபாற் சோற்றை விட்டுப் புறங்கை நக்குகின்றவர்களை ஒப்பாவார் ஆகையாலிந்தத் தலமகிமையைச் சொல்ல வல்லவர் யாவர், ஒருவருமில்லை. இன்னும் வேறு தலங்களிற் சென்று அசுவமேதம், வாசபேயம், சோடசாகம், அக்கினிட்டோமம் இராஜசூயம் முதலிய யாகங்கள் செய்து முடித்த பலனும் தெரிசபூர்ண முதலிய தானங்கள் செய்த பலனும் காசி முதலிய ஸ்தலங்களில் வாசம் பண்ணிய பலனும் எள், நெய், அன்னம், கன்னி, குதிரை, தேர் யானை, வீடு, பசு, வெள்ளி, பொன், ஆபரணம், வஸ்திரம், விளை, நிலம், அடிமை முதலிய தானங்கள் செய்த பலனும் காசி முதலிய ஸ்தலங்களில் வாசம் பண்ணிய பலனும் கங்கை, யமுனை, சரஸ்வதி, காவேரி, கிருஷ்ணை துங்கபத்திரி, பாலி, தாம்ரபரணி முதலாகிய தீர்த்தங்களாடின பலனும் இந்தத் திருவாலவாயில் எப்போதும் வாசஞ்செய்கிறவர்களுக்குக் கிடைக்கும். இன்னமும் வேறிடங்களில் செய்த பிரமகத்தி, திரவியசோரம், கள்ளுண்டல், குருபத்தினியைப் புணர்தல் முதலிய பாவங்களெல்லாம் இந்தத் தலத்தில் வந்து வசிப்பவர்க்குத் தீரும் பேறு தலங்களில் மாதந்தோறும் செய்த சாத்ராயண விரத பலன், இந்தத் தலத்தில் ஒரு ராத்திரி யுண்ணும் உணவினாலுண்டாகும். வேறு தலங்களில் ஒரு மாதப் பட்டினியால் வரும் பலன் இந்தத் தலத்தில் ஒரு நாள் பட்டினியால் உண்டாகும், வேறு தலங்களிற்சென்று ஆறு மாதஞ் செய்யும் விரதபலன் இந்தத்தலத்தில் ஒரு சோமவார விரதத்தாலுண்டாகும். வேறு தலங்களில் ஒரு வருஷம் ஆகாரமில்லாமல் செய்கிற விரத பலன் இந்தத் தலத்தில் ஒரு மகாசிவராத்திரி விரதத்தால் உண்டாகும். இன்னும் இந்தத் தலத்தில் இந்திரிய நிக்கிரஞ் செய்து மூன்று காலமும் திருப்தியாக உண்டு சுகித்திருந்தாலும் வாயு பக்ஷணம் பண்ணிச் செய்கிற பெரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவத்தையடைபவனாவான். இந்தத் தலத்தில் யாராகிலும் பிராமணருக்கு ஒரு சுயம்பாகம், தவசிகளுக்கு ஒரு பிசைஷ கொடுத்தால் வேறு தலங்களிற் செய்தசோட மகாதான பலனைப் பெறுவார்கள். இன்னமும் எக்காலமும் எல்லாத்தலங்களிலும் வாசம் பண்ணின பலனும் எல்லாத் தீர்த்தங்களிலும் ஸ்நானஞ் செய்து வரும் பலனும், பலவகை மந்திர, செபம்பண்ணின பலனும், பலவகை நூல்களைச் கேள்வியால் ஆய்ந்துணர்ந்த பலனும், பலவகை யோகஞானங்களை அநுஷ்டித்தடங்கிய பலனும், இந்தத் திருவாலவாயில் எப்போதும் வசித்திருப்பவர்கள் பெறுவார்கள். ஆதலால் இந்தத் தவமகிமையைத் தெரிவது பரமசிவமே என்பதனாலே இருவினையை யொழிக்கவேண்டுபவன் இந்தத்தலத்திற் சென்று வாசஞ்செய்யவே வேண்டும்.

முன்னொரு காலத்தில் பிரமதேவன் கைலாய முதலிய தலங்களெல்லாம் ஒரு தட்டிலிட்டு இந்தத் திருவாலயவாயை ஒரு தட்டிலிட்டு நிறுத்துப் பார்க்கும் போது திருவாலவாய் மிகவும் கனமான விருந்ததைக்கண்டு உலகத்தில் சிறந்த தலம் இதுவேயென்று புகழ்வானானான். இந்தத் தலத்துக்குப் பேர் சிவநகரம், கடம்பவனம், ஜீவன் முத்திபுரம், கன்னிபுரம், திருவாலவாய் பூலோகசிவலோகம், சமஷ்டி விச்சாபுரம்,கூடல் துவாத சாந்தத்தலம் என்ற காரணங்கொண்டு சொல்லுவார்களென தலவிசேடத்தைச்சொன்ன அகத்தியருக்கு முன்னிருந்து கேட்ட முனிவர்கள் மிகவும் அதிசயத்தையடைந்து ஐயா ! தலப்பெருமையை நன்றாய்ச் சொன்னீர், நாங்கள் கேட்டுத் தேகமெடுத்த பிரயோசனத்தை இன்றடைந்தோம், இனி தீர்த்தவிசேடத்தை அருளிச் செய்ய வேண்டுமென்ன அகஸ்தியர் முறையே சொல்லத் தொடங்கினார்.

*தல விசேடம் முற்றிற்று.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்த்த விசேடம்

*கண்ணகன் குடுமிமாடக் கடிபொழி லாலவாயின்*
*அண்ணலல்ம் பெருமையாலே யளப்பவ ரவிர்தண்முத்த*
*வெண்ணகை யுமையாளன்பு விளைமுகச் செவ்விபோலத்*
*தண்ணுறுங் கமலம்பூத்த தடப்பெருந்தகைமை சொல்வாம்.*

*இடமகன்ற சிகரங்கள் பொருந்திய வீடுகளையுடையவர்கள் தங்கிய சோலைகள் சூழ்ந்த திருவாலவாயில் வீற்றாநின்ற சோமசுந்தரக் கடவுளுடையபெருமையை எவர்கள் அளவிட்டு சொல்லத் தக்கவர்கள் பிரகாசமுற்றற முத்தம் போல் வெண்மையாகிய நகையையுடைய மீனாட்சி தேவியின் அன்புவிளைகின்ற திருமுகத்தின் அழகினைப் போலக்குளிர்ச்சி பொருந்தி பரிமளியாநின்ற தாமரைமலர்பூத்த தீர்த்தத்தின் மிகுந்த பெருமையைச் சொல்லுகின்றோம்.*

நதிகளுக்கெல்லாஞ் சிரேஷ்டமாகிய கங்கை காவேரி முதலிய நதிகளும் இந்த நதிகளுக்கு வேறுருவமாகிய நதிபதியென்கிற ஆற்றுநீர், ஊற்றுநீர், மேகநீர் கூடிய கடலும் மற்ற தீர்த்தங்களும் மேகங்களும் உண்டாவதற்கு முன்னே தம்மை அபிஷேகம் பண்ணுவித்தற்கு சோமசுந்தரக்கடவுள் தாமேஉண்டுபண்ணிய தீர்த்தம் அதெப்படியென்றால் அந்தச் சோமசுந்தரப் பெருந்தகையார் ஆதி காலத்தில் தமது சச்சிதானந்த சுவரூபத்துக்குத்தக்க திரிநேத்திரமும் அரவாபரணங்களும் சந்திரசேகரமும் சூலமும் கபாலமும் அங்கயற்கண்ணியமர்ந்த பாகமும் விளங்க விடைத்தேவர் மீதெழுந்தருளிவிநோதமாகப்பின்னுமுன்னும் பக்கங்களிலும் நந்திதேவர் முதலிய கணங்கள் சூழச்சென்று தமது திருமேனி ஒளியினாலேயே எட்டுத்திக்கும் விளங்கப்பாதாளலோகமும் சுவர்க்க லோகமும்பிரமலோகமும் விஷ்ணுலோகமும் அதற்கு மேலாகிய தமது சிவலோகமும் உலாவி விளையாடித் திரும்பும்போது இந்திரனும் பிரமனும் விஷ்ணுவும், முன்னேவந்து வணங்கித்துதிக்க அவர்களுக்கு வெறுப்பில்லாத இன்பத்தைக் கொடுத்துப் பின்பு தமது லோகத்துக்குவந்து தம்மை நீங்காத கணங்களுக்குத் திருவருள் செய்து இலிங்கத் திலெழுந்தருளும் போது நந்திதேவர் முதலிய சிவகணத்தவர் எல்லோரும் வணங்கி அநேகவகையாற்றுதித்துக் கேட்டுக் கொண்டதாவது சுவாமி இந்த இலிங்க சுவரூபத்துக்கும் அபிஷேகம் பண்ணவும் அடியேங்களெல்லாம் ஸ்நானம் பண்ணிப் பரிசுத்தராகவும் உலகத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்த்தங்களும் நதிகளுமில்லை, ஸ்நானம் பண்ணிப் பரிசுத்தராகவும் தருவதாக ஒரு தீர்த்தம் இவ்விடத்தில் உண்டு பண்ணவேண்டுமென்று பிரார்த்திக்க அவர்கள் நிமித்தம் அந்த இலிங்கத்துக்கு அடுத்ததென்கீழ்த்திசையில் தமது முத்தலைச்சூலத்தை யூன்றினார். ஊன்றுமளவில் பெரிய பூமியையும் நாகலோகத்தையும் பிரமனது அண்டகடாகத்தையும் கிழித்தது. அப்படிக் கிழித்தவழியே பெரும் புறக்கடல்போலநீர் பெருக அப்பெருக்கு அதிகப் படாமல் தமது திருக்கரத்தால் அமைத்துப் பின்பு தமது சடையிலிருக்கிற தெய்வீகமான சுத்த ஜலத்தைத் தூவிக்கலந்துமகா தீர்த்தமாகச் செய்து சுவாமியானவர் நந்திதேவர் முதலானவர்களைப்பார்த்து, இந்த மகா தீர்த்தத்தை எல்லாதீர்த்தங்களுக்கு முன்னே நாம் உங்கள் பொருட்டு உண்டாக்கினதால் ஆதிதீர்த்தமென்றும் இனியுண்டாக்குந் தீர்த்தங்களுக்கெல்லாம் மேலாயிருத்தலினால் பரமதீர்த்தமென்றும் இதில் மூழ்கினோர் நல்ல மங்களத்தைப் பெறுதலினால் சிவதீர்த்தமென்றும் ஞானத்தைத் தருதலால் ஞானதீர்த்தமென்றும், மோக்ஷத்தை தருதலால் மோக்ஷதீர்த்தமென்றும், இதற்குப் பெயர்கள் இன்னும் இதில்மூழ்கித்தருப்பணஞ்செய்து தானங்கொடுத்து அவ்விடத்திலிருந்து ஸ்ரீபஞ்சாட்சரத்தைத் தியானத்துடனே செபித்துநம்பி உளத்தில் வந்து வணங்கிவலஞ்செய்து துதித்து எம்மைச் வந்தித்து சந்தோஷிப்பித்தோர்கள் தேகமெடுத்ததினால் அடையவேண்டிய பலன் எதுவோ அதை அடைவார்கள் என்பதற்குச் சந்தேகமேயில்லை.

இந்தத் தீர்த்தத்தினாலே எம்மை அபிஷேகஞ்செய்யில் பதினாலுலகத்தினிமுள்ள மிகுந்த பெருமையையுடைய எல்லாத் தீர்த்தங்களினாலும் அபிஷேகஞ்செய்த பலனுண்டாகும். இத் தீர்த்தத்தில் வந்துமூழ்கி இங்கேவிளங்குகிற நமது ஸ்வரூபமாகிய இலிங்கத்தை உங்கள் மனதில் அன்புபெருகப் பூசைசெய்யுங்களென்று தேவதேவனாகிய சிவபெருமான் தாமும் மூழ்கித் கணங்களையுமூழ்குவித்து அநாதியாகிய அந்தப்பரிசுத்த லிங்கத்தில் பிரவேசித்தார். அப்படிப்பட்டபெருமையினாலே நந்திதேவர் முதலாயினோர்விதிப்படி அந்தச் சோமசுந்தரக்கடவுளின் திருமுடிமேல் அபிஷேகஞ்செய்து குற்றமறப்பூசித்து மனத்தில் அபேட்சித் தனவெல்லாம் பெற்றார்கள். ஆதலால் அந்த ஞான தீர்த்தத்தைக் கண்டாற் பாவங்களெல்லாம் நசியும். இஷ்டகாமியங்களெல்லாம் கிடைக்கும் மனம் பொருந்த அதில் மூழ்கும்போது முழுக்கொன்றினுக்கு உலகத்திலுள்ள தீர்த்தங்க ளெல்லாவற்றிலும் மூழ்கினபலனுண்டாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேகத்தை மண் முதலியனகொண்டு சுத்திசெய்து வருணசூக்ம மந்திரத்தைச் செபித்து மூழ்கினால் பரிசுத்தமான பெரிய தீர்த்தங்களெல்லாவற்றிலும் மூழ்கவே வேதப்பிராமணர்களுக்கு தானங்களெல்லாம் கொடுத்த பலனைத்தரும்.

பின்னும் இந்தத் தீர்த்தத்தை நினைவின்றித் தீண்டினாலும் பாவத்தினின்று நீங்கிப் பெறுதற்கரிய, வீட்டைப்பெறுவார்கள். இது சத்தியம் எப்படியென்றால் (நினைவின்றித் தொட்டாலும் நெருப்புச்சுடாமல் விடுமோ? விடாது. அது போலவாம். யாராயினும் அதின் மூழ்கினோர் ஜீவன் முத்தி பெறுவார். அதில் மூழ்கிப் பெரும்பலனுக்கு வருணமந்திர முதலிய மந்திரங்களைச் சொல்லி பெரிய சிவஞானத்தைத்தருகிற ஸ்நானத்தைச் செய்து பெறும்பலனெல்லாம் ஒப்பாகா. அதில் ஸ்நானமுஞ் செய்து திருவாலவாயுடையானையுங் வணங்குபவன் மேலான மோக்ஷத்தையுமடைவான். பலவித நூல்களிலுஞ் சொல்லிய பரிசுத்தங்களுக்கெல்லாம் மேலான பரிசுத்தவனுமாவான். இன்னும் சிவனிடத்தன்பில்லாத பாபியானாலும் அதில் முழுகினோன் சுவர்க்கத்தையடைவான். அன்புள்ளவனாய் மூழ்கித்தேவர் முதலானோர்க்கு பிரீதியாகிய அரிசி – எள்ளுதருப்பணம் இவைகளை பொருந்தச் செய்தவன் அன்புடனே எல்லா வேள்விகளுக்குஞ் செய்த பலனடைவான். இன்னும் இந்தஞான தீர்த்தத்தில் மூழ்கிக்கரையில் இருந்து செய்கிற விரதம், பூசை, தானம், தருமம், ஓமம், தவம், செபம், தியானங்கள் மற்ற தீர்த்தக்கரையில் இருந்து செய்கிற இவைகளுக்குக் கோடி பங்கதிகமாகும். இன்னும் ஜென்மநக்ஷத்திரத்தில் அந்தத் தீர்த்தத்தில் மூழ்கினால் இனிவரும் பிறவிப்பிணியொழியும். சித்திரை–கார்த்திகை–மாசி ஆகிய மாதங்களில் இதில் மூழ்கிப் பிதுர்க்களுக்குப் பிண்டம் கொடுத்தவர், மந்திரங்கள் மூழ்கிக்கிடக்கிற பிறவிக் கடவினின்றுங்கரையேறுவர். பின்னும் அதில் முழுகிபிதுர்க்களது மனமாசுதீரச்செய்யத் தக்கக்கடனைச் செய்தவர்கள் எத்தனை எள்ளுத்தானம் பண்ணினாலும் ஒவ்வோரெள்ளுக்கு ஆயிரம்வருக்ஷமாக அத்தனையெள்ளுக்கும் அத்தனை ஆயிரம் வருஷம் அவர்களை விண்ணாளவைப்பாராவார்.

இன்னும் மூன்றுலோகத்திலுமுள்ள தீர்த்தங்களெல்லாம் ஆதிதீர்த்த மென்னுங் காரணத்தால் வணங்கத்தக்க இந்தத்தீர்த்தத்தில் எக்காலமும் மூழ்கி அந்தத் தீர்த்தத்தினாலே எக்காலமுஞ் சிவனைப்பூசிப்பவர்கள் இந்தப் பிறவிக்கடலைக்கடந்து மோக்ஷக்கரையைச் சேருவார்கள். இன்னும் விடக்கூடாத நித்தியவேள்வியும், பெரிய விரதங்களும், தானங்களும், தவங்களும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருமபலன்களும் எல்லாம் இந்தத் தீர்த்தக் கரையிலிருந்து சிவார்ச்சனை பண்ணுவோருக்கு கொடுக்கும் புண்ணியத்தில் கோடியிலொன்றுக்கு மொப்பாகா.

இன்னும் முற்பிறப்பில் பிறவிகள் தோறும் நியமமாக நல்லொழுக்கத்தைக் கைக்கொண்டு மெய்யானவிரதமும், தானமும், தவமுஞ்செய்து பரிசுத்தராய் செவ்வையான நல்வழியிலே நின்ற சித்தருக்கே அல்லாமல் இப்பிறப்பிற்சென்று நித்தியம் ஸ்நானஞ் செய்ய இந்தத் தீர்த்தங்கிட்டாது. இன்னும் அமாவாசித்தினமும், மாதப்பிறப்பும், கிரகண புண்ணியகாலமும், விதிபாதயோகமும் ஆகிய இந்த நாள்களில் இவைகளை புண்ணியகாலமென்றும் கருதி மூழ்கி துதிகளும், தருப்பணங்களும், தானங்களும் செய்தல், வேதம் ஓதுதல் ஆகிய இவைகளின் தொகை ஒன்றிற்கொன்று அதிகபலன், அம்முறைமைப்படி நூறாயிரநூறாயிரம் ஓரநந்தமாகும். இன்னும் சித்திரை, ஐப்பசி இம்மாதப் பிரவேசகாலத்தில் இதில் மூழ்கினால் ஒருபதினாயிரம் பங்கதிகமாம். ஆடி, தை இம்மாதப் பிரவேசங்களில் மூழ்கினால் இருபதினாயிரம் பங்கதிகமாம். சோமவாரத்தில் அமாவாசி வருவது தெரிந்து மூழ்கிவேதமோதுதல் முதலியவற்றைச் செய்தால் அளவில்லாத பங்கதிகமாகும். இன்னும் பிறக்கையில் தைமாத முப்பதும் முழுகிப் பெறுகிறபலன் இதிலொருநாள் முழுகிறவன் பெறுவான். இன்னும் விரத சீலத்தைக்கொண்டு விடாமல் ஒருவருஷம் இதில் முழுகி அங்கயற் கண்ணியையும் சோமசுந்தரக்கடவுளையும் பூசிப்பார்களானால் மலடிக்கும் நல்ல பிள்ளைப் பேறுண்டாகும். இன்னும் எட்டுத்திக்கிலுமுள்ள ஆறுகுளங்களாகிய தீர்த்தங்களெல்லாம் இந்தத் தீர்த்தத்தில் கோடியிலொரு பங்குஒப்பாகா. இதைக்கண்டால் தருமம், தொட்டால் அர்த்தம், அள்ளினால் காமம், முழுகினால் மோக்ஷம் உண்டாகும். ஆதலால் அந்தப் பரமசிவன் பெயரிட்ட காரணங்களையல்லாமல் இன்னமும் இந்தப் பரிசுத்தமான தீர்த்தத்திற்குப் பெயர்கள் சுவாமி சடையிலிருக்கிற தங்காசலங் கலந்ததினாலே சிவகங்கையென்றும் எல்லாத் தீர்த்தங்களுக்கும் உத்தமமாய் விளங்குதலினாலே உத்தமதீர்த்தமென்றும் பொன்னிறமான தாமரை மலர்ந்ததினாலே பொற்றாமரையென்றும் பாபமென்கிறவிறகு அக்கினியாகி தருமத்தைக் கொடுப்பதனாலே தருமதீர்த்தமென்றும், அருத்தைத் தருதலினாலே அருத்ததீர்த்தம் என்றும், காமத்தை யீவதினாலே காமதீர்த்தமென்றும், மோக்ஷத்தை யருளுவதினாலே மோக்ஷதீர்த்தமென்றும் விளங்கும். இன்னும் இந்தத் தலவிசேஷமும் தீர்த்தவிசேஷமும் சொல்லக்கேட்டவர்கள் போகமும் மோக்ஷமும் பெறுவார்கள்.

*தீர்த்த விசேடம் முற்றிற்று.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவிதிருமுகத்திற்கு ஒருமுகமாக்க உதவிய நூல்கள்

1. திருவிளையாடற் புராணம்
2. கந்த புராணம்
3. தக்ஷா காண்டம்
4. சிவமஹா புராணம் 1, 2, 3.
5. அருணாசல மஹாத்மியம்
6. அருணாசல புராணம்.
7. ஸ்ரீதேவி மஹாத்தியம்
8. ஸ்ரீதேவி பாகவதஸாரம்
9. தேவி உபநிஷங்கள்
10. தேவார அருள்முறைத்திரட்டு

உமாபதி சிவாசாரியார்

11. சிந்தாமணி
12. சைவவினாவிடை,

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஐயா அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு. இரா. மயில்வாகனம் என்னும் பெரியாரைச் சில வருஷங்களுக்கு முன்பே தெரியும். இவர் ஆலயங்களின் விசேட பூசைகளிலும், சைவ சமயப் பேச்சுக்கள் நடக்கும் இடங்களிலும் அதிகமாய்ப் பங்குபற்றுவார். இலகுவாக எவரோடும் பேசும் பழக்கமுடையவர். ஒருமுறை கண்டு பழகினவர்கள் இவரை மறக்கிறது அரிது. 1990ம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை சிந்தனைக் கோவை, ஒன்பதாம் திருமுறை ஒரு நோக்கு (திருவிசைப்பா, திருப்பல்லாண்டு) இரண்டாம் சிந்தனைக்கோவை,சைவசமயிகள் அறியாதிருந்த வைரவ மான்மியம் என்னும் நூலையும் தொகுத்து சிவநெறிச்செல்வர், சைவநன்மணி, ஞானவாரிதி என்னும் விருதுகளைப் பெற்றவர்.

ஐந்தாவதாக 'தேவி திருமுகம்' என்னும் நூலை ஆக்கி வெளியிட்டுள்ளார். பராசக்தியாகிய உமையம்மையின் சிறப்பியல்புகளினால் ஆன்மாக்களை இரட்சிக்கும் தன்மை மிக விளக்கமாய் உண்டு. அகங்காரம் அழிவுக்கு வித்தாகும் என்னும் கோட்பாட்டை அசுரர்களின் தன்மையை அடக்கிய காளிகா தேவி மூலமாக எடுத்துக் காட்டியுள்ளார்.

தவம் என்பது எவ்வாறாய வலிமையுடையது. இதை அனுட்டிக்கும் தன்மை என்ன என்பன. அறியக் கூடியதாக இருக்கிறது. புராணங்களுக்குத் தேவையான நாரதர், சூதகர், வியாசர், மரீசி ஆகிய முனிவர்களின் வாழ்க்கையை காணக் கூடியதாக இருக்கிறது.

இவர் அறிவு முதிர்ந்த அனுபவசாலி, சமய சம்பந்தமான விளங்கா வினாக்களையும் விடை தேடி ஆராய்ந்து விளக்கக் கூடியவர். இவரது தொண்டு பன்மலையடுக்கத்து பஃறுளியாற்றின் மணல்போல் பரவி வளர வேண்டும் என்றும் இவரை அருவாய வல்வினை நோய் அணுகாமல்இருக்க வேண்டுமென்றும் எல்லாம் வல்ல ஸ்ரீ வரதராஜவிநாயகனை வேண்டுகிறேன்.



வளர்க் இவர் பணி வாழ்க வாழ்நாள்
இவ்வண்ணம்

**தெ. ஈஸ்வரன்.**
*மொறிசியஸ் குடியரசு நாட்டுக்கான*
*கௌரவ பிரதிநிதி.*

**D. Eassuwaren**
*Honorary Consul for Republic of Mauritius.*

Printed by Unie Arts (Pvt) Ltd. Colombo 13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org